

# நாளை மற்றுமொரு நாளே...

ஜி. நாகராஜன்

காலச்சுவடு
தமிழ் கிளாசிக் நாவல்

நாளை மற்றுமொரு நாளே . . .



# நாளை மற்றுமொரு நாளே . . .

ஜி. நாகராஜன் (1929 – 1981)

ஜி. நாகராஜன் மதுரையில் பிறந்தார். தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர். பட்டதாரி. 'குறத்தி முடுக்கு' குறு நாவலும் சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். இவருடைய தமிழ், ஆங்கில படைப்புகளின் முழுமையான தொகுப்பு 'ஜி. நாகராஜன் ஆக்கங்கள்' (காலச்சுவடு பதிப்பகம், 2007).

மனைவி : நாகலட்சுமி

மகள் : ஆனந்தி

மகன் : கண்ணன்

ஜி. நாகராஜன்

# நாளை மற்றுமொரு நாளே . . .

மின்னூலாக்கம்
முரளிதரன்

காலச்சுவடு பதிப்பகம்

நாளை மற்றுமொரு நாளே ❖ நாவல் ❖ ஆசிரியர்: ஜி. நாகராஜன் ❖
© நா. கண்ணன்
❖ முதல் பதிப்பு: 1974 ❖ காலச்சுவடு முதல் பதிப்பு: டிசம்பர் 2001 ❖ எட்டாம் பதிப்பு: மே 2019 ❖ வெளியீடு: காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., 669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629001

nALai maTTumoru nALE ❖ Novel ❖ G. Nagarajan ❖
© N. Kannan
❖ Language: Tamil ❖ First Edition: 1974 ❖ Kalachuvadu First Edition: December 2001 ❖ Eighth Edition: May 2019 ❖ Size: Demy 1 x 8 ❖ Paper: 18.6 kg maplitho ❖ Pages: 144

Published by Kalachuvadu Publications Pvt.Ltd., 669 K.P. Road, Nagercoil 629001, India ❖ Phone: 91-4652-278525 ❖ e-mail: publications @kalachuvadu.com ❖ Wrapper Printed at Print Specialities, Chennai 600014 ❖ Printed at Mani Offset, Chennai 600077

ISBN: 978-81-87477-20-2

05/2019/S.No. 26, kcp 2348, 18.6 (8) ILL

"God is not always in his Heaven, all is not always right with the world. It is not all bad, but it is not all good, it is not ugly, but it is not all beautiful, it is life, life, life - the only thing that matters. It is savage, cruel, kind, noble, passionate, selfish, generous, stupid, ugly, beautiful, painful, joyous - it is all those and more and it is all these that I want to know and, by God, I shall, though they crucify me for it."

*THOMAS WOLFE*

இது ஒரு மனிதனின் ஒரு நாளைய வாழ்க்கை.

நீங்கள் துணிந்திருந்தால் செய்திருக்கக்கூடிய
சின்னத்தனங்கள்,

நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தால் காட்டியிருக்கக்கூடிய
துணிச்சல்,

விரும்பியிருந்தால் பெற்றிருக்கக்கூடிய
நோய்கள்,

பட்டுக்கொண்டிருந்தால் அடைந்திருக்கக்கூடிய
அவமானம் –

இவையே அவன் வாழ்க்கை.

அவனது அடுத்த நாளைப்பற்றி நாம்
தெரிந்துகொள்ள வேண்டாம். ஏனெனில்
அவனுக்கும் – நம்மில் பலருக்குப் போலவே –

நாளை மற்றுமொரு நாளே!

முன்னுரை

# ஆடைகளுக்குள்ளே நிர்வாணமாயிருப்பவர்கள்

கிளாசிக்குகளுக்கு எப்போதும் ஒரு நிரந்தரப் பண்பு இருக்கின்றது. எழுதப்பட்ட காலத்தை ஒட்டிப் பழமையான தாகவும் புழங்கும் காலத்தில் நவீனமாகவும் இருக்கும் சிறப்பியல்புதான் அது. ஜி. நாகராஜன் உடல்ரீதியாக மறைந்து ஒரு தலைமுறைக்கான முப்பது வருடங்கள் கடந்துவிட்டன. நாளை மற்றுமொரு நாளே நாவல் வெளி வந்து முப்பத்தெட்டு வருடங்களாகின்றன. ஆனால் இப் போதும் இந்நாவல் மொழி, உள்ளடக்கம், கட்டமைப்பு ரீதியாகப் புத்துணர்ச்சியுடன் உள்ளது. எதிர்வரும் காலத் தின் முன்பும் இந்நாவல் நவீன கிளாசிக்காக இருக்க முடியும் என்பதற்கு இவையே சான்று.

கதை வடிவத்திற்கு வாழ்க்கை என்னும் சக்தி தேவைப்பட்டாலும் அடிப்படையில் கதை என்பது வேறொன்றாகவும் வாழ்க்கை வேறொன்றாகவுமே இருக் கின்றது. கடலைப் போல நம்முன் விரிந்துகிடக்கும் வாழ்வு அனைத்தும் நாவலாகிவிடுவதில்லை. தலையணை கனத் திற்கு எழுதிவிடுவதாலும் அவை நாவலாகிவிடுவதில்லை. எழுத்தாளனின் தேர்விலும் சொல்முறையிலும் அவனது தத்துவக் கோணத்தின் அடுக்குதலிலும் மட்டுமே அது கவனத்திற்குரிய ஒன்றாகவும் பரிசீலிக்கத் தகுந்ததாகவும் மாறுகிறது. மேலும் அது தாங்கிக்கொண்டிருக்கும் வாழ்க்கையின் பளுவிலும் அதன் நம்பகத்தன்மையிலும் எடுத்துக்கொள்ளும் உள்ளடக்கத்திலும், திரளும் கலை அனுபவத்தாலும்தான் அதன் இலக்கிய அந்தஸ்தும் மதிப்பிடப்படுகிறது. இல்லையெனில் அது வெறும் சுவாரஸ்யமான சம்பவங்களின் விவரிப்பே ஆகும். இதில் எந்தப் படைப்பு வாழ்க்கையிலிருந்து நகர்ந்து கதையாக

மாறி அதேசமயம் வாழ்க்கைக்கும் கதைக்குமான இடைவெளி யைக் கலாபூர்வமாக அழிக்கிறதோ அதுவே சிறந்த இலக்கிய மாகிறது. பல படைப்புகள் பொதுமக்களை வெகுவாகக் கவர்ந் திருந்தாலும்கூட, இலக்கியமாகாமல் போவதன் ரகசியமும் இதுதான். நாளை மற்றுமொரு நாளே அவ்விடைவெளிகளை அழிப்பதனாலேயே தனது இலக்கிய அந்தஸ்தை மிக எளிதாகக் கைப்பற்றிக்கொள்கிறது.

மேன்மைகளைப் பேசி ஞானமடைதலும் மேன்மையல் லாதவற்றைப் பேசி ஞானமடைதலும் வெவ்வேறு பாதைகளா னாலும் இரண்டும் சேருமிடம் ஒன்றுதான். அவை இறுதியில் கடவுளின் மையக் கடலில் கலக்கின்றன. வாழ்க்கையின் சிறந்த பகுதிகளைப் பார்க்காமல், வாழ்க்கையை எதிர்மறையாகவே விவரித்திருக்கிறார் என்று ஒருவர் குற்றம்சாட்டிவிடும் அளவுக்கு நாகராஜன் அவற்றில் குரூரங்களை விவரித்திருக்கிறார். தேவதைக் கதைகளையும் காதலின் மகத்துவம் தொனிக்கும் கதைகளையும் அவர் எழுதியிருக்கலாம்தான். ஒருவேளை அவர் அவற்றைப் பார்த்திருந்தால் எழுதியிருப்பாரோ என்னவோ? 'காதலை வளர்க்க எட்டுக்குப் பத்து இடம் வேண்டும்' *(நான் புரிந்த நற்செயல்கள்)* என்னும் பெண்களைச் சந்தித்துவிட்டதாலும் 'ஆடைகளுக்குள்ளே நிர்வாணமாக இருப்பவன்தான் மனிதன்' என்னும் கசப்பான நிஜத்தை உணர்ந்திருக்க நேர்ந்ததாலும் அவர் இப்படி எழுதியிருக்கலாம். மேலும் ஓர் எழுத்தாளன் தான் 'கண்டதையும் கேட்டதை' யும்தான் எழுத முடியும். வாழ்க்கையை மொண்ணையாகப் புரிந்துகொள்ளும், நுனிப்புல் மேயும் மேதாவிகளுக்கு நாக ராஜன் எப்போதுமே தேவைப்படமாட்டார்.

எழுத்தாளனோ நாடக இயக்குநரோ திரைப்பட இயக்குநரோ இவர்களைப் படைப்பாக்காதபோது பொதுப்புத்தியில் இவர்கள் கழிசடைகளாகவும் செல்லாக்காசுகளாகவும் இருக்கிறார்கள். தமிழ்த் திரைப்பட இயக்குநர்களுக்கு, 'லாஜிக்கு'களுக்கும் பார்வையாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்குவதற்கும் எப்போதா வது அவர்களின் 'புரட்சிவாத' சிந்தனைகளைக் காண்பிப்பதற் கும் விபச்சாரிகளும் பெண் புரோக்கர்களும் தேவைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் தமிழிலக்கியத்தில், *1973–74*களிலேயே, 'தீமைகளின் அழகியலை'யும் விலைமாதர் களின் சிரிப்பொலிகளுக்குப் பின்னால் உள்ள இருட்டையும் வலியையும் அவற்றின் அசலான கவிச்சியோடு விரிவாகப் பதிவுசெய்திருப்பவர் நாகராஜன்தான். இதனால், பொதுச்

சமூகத்தால் 'கீழ்மை'களின் இருப்பிடங்களாகச் சித்தரிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை தமிழ் இலக்கியத்தில் அவர்களின் நினைவுச் சின்னங்களாக அவரால் எழுப்பப்பட்டிருக்கின்றன.

## 2

நாகராஜனின் உலகம், 'கடவுள'ற்ற உலகம். அங்கே தொழுகைகள் இல்லை; கடவுளைப் பற்றிய ஆராதனைகள் இல்லை; கடவுளைப் பற்றிய புகார்களும் இல்லை. இழப்புகளின் மௌனங்கள்தாம் இருக்கின்றன. அங்கே, 'புனிதங்கள்' போதிக்கப்படவில்லை; புனிதங்களுக்கான ஏக்கங்கள் இல்லை; நன்மை தீமைகளுக்கான பிரச்சாரங்கள் இல்லை; மாபெரும் சித்தாந்தங்களோடு தன்னைப் பிணைத்துக்கொண்டவர்களும் இல்லை. அன்றாடப் பிழைப்புக்காக, ஆண்களுக்கு முந்தி விரிப்பவர்களும் பத்து ரூபாய்க்காக மைதானத்தில் நிர்வாண மாக ஓடுபவர்களும் பிறன் மனைவியைத் தன் மனைவிபோல் பாவிப்பவர்களும் சாராயத்திற்காகவும் பணத்திற்காகவும் பஞ்சாயத்து பண்ணுபவர்களும் 'வேசி'களை மனைவிகளாக ஆக்கிக்கொள்பவர்களும் காதலிகளாகக் கொண்டவர்களின் பின்னே காலதேசவர்த்தமானங்களின்றிப் பழியாய்ப் பின்தொடர் பவர்களும்தாம் இருக்கிறார்கள். இத்தகைய வாழ்வு, நமது நகரங் களின் அழகிய பிரதான சாலைகளுக்குப் பின்புறத் தெருக்களில் நடப்பவைகள்தாம். பெண் புரோக்கர்களாகவும் கள்ளக்காதலர் களாகவும் கைதுசெய்யப்பட்ட விபச்சார அழகிகளாகவும் நாம் செய்திகளில் அடிக்கடிக் காண்பவர்கள்தாம்.

இந்த நாவல், ஒரு நாளில் வெளிக்கிளம்பும் ஒரு மனிதனை முன்வைத்து சொல்லப்படும் அவன் புழங்கும் சமூகம் பற்றியது. அதை நாம் காலையில் தொடங்கி நள்ளிரவில் முடியும் ஒரு நாளின் கதையாகவும் வாசிக்கலாம். அல்லது : ஒரே நாளைப் போல மாற்றமில்லாமல் நிகழும் வெவ்வேறு நாட்களின் கதை யாகவும் வாசிக்கலாம். நாகராஜனுக்கு எழுதும்போது இந்தத் திட்டம் இருந்திருக்குமா என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. இருப்பினும் ஒரு சிறுகதைக்கான கட்டுமானத் துடன் விரியும் இந்நாவலில், ஒரு மனிதன், பகல் முழுக்கப் பல்வேறு மனிதர்களைச் சந்தித்துவிட்டுச் சோர்ந்துபோய் வீடு திரும்பும்போது, கதையும் முடிந்துவிடுகிறது. இந்த நாவலின் அற்புதமே அவர்களின் வாழ்க்கைக்கேற்ப ஒரே நாளில் சொல்லப் பட்டிருப்பதுதான்.

நாகராஜனின் கதையுலகம் அவரது பெரும்பாலான கதா பாத்திரங்களைப் போலப் பொதுச்சமூகத்திலிருந்து தனிமை யானது. அதுவே அவர் கதையுலகத்தின் தனித்தன்மையும்கூட. அவர் தனது அனைத்துக் கதாபாத்திரங்களின் நடவடிக்கை களுக்கும் பிரத்யேகச் சாய்மானமில்லாமல் ரகசியக் கண்ணாடி வைத்திருக்கிறார். அது வாசகர்களாகிய பொதுச்சமூகத்திற் காகத்தான். கண்ணாடியில் விழும் சித்திரங்களைக் குறித்து அவருக்குப் புகார்கள் இல்லை; சினேகபாவமுமில்லை. அதே சமயம் அது வெறுப்புமல்ல. ஆனால் அவற்றைச் சொல்வதில் அவருக்கு ஈர்ப்பு இருக்கிறது. ரகசியக் கண்ணாடியில் வாங்கப் படும் சித்திரத்தை வெளியுலக ஒப்பனைகளின் முகத்திலடித்துக் கண்கூசச்செய்வதுதான் அவரது விருப்பம்.

மானுட இன்பமாகக் கருதிச் செய்யப்படும் புணர்ச்சி அவர் களின் பிழைப்புக்கான கருவியாக இருக்கிறது. அங்கே கான்க்ரீட் வீடுகள் இல்லை. வீட்டின் வாசலுக்கு முன்பு ஒரு செம்பருத்திச் செடியோ பசும்புற்களோகூட இல்லை. சாக்கடையைக் கடக்கும் மூன்றடி மரக்கட்டைகள் மட்டுமே அவர்களின் முன்வாசல். அடுத்த வீட்டில் மூச்சுவிட்டால் இந்த வீட்டில் கேட்கும். ஆடு மாடுகளைப் போல் ஒரே அறைக்குள் சகலத்தையும் நிகழ்த்திக் கொள்ளும் குடிசைகள். சாத்திரம், சம்பிரதாயம் பார்த்து நிகழும் திருமணங்கள் இல்லை. முதல்நாள் சாயங்காலம் கோவிலில் பார்க்கும் மீனாவைப் பின்தொடரும் கந்தன், அடுத்தநாள் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுத்து அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்கிறான்.

லாரியால் இடிபட்டுக் கபேகபே எனப் பினாத்த ஆரம்பிக் கும் பக்கத்துக் குடிசைச் சிறுமியான ஜீவா, சிகரெட்டால் சுடப் பட்ட பலூன் வெடித்த பிறகு நோய்வாய்ப்பட்டு இறக்கும் கந்த னின் மகள் கீதா, கொடுத்த பணத்திற்குப் புணராமல் மீனாவின் கால்களைக் கழுவச்சொல்லிக் கண்ணீரைச் சொரிந்துவிட்டுச் செல்லும் பெரிய மனிதர் என இவர்களுக்கு நிகழும் அபத்தங் களை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. விபச்சார உலகத் திற்குள் இன்பம் தேடி வரும் நபர்களின் நடவடிக்கைகள் ஒரு நவீன நாடகத்தின் புதிர்களைப் போலும் இருக்கின்றன.

'மீனா சில்லறைப் பணம் வைக்கும் பிறைக்குள் எலிப் புழுக்கைகள்தான் இருகின்றன.' கான்ஸ்டபிள் பொடியன் பொன்னுசாமியின் சினேகிதமும் எதிர்ப்பும் இவர்களைப் பொய் கேசுகளில் உள்ளே தள்ளுவதற்குத்தான் உதவுகின்றன. கோவில்கள்கூட அவர்களின் கனவில்தான் வருகின்றன. அல்லது அவை புறக்காட்சி நிலையிலேயே சொல்லப்படுகின்றன.

விளக்குகள் இவர்களின் வாழ்க்கையில் 'திடுக்கிட்டு' எரிகின்றன. கந்தன் மீனாவைப் புணரும் பட்டப்பகலில் மெழுகுவர்த்திகள் 'திருதிருவென' விழிக்கின்றன. பொதுவாழ்விலிருந்து இவர்கள் விலகியிருந்தாலும் பூகோளரீதியாகவும் 'கந்தன் அரை பர்லாங்கு நடந்த பிறகே காலுக்கு உருப்படியான ரோடு வருகிறது'.

மீனாவை மனைவியாகச் சேர்த்துக்கொண்ட கந்தனே அவளை விபச்சாரத்திற்கு அனுப்புகிறான். பக்கத்து வீட்டு ராக்காயி திருமணத்திற்குப் பிறகு தன் கணவன் அனுமதிக்காத போதும் அவனுக்குத் தெரியாமல் அதைச் செய்வதில் தவறு ஒன்றுமில்லை எனக் கருதுகிறாள். சிறுமிகள் கர்ப்பஸ்திரிகளாக இருக்கிறார்கள். கர்ப்பத்தைக் கலைக்க மேரியம்மா டாக்டர், 'புருஷனைக் கூட்டியாந்தா நூறு ரூபாய்; யாரும் வரலேன்னா இரு நூறு ரூபாய்; சித்தாளாக இருந்தால் முன்னூரு ரூபாய்' என்று பணம் கேட்டுப் போகிறாள். மனிதனின் விவஸ்தையற்ற தனம் எப்போதும் அபத்தத்தைக் கொண்டுவந்துவிடுகிறது. கார்கோட்டை வெற்றிலைப் பாக்கு அங்காடியினர் விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு காணக் கண்ணகியின் ஆவேசத்தை யும் நக்கீரனின் உறுதியையும் துணைக்கு அழைக்கின்றனர். அடுத்தவன் மனைவியை லாட்ஜுக்குக் கூட்டிச்செல்லக் கந்தனின் உதவியைத் தேடும் கம்யூனிஸ்டான முத்துசாமி, 'இந்தச் சமுதாய அமைப்பை மாத்தணும்ணே' என்கிறான்.

கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் தனது லாட்ஜை எழுப்பியிருக்கும் சுப்பு நாயுடு 'பிஸ்னெஸ்னா கொஞ்சம் நெளிவு சுளிவு இருக்கணும்' என்கிறார். நியாயத்தைக் கண்டு கொதிக்கும் கோவில் ட்ரஸ்டிக்கு இலவசமான தங்கல்களை தேவி லாட்ஜ் செய்துகொடுத்ததும் 'கோவில் காரியம்னாகூடக் கொஞ்சம் நீக்குபோக்கு பார்க்க வேண்டியிருக்கு' என்கிறார். செட்டியாரின் வியாபாரத் தந்திரத்திற்கு, 'முள்ளங்கியில் பாதரசம் இருப்பதும் பச்சைக்கோசில் சுண்ணாம்பு இருப்பதும் வாழைக்காயில் கந்தகம் இருப்பதும்' உன்னதமானவைதாம். 'இங்கிலீஷ்காரி'யான ஐரினை, 'லவ்' பண்ணுவதற்கு அவர் கொடுக்கும் வீட்டு வாடகை அறுபது ரூபாயும் சாப்பாடு, உடைக்கு நூற்றி இருபதும் இண்டியன் ஜின் (சாராயம்) அலவன்சு நூறும் இது தவிர கிறிஸ்துமஸ் ஈஸ்டர் பரிசுகள், ரூபாய் நூற்றுக்குக் குறையாமல் தர வேண்டும் என்பதும் 'மானுட வாழ்வின் உன்னத'த்தைத் தானே குறிக்கின்றன.

கதையில் இவற்றை டாக்டர்களின் புனிதம், கோவில் டிரஸ்டிகளின் புனிதம், போலிக் கம்யூனிஸ்டுகளின் புனிதம், பெண்களின் புனிதம், திருடர்களின் புனிதம் என்று நாம்

களைப்படையுமளவுக்கு மனிதர்களை வரையறுத்துக்கொண்டே போகிறார். அதே சமயம், அட்டைகளைப் போல் இவர்களின் ரத்தத்தை உறிஞ்சி வாழும் அங்கிருக்கும் 'முதலாளி'களையும் நாகராஜன் கிண்டல் செய்யவும் தவறவில்லை. ஆனால் காண்பதை, காண்பிப்பதைத் தவிர்த்து அவருக்குப் புகார்கள் எதுவும் இல்லை.

மனிதன் தன் சுயநலங்களினூடாகவே பொதுநலத்திற்கான பணிகளில் சுழலும் போக்கை அவர் யார் மூலமாகவும் சொல்லச் செய்கிறார். இதற்குக் கந்தனும் விதிவிலக்கல்ல. நாகராஜன் குறிப்பிட்டதுபோல 'மனிதன் ஒரு மகத்தான சல்லிப் பயல்' என்பதற்கு அவரிடம் ஏராளமான உதாரணங்கள் இருக்கின்றன. கந்தனைத் தொடரும் வாசகன் அவனைப் பின்தொடர்ந்தே நாவலை வாசிக்கிறான். ஆனால் கந்தனுக்கும் மற்ற கதாபாத் திரங்களுக்கும் இருக்கும் வித்தியாசம் பெரிதாக எதுவுமில்லை. அவனும் அவர்களில் ஒருவன்தான். அவனையும் அவர்களைப் போலவே சித்தரிக்கிறார்.

கம்யூனிசம் குறித்துப் பேசிக்கொள்ளும் கட்சி நபர்களின் அந்தரங்க நடவடிக்கைகளை விவரித்துவிட்டுச் சுரண்டல், சமூக மாற்றம் குறித்தும் அவர்கள் பேசுவதை வெறுமனே வேடிக்கை பார்ப்பதைப்போல விவரிக்கிறார் நாகராஜன். கம்யூனிஸ்டுகள் குறித்து ஜார்ஜ் ஆர்வெல்லின் சாய்மானம் நாகராஜனுக்கும் இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் அது ஜார்ஜ் ஆர்வெல்லின் அளவுக்கு வெளிப்படையானது அல்ல. கந்தனின் அறியாமையிலிருந்தும் கேட்கப்படும் கேள்விகளுக்குள்ளும் ஒளிந்திருக்கும் அதன் சூட்சுமம் வெளிப்படையானதுதான். ஆனால் அது விவரிக்கப்படாதது.

இந்நாவலில் எழுத்துபூர்வமாக இல்லாமல் போனாலும் காதல் எனும் பதம் பகடி செய்யப்பட்டிருக்கிறது. காதல் என்பதன் அர்த்தம் மனிதனுக்கு மனிதன் வேறுபடுவதுபோலப் பருவத் திற்குப் பருவம் மாறிக்கொண்டேயிருப்பதையும் மறுக்க முடியாது. காதல் தொடங்குமிடத்தில் இருக்கும் மயக்கம், முடியு மிடத்தில் இல்லை. முடியுமிடத்திலிருந்து காதலைப் பார்க்கும் நாகராஜனுக்கு மானுட வாழ்வின் புறரீதியான யதார்த்தம் தத்துவமாக மாறிவிடுகிறது. (இதுவே அவரின் வாழ்க்கையைக் குலைத்ததற்குக் காரணமாகவும் சொல்ல முடியும்.) கந்தனும் மீனாவும் புணரும்போது நினைத்துக்கொள்ளும் அணில்களின் கூடல்தான் மானுட வாழ்க்கைக்கே பொதுவானது. அது இயற்கை யானதும்கூட என்பதை உணர்த்தவே அவர் அவற்றை விவரிக் கிறார். அதை விட்டுவிட்டு அதற்கு இல்லாத மகத்துவங்களைச்

சொல்வதை அவர் நம்பத் தயாராக இல்லை. ("ஆணுக்குப் பெண் தேவை. பெண்ணுக்கு ஆண் தேவை. இதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஒரு ஆணும் பெண்ணும் தங்கள் வாழ்நாள் முழுதும் இணைந்து வாழச் சம்மதிப்பதையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. இதைப் புரிந்துகொள்ளாது காதலுக்கு மணவாழ்க்கையின் அனுகூலங்களுக்கும் அப்பாற் பட்ட ஒரு தெய்வீக அர்த்தத்தைக் கற்பிப்பது என்னால் புரிந்து கொள்ள முடியாத விஷயம்." – (குறத்தி முடுக்கு)

நடிப்பற்ற மனிதாபிமானம், சுயநலமற்ற அன்பு, முழுமை யான பெருந்தன்மை, எதிர்பார்ப்பற்ற தியாகம், இயலாமையால் உருவாகும் சகிப்புத் தன்மையாக அல்லாமல் ஏற்றுக்கொள்ளுத லால் உருவாகும் சகிப்புத் தன்மை, இவற்றுக்குப் பொது மனிதர்களிடம் இருக்கும் இடம் மிகவும் சொற்பம் என்பதை இந்நாவல் ரகசியமாக உணர்த்துகின்றது.

விலைமகள்கள் குறித்தும் விரிவாக எழுதியிருக்கும் இந் நாவலில் 'விபச்சாரம்' என்னும் வார்த்தையை ஓரிடத்திலும் அவர் உபயோகப்படுத்தாதது நிச்சயம் தன்னிச்சையானது அல்ல.

வாழ்க்கையைக் கலையாய்ச் செப்பனிடுவதும் கதைக்குள் வாழ்க்கையை அனாயசமாகச் சொல்லிச் செல்வதும் நாகராஜ னுக்கு மிக இயல்பாக வருகின்றன. நாவலில், கம்யூனிஸ்ட்டுகள் வரும் இடங்கள் குறித்து அவருக்கு வெளிப்படையாகச் சொல்ல முடியாத நெருக்கடிகள், தயக்கம் அல்லது முன்முடிவுகள் இருந் திருக்கலாம். அதனால் அவற்றைக் கோடிட்டுக் காட்டிவிட்டு நகர்ந்துவிடுகிறார். இவற்றைத் தவிர்த்து, அவர் எந்த இடத் திலும் நின்று யோசிப்பதோ நேர்மாறாகத் திருப்புவதோ குழம்பு வதோ இல்லை. ஓவியன் நிறங்களைத் தேர்ந்தெடுப்பதுபோல அவர் தன் கதாபாத்திரங்களை இயல்பாக தேர்ந்தெடுத்திருக் கிறார். சிறந்த பாடகன் ராகங்களின் ஆலாபனைகளில் ஈடுபடுவது போலவோ அவற்றில் சஞ்சரிப்பதுபோலவோ தடங்கலற்று அவர் களின் நடத்தைகளை விவரிக்கிறார். எளிமையும் லட்சணமு மான கிராமத்துச் சிறுமியைப் போல அளவான வாக்கியங்கள். ஒரு சிற்றோடையின் மெதுவான நீரோட்டம்போல இடையறாத தொடர்ச்சியும் மேற்பார்வைக்கு ஆழமற்றதான தோற்றத்தை ஏற்படுத்தும் ஆழமான ஒரு நதியைப் போலவும் இந்நாவல் இயங்குகிறது.

கந்தன் காலையில் எழுந்து நகரத்திற்குச் செல்லும் பாதையின் முன்னும் பின்னும் பழைய சம்பவங்கள் வெட்டிச்

செருகப்பட்டிருக்கின்றன. கதையின் நிகழ்காலத்தையும் கடந்த காலத்தையும் பிணைக்கும் கண்ணி ஒரு சொல்லாகவோ ஒரு பொருளாகவோ ஒரு கதாபாத்திரத்தின் பெயராகவோ இருக்கலாம். இந்தத் தொழில்நுட்பம், தீவிரமான இயக்குநர்கள் பலரின் திரைப்படங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (தமிழில் – *கற்றது தமிழ்*). தற்காலத்தில் சிலருக்கு இது சாதாரணமாகக் கூடத் தோற்றமளிக்கலாம். ஆனால் 'பானை வனைவதிலிருந்து பல்லாங்குழி ஆடுவதுவரையிலும் – அவற்றின் நேர்த்தி அவற்றைச் சாதாரணம்போல் காட்டுகிறது." என்கிறார் சுந்தர ராமசாமி. (*கண்டதும் கேட்டதும்* முன்னுரை.)

*குறத்தி முடுக்கிலும் டெர்லின் ஷர்ட்டும் எட்டுமுழ வேட்டியும் அணிந்த மனிதர்* சிறுகதையிலும் வரும் ஒரு பெண் தூக்கு மாட்டிக்கொள்ளும் அந்தச் சம்பவத்தை மீண்டும் மீண்டும் அதே சித்தரிப்புகளோடு அவர் விட்டுச்செல்வது அவர் அறியாததா? அல்லது அது ஒரு பைத்தியத்தின் சொல்லைப் போல அப்படியே இருக்கட்டும் என்று விட்டுவிட்டாரா? அல்லது அவர் சொல்ல நினைத்த ஒன்றைப் பற்றிய வாசகர்களுக்கான ஒரு தடயமா என்று யூகிக்க முடியவில்லை. அது சில நேரத்தில், அறுந்த இசைக் கருவியின் தந்தியைப் போலவும் பாழடைந்த கலைப்பொருளைப் போலவும் சிலசமயம் அபத்தமான வெறுமையையும் விரக்தியையும் நம்மேல் தழுவவிடுகிறது.

கதை கூறலில் அவரது சித்தரிப்பு நம்மை அவ்விடத்தை உணரச் செய்கின்றன. ரத்தப்பொரியலைப் பச்சை மிளகாய் கடித்துச் சாப்பிடும் விதத்தை அறிவுரையாகச் சொல்லும் காண்ட்ராக்டரிலிருந்து பொடி சில்லறைகளைக் கொடுக்காமல் பிறகு வந்து வாங்கிக்கொள்ளச் சொல்லிக் காலி டின்னை உருட்டிக் காட்டும் புத்திசாலிச் சிறுவனிலிருந்து மாநாட்டுக்கு வந்திருக்கும் கலாட்டாக்காரர்கள்வரை அவர் அனாயாசமாகச் சித்தரிக்கிறார். கதாபாத்திரங்களை விளக்கும்போது தெரிந்த மனிதனைக் கூப்பிடுவதுபோல் இணக்கம். அவர்களின் நடத்தையின்போது சிறிய நெருக்கம். முடியும்போது மூன்றாவது மனிதனாக சிறிய விலகல் என்று இவரது கதை சொல்லும் முறை ஒரு நெருக்கமான உளவாளியின் தன்மையை அடைந்திருக்கிறது.

தரகர் அந்தோணியைச் சந்தித்துவிட்டு வரும் கந்தனின் அந்த மாலை நேரம்: குடத்தில் நீர் நிரம்புவதுபோல மனத்தில் கவலைகள் நிரம்புகின்றன. உரையாடல்கள் முடிந்த மௌனம் கசக்கின்றது. வாழ்க்கையின் இறுதிப் பகுதியைப் போல் நாவலின்

கடைசிப் பகுதியும் வந்துவிடுகிறது. நாவலின் ஆகச் சிறந்த பகுதியும்கூட இது. கிழமைகளால் அவனுக்கு எந்த லாபமு மில்லை. அவை வெறும் பெயர்ச்சொற்கள். எல்லா நாட்களும் ஒரே நாளைப் போல விடிந்துவிடும் மாறுதலற்ற வாழ்க்கை. உலகம் அவனைவிட்டு நகர்ந்து சென்றுகொண்டிருக்கிறது. அவனுக்கு மட்டும் ஏன் எதுவுமே மாறிவிடுவதில்லை? வளர்ந்து கதிரான தானியத்தை அறுவடை செய்வதுபோல நாகராஜன் தன் கதாபாத்திரத்தின் மன உலகைத் திறந்து தனது அறுவடையை நிகழ்த்திவிடுகிறார்.

## 3

நாகராஜன் கதைகளை முழுமையாக வாசிக்கும்போது நமக்குக் கேள்விகளும் மௌனங்களும் சஞ்சலங்களும் இயல் பாகவே பிறக்கின்றன. கடுமையான அழுத்தம் நிரம்பிய அனு பவங்களால், அதிகமாக வாழ்ந்துவிட்ட களைப்பை வாசகனுக்கு ஏற்படுத்திவிடுகின்றன. இவரைப் போலவே கந்தன் கதாபாத் திரம் வாழ்க்கையின் பிணைப்புகளுக்கும் சுதந்திரத்திற்கும் இடையே அல்லாடுகிறது. அல்லது மதுவுக்குள் தன்னை மறைத்துக்கொள்கிறது.

கதை சொல்லும் வரம்புகளையும் கதையுலகங்களையும் ஆடு தாண்டும் காவிரியைப் போல நாகராஜன் எளிமையாகத் தாண்டிவிட்டவர். ஏற்கனவே இருக்கும் மரபார்ந்த உலகத்து ஜோடனைகளில் இருந்தும் தன்னைத் துண்டித்துக்கொண்டவர். எதிர்வரும் விமர்சனத்திற்கான பாதுகாப்போடு படைப்பை உருவாக்கும் கோழைத்தனம் இவருக்கு இல்லை. தன் வாழ்க்கைத் தரிசனத்தை வெளிப்படையாகவும் துணிச்சலோ டும் நம்மிடையே பகிர்ந்துகொண்டிருப்பது அவரது மேன்மை யான செயல்பாடுகளில் ஒன்று.

நாகராஜனின் வாழ்க்கை முறையையும் கதை உலகையும் இணைக்கும் சூட்சுமமான விதி செயல்பட்டிருப்பது அதிர்ஷ்டமா துரதிர்ஷ்டமா? மெழுகுவர்த்தியின் அடியில் தோன்றும் இருட்டு தவிர்க்க முடியாதது. காமசூத்ராவை எழுதியவர் பிரம்மச்சாரி தான். நாகராஜனின் பல படைப்புகளில் கதைகளின் வழியே அவரையும் அவரது வாழ்வின் வழியே கதைகளையும் வாசகன் சிரமமின்றிக் கண்டடையலாம். எப்போதுமே அப்படிப்பட்ட நெருக்கடி எழுத்தாளர்கள் பலருக்கு ஏற்பட்டிருப்பினும்கூட, நாகராஜன் செலுத்தும் செல்வாக்கு அதிகமானதுதான். மனிதன் நேரிடையாகத் தெரிந்துகொள்ள முடியாத பல்வேறு விதமான வாழ்க்கைகளைத் திரைப்படங்களும் இலக்கியங்களும்

தாம் தெரிவிக்கின்றன. வாழ்க்கையைப் பரிமாறிக்கொள்ளு தல் கலைகளின் முக்கியச் செயல்பாடுகளில் ஒன்று. இதை நாகராஜன் தான் எழுதிய அளவிலேயே கணிசமாகச் செய் திருக்கிறார். இதனாலேயே பிறிதொருவர் இல்லாமலே தனது இடத்தைத் தானே நிறுவிக்கொள்கிறார்.

நாகராஜனுக்கு மனிதர்களின் வாழ்க்கைக்கான அந்தரங்க மாக விருப்பங்கள் எதைத் தெரிவிக்கின்றன? மேன்மையுறும் வாழ்வு யாருக்கானது? அல்லது மேன்மை என்பது என்ன? அது எங்கிருக்கின்றது? உண்மையின் சொரூபம் எப்படியிருக் கும்? என்பனவெல்லாம் எதிர்மறை வாழ்க்கையை விவரிப்பதி னூடகவே எழுப்ப முடிகிறது. அடங்காத வேட்கையைப் போல் சொல்லித் தீராத பல விஷயங்கள் அவரைத் தொடர்ந்து துரத்திக்கொண்டிருப்பதை நம்மால் உள்ளூர உணர முடிகிறது. சட்டென்ற ஒரு திருப்பத்தில் கண்ட அதிசயத்தால் நிகழும் விபத்தைப் போல் அவரது வாழ்க்கை முரண்டுபிடிக்கும் குழந்தை யைப் போல் மாறிவிடுகிறது. இதற்கு நாகராஜன் தன் கடைசிக் காலத்தில் கொடுத்த விலை, 'யாரோ முட்டாள் சொன்ன கதை யை'ப் போல ஆகிவிட்ட ஒரு கலைஞனின் வாழ்வாகும்.

மேலும் இந்நாவல் சாதாரணமாகத் தோற்றம் தருவதுண்டு. (நானும் முன்பு அவ்வாறு உணர்ந்தேன்.) அந்த வயதில் சில எதிர்பார்ப்புகளும் முதிர்ச்சியின்மையும் வாழ்க்கையில் அதற் கான பருவங்கள் வரும்வரை நம்மால் அதை முழுமையாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை. காம்யூகூட எனது முதல் வாசிப்பில் அப்படி இருந்ததுண்டு. ஆனால் வாழ்வின் போக்கு களும் அதன் விஸ்தீரணமும் நம் அகக்கண்களுக்குப் புலப்படும் போது, இது போன்ற நாவல்கள் நம்மைப் பார்த்துச் சினேகிதத் துடன் புன்னகைப்பதை மறுத்துவிட முடியாது.

நிழல்களைப் போன்ற அவர்களின் வாழ்க்கையை நாகராஜ னின் 'கலைடாஸ்கோப்' நம்முன் மிகுந்த நம்பகத்தன்மையுடன் நடத்திக்காட்டுகிறது. ஓர் அசரீரியின் வாக்கைப் போல, ஒரு கையகலக் கண்ணாடி கடலைக் காட்டுவதுபோலத் தற்காலத்து வாழ்க்கையை அது பிரதிபலிக்கிறது.

கனவில் தொடங்கிக் கனவிலேயே முடிவடையும் இந்நாவ லில் மங்கிய நிறத்தைப் போல் ஒரு வாழ்க்கை இருக்கிறது. ஆனால் அதற்கான விளக்கங்கள் இல்லை. மாலையில் மலர் களைச் சூடி ஒப்பனைசெய்து, கதவை ஒருக்களித்துத் திறந்து வைக்கும் விலைமகளுண்டு. ஆனால் திரைச்சீலைகள் இல்லை.

இலக்கு: அது அவருக்குப் பொய்த்துப் போயிருக்கலாம். ஒவ்வொரு மானுடனும் அறிந்துகொண்டு கடக்க வேண்டிய

உண்மை : இதை அவர் பலரையும்விட முன்பே கண்டிருக்கலாம். உண்மையைக் கண்டடையும் மனிதர்கள் சிலர் வெளிச்சத்தை நோக்கி வருகிறார்கள். சிலர் இருளை நோக்கிச் செல்கிறார்கள். வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் ஒரு தரிசனத்தைத் தருகிறது. நாகராஜனுக்கு அது கிடைத்திருக்கக்கூடும். அது உலக உருண்டையின் மிகச் சின்னஞ்சிறிய தோற்றம். அது மட்டுமே பூரண உண்மையல்ல. இருளில் ஓடும் நதியின் போக்கை எந்தக் கரையிலிருந்து திருப்பிச் சூரிய வெளிச்சமுள்ள நிலமாக மாற்றுவது என்பதுதான் அவரது கேள்வியாக இருந்திருக்கும். பின்பு அவர் களைப்படைந்து வீடு திரும்பியிருக்கக்கூடும். மனித னின் புறத்தோற்றம் மாபெரும் மாயை. சமூக மாறுதலுக்காகக் காத்திருக்கும் சந்நியாசிகள் இருக்கவே செய்வார்கள். காத் திருப்பைவிடக் கடந்துசெல்வது முக்கியம் என நினைப்பவன் கலைஞன். நாகராஜன் கடந்து செல்லவே முயன்றிருப்பார்.

தன்னை எப்போதும் எழுத்தாளராக மட்டும் கருதிக்கொள் ளாத நாகராஜன், அடிப்படையில் சுதந்திரவாதியாக இருக்க விரும்பியதன் போராட்டம்தான் அவரது துரதிருஷ்டமான இறுதி வாழ்வு. 'உல்லாச' தோற்றமளிக்கும் கடின வாழ்வின் இறக்கை கள் அவர் பறக்க நினைத்ததற்கு மாறாக அவரை மூச்சுமுட்ட மூடிவிட்டது அவரது துரதிருஷ்டம். நிரந்தரமாக இதிலிருந்து தப்பிப்பதற்கு அதே இறக்கைகளை நம்பிக்கொண்டிருந்தது தான் அவருக்கு விதிக்கப்பட்டிருந்ததா என்பதை நாம் அறிய முடியாது. ஆனால் செல்லரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் புத்தகத்தின் ஓரங்களைப் போன்ற அந்த வாழ்வை எழுத்தில் கைப்பற்றுவதில் அவருக்குச் சிரமங்கள் இல்லை. மீன்குஞ்சு கையளவு நீரிலும் நீந்திக்கொண்டுதானிருக்கும்.

ஒருவகையில், வாழ்க்கையோடு உடன்பிறந்த அபத்தங் களின் அழகியல், தீமைகளின் அழகியல், கீழ்மைகளின் அழகியல் என்பவற்றைத் துணிவுடன் கட்டமைத்திருப்பதில், மாண்டோவிற்குப் பிறகு, நம்மால் மறக்க முடியாத கலைஞன் நாகராஜன்.

**ஜே.பி. சாணக்யா**

சென்னை

*01.11.2011*

கோவிலில் நின்றுகொண்டிருந்தான் அவன். அவன் பார்த்துக்கொண்டிருந்த சிலையின் முகத்தில் அம்மாவின் களை தட்டிற்று. முகம் அவனைப் பார்த்து ஒரு விதமாகச் சிரித்தது; கண்களில் துளிர்த்த நீரைப் பார்த்தால் அழுவதுபோலவும் இருந்தது. சிலையின் மார்பிலிருந்து ஏதோ ஒன்று உருண்டு வழிந்து தரையில் பொத்தென்று விழுந்தது. ஆனால் மறுகணம் அதே ஒலி ஒரு 'கேப்' துப்பாக்கிபோல் அவன் காதுகளில் வெடித்தது. மூடிய கண்களுக்குள் ஒரு பிரகாசம். கந்தன் புரண்டு படுத்தான். மீனாவை அணைக்க வலது கையை இடதுபுறம் திருப்பினான். மீனா இல்லை. நினைவு வந்துவிட்டது. இலேசாகக் கண்களைத் திறந்து படுத்த படியே நகர்ந்து திறந்திருந்த கதவைக் காலால் உதைத் தான். குடிசையினுள் இருந்த வெளிச்சம் குறைந்தது. பேச்சி வீட்டுக்குத்தான் மீனா போயிருக்கும். இந்தப் பேச்சி என்ன பொம்பளே? மாரிப்பய போயி மூணு வருஷத்துக்கும் மேலே ஆவுது. இட்டிலி சுட்டு வித்திட் டிருக்கு. அதிலே என்ன கெடைக்கும்? ஆமாம், பேச்சி இட்டிலி சுட்டு விற்றாள்; மீனா அவளோடு இருந்தாள்.

மீண்டும் தூக்கம் வருவதாக இல்லை. படுத்தபடியே பிரயாசைப்பட்டு அரையளவுக்கு மூடி இருந்த கதவைக் காலாலே திறந்தான் கந்தன். குடிசையை ஒட்டி ஓடிய சாக்கடை ஓரம் முனிசிபல் தோட்டி தெருவைக் கூட்டிக் கொண்டிருந்தான். மணி ஏழுதான் இருக்கும். இன்னும் ரெண்டு மணி போகணும். ஒரு கையைத் தரையில் ஊன்றிக் கால்களை நீட்டியவாறே எழுந்து உட்கார முயன்றான் கந்தன். முதுகை வளைக்க முடியவில்லை; அப்படி வலி. "அம்மா" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே, முதுகை ஒரு மாதிரி நெளித்து எழுந்து உட்கார்ந்தான். கால்கள் நீட்டிக் கிடந்தன; இரண்டு கைகளும் பின்புறமாகத் தரையில் ஊன்றியிருந்தன. நேத்து அந்த வெறும் பயலுக்கு ஊத்தின முன்னூறு மில்லியையாவது வச்சிட்டிருந்திருக்கலாம்; முளிச்ச நேரத்துலே போட்டா கொஞ்சம் தெம்பா இருக்கும்.

ஆமா, இது குடிக்கிறதுனாலே வர்ற வியாதியில்லே; குடியாத தனாலே வர்ற வியாதி. வெறகுக் கடைக்குப் போகலாம்; ஜிஞ்சராவது கெடைக்கும். கஷ்டப்பட்டு ஒரு கையால் தலையணையைத் தூக்கிப் பார்த்தான். கை சொன்னபடி கேட்கவில்லை; தலையணையை இலேசாகத் தள்ளிவிட்டுத் தந்தி அடிக்க ஆரம்பித்தது. மீண்டும் கையைத் தரையில் ஊன்றிக்கொண்டான். தேவைப்படாத ஒரு ஏப்பம். அதைத் தொடர்ந்து குமட்டல். குமட்டலோடு இருமல். விலா எலும்பு கள் முறிவதுபோல் இருந்தது. வாயிலிருந்து ஐம்பது மில்லி கோழை வழிந்து பனியனை நனைத்த பிறகு சிறிது நிம்மதி. சிறிது தெம்புங்கூட. வீராப்போடு ஒரு கையால் தலையணை யைப் புரட்டினான். அதன் கீழ் ஒரு அழுக்கு இரண்டு ரூபாய்த் தாள் கிடந்தது. இன்னும் கா ரூபா வேணுமே! எங்காச்சும் வச்சிருக்கும். மீண்டும் அதே வீராப்போடு எழுந்து நின்றான். வேட்டி நழுவவும், அதைச் சரிப்படுத்த முயலுகை யில் தடுமாறி, இடது கைக்குப்பட்ட சுவரின் மீது தாங்கிக் கொள்ள முயன்றான். பிடி நிலைக்காது கீழே சரிந்தான். "அடத்..." என்று வைதுகொண்டே, மீண்டும் சக்தி வரும் என்ற நம்பிக்கையோடு கண்களை மூடினான்.

"சாருக்கு எங்கே தங்கல்?"

"ஸ்ரீ வள்ளி லாட்ஜ்."

"ரூம் நம்பர்?"

"பனிரெண்டு."

எங்கிட்டோ பறந்துட்டு, எங்கிட்டோ நின்ன மாதிரி இருக்கு. கேப் துப்பாக்கி கணக்கா காதுலே வெடிக்குது. கண் கூசுது. கந்தன் கண்களைத் திறந்து பார்த்தான். காற்றில் நெளி நெளியாக உருவங்கள் அசைகின்றன. அலையலையாகச் சுழிக் கின்றன. இப்போதெல்லாம் அவற்றைக் கண்டு அவன் பயப் பட்டுக் கண்களை மூடாமல் மட்டும் இருந்தால் அவை தாமாகக் கொஞ்ச நேரத்தில் மறைந்துவிடும்.

உதறிக்கொண்டு சுவரோரமாக எழுந்து உட்கார்ந்தான். மீண்டும் ஒரு கணத்துக்குக் கம்பி கம்பியாகச் சுழலும் அதே வடிவங்கள். எழுந்து நின்று, ஆழமாக மூச்சை இழுத்துவிட்டுத் தன்னிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டான். இனி கொஞ்சம் சுலபமாக இருக்கும் என்று அவனுக்குப்பட்டது. கால்கள்தான் கொஞ்சம் நடுங்கின, கடுத்தன. மெதுவாக நடந்து, மீனா சில்லரைக் காசுகள் வைக்கும் பிறையைத் துளாவினான். ஓரிரு எலிப் புழுக்கைகள் கைக்குப்பட்டன. எரிச்சலோடு

கீழே உட்கார்ந்து, மீனாவின் துருப்பிடித்த துணி வைக்கும் பெட்டியைத் திறந்தான். அழுக்குத் துணிகளையும், தோய்த்து உலர்த்திய துணிகளையும் உதறி உதறி வெளியே எறிந்தான். அவ்வாறு எறியும்போது பெட்டியின் அடியிலிருந்து கரமுர வென்று ஒலி வெளிப்பட்டது. ஆவலோடு துணிகளைக் காலி செய்தான். பெட்டியின் அடியில் பெரிசும் சிறிசுமாக ஐந்தாறு காலிக் கண்ணாடிப் புட்டிகள் கிடந்தன. திடீரென்று அறை இருண்டது. பதறிப்போய் வாசற்பக்கம் திரும்பினான் கந்தன். பெட்டியின் மூடி 'கிரீச்'சென்று கத்திக்கொண்டே அவன் கைகள் மீது விழுந்தது. "என்ன மச்சான், இப்படி பயந்துட்டீங்க?" என்றாள் குடிசை வாயில் நிலையை இரண்டு கைகளாலும் பற்றி நின்றுகொண்டிருந்த மூக்கனின் மனைவி.

"இல்லே, மீனா பெட்டியே கள்ளத்தனமாத் துளாவிட்டிருக்கேன். அதுதான் வந்திரிச்சோன்னு பயம்." கந்தன் சாவதானமாக உட்கார்ந்து கொண்டான். அவன் முகத்தில் இப்போது கொஞ்சம் மலர்ச்சி. "ஏன் அங்கேயே நிக்கறே?" என்று மூக்கனின் மனைவியை உபசரித்தான்.

தலையில் பூவோடு, சற்றுப் புதிது என்று சொல்லக்கூடிய சேலை ரவிக்கையோடு, காலில் மெட்டி ஒலிக்க, மூக்கனின் மனைவி தனது முப்பத்தெட்டு ஆண்டுகளையும் பதினெட்டாக மாற்றிக்கொண்டு உள்ளே நடந்து வந்தாள். சட்டென்று குனிந்து, பாயிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்துக் கைக்குள் மறைத்து, இரண்டு கைகளையும் லாவண்யமாக இடுப்பில் அழுத்தி வலது காலை நொண்டுவதுபோல் வைத்து நின்றபடியே கொல்லென்று கந்தனைப் பார்த்துச் சிரித்தாள் அவள். கந்தன் அவளை ஆவலோடு பார்த்தபடியே "ரொம்ப அளகாச் சிரிக்கறயே?" என்றான். "என் அளகுச் சிரிப்புக்குத்தானே இந்த அம்பளிப்பு இல்லையா?" என்று கூறிக்கொண்டே, கையில் இருந்த ஒரு அழுக்கு இரண்டு ரூபாய்த் தாளை அவள் காட்டினாள்.

"அய்யோ, எம்பணம். இன்னைக்கு காலைக்கு அதுதான்" என்று கதறிக்கொண்டு கந்தன் அவளிடமிருந்த பணத்தைப் பிடுங்க எழுந்தான். அவள் சிரித்துக்கொண்டே அவன் மீது பணத்தை வீசியெறியவும், அது சரியாக அவன் கைகளில் விழுந்தது.

"சரி உக்காரு, பேசுவோம்" என்றான் கந்தன்.

"ஏம் மச்சான், இப்படிக் கால் நடுங்குது?" என்று கேட்டுக் கொண்டே அவள் உட்கார்ந்தாள்.

"அது அப்படித்தான் செல சமயம். மூக்கன் என்ன சவாரிக்குப் போயிருக்கா?"

"ஆமாம், பொழுது சாஞ்சுதான் வரும்."

"இல்லே, ஒன்னு தோணிச்சு. நேத்து ஒரு கிராக்கி, கொஞ்சம் வயசு கூடவானாலும் பரவாயில்லே, உம்னு இல்லாம சிரிச்சுப் பிடிச்சி விளையாடற பிள்ளையா இருந்தா வேணும் னான். எனக்கு ஒன் நெனைப்புத்தான் வந்திச்சு."

"போங்க மச்சான், என்னமோ காரியமா பேசுறீங்க, எனக்குத் தெரியாதா?" என்று கூறிவிட்டு, பிறகு ஏதோ நினைவுக்கு வந்துவிட்டது போல் சிரிக்கத் தொடங்கினாள். "மச்சானோடே எப்பவும் ஒரே கூத்துத்தான்" என்பதையும் சேர்த்துக்கொண்டு, சிரித்தவண்ணமே, ஒரு கையால் தலைப் பூவைச் சரிசெய்துகொள்ளப் பார்த்தாள். அவள் சிரித்த சிரிப்பில் பூவும் கலைந்து அவளது காதின் பின்னே ஏதோ வால் மாதிரி தொங்கிக்கொண்டிருந்தது.

"நீயும் அளகாத்தான் இருக்கே. இல்லாட்டி மூக்கன் கட்டியிருப்பானா?" என்றான் கந்தன்.

"அதான் அண்ணைக்கு, நீ கொரங்கு மாதிரி இருக்கே, ஒங்கிட்ட எவன் வருவான்னு சொன்னேயாக்கும்?"

"வெறிச்சிலே சொல்லியிருப்பேன்."

"இப்ப?"

"குடிக்கலேயே."

"குடிச்சா ஆம்புளேங்களுக்கு கெளவிகூடக் கொமரி மாதிரி தெரியும்னு சொல்வாங்க."

"ஆமா."

"அப்ப என்னெ மட்டும் குடிலே நீ ஏன் கொரங்குமாதிரி இருக்கேன்னே?"

"அதுவா? உண்மை என்ன தெரியுமா? மூக்கனுக்கும் எனக்கும் பத்து வருசப் பளக்கம். நான் அவனுக்குத் துரோகம் பண்ணலாமா?"

"மீனா மட்டும் என்னவாம்? அதுக்கும் கண்ணாலமாயித் தானே இருக்கு?"

"ஆமாம். ஆனா நா சம்மதிக்கிறேன், அது போகுது. மூக்கன் சம்மதிப்பானா?'

கந்தனை ஒரு மாதிரியாகப் பார்த்துக்கொண்டே இலேசான புன்னகையோடு, "தெரியாமத்தானே செய்யப்போறோம்" என்றாள் அவள். இதற்கும் உடனேயே கந்தன் ஏதாவது சமாளிப்புச் சொல்லிவிடுவான் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் கொஞ்சம் யோசனையில் இருந்துவிட்டு கந்தன், "உம், நீ சொல்றதும் சரிதான். ஒனக்கும் ஆசை இருக்காதா?" என்றான்.

"ஏதோ சிரிச்சுப் பேசி விளையாடற பிள்ளையா வேணாம்னுட்டு ஒரு கிராக்கி சொல்லிச்சீன்னியே" என்று தனது வெற்றிக்கு முத்தாய்ப்புத் தேட முனைந்தாள் மூக்கனின் மனைவி.

"அந்தக் கிராக்கி எங்கேயும் ஓடிடாது. காலேலே எட்டு, ஒம்பது மணிக்கு அந்த அய்யர் சந்தக் கடைக்கிக் கறிகாய் வாங்க வருவாரு. அவரே நாளைக்கே பார்த்திடலாம்... சரி மோகனா, நான் இப்ப வெளியே போகணும். ஒரு மூணு அவுன்ஸ் ஜிஞ்சர் அடிச்சாத்தான் எதுவும் செய்ய முடியும். கைலே ரெண்டு ரூபாதான் இருக்கு. ஒரு அரை ரூபா தா, பெறகு அட்ஜஸ்டு பண்ணிக்கலாம்."

"அது யாரு மோகனா, மச்சான்?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள் மூக்கனின் மனைவி.

"நீதான் மோகனா. மூக்கனுக்கு மட்டுந்தான் நீ இனிமே ராக்காயி; மத்தவங்களுக்கெல்லாம் நீ மோகனாதான்" என்றான் கந்தன்.

"மோகனா" என்று இழுத்துக் கூறிவிட்டு, இரண்டு கைகளாலும் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு, ஏதோ மறந்தது நினைவுக்கு வந்து விட்டதுபோல் சிரிக்க ஆரம்பித்தாள் மோகனா என்ற ராக்காயி.

"ஆமா, நான் கேட்டது என்ன?" என்றான் கந்தன். சரியாக உட்கார்ந்து கொண்டு இடுப்பு முடிச்சை அவிழ்த்து, அதிலிருந்து எதையோ எடுத்து அதைக் கந்தன் கைக்குள் பெருமையோடு திணித்துவிட்டு, "என் கையிருப்பே இவ்வளவுதான்" என்றாள் ராக்காயி. கையில் திணிக்கப்பட்டது கேவலம் ஐந்து காசே என்றதைக் கண்டதும் கந்தனுக்கு அவளை அப்படியே கழுத்தை நெறித்துக் கொன்றுவிடலாமா என்றிருந்தது. அடுத்த நிமிடம் சட்டென்று திரும்பி மீனாவின் பெட்டியிலிருந்த காலிபாட்டில்களை எடுத்து மோகனாவின் முன் வைத்தான்.

"இந்தா மோகனா, இதெயெல்லாம் இந்த முக்கு ராவுத்தர் கடேலே போட்டுட்டு வா" என்றான்.

"நல்ல ஐடியாதான். மச்சானுக்கும் மூளே வேலை செய்யத் தான் செய்யுது" என்று சொல்லிக்கொண்டு, தனது கையால் கந்தனின் கன்னத்தில் செல்லமாகக் குத்திவிட்டு, சப்தம் செய்யாமல் சிரித்துக்கொண்டே, குனிந்து பாட்டில்களை முந்தானையில் சுற்றிக்கொண்டு, "இப்ப வந்திடறேன்" என்று சொல்லிக்கொண்டே நடந்தாள் ராக்காயி.

குடிசையையும் ரோட்டையும் பிரிக்கும் சாக்கடையைக் கடக்க வைக்கப்பட்டிருந்த பலகையின் மீது அவள் நடந்து செல்வதைப் பார்த்ததும் கந்தனது தொடைகள் பலமாக உதறத் தொடங்கின.

"ராக்காயி, ராக்காயி" என்று உரக்கக் கூவினான் கந்தன். அவளும் சட்டென்று ஓடிவந்து, அவனை அடிப்பவள் போலக் கையை ஓங்கி, "மோகனான்னு கூப்பிடு" என்றாள்.

"ஒண்ணு சொல்ல மறந்திட்டேன். அந்த சின்ன பாட்டிலே போட வேண்டாம். இந்த ரெண்டு ரூபாவை வச்சிக்க. மத்த பாட்டில்களே கடேலே போட்டிட்டு, அந்த பாட்டில்லே மூணு அவுன்சு ஜிஞ்சர் வாங்கிட்டு வந்திரு."

"அடியாத்தா! ஜிஞ்சர் கடைக்கெல்லாம் நான் போவ மாட்டேன்."

"நீ ஜிஞ்சர் கடைக்கெல்லாம் ஒண்ணும் போவ வேண்டாம். இந்த மொகணேலே ஒரு வெறகுக் கடை இருக்கில்லே? அங்கே போய்க் கேளு, தருவாங்க."

"யாரெக் கேக்க?"

"மணீன்னு ஒரு பொடியன் இருப்பான், அவனக் கேளு."

"அவன் இல்லாட்டி?"

"எல்லாம் இருப்பான். சீக்கிரம் போ" என்றான் கந்தன். ராக்காயி நகர்ந்தாள்.

ராக்காயி திரும்பி வரப் பதினைந்து நிமிடங்கள் ஆயிற்று. இதற்கிடையில் கந்தன் படுப்பதும் எழுந்து உட்காருவதுமாக இருந்தான். தாகமாக இருப்பதுபோல் இருந்தது. ஒரு குவளை தண்ணீர் எடுத்துக் குடிக்குமுன் தலையும் கைகளும் நடுங்கி அவனைப் படாதபாடு படுத்திவிட்டன. இடது கைப்புறத்தில் இருந்த குடிசையில் ஆளரவம் கேட்கத் தொடங்கியது. வலது

கைப்புறத்தில் இருந்த குடிசையிலிருந்து இன்னும் சில நாட்களுக்கு ஆளரவமே வராது என்று கந்தனுக்குத் தெரியும்... பத்து நாட்களுக்கு முன்பு அங்கு குடியிருந்தது நாவித இளைஞன் பரமேஸ்வரனும் அவனது விதவைத் தாயார் லட்சுமியும். பரமேஸ்வரன் அக்கிரகாரம் ஒன்றின் முனையில் இருந்த ஒரு சலூனில் வேலை பார்த்து வந்தான். அந்த அக்கிரகாரத்துக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. நகரிலே இருந்த மிகப் பெரிய இறைச்சிக் கடை அக்கிரகாரத்தில்தான் இருந்தது. கடை முதலாளி பசுபதி சிறுவனாக இருந்தபோது – எல்லாம் நாற்பது வருஷங்களுக்கு முன்னால் – அக்கிரகாரத்தின் வழியே ஒரு கூடையில் மீனை வைத்துக் கொண்டு கூவிச் சென்றானாம். அதற்காக அக்கிரகாரவாசிகள் அவனைக் கட்டிவைத்து உதைத்தார்கள். 'இதே அக்கிரகாரத்தில் ஒரு இறைச்சிக் கடையே வைப்பேன்' என்று பையன் சூளுரைத்து, தன் சூளுரையைப் பத்து வருடங்களுக்கு முன்பாக நிறைவேற்றியும் விட்டான். இப்போது அக்கிரகாரத்தில் உள்ள மிகப் பெரிய வீடு அவனுடையதுதான். பசுபதிக்கு இரண்டு தாரங்கள். முதல் தாரத்துக்கு குழந்தைகள் இல்லை; இரண்டாவது தாரத்துக்கு மூன்று குழந்தைகள். மூத்தது பெண். சற்று அழகானவள் என்று கேள்வி. அந்தப் பெண்ணுக்கு அக்கிரகாரத்தின் கோடியில் ராணி சலூனை நடத்தி வந்த முதலாளிதான் ரோம நாசினி வாங்கித் தருவானாம். அதன் மூலம் சலூனில் வேலை பார்த்த பரமேஸ்வரனுக்கும் அவளுக்கும் தொடர்பு ஏற்பட்டது. பரமேஸ்வரன் ஓரிரண்டு ஆண்டு காலம் விஷயத்தை ரகசியமாக வைத்திருந்தான். சில சமயம் கந்தனிடம் மட்டும் அதைப் பற்றிப் பேசுவான். 'அம்பு மீக்க கதலா' என்று தொடங்கும் அவள் எழுதிய காதல் கடிதங்களைக் கந்தனிடம் வாசித்துக் காட்டுவான். சினிமாக் கதைகளில் வருவது போலவே, பசுபதி, மகளின் காதல் விவகாரத்தை உணராது, அவளுக்கு வேறு இடத்தில் திருமண ஏற்பாடுகள் செய்தார். அவளோ பரமேஸ்வரனோடு கள்ளத்தனமாக ஓடிவிடத் திட்டமிட்டாள். அவ்வளவு புத்திசாலிப் பெண் இல்லை. பிடிபட்டுக் கொண்டாள். பரமேஸ்வரனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்று ஒருநாள் பூராவும் அடித்து நொறுக்கினார்கள். அந்த 'அம்பட்டப் பயலை'க் கட்டிப்போடச் சொல்லிவிட்டு, கசாப்புக் கடைக்காரர் பசுபதி தம் கையாலேயே ஒரு சுத்தியலைக் கொண்டு பரமேஸ்வரனின் இரண்டு பற்களை முழுமையாகவும், மற்றுமொன்றைப் பாதியளவுக்கும் உடைத்தார். இரவில் பரமேஸ்வரனை அவனது குடிசையில் கொண்டு வந்து போட்டார்கள். அவன் அம்மா பயந்து எங்கேயோ ஓடிவிட்டாள். மறுநாள் காலையில்

பரமேஸ்வரன் குடிசையின் குறுக்கே ஓடிய வலுவான மூங்கில் உத்திரத்தில் பிணைக்கப்பட்டிருந்த கயிற்றில் தொங்கினான். அவன் ஒன்றும் எழுதி வைத்திருக்காததால், பிரேத விசாரணை யின் போது 'வயிற்றுவலி தாங்காமல் தற்கொலை' என்ற முடிவுக்கு வர கந்தன்தான் சாட்சியம் தரவேண்டி இருந்தது.

ராக்காயி வருவது கந்தனுக்குத் தெரிந்தது. சாக்கடையைக் கடக்க உதவிய 'மரப்பாலத்'தின் மீது நடந்து வந்துகொண் டிருந்தாள். அடுத்த குடிசையிலிருந்து ஒரு குழந்தையின் முனகலும், வேலாயி வீட்டைத் துப்புரவாக்கும் ஒலியும் கேட்டது. ராக்காயி வந்துவிட்டாள். அவளைப் பார்த்ததும் கந்தனுக்கு ஒரு கணம் பகீரென்றது. அவள் கைகளில் ஒன்றுமில்லை – பாட்டில்? அவள் இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு, அவன் முன்பு நின்று சிரிக்க முயன்றாள். ஆனால் அவனது முகம் அவளது சிரிப்பை அடக்கியது. "என்ன வெறுங் கையோடு வர்றே?" என்று அவன் பதறினான். அவள் சிரித்துக் கொண்டே மடியில் மறைத்து வைத்திருந்த ஒரு காகித கார்க்குப் பூட்டிய பாட்டிலை எடுத்து அவன் முன்பு நீட்டினாள்.

"அதெக் கீழே வச்சிட்டு, அந்தக் கிளாசிலே கொஞ்சம் தண்ணியெடு" என்றான் கந்தன்.

அவள் நகர்ந்து சுவரோரமாக இருந்த ஒரு கிளாசை எடுத்து, பானையைச் சுரண்டி, கொஞ்சம் தண்ணீர் எடுத்து வைத்தாள்.

"சரி போ."

"மச்சான் குடிக்கறதே நா பாக்கணும்."

அவள் உட்காரப் போனாள்.

"உம் உம், நீ இங்கே இருக்கக்கூடாது" என்று அவன் கத்தினான்.

"ஏனாம்?"

"கூடாதுன்னா கூடாது" என்று கந்தன் பல்லை நெறித் தான். அவனது உடல் படபடத்து நடுங்கிற்று.

ராக்காயி பயந்துவிட்டாள்.

"என்ன இப்படி வெறி? நான் பெறவுக்கு வர்றேன்" என்று கூறிக்கொண்டே குடிசையை விட்டகன்றாள்.

நடுங்கிய கையோடு கந்தன் பாட்டிலை கிளாசில் காலி செய்தான். இலேசாக மஞ்சள் நிறத்தில் இருந்த அந்த திரவத்தைப் பார்க்கும்போது, அவனுக்கு ஒருபுறம் குமட்டல்; மறுபுறம் ஆசை, ஆவல். திரவத்தை எடுத்துக் குடிக்க கிளாசை வலது கையால் எடுக்க முயன்றான். கை உதறிற்று. இரண்டு கைகளாலும் எடுத்தான். கிளாசை உயர்த்தியபோது, இரண்டு கைகளும் உதற ஆரம்பித்தன. நடுங்கும் கிளாசிலிருந்து திரவம் தளும்பிக் கொட்டிவிடுமோ என்ற பயம் வேறு. அதை ஒரு நிலையில் நிறுத்தி, தன் தலையைக் குனிந்து, கிளாசின் விளிம்பை வாயின் இரு ஓரங்களிலும் வைத்தழுத்தி, ஒரு வெறியோடு ஒரே மடக்காகத் திரவத்தைக் காலி செய்தான். திரவத்தை விழுங்கியதும், அவன் வாயிலிருந்தும் வயிற்றிலிருந்தும் ஒரு ஏப்பம் வெடித்தது. வாயை இறுக மூடி, வாயிலிருந்த உமிழ் நீரைக் கூட்டி விழுங்கிக்கொண்டான்.

தொடர்ந்து இரண்டு சிகரெட்டுகள் புகைத்து முடித்தான் கந்தன். வேலாயி வீட்டுக் குழந்தை அழ ஆரம்பித்தது.

"அக்கா, குழந்தை என்ன அழுகுது, வயித்து வலியா என்ன?" என்று உரக்கக் கூவினான்.

"வயித்து வலி ஒண்ணுமில்லே, எல்லாம் வாய் வலிதான்" என்றாள் அடுத்த குடிசை வேலாயி.

"மச்சான் வேலைக்குப் போயிரிச்சா?"

"இல்லே, சங்கத்துக்குப் போயிருக்காரு."

"ஆமா அக்கா, முன்னெல்லாம் ராமு மச்சான் சங்கத்துக்குப் போனா சண்டை போடுவீங்களே, இப்பல்லாம் சண்டை போடறதில்லையா?"

அடுத்த குடிசையிலிருந்து பதில் இல்லை.

"என்ன அக்கா, பதில் பேச மாட்டேங்கறீங்க? சங்கம் கிங்கம் இருந்தாத்தான் சரீனு படுது."

அடுத்த குடிசையிலிருந்து மீண்டும் பதில் இல்லை. வேலாயி வீட்டு வேலையில் மும்முரமாக இருந்ததாகப்பட்டது கந்தனுக்கு. எழுந்து நின்று, கைகளை முறித்துவிட்டு இன்னும் இரண்டு அவுன்சு வேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

கொஞ்சம் தயக்கத்தோடே, "வேலாயி அக்கா" என்று கூவினான்.

"என்ன தம்பீ" என்று பதில் வந்தது.

"ஜீவாவை இங்கே கொஞ்சம் அனுப்பி வைங்க."

"இந்தா சீவா, சீவா எழுந்திரு. அடுத்த வீட்டுக் கந்தன் கூப்பிடுது. என்னன்னு கேட்டுட்டு வா."

சிறிது நேரத்தில் அரைகுறைத் தூக்கத்தோடு, பாவாடையும் சட்டையும் அணிந்த பத்து வயதுச் சிறுமி ஒருத்தி கந்தன் முன் வந்து நின்றாள்.

"இட்லிக்காரப் பேச்சி வீட்டு வாசல்லே மீனா அக்கா இருக்கும். நான் சொன்னேன்னுட்டுக் கூட்டியா" என்றான் கந்தன். ஜீவா இலேசாகச் சிரித்துக்கொண்டே, ராக்காயி தரையில் வைத்துவிட்டுச் சென்றிருந்த பதினைந்து காசுச் சில்லரையைப் பார்த்துக்கொண்டு நின்றது. கந்தன் ஒரு ஐந்து காசை எடுத்து அவள் கையில் திணித்தான். ஒன்றும் சொல்லாது காசை வாங்கிக்கொண்டு அசமந்தமாகக் குடிசையை விட்டகன்றது குழந்தை.

ஜீவாவுக்கு மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு விபத்து ஏற்பட்டது. தெருவிலே விறகுக் கடை அருகே ஒரு லாரியின் பின்னால் நின்றுகொண்டிருந்தாள். லாரி இலேசாகப் பின்னே நகர்ந்து அவளை இடித்துத் தள்ளியது. ஜீவாவுக்கு வெளியே ஒரு காயமும் ஏற்படவில்லை. ஆனால் மயக்கமுற்றுக் கிடந்தாள். வீட்டுக்குத் தூக்கி வந்தார்கள். ஹோமியோபதி சர்ட்டிபிகேட்டோடு அலோபதி வைத்தியம் செய்யும் டாக்டர் வந்து ஊசி போட்டார். அரைமணி நேரம் வாயை இலேசாகப் பிளந்து பெருமூச்சு விட்டவாறே அசைவற்றுக் கிடந்தாள். பிறகு அசைய ஆரம்பித்தாள். கண்களைத் திறப்பதற்கு முன்னால், உதடுகளை வேகமாகத் திறப்பதும் மூடுவதுமாக இருந்தாள். அவள் ஏதோ பேசுவது போல் சிறிது நேரத்தில் ஒலியும் கேட்டது. என்ன சொல்லுகிறாள் என்று எல்லோரும் உற்றுக் கேட்டனர். அவள் வாயிலிருந்து உருப்படியான வார்த்தைகள் எதுவும் வரவில்லை. மாறாக, 'கபே, கபே' என்ற ஒலிகள் மட்டும் மாறிமாறி வந்து கொண்டிருந்தன. வேலாயியும் ராமுவும் அவளை உலுப்பினர். அவள் கண்களைத் திறந்தாள். ஆனாலும் தொடர்ந்து 'கபே, கபே' என்று உளறிக்கொண்டிருந்தாள். அவளை எழுப்பி உட்கார வைத்தனர். அவளைச் சுற்றியிருந்தவர்கள் ஒவ்வொருவரையும் பார்த்து, 'கபே, கபே' என்று சொல்லிக்கொண்டே, கைகளை அசைத்து அவர்களிடம் பேசுவதாகப் பாவனை செய்தாள். ஒவ்வொருவரிடத்தும் இவ்வளவு நேரம்தான் பேசவேண்டும்

என்ற நியதிக்குக் கட்டுப்பட்டவள்போல் சுற்றியிருந்த ஒவ்வொரு வருக்கும் 'கபே, கபே'யை அளந்து கொட்டினாள். இடை யிடையே சிரித்துக்கொண்டாள்.

"அடி மாரியாத்தா" என்று கத்திவிட்டு, தலையில் அடித்துக் கொண்டு வேலாயி அழுதாள். ராமு மகளை மடியில் வைத்துக் கொண்டு வலது கையால் அவளது வாயை மூடப்பார்த்தான். 'கபே, கபே' தொடர்ந்தது. ராமு சற்று பலத்தோடு அவளது வாயை மூட முயலவும், மூச்சு முட்டித் திணறுவதுபோல், தன் கையால் அவன் கையை வெறியோடு பிடுங்கி எறிந்து விட்டு, அவனைத் திட்டுவதுபோல் கோபத்தோடு அவனிடத்தும் 'கபே, கபே'யை அவள் உமிழ்ந்தாள். வேலாயி, ராமு இவர்களைத் தவிர மற்றவர்களுக்கு எல்லாம் சிரிப்பு வந்துவிட்டது. சிரிப்பை அடக்கிக்கொண்டு வேடிக்கை பார்த்தனர். சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியாதவர்கள், 'முட்டிக்கொண்டு வரும்போது' ஒதுக்குப்புறமான இடத்துக்கு ஓடுவதுபோல், பல்லைக் கடித்துக் கொண்டோ, கையால் வாயை மூடிக்கொண்டோ, குடிசையை விட்டுப் பாய்ந்து வெளியே ஓடினர்.

ஜீவாவுக்குப் புத்தி ஸ்வாதீனம் இருக்கிறதா என்று பார்த்தார்கள். இருந்தது. எழுத்திருக்கச் சொன்னால் எழுந் திருந்தாள். ஒரு இடத்துக்குப் போகச் சொன்னால் போனாள். ஆனால் 'கபே, கபே' மட்டும் நிற்கவில்லை. எழுந்தாலும் நடந்தாலும் ஓடினாலும் குனிந்தாலும் நிமிர்ந்தாலும் 'கபே, கபே' தொடர்ந்தது. யாரைப் பார்த்தாலும் அவர் முன்பு நின்று 'கபே, கபே' கச்சேரியை நடத்தினாள். சமயத்தில் அவள் மிக வேகமாக ஏதோ பேசிக்கொண்டிருப்பது மாதிரி தான் தெரியும்; உற்றுக் கவனித்தால் தான் உளறுவது விளங்கும். குடிசையில் தனியாக அவளை அடைத்துப் போட்டுப் பார்த் தார்கள். சுவரின் முன்னால், ஜன்னலின் முன்னால், சட்டி பானைகள் முன்னால் எல்லாம் நின்றுகொண்டோ, உட்கார்ந்து கொண்டோ 'கபே, கபே' என்ற அவளது மந்திரத்தை ஓதினாள். அவள் சாப்பிடுவதைப் பார்ப்பதே வேடிக்கையாக இருந்தது. ஒவ்வொரு பிடிச் சோற்றையும், ஒன்று அல்லது இரண்டு 'கபே, கபே' சொல்லாது வாய்க்குள் அனுப்பிவிட மாட்டாள். சோறு தொண்டைக்குள் இறங்கும் ஒரு கணப் போதில் மட்டும்தான் 'கபே, கபே' கேட்காது. ஏதாவது குடிக்கும் போதும் அப்படித்தான். இரவில் படுக்கையில் படுத்தாலும் 'கபே, கபே' தொடர்ந்து ஒலித்தது. தூக்கம் வர வர, ஒலி குறைந்துகொண்டே சென்று, நன்றாகத் தூக்கம் வந்த பிறகு மட்டும் ஒலி நின்றுவிடும். ஆனால் உறக்கத்திலும் அவளது

உதடுகள் அசைந்துகொண்டே இருந்தன. அவளைப் பார்த்தால், லட்சியவெறி பிடித்த ஒரு அரசியல்வாதி, வாழ்நாள் குறைவு என்பதை உணர்ந்து, விழித்திருக்கும் நேரமெல்லாம் மக்களிடத்துத் தனது லட்சியத்தைப் பரப்பிக் கொண்டிருக்க வேண்டும் என்று தூண்டப்பட்டு, ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் பேசிக் கொண்டிருப்பது போல் இருந்தது.

கந்தன்தான் ஜீவாவைத் தனது வாடிக்கைக்காரர்களில் ஒருவரான ஒரு கிழட்டு டாக்டரிடம் கூட்டிச் சென்றான். டாக்டர் குழந்தையைப் பார்த்துவிட்டு, அவளது வியாதியை மூளை ஆபரேஷன் மூலம்தான் குணப்படுத்த முடியும் என்றார். சென்னையில் அவருக்குத் தெரிந்த ஒரு பெரிய டாக்டருக்கு அறிமுகக் கடிதமும் கொடுத்தார். கடிதத்தோடு ராமு, வேலாயி, ஜீவா மூவரும் சென்னைக்குச் சென்றனர். ஆபரேஷன் முடிந்து பனிரெண்டு நாட்களில் வீடு திரும்பினர். இப்போதெல்லாம் ஜீவா, 'கபே, கபே' என்று உளறுவதில்லை. அது மட்டுமல்ல, நம்மைப் போலவோ, நமது வானொலிப் பெட்டிகளைப் போலவோ எதையுமே உளறுவதில்லை.

ஜீவாவும் மீனாவும் கந்தனின் குடிசைக்கு வந்ததும் நிலையிலேயே ஒரு கணம் நின்றுவிட்டு, ஜீவா அடுத்த குடிசைக்குச் சென்றாள். மீனாவைக் கண்டதும் கந்தன், "உனக்கு எத்தனைவாட்டி சொல்றது, நான் வைக்கிற பணத்தை எடுக்காதேன்னு?" என்றான்.

"நான் எடுக்கலேயே" என்றாள் மீனா, சாவதானமாகப் பாயில் உட்கார்ந்தவாறே.

"எடுக்கலயா? பின்னே எங்கே போச்சு அந்த அஞ்சு ரூவாத் தாளு?"

"எந்த அஞ்சு ரூவாய்?"

"நேத்து ரவைக்கு உம் பெட்டிலே போட்டேனே, அதுதான்."

"அஞ்சு ரூபாய் ஏது பெட்டிலே போட்டீங்க? சட்டையைக் களட்டினப்ப, பைலேந்து ஒரு ரெண்டு ரூவாய்தான் கீளே விளுந்திச்சு; அதை வளக்கம்போலே தலையணைக்கு அடிலே வச்சேன்" என்று கூறிக்கொண்டே, உட்கார்ந்தபடியே தலையணையை எடுத்துப் பார்த்தாள் மீனா.

"அதை எடுத்துக்கிட்டேன். நேத்தி நீ எதுவும் கொண்டாரலையா?" என்றான் கந்தன்.

"அதான் நேத்து நைட்டே நீங்க வந்ததும் சொன்னனே. ஆறரை மணிக்கு அக்கா வீட்டுக்குப் போகும் போதே சந்துக்கு எதிரா மெயின் ரோட்ல லாரி நின்னுக்கிட்டிருந்திச்சு. யாரையும் கண்டுக்காதது போல அப்படியே சுத்தி வீட்டுக்கு வந்திட்டேன்."

"இப்ப என்ன செய்யறது?"

"எதுக்கு என்ன செய்யறது?"

"பணத்துக்குத்தான்?"

“எங்கிட்டே ஒரு ரூபாயும் சில்லரையும் இருக்கு” என்றாள் மீனா, இடுப்பு முடிச்சை அவிழ்த்தவாறே. பெரிய தொகையாக இருந்திருந்தால் ஒரு பர்சில் ரவிக்கைக்குள் போட்டு வைத்திருப்பாள்.

“அது எதுக்குப் போதும்? இந்த சரகத்து ஆளுங்களுக்குத்தான் தரணும். நேத்தே ஏட்டையா பாத்துக் கேட்டார். இன்னைக்குக் காலேலே தந்துடறேனிருந்தேன்” என்றான்.

“இப்ப எவ்வளவு வேணும்?”

“அஞ்சு ரூவா போதும், சமாளிச்சிடுவேன்.”

“அதுக்கென்ன பேச்சியக்காகிட்டே வாங்கித் தரேன். நாளெக்குக் கொடுத்திட்டாப் போகுது” என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள் மீனா.

“எனக்குன்னு சொல்லாதே. அதுக்கு என்னெக் கண்டா அவ்வளவா பிடிக்காது.”

“உங்களையா அக்காவுக்குப் பிடிக்காது? இப்ப, நான் வரும்போது கூட, மச்சானுக்கு சூடா நாலு இட்டிலி கொண்டு போன்னு சொல்லிச்சு.”

“அப்படியா? அப்ப இட்டிலியை வேணாக் கொண்டு வா. நான் தின்னறேன். ஆனா எனக்கூன்ட்டு சொல்லாதே” என்றான் கந்தன்.

அவன் வெளியே ரோட்டைப் பார்த்துக்கொண்டிருந்தான். இரண்டு நாய்கள் ஒன்றையொன்று முந்துவதும் பிந்துவதுமாய் ஓடி வந்தன. மூன்றாவது நாய் ஒன்று தனக்கும் அவற்றுக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட இடைவெளி குறையாதவாறு பார்த்துக் கொண்டு அவற்றைத் தொடர்ந்து வந்தது. வெளியே கிளம்பயிருந்த மீனா, பெட்டியிலிருந்து வெளியே எடுத்துப் போடப்பட்டிருந்த துணிகளைப் பெட்டியினுள் வைக்கச் சென்றாள். பெட்டியருகே சென்றதும், நாலைந்து இடங்களில் இரண்டு கைகளாலும் அழுத்தி அழுத்திப் பார்த்தாள்.

“என்னங்க, காலி புட்டியெல்லாம் எங்கே?” என்றாள் மீனா.

“துணிப்பெட்டீலே காலி புட்டியெல்லாம் எதுக்கு?” என்றான் கந்தன்.

“அதெல்லாம் எங்கே வச்சீங்க?”

"சாக்கடேலே போட்டுட்டேன்."

மீனா எழுந்து வெளியே ஓடப்போனாள்.

"இப்ப அங்கே ஒன்னும் இல்லே, தோட்டிக எடுத்திட்டுப் போயிட்டாங்க" என்றான் கந்தன்.

"அதெல்லாம் கடேலே போட்டிட்டுக் காசு சேத்து வளையல் வாங்கலாம்னு இருந்தேன்."

"என்ன வளையல்?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தான் கந்தன்.

"கவரிங் வளையல்" என்று கூறிவிட்டு, "சரி, நா பேச்சியக் காவே பாத்திட்டு வரேன்" என்று கூறிக்கொண்டு மீனா குடிசையை விட்டு வெளியே சென்றாள்.

"உம், இதுக்கு ஏதாவது ஏற்பாடு செய்யறதுதான் நல்லது" என்று முனகிக்கொண்டான் கந்தன்.

அது ஒரு நல்ல ஏற்பாடாக இருக்கும் என்று எண்ணித்தான் பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவன் அவளைச் சேர்த்துக் கொண்டான். இப்போதுதான் அது அவ்வளவு நல்ல ஏற்பாடாக அமையவில்லை என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அவன் அவளை முதலில் சந்தித்தது கோவிலில். அன்று வெள்ளிக்கிழமை. அவன் கோவிலுக்குள் நுழையும்போது அவள் கோவிலிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தாள். அநேகமாக கோவிலில்தான் அவர்கள் சந்தித்தனர். அவளைக் கண்டதும் அவன் மனது அவளைப் பார்த்து, 'இத்தனை காலமா எங்கே இருந்தே நீ?' என்று கேட்டது. அவளும் அவனைப் பார்த்தாள். எல்லாம் ஒரு கணம்தான். அவன் கோவிலுக்குள் நடந்தான். அவள் வெளியே சென்றாள். கந்தன் பத்துப் பனிரெண்டு எட்டுக்கள் கோவிலுக் குள் நடந்திருப்பான்; சட்டென்று நின்றான். அவனது பின் புறத்தை யாரோ உற்று நோக்கிக்கொண்டிருப்பது போன்ற ஓர் உணர்வு; மல்லிகை மணம் வேறு இன்னும் மூக்கைச் சுற்றி வளைத்துக்கொண்டிருந்தது. கந்தன் திரும்பிப் பார்த் தான். அவள் அங்கு நின்றுகொண்டிருக்கவில்லை. வேகமாகக் கோவிலை விட்டு வெளியே வந்து சாலையின் இருபுறங்களை யும் மாறிமாறிப் பார்த்தான். அதோ, அவள்தான் அங்கு சென்றுகொண்டிருந்தாள். அவளைப் பின்தொடர்ந்தான். அவள் ஒரு முறை திரும்பிப் பார்த்தாள். நேராக வேகமாக

நடந்துகொண்டிருந்த அவள் எதிர்பாராதவிதமாய் ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு ஒரு சந்தினுள் திரும்பினாள். கந்தனும் அதே சந்தினுள் திரும்பினான். தெருவில் போகிற வருகிறவர்கள் எல்லாம் அவர்கள் இருவரையுமே கவனித்துக் கொண்டிருப்பது போன்றதொரு பிரமை கந்தனுக்கு ஏற்பட்டது. அவன் முன்னே சென்று கொண்டிருந்த அவள் மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்த்தாள். அவள் அவனைப் பார்த்து இலேசாகச் சிரித்தாளா? பல சந்துகளின் வழியாகச் சென்றுவிட்டு இறுதியில் ஒரு சந்தினுள் நுழையும் முன் ஒரு முறை திரும்பிப் பார்த்துக்கொண்டாள். இப்போது அவர்கள் சென்றுகொண்டிருந்த சந்தைப்பற்றி கந்தனுக்குத் தெரியும். அந்தச் சந்தில் பல வீடுகளில் போலீசுக்கு மாமூல் தருவதுண்டு.

அவள் உயரமான படிக்கட்டுகளைக் கொண்ட ஒரு வீட்டினுள் நுழைந்தாள். வீடு திறந்திருந்தது. அவன் வீட்டோரமாக வீட்டினுள் பார்த்துக்கொண்டே நடந்தான். அவள் தெருவைப் பார்த்தவண்ணம், வீட்டினுள் சற்று உட்புறமாக நின்றுகொண்டிருந்தாள். 'வாங்க' என்றது ஒரு மெல்லிய குரல். தவம் செய்துகொண்டிருந்த தெருவிளக்குகள் திடுக்கிட்டது போலக் கண்களைத் திறந்து வியந்தன. அந்த உயரமான படிகளின் மீது ஏறி உள்ளே நுழைந்தான் கந்தன்.

"உள்ளே வாங்க" என்று சொல்லிக்கொண்டே முறுவலித்தாள் அவள்.

"காசு கொண்டு வரலே" என்றான் கந்தன்.

"போய் கொண்டு வாங்க; இப்ப வீடு தெரியுமில்லையா?"

"இது யார் வீடு?"

"தெரியலே, அத்தான்தான் வாடகை தராரு."

"ஓஹோ! அத்தான் யாரு?"

"அவர் பேரு சோலை. வெத்திலக் கடே சோலை எம்பாங்க."

"அவருக்கு என்ன வெத்திலெ வியாபாரமா?"

"உஹூம்" என்றுவிட்டு அவள் சிரித்தாள். "அவருக்கு வியாபாரமெல்லாம் இதுதான். ரொம்ப நேரம் வெத்திலெப் பேட்டை பிச்சையாவோட அவர் கடேலேயே உக்காந்து இருப்பாரு. அதான் அவரெ வெத்திலெக் கடே சோலை எம்பாங்க."

"நீ ஊருக்குப் புதுசா?"

"இங்கே வந்து ஒரு மாசமாவுது." உள்ளே ஒரு கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

"என்ன மீனா?" என்று கேட்டுக்கொண்டே, நன்றாகச் சிவப்பாகத் தடித்திருந்த ஒரு பெண் மிடுக்காக நடந்து வந்து, இருவர் அருகிலும் நின்றுகொண்டாள். ஒரு கையை இடுப்பில் மடக்கி வைத்துக்கொண்டு, "என்ன, பேசிட்டிங்களா?" என்று மீனாவைப் பார்த்துக் கேட்டாள்.

"நான் அதுக்கெல்லாம் வரலே. ஒங்க மொதலாளியெப் பார்க்கணும்; அதுக்குத்தான் வந்தேன்" என்றான் கந்தன்.

"என்ன விஷயமா?"

"எனக்குத் தெரியாது. எங்க மொதலாளி பாத்திட்டு வரச் சொன்னாரு."

"ஒங்க மொதலாளி யாரு?"

"சன் தியேட்டர் ஓனர் சிக்கையா நாயக்கர்."

"உம், நாளைக் காலேலே ஒம்பது மணிக்கு வந்தா, இந்த அடுத்த வீட்டுலே அவரெப் பார்க்கலாம்" என்று சிவப்பு சுந்தரி கூறிவிட்டு 'வா'வென்று அழைக்கும் பாவனையில் மீனாவிடம் கையை அசைத்தாள்.

"வர்றேங்க" என்று கூறிவிட்டு கந்தன் வெளியே வந்தான். அவன் படிகளில் இறங்கும்போது மீனா உரக்கச் சிரிப்பது அவன் காதுகளில் விழுந்தது.

அடுத்தநாள் காலையில் வெற்றிலைக் கடை சோலை தன் வீட்டின் கூடத்தில் பாயில் உட்கார்ந்துகொண்டு, ஒரு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு இருக்கையில் கந்தன் அவர்முன் நின்று கைகூப்பி வணங்கினான். சோலை வயதான வர். ஆனாலும் கட்டுமஸ்தான உடல். கந்தன் இளைஞன். அவனுக்கும் கட்டுமஸ்தான உடல்.

"யாரப்பா நீ?" என்றார் பெரியவர்.

"எம் பேரு கந்தன். நா ஒங்ககிட்டே ஒரு விஷயம் பேசணும்" என்றான் கந்தன்.

"உட்காரப்பா" என்றார் அனுபவசாலி.

கந்தன் உட்கார்ந்தான். அவர் எதுவும் கேட்பதற்கு முன்னால், "உங்ககிட்டே இருக்கே, அந்தப் பொண்ணு மீனா, நா அதைக் கல்யாணம் கட்டிக்கணும்" என்றான் கந்தன்.

பத்திரிகையைப் பக்கத்தில் வைத்துவிட்டுக் கந்தனைக் கூர்ந்து நோக்கினார் பெரிய மனிதர்.

"எந்தப் பொண்ணு? மீனான்ட்டா சொன்னே?"

"ஆமா, அடுத்த வீட்லே இருக்கே, ஒரு மாசத்துக்கு முன்னாடிதான் ஊருக்கு வந்ததுல்லே, அதுதான்."

"என்ன தம்பி, நீ சொல்றது விளங்கலேயே! நீ யாரு? எந்த ஊரு?"

"நீங்கதானே வெத்திலெக்கடே சோலைங்கறது?" என்று கேட்டான் கந்தன்.

"ஆமா..." என்று இழுத்தார் சோலை.

"எம் பேரு கந்தன். இந்த ஊர்தான்" என்றான் கந்தன்.

"எந்தத் தெரு?"

"பழக்காரத் தெரு."

"பழக்காரத் தெருவா? அய்யா பேரு?"

"அய்யா ரொம்ப காலத்துக்கு முன்னாலே இறந்து போயிட்டாரு. அம்மா பேரு சொர்ணத்தம்மாள்."

"சொர்ணத்தம்மாளா? பேரு கேட்ட பேரு மாதிரி தெரியுதே... நீங்க வடம்போக்கித் தெரு குறுக்குச் சந்துலே குடியிருந்தீங்களா?"

"ஆமா, அங்கே ஒரு காலத்துலே குடியிருந்தோம்னுட்டு அம்மா சொல்லும். அப்ப நான் ரொம்பச் சின்னவன், வெவரம் தெரியாது. ஆனா, இப்பக்கூட எங்களுக்குக் குறுக்குச் சந்துலே ஒரு வீடு இருக்கு."

"நீ சொர்ணம் மகனா?" என்று கேட்டுவிட்டுச் சோலை யார் கடகடவென்று சிரித்தார். கந்தனுக்கு ஒரு வகையில் சந்தோஷம். நபர் முற்றிலும் புதியவரல்ல.

"குறுக்குச் சந்து வீட்டே வாடகைக்கு விட்டிருக்கீங்களா?"

"ஆமா."

"என்ன வருது?"

"எழுபது ரூவா தர்றாங்க."

"வீடு கொஞ்சம் பெரிசா இருக்குமே... பெரிசுதான், ஆனா, ரொம்பப் பழசு."

"குடியிருக்கறவங்க ரொம்ப காலமா இருக்காங்க. கண்ணிய மான ஆளுங்க. நாங்களும் வாடகையைக் கூட்டிக்கலே" என்றான் கந்தன்.

"உம்" என்று விட்டு, தனது கை மோதிரங்களைப் பார்த்துக் கொண்டார் செல்வந்தர்.

"நான் கேட்டது..." என்றான் கந்தன்.

"அந்த மீனாங்கற பிள்ளையைப் பாத்திருக்கையா?"

"உம்."

"எப்ப?"

"நேத்து."

"உடனே 'லவ்'வாயிரிச்சாக்கும்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் சோலைப்பிள்ளை.

கந்தன் பேசாமல் இருந்தான்.

"சொர்ணம் சம்மதிக்குமா?" என்றார் சோலை.

"சம்மதிச்சிடும்" என்றான் கந்தன்.

"அம்மாவுக்கு செல்லப்பிள்ளை, உம்... சொர்ணத்துக்கு எத்தனை கொழெந்தேங்க?"

"நா மட்டுந்தான்."

"என்ன தொழில் பாக்கறே?"

"சன் தியேட்டர்ல கேட்கீப்பரா இருக்கேன்."

"என்ன தர்றாங்க?"

"நாளைக்கு ரெண்டு ரூவா."

"மாதம் அறுபது கெடைக்கும், உம்."

"வெள்ளிக்கிழமை நான் 'ஆப்' எடுத்துக்கிடுவேன்; கொஞ்சம் கொறெச்சலாத்தான் கெடைக்கும்."

"ஏதாவது தொழில் பண்றதுதானே? இன்னூத்தர்கிட்டே வேலை பார்த்து முன்னுக்கு வர முடியுமா?"

"ஆமா, எனக்கும் அதான் யோசனை. டிரைவிங் கத்திட்டு இருக்கேன். நல்ல வெலையா வந்தா வீட்டே வித்திட்டு,

சொந்தத்துலே கார் வாங்கி, டாக்சி அடிக்கலாம்ன்ட்டு நெனெப்பு."

"அதுதான் நல்ல ஐடியா, வேறெங்கேயும் வெளியூர்க் கெல்லாம் போக வேண்டாம். கோவிலுக்கும் ஸ்டேஷனுக்கும் அடிச்சாலே போதும், நல்ல மிச்சமிருக்கும்" என்று சொந்தத் தொழில்காரரான சோலையார் கூறிவிட்டு, "முத்து" என்று உரக்கக் கூப்பிட்டார். ஒரு சிறுவன் வந்தான். "வெளிக்கதவெ அடைச்சிட்டு அதெக் கொண்டு வா" என்றார் சோலை. கந்தனுக்கு ஒரு கணம் நிம்மதி இல்லை. சோலை தொடர்ந்தார்.

"அந்த மீனா விவகாரம் கேட்டேயே?... இந்தா தம்பீ, நீ சொர்ணத்தம்மா மகன்தானே, எல்லாம் பிளெயின்னாவே சொல்லிடறேன். அந்தப் பிள்ளையெ ஐந்நூறு கொடுத்து வடக்கேந்து கூட்டியாந்தேன். எட்டுப் பவுனுக்கு நகை செஞ்சு போட்டிருக்கேன். எந்தக் கொளெந்தெயானாலும் சரி, கையிலே களுத்துலே போட்டதெ எடுக்கறவன் நான் இல்லை. ஒனக்குத் தெரியாது; அம்மாவெக் கேட்டுப் பாரு. சொர்ணம் ஒரு வகைலே எனக்குச் சொந்தம்தான். நீயும் நல்ல பையன் மாதிரி தான் தெரியுது. அந்தப் பிள்ளேயும் ஒனக்கு ஏத்ததுதான். தங்கமான பிள்ளை. அதிகம் கேக்கலே, ஆயிரத்து ஐந்நூறைக் கொடுத்துட்டு, பிள்ளையெக் கூட்டிட்டுப் போ. ஏதாவது கோவில்ல வச்சுத் தாலியெக் கட்டு. ஆனா, ஒண்ணுலே மட்டும் நான் கண்டிப்பா இருப்பேன். அம்மாவெக் கேட்டுக்காம ஒண்ணும் செய்யாதே ஒரு வாட்டிக்கு ரெண்டு வாட்டி நல்லாக் கேட்டுக்க. அது பூர்ணமா சம்மதிச்சா நீ மீனாவைக் கட்டிக் கிறதுலே எனக்கு ஆட்சேபணை இல்லை."

இந்த நேரத்தில் முத்து ஒரு பாட்டிலுடனும், ஒரு கிளா சோடும் வந்து இரண்டையும் சோலை முன் வைத்தான். "இன்னொரு கிளாஸ் எடுத்திட்டு வா" என்று கூறிவிட்டுக் கந்தனைப் பார்த்து, "தம்பி சாப்பிடறது உண்டா?" என்று கேட்டார் சோலை.

"எப்போதாவது" என்றான் கந்தன்.

"அளவோடெ சாப்பிட்டா ஒண்ணும் கெடுதி இல்லே, ஒடம்புக்குக்கூட நல்லது. மூளையும் நல்லா வேலை செய்யும்" என்று சுருக்கமாகக் குடியின் சிறப்பை உணர்த்தினார் சோலை. இதற்குள் மற்றொரு கிளாசும் வந்தது.

ஒரு கிளாசில் நிறையவும், மற்றதில் பாதியளவும் ஊற்றி இரண்டாவது கிளாசை கந்தன் முன் வைத்தார் சோலை.

கந்தன் அதைத் தொடவில்லை. சோலைப்பிள்ளை ஒரு சிறு காகிதப் பொட்டலத்தை அவிழ்த்து அதை இருவருக்கும் பொதுவாக வைத்தார்.

அதில் 'சூஸ்பரி' இருந்தது. சோலைப்பிள்ளை கிளாசை எடுத்துக் குடிக்க ஆரம்பிக்கவும், அவர் குடிப்பதைக் கவனித்துக் கொண்டே தன் கையில் கிளாசை எடுத்தான் கந்தன். அவர் அளவுக்கு நிதானமாக திரவத்தை உறிஞ்ச முடியவில்லை கந்தனால்; குமட்டிற்று. இருந்தாலும் வலுக்கட்டாயமாக கிளாசைக் காலி செய்தான். வாந்தி எடுக்கக் கூடியவன் போல அவன் சப்தமிடவும், "இந்தா, இந்தா" என்று கூறிக் கொண்டே ஒரு பிஸ்கோத்தை அவன் வாயில் திணித்தார் சோலைப்பிள்ளை. அதைத் கடித்துத் தின்னவும் கந்தனுக்குக் குமட்டல் நின்றது. சிறிது நேரத்தில் சாராயம் வயிற்றிலே வேலை செய்வதை அவனால் உணர முடிந்தது; தலையை ஏதோ ஒன்று முன்னும் பின்னும் தள்ளிற்று.

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு சோலைப் பிள்ளை பேச்சைத் தொடர்ந்தார்.

"அந்த டாக்சி ஐடியா சொன்னயே, அது நல்ல ஐடியாத் தான். இந்தக் காலத்துலே வீட்டைக் கட்டி எவன் மாரடிக் கிறது? அதுவும் பழைய வீடு. மராமத்து செய்ய சொர்ணமக்கா கிட்டே பணம் இருக்குமோ என்னவோ. வீட்டுக்கு நல்ல பார்ட்டியா நானே பாத்துத்தர்றேன். அம்மாகிட்டேயும் சொல்லு. என்னெ ஒண்ணும் அவ்வளவு சுலபமா மறந்திருக்காது; நெனவு வச்சிருக்கும்... இப்ப அதுக்கு என்ன வயசு இருக்கும்? எனக்கே ஐம்பதாயிருச்சு; அதுக்கு அறுபது, அறுபத்திரெண்டு ஆகுமே."

"அறுபதாயிருக்கும்" என்றான் கந்தன். அவனுக்கு ஒரு மாதிரி இருந்தது. வாந்தி வந்துவிடுமோ என்ற பயம் வேறு. வந்த காரியத்தை நினைத்தான். ஒரு ஆயிரத்து ஐந்நூறு இருந்தால் மீனா அவனுக்குத்தான். அவளைக் கல்யாணம் செய்து கொண்டு, வீட்டை விற்று ஒரு டாக்சி வாங்கி விட்டால்...? கந்தன் எழுந்து நின்றான்.

"அப்ப, நான் வரட்டுங்களா?"

"கிளம்பிட்டியா? மீனாவைப் பார்க்க வேண்டாமா?"

"நேத்தே பாத்துட்டேனுங்க."

"அதெச் சொல்லலே; அதுகூட இருந்து பேசிட்டுப் போகலே?"

"நேத்தே கொஞ்ச நேரம் அதுகூடப் பேசிட்டேனுங்க."

சோலைப்பிள்ளை 'கடகட'வென்று சிரித்தார். பிறகு, "சரி போய்ட்டு வா தம்பீ. நான் சொன்னதெக் கவனமாக் கேட்டுக்கிட்டே இல்லே. அம்மாவைக் கலந்துகிட்டு ஒரு முடிவுக்கு வா. சின்னப் பிள்ளைங்க காலா காலத்துலே கல்யாணம்னு ஒண்ணைப் பண்ணிக்கிட்டு, சொந்தமா ஒரு தொழில்லே உக்காந்துகிட்டாத்தான் நல்லது" என்று முத்தாய்ப்பு வைத்தார் அனுபவசாலி.

கந்தன் மீனாவைச் சந்தித்து மூன்று நாட்களாகவில்லை, சொர்ணத்தம்மாள் மாரடைப்பால் இறந்துபோனாள்.

பேச்சியின் வீட்டிலிருந்து மீனா திரும்பி வந்தாள். நோட்டும் சில்லறையுமாகக் கந்தனிடத்து ஐந்து ரூபாயைத் தந்தாள். சில்லறையிலிருந்து முக்கால் ரூபாயை எடுத்து மீனாவிடம் கொடுத்து "நீ போயி லாண்றிலேந்து துணியை வாங்கிட்டு, சுடுதண்ணி போட்டுவை. நான் முகத்தை வழிச்சிட்டு வர்றேன்" என்றான் கந்தன்.

"வெறகுக் கடை சண்முகம் ஒங்களெ ஒடனே வரச் சொன்னாரு" என்றாள் மீனா.

"நான் இப்ப அங்கே ஒண்ணும் போகலே" என்றான் கந்தன்.

"அஞ்சு ரூபாயையும் போலீசுக்குத் தரணும்னீங்களே; இப்ப முக்கா ரூவாயை எங்கிட்டே தந்திட்டீங்களே?"

"எங்கிட்டே ரெண்டு ரூபா இருக்கில்லே" என்று சமாளித்துக் கொண்டே, மீனாவின் கன்னத்தை இலேசாகத் தட்டிவிட்டு வெளியே நடந்தான் கந்தன். ரோட்டையும் வீட்டையும் பிரிக்கும் சாக்கடையின் மீது குறுக்காகக் கிடந்த மரப்பலகை மீது ஸ்திரமாகவே அவனால் நடக்க முடிந்தது.

கந்தன் நேராகச் சென்றது சண்முகத்தின் விறகுக் கடைக்குத் தான். விறகுக் கடை என்றால் ஓரளவுக்குத்தான் விறகுக் கடை. கூரை வேய்ந்த கடையின் முன்புறத்தில், ஒரே நீளத்துக்கு வெட்டப்பட்ட, கட்டை விரலுக்கும் சற்று அதிகமான பருமனுள்ள கழிகள் அடுக்கடுக்காகக் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அருகே பிளக்கப்பட்ட பெரிய விறகுக் கட்டைகளின் ஒரு குவியலும், பிளக்கப்படாத பெருங்கட்டை களும், ஒரு தராசும் இருந்தன. கடையின் பின்புறம் சற்று

விசாலமான திறந்தவெளி இருந்தது. அப்பகுதியின் முக்கிய மான பாகம், ஒரு சுவராலும் இரண்டு தட்டிகளாலும் அடைக்கப் பட்டிருந்த சிறு அறை. அறையின் ஒரு மூலையில், மூடிய ஒரு பானையும் அதன்மீது ஒரு கிளாசும் இருந்தன. கந்தன் நேராக வந்தது அந்த அறைக்குத்தான். அவனைத் தொடர்ந்து காக்கி நிற அரைக்கால் சட்டையும், அளவுக்குப் பெரிதான மேல் சட்டையும் அணிந்த சிறுவன் ஒருவன் வந்தான். சிறுவ னுக்குப் பத்துப் பனிரெண்டு வயதிருக்கும். சற்று மாறுகண். சிறுவன் இடுப்பிலிருந்து ஒரு பாட்டிலையும், காற்சட்டைப் பையிலிருந்து ஒரு பிளாஸ்டிக் அவுன்சு கிளாசையும் எடுத் தான். கந்தன் "மூணு" என்றான். சிறுவன் கிளாசை எடுத்து, அளந்து, ஜிஞ்சரை ஊற்றிவிட்டு, தரையில் கிடந்த அலுமினியத் தம்ளரில் தண்ணீர் எடுத்து கிளாசில் ஊற்றி, கிளாசைக் கந்தன் கையில் கொடுத்தான். ஜிஞ்சரை ஒரே மடக்காகக் குடித்துவிட்டு, ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான் கந்தன். "சிகரெட்டே வெளிலே வச்சுக் குடிங்கண்ணே" என்றான் சிறுவன். "பரவாயில்லேடா, தம்பி" என்று கூறிக்கொண்டே, 'மருந்து'க்குப் பணமும், சிறுவனுக்குச் சில்லரையும் கொடுத் தான் கந்தன்.

"முன்னே மாதிரியே போகுதா?" என்று கேட்டான் கந்தன்.

"ஆமா, இந்த எளவைச் சாப்பிட்டவங்க வேறெ எதை யும் சாப்பிட மாட்டாங்களாம். சில ஆளுங்களுக்குச் சாராயக் கடைக்குப் போகவேறெ சங்கடமா இருக்கு. இதிலே சாரா யத்துலே கர்ப்பத்தடை மாத்திரை கலக்கறாங்கன்ட்டு பொரளி கூட இருக்கு" என்று விளக்கினான் சிறுவன்.

"ஒரு நாளெக்கி எத்தனை பவுண்டு போகுது?"

"மூணு, இல்லாட்டி நாலு போகும்."

கந்தன் மனதுக்குள் ஒரு சிறு கணக்குப் போட்டுப் பார்த் தான். பவுண்டு எட்டு ரூபாய்க்கு வாங்கலாம். வாடிக்கையா வாங்கினா ஏழு ரூபாய்க்குக்கூடக் கெடைக்கும். 'லூசா'வே வித்தா மூணு பவுண்டுக்கு பன்னென்டு, இல்லாட்டி பதினஞ்சு ரூபாய் ஆயிரிச்சு. பையனுக்கு ரெண்டு ரூபா; மாமூலுக்கு ரெண்டு ரூபா; நாளெக்கு எப்படியும் பத்து மிச்சம் பாத்திறலாம். உம், அடுத்த வாரமே வீட்லே கடையைப் போட்டுற வேண்டியது தான். கந்தனுக்குக் கொஞ்சம் உற்சாகமாக இருந்தது.

"இதென்ன செத்த வியாபாரம்!" என்றான் சிறுவன். கந்தனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆச்சரியத்தை அடக்கிக் கொண்டு, "நீ இதெத்தானே ஊத்திக் கொடுத்திட்டிருக்கே?" என்றான்.

"அய்யோ, பெரியவரோடெ பளகின தோசத்துக்காக இந்த வேலையைப் பாத்துக்கிட்டு இருக்கேன். அதுவும் காலேலே ஏளு மணிலேந்து பத்து மணி வரைக்குந்தான். பெறகு பொளுது சாயவும் ஆறு மணிலேந்து ரவைக்குப் பத்து மணி வரெதான்."

"மத்த நேரத்துலே?"

"வெல்டிங் வேலெ பாக்கறேன்."

"எங்கே?"

"டவுன்லே ஒரு இடத்திலே."

"என்ன கெடைக்குது?"

"இப்ப நாகக் கம்பிலே கூடை வெல்டு பண்றேன். கூடைக்கு அரை ரூபாய் கெடைக்கும். நாளெக்கி பதினஞ்சு, இருபது கூடை முடிச்சிடுவேன்."

"சண்முகம் என்ன தராரு?"

"நாளெக்கி ரெண்டு ரூபா தராரு."

"மே வரும்படி?"

"ஒண்ணும் கேட்டுக்கிறதில்லே; கொடுத்தாலும் வாங்கிக் கிடறதில்லே."

கந்தன் இன்னும் ஒரு அவுன்சு வாங்கிக் குடித்துவிட்டு இடத்தை விட்டு அகன்றான்.

விறகுக் கடை இருந்த ரோட்டின் மறுபுறம், ஒரு பெரிய தாழ்வான பரப்பு இருந்தது. அப்பரப்பில் மழைக் காலத்தில் கொஞ்சம் தண்ணீர் இருக்கும். சுற்றுப்புறக் குடிசைவாசிகளுக்கு வசதியாக இப்போது அது வறண்டு கிடந்தது. பள்ளத்துக்கு அப்பால், விறகுக்கடை இருந்த ரோட்டுக்கு இணையாக, ஒரு பர்லாங்கு தூரத்தில் மற்றொரு ரோடு சென்றது. இரண்டு ரோடுகளையும் இணைக்கும் சற்று உயரமான பாதை வழியே கந்தன் நடந்தான். பாதையின் இருபுறமும் சில மரங்களும், சில பெட்டிக் கடைகளும் நின்றன. அந்தப் பாதையின் வழியே வரும்போதுதான், பின்னால் திடீரென்று ஒரு ஊதல் சத்தம் கேட்கவும் கந்தன் திரும்பிப் பார்த்தான். ஒரு சினிமாப் பாட்டைத் தனது ஊதலில் விகாரமாக வாசித்துக்கொண்டே, பலூன்கள் விற்றுக்கொண்டு ஒரு கிழவன் வந்து கொண்டிருந்தான். எத்தனை பலூன்கள்! பந்து மாதிரி! சுரைக்காய் மாதிரி! புடலங்காய் மாதிரி! பாம்பு மாதிரி! நீண்டிருந்த, வளைந்திருந்த, சுருண்டிருந்த பலூன்கள்! எல்லா வண்ணங்

களிலும் பலூன்கள். 'பிளெய்'னாக இருந்த பலூன்கள் வேறு, வண்ணப் பொட்டுகளைக் கொண்ட பலூன்கள் வேறு. கிழவன் தன்னைக் கடந்து செல்லும்வரை பலூன்களைப் பார்த்துக்கொண்டு நின்றான் கந்தன்.

நாள் பூராவும் கீதா அந்த மஞ்சள் நிற பலூனை வைத்து விளையாடிக்கொண்டிருந்தாள். விளையாட்டாக இருக்கும் என்று கந்தன் அவனது சிகரெட்டு நுனியைக் கொண்டு பலூனைத் தொட்டான். பலூன் பட்டென்று வெடித்தது. அவன் வெடித்துச் சிரித்தான். ஆனால் அவளுக்கு அது வேடிக்கையாக இல்லை. 'ஓ'வென்று அழுதாள். "நாளெ புது பலூன் வாங்கித் தர்றேன்" என்றான் அவன். அவள் "இப்பவே வாங்கித் தா" என்றாள். "சந்திரனோடெ பலூனை வாங்கி வச்சிக்க" என்றான் அவன். "தரமாட்டேன்" என்று அடம்பிடித்தான் சந்திரன். பலூன் வாங்கக் கந்தன் வெளியே சென்றான். திரும்பி வரும்போது இரவாகி விட்டது. ஆனால் பலூன் வாங்கிவர மறந்து விட்டான். தள்ளாடி வீடு திரும்பினான்.

கீதா ஒரு மூலையில் சுருண்டு படுத்துக்கிடந்தாள். அங்கே மீனா கவலையோடு உட்கார்ந்திருந்தாள். "தலையே வலிக்குதே, தலையே வலிக்குதே" என்று கீதா அவ்வப்போது அலறினாள். "வாந்தி வாந்தியா எடுக்குது" என்றாள் மீனா. பரமேஸ்வரனிடமிருந்து கந்தன் மண்டையடித் தைலம் வாங்கி வந்தான். கீதா இரண்டு நாட்கள் பெருமூச்சு விட்டுக் கொண்டும் முனகிக்கொண்டும் சுருண்டு கிடந்தாள். வெளிக்குப் போகவில்லை; நீர் இறங்கவில்லை. மலச்சிக்கலுக்கு ஹோமியோபதி டாக்டர் மருந்து கொடுத்துவிட்டுச் சென்றார். மருந்தையெல்லாம் கீதா வாந்தி எடுத்தாள். ஜோசியர் சம்சாரம் வந்து குழந்தையைப் பார்த்தாள். வேப்பங்கொழுந்து, அதி மதுரம், பசு நெய் இன்னும் என்னவெல்லாமோ சேர்த்து மருந்து தயாரித்துக் கொடுத்தாள். குழந்தை மருந்தை விழுங்கி விட்டுச் சுருண்டு கிடந்தது. வெள்ளரி விதையை அரைத்து அடி வயிற்றில் பூசினார்கள். இலேசாக நீர் பிரிந்துவிட்டதாக அறிவித்தாள் ஜோசியர் மனைவி. மூன்றாம் நாள் கீதாவின் உடல் பூராவும் தடிப்புத் தடிப்பாக ஏதோ தோன்றியது. தடிப்புகள் செக்கச் சிவந்து இருந்தன. விஷக்கடி என்று தீர்மானித்தார் ஜோசியர் சிவஞானம். மந்திரித்து விபூதி போட்டுவிட்டு, வீட்டில் யாரும் லாகிரி வஸ்துகள் உபயோகிக்கக் கூடாதென்று உத்தரவிட்டார் அவர். நாள் பூராவும் குடிசைக்கு வெளியே பரமேஸ்வரனது கட்டிலைப் போட்டுக்கொண்டு அவனோடு உட்கார்ந்திருந்தான் கந்தன். "குழந்தைங்க ஆசையா

ஒண்ணை வச்சிருக்கும்போது அதை நாசப்படுத்தக் கூடாது" என்றான் பரமேஸ்வரன். பலூன் பட்டென்று வெடித்ததும், தான் வெடித்துச் சிரித்ததும் கந்தனின் நினைவுக்கு வந்தது.

கீதாவின் உடலில் தோன்றிய தடிப்புகள் ஒரு நாளில் மறைந்தன. அது தனது முதல் வெற்றி என்று தெரிவித்துக் கொண்டார் ஜோசியர். ஆனால் மறுநாளே கீதாவுக்கு தலையைப் பக்கவாட்டிலோ, மேலும் கீழுமோ திருப்ப முடியவில்லை. கைகளை அகல விரித்து மல்லாந்து கிடந்தாள். முதுகும் கழுத்தும் லேசாக வில்லைப்போல வளைய ஆரம்பித்தது. ஓரிரு தடவைகள் வலிப்பு ஏற்பட்டுக் கீதாவின் கால்களும், கைகளும் 'குண்டக்கா மண்டக்கா'வென்று நெளிந்துக் கொண்டு சென்றன. தலை வீங்கிக்கொண்டது. குழந்தையைப் பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றார் ஹோமியோபதி டாக்டர். கீதாவுக்குக் காது மந்தப்பட்டு, என்ன சொன்னாலும் பேந்தப் பேந்த விழித்தாள். "இதுவெல்லாம் ஒண்ணுமில்லை; குட்டிப் பனைமர மடல்காம்பை அடுப்பிலே வாட்டிச் சாறு எடுத்துக் காதுலே ஊத்தினாப் போதும்" என்றாள் ஜோசியர் மனைவி. ஆனால் கீதா வில்லாக வளையவும், முழங்கால் முட்டுகள் வீங்கிச் சிவக்கவும் கந்தனுக்கும் மீனா வுக்கும் பயம் அளவு கடந்து போயிற்று. பெரிய ஆஸ்பத்திரிக்கு கீதாவை எடுத்துச் சென்றனர். சாப்பாடே சாப்பிடாது மூன்று நாட்கள் பொரி கடலையும், தண்ணீரையும் கொண்டு வயிற்றை நிரப்பிக்கொண்டிருந்தான் சந்திரன்.

பெரிய ஆஸ்பத்திரியில் கீதாவுக்கு முதுகெலும்பில் ஊசி போட்டார்கள். "அய்யோ, அப்பா" என்று அலறிவிட்டுச் சிறிது நேரத்தில் இறந்து போனாள். பரமேஸ்வரன் மீண்டும் கந்தனிடத்து, "குழந்தைங்க ஆசையா ஒண்ணை வச்சிருக்கும் போது அதை நாசப்படுத்தக் கூடாது" என்று சொன்னான். "அப்படி இருக்குமா?" என்று கந்தன் மீனாவைக் கேட்டான். அவள் அழுதுகொண்டிருந்தாள்.

பதினைந்து நிமிடங்களில் கந்தன் மினர்வா சலூனை அடைந்தான். அழிந்து போயிருந்த அதன் போர்டில் சாக்கட்டியைக் கொண்டு 'மினர்வா சிகை எழிலூட்டும் அகம்' என்று எழுதியிருந்தார்கள். சலூனில் இரண்டு பழைய நாற்காலிகள் இருந்தன. ஒரு நாற்காலி யில் உட்கார்ந்திருந்த ஒருவருக்கு முதலாளி முடி வெட்டிக்கொண்டிருந்தார். மற்றொரு நாற்காலி காலி யாக இருந்தது. அதன் பின்புறத்தை இரண்டு கைக ளாலும் தொட்டுக்கொண்டு, முதலாளி தொழில் செய் வதைக் கவனித்துக்கொண்டிருந்தான் ஒரு சிறுவன். கந்தன் சலூனில் நுழையவும், முதலாளி அண்ணாந்து பார்த் தார். பிறகு ஒரு கையில் சீப்பும், மறுகையில் கத்தரிக் கோலும் இருக்க இரண்டு கைகளையும் கூப்பி, கந்தனிடம் "வணக்கம், தம்பி" என்றார். சிறுவன் ஒரு துண்டைக் கொண்டு காலி நாற்காலியைத் தட்டினான். கந்தன் நாற்காலியில் உட்காரவும், நாற்காலியைச் சரி செய்வது, ஒரு துண்டைக் கந்தனின் மார்பில் போடுவது, தலை யைச் சரியாக அமைத்து வைப்பது, கழுத்தைச் சுற்றிலும் மற்றொரு துணியைப் போர்த்துவது, சோப்பைக் குழைப் பது போன்ற சடங்குகள் அடுத்தடுத்து முறையே நடந் தன. சிறுவன் கந்தனின் முகத்தை வழிக்க ஆரம்பிக்கவும், கந்தன் ஓரிரு தடவைகள் சிறுவன் முகத்தை நேரிலும் கண்ணாடியிலுமாகப் பார்த்தான். சிறுவனின் கரங்கள் கந்தனின் முகத்திலும் கழுத்திலும் படும்போதும், சிறுவ னின் உடல் கந்தன் கையோடு உராயும் போதும் கந்த னுக்கு ஒரு ஆணுக்குரிய ஆசை ஏற்பட்டது. சிறுவன் தொட்டும் தொடாததுமாய் வேலை செய்வதும், இடீ ரென்று உராய்வதும், பிறகு விலகிவிடுவதும் கந்தனது ஆசையைப் பெருக்கின.

ஒரு இளைஞன் கடைக்குள் நுழைந்து அங்கிருந்த பெஞ்ச் ஒன்றில் உட்கார்ந்துகொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். சேலை முந்தானையை வாயில் கவ்விக்கொண்டு ஜம்பரைக் கழற்றும் பெண்ணின் படத்திலிருந்து, கண்ணாடி உடைந்திருந்த முருகன் படம் வரை சுவரில் மாட்டியிருந்த எல்லாப் படங்களையும் அவன் ரசனையோடு நோக்கினான். அவற்றில் ஒரு படம் இளைஞனது கவனத்தை அதிகமாக ஈர்த்ததுபோல் தெரிந்தது. அப்படத்தில் ஒரு இளம் பெண் பஞ்சு மெத்தையில் கைகளை அகல விரித்து, அவளது தலை, தலைகீழாக உள்ளதுபோல் கட்டிலின் ஒரு விளம்பிலிருந்து தொங்கிக்கொண்டிருக்க, மல்லாந்து படுத்துச் சிரித்துக்கொண்டிருந்தாள். ஓவியன் அவளது உறுப்புகளை மிகுந்த கற்பனையோடு தீட்டிவிட்டு அவளுக்கு ஒரு மஸ்லின் சேலையை அணிவித்திருந்தான். இளைஞன் அந்தப் படத்தைப் பார்த்துக்கொண்டே, “அண்ணே அந்தப் படம் எங்கே கெடெச்சுது?” என்று கடை முதலாளி யைக் கேட்டான். முதலாளியின் கையில் சிக்கிக்கொண்டு, ‘சிகு, சிகு, சிகு, சிகு . . .’ என்று உளறிக்கொண்டிருந்த கத்திரிக் கோல் ஒரு கணம் வாய் மூடியாய் ஆயிற்று. முதலாளி இளை ஞனின் பக்கம் திரும்பி, “வந்தா வெறுமனே முடியை வெட்டிக் கிட்டுப் போவியா – எங்கே கெடெச்சுது? எங்கே கெடெக்கும்னு தொணதொணக்கிறியே” என்று சினந்துகொண்டார். “இல்லே, படம் ரொம்ப நேச்சரா இருக்கு; அதான் கேட்டேன்” என்று இளைஞன் சமாளித்துக்கொண்டான்.

அடுத்தபடியாக இளைஞனின் கவனத்தைக் கவர்ந்தது பெஞ்சில் கிடந்த அன்றைய பத்திரிகை. அவன் அதை எடுத்துப் பார்க்கவும், “இன்னெக்கி ஞாயித்துக் கெளமேயில்லே?” என்றான் கந்தன்.

“ஆமாம்” என்றார் முதலாளி.

“தம்பீ, ராசிபலன் எடுத்து ‘மிதுனம்’ வாசித்துக் காட்டு” என்றான் கந்தன்.

“மிதுனமா அண்ணே?” என்று கூறிக்கொண்டே, இளைஞன் பத்திரிகைத் தாள்களைப் புரட்டி, ராசிபலன் பக்கத்தை எடுத் தான். மீண்டும் ஒருமுறை “மிதுனம்தானே? கேளுங்கண்ணே” என்று சொல்லிவிட்டு வாசிக்க ஆரம்பித்தான்.

“இந்த ராசிக்காரர்களுக்கு போக பலனைத் தரும் வியாழனும், தனபாக்கியபதி சுக்கிரனும் அனுகூல நிலையில் காணப்படுகிறார்கள். இத்துடன் சந்திரனின் சம்சாரத்தைக் கொண்டு (கடை முதலாளி வெடித்துச் சிரித்தார்; இளைஞன்

அதைப் பொருட்படுத்தவில்லை) இவ்வாரம் பூராவும் நல்ல பலன்களாக நடந்துவரும். வரவேண்டிய பழைய பாக்கிகள் தானாகவே வசூலாகும். இந்த நாட்களில் மனதில் உள்ள குழப்பங்கள் போய், தைரியம், உற்சாகம் இவைகளில் நல்ல நிலைமை இருக்கும். தொழிலில் நல்ல முன்னேற்றம் காணலாம். (கந்தன் தனக்குள் ரசித்துக் கொண்டான்.) புதிய முயற்சிகளையும், வியாபார ஒப்பந்தங்களையும் மேற்கொள்ளலாம். இந்த ராசிக் காரர்களுக்கு சந்திராஸ்டம் தினங்கள் ஞாயிறு மாலை 6.28 முதல் திங்கள் பகல் 10.47 முடிய உண்டு." இளைஞன் பெருமூச்சு விட்டுவிட்டு, "நல்லாத்தானே சொல்லி இருக்கண்ணே?" என்றான்.

மின்நூலாக்கம்
முரளிதரன்

"நல்லாத்தான் சொல்லி இருக்கு; ஆனா நடக்கணுமே?" என்றான் கந்தன்.

"அதுக்கு அவங்க என்ன செய்வாங்கண்ணே? கெடுதியா ஒண்ணும் சொல்லலேயில்லே?" என்றான் இளைஞன்.

"தம்பி, என்ன செய்யுது?" என்றான் கந்தன்.

"அவன் மொகணையைப் பாத்தாத் தெரியலே? சினிமா வுலே சேரப்போறாராம்" என்றார் கடை முதலாளி.

நாவிதச் சிறுவன் கந்தனின் முகத்தை வழித்து, கழுவி, மீசையையும் சரிசெய்து, ஸ்னோ, முகத்துமாவு இவற்றைக் கொண்டு அவனுக்கு எழிலூட்டி முடித்தான். கந்தன் எழுந்து நின்று, முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டே கன்னங்களைச் சொறிந்துவிட்டு முதலாளியிடம் சில்லரையைத் தந்துவிட்டு சலூனை விட்டகன்றான்.

கந்தன், ரோட்டையும் அவனது குடிசையையும் பிரிக்கும் சாக்கடை மீது குறுக்காகப் போடப்பட்டிருந்த மரப்பலகை யின் மீது நடந்து சென்றுகொண்டிருக்கையில், வேலாயியின் வீடு வெளிப்புறமாக அடைத்திருந்ததைக் கவனித்தான். ஜீவா, வீட்டின் சிறு மரப்படியில் இரண்டு கன்னங்களிலும் கைகளை வைத்துக்கொண்டு குந்தியிருந்தாள்.

"அம்மா வீட்டுலே இல்லே?" என்று கந்தன் அவளைக் கேட்டான்.

'இல்லை' என்று சொல்வது போல ஜீவா இரண்டு கை களையும் செங்குத்தாக உயர்த்தி உருட்டினாள்.

"வீடுகளுக்கு வேலைக்குப் போயிரிச்சா?" என்றான் கந்தன்.

'ஆமா' என்பதுபோல் ஜீவா தலையை அசைத்தாள்.

குடிசைகளுக்கும் சாக்கடை விளிம்புக்கும் இடையே மூன்று அடி இருக்கும். அது நெடுகிலும் சாணமிட்டு மெழுகப்பட்டிருந்தது. கந்தனின் வீட்டையொட்டி, இந்தக் குறுகிய பகுதியில் ஒரு மூன்றுகல் அடுப்பின் மீது சிறிய பானையில் நீர் காய்ந்து கொண்டிருந்தது. அருகே ஒரு பெரிய பானையில் அரையளவுக்குத் தண்ணீர் இருந்தது.

கந்தன் குடிசைக்குள் நுழைந்தான். மீனா தரையைப் பெருக்கிக்கொண்டிருந்தாள்.

"துணியை வாங்கிட்டு வந்தயா?" என்றான் கந்தன்.

"உம், பெட்டியுள்ளாற இருக்கு" என்று சொல்லிக்கொண்டே மீனா நிமிர்ந்து நின்றாள். "உம், கூட்டு" என்றான் கந்தன்.

அவள் மீண்டும் குனிந்து பெருக்க ஆரம்பிக்கவும், அவன் அவள் பின் சென்று, அவளைப் போலவே வளைந்து அவளைப் பின்புறத்திலிருந்து அணைத்தான்.

"உம், விடுங்க. இப்பெல்லாம் என்ன, இப்படி காலே நேரத்துலே?" கந்தன் சற்று விலகி நின்று கைகளைப் பின் புறமாகக் கட்டிக் கொண்டான்.

"அதுவும் கதவு வேறே தெறந்து கிடக்கு" என்று தொடர்ந்தாள் மீனா.

"கதவே வேணா அடச்சிடறேன்" என்று சொல்லிக் கொண்டே கந்தன் கதவை அடைத்துத் தாளிட்டான்.

"ஆனா, வெளிச்சம் இல்லாட்டி எப்படியோ இருக்கு" என்று சொல்லிக்கொண்டு, ஒரு தீக்குச்சியைக் கிழித்து இரண்டு பொடி மெழுகுவர்த்திகளைக் கண்டுபிடித்து, மற்றுமொரு தீக்குச்சியைக் கிழித்து அவற்றைப் பற்றவைத்தான். ஒரு ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவை திருதிருவென்று முழித்தன. ஆடைகளையும் தலைமுடியையும் சரி செய்து கொண்டிருந்த மீனா, "பட்டப் பகல்லே இது என்ன அட்டகாசம்?" என்றாள்.

"உண்மையைச் சொல்லட்டுமா? இன்னைக்குக் காலேலே நம்ம வீட்டு முன்னாலே ரெண்டு நாயிக ஒண்ணையொண்ணு விரட்டிக்கிட்டுப் போச்சி" என்று சொல்லிவிட்டுக் கந்தன் சிரித்தான்.

"ஆமா, ஓடனே நெனப்பு வந்திரிச்சாக்கும்? அன்னைக்கு ரெண்டு அணில்க, இன்னைக்கு ரெண்டு நாய்க" என்று சொல்லிக்கொண்டே, மீனா பாய் ஒன்றை எடுத்து உதறி அறையின் நடுவில் போட்டுவிட்டு அதன்மீது ஒரு தலையணையையும் தட்டிப் போட்டாள். ஒரு மெழுகுவர்த்தி அணைந்துவிட்டது. அதைப் பற்றவைத்துக்கொண்டிருந்த கந்தன், "அன்னைக்கு அந்த அணில்க எப்படி? நாம் எவ்வளவு பக்கல்லே போய் வேடிக்கை பார்த்தோம்; எப்படி ரெண்டும் ரொங்கிக் கிடந்திச்சு?" என்று அணில்களை வியந்தான். அவன் அவளருகே சென்று உட்காரவும் அவள் "நாமும்தான் ரொங்கிக் கிடந்திருக்கோம்" என்று சொல்லிச் சிரித்தாள். அவன் சிரிக்கவில்லை. அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டான். இருவரும் படுத்தனர்.

"நாய்க செய்யறது அசிங்கமில்லையா?" என்றாள் அவள்.

"அபூர்வம், ஆனா அதுகளெக் கண்டா எல்லாருக்கும் பொறாமையா இருக்கும் போல" என்றான் கந்தன்.

"யானைங்களெப் பத்திக் கேள்விப்பட்டிருக்கீங்களா?" என்று கேட்டாள் மீனா.

"ஆமா ஆமா, கேள்விப்பட்டிருக்கேன். என் சிநேகிதன் ஒருத்தன் தேயிலத் தோட்டத்திலே வேலை பார்த்தான். சுத்து வட்டாரத்திலே யானைங்க வருமாம், போகுமாம். ஒரு நாளைக்கு யானை அலர்ற சத்தம் கேட்டிச்சாம். லைன்ல உள்ளவங்க பதறிப் போயிட்டாங்க. ராவு பூராவும் அந்த யானை அலறிக்கிட்டிருந்திருக்கு. காலேலேயும் அலறல் கேட்டிட்டிருக்கவும், ஆளுங்க என்னேன்ட்டுப் போயி பார்த்திருக்காங்க. ஒரு பெண் யானை ரெண்டு தேக்கு மரத்துக்கு ஊடே சிக்கிட்டு அலறிக்கிட்டு இருந்திருக்கு. ஒரு ஆண் யானை தும்பிச்சங்கைனாலே பெண் யானையைப் போட்டு இளுத்துக்கிட்டு இருந்திரிக்கு. ஆளுங்க பக்கத்துலே போகவும் ஆண் யானை அவுங்களே வெரட்டி அடிச்சிதாம்... கொஞ்சம் தலையைத் தூக்கிக்க. முடியை எடுத்து பின்னாடி போட்டுக்க."

"அப்புறம்?" என்று கேட்டாள் மீனா.

"ஆளுங்க தூரத்திலே இருந்துகிட்டே வேடிக்கை பாத்திருக்காங்க. நாள் பூரா ஆண் யானை இளுக்கவும் பெண் யானை அலறவுமா இருந்திருக்கு."

"அய்யோ, மெள்ள" என்றாள் மீனா.

"சரி மெள்ளத்தான். கதையை முளுக்கக் கேக்கலேயே? அடுத்த நா காலேலேதான் அலறல் நின்னதாம். லைன் ஆளுங்க என்னேன்ட்டுப் போய்ப் பார்த்திருக்காங்க. பெண் யானை செத்துக்கிடந்தது. ஆண் யானையைக் காணோம்."

"கண்றாவி" என்றாள் மீனா.

"அப்ப மறந்திடு" என்றான் கந்தன்.

"எதெ"

"யானைகளெ மறந்திடு. அணிகல்களெ நெனெச்சிக்க."

கந்தன் மீனாவைத் தன் பக்கம் திருப்பி, முகத்தை அவளது மார்பில் புதைத்துக்கொண்டான்.

"ஆமா, ஒண்ணு கேக்கணும்ன்ட்டு தோணுது" என்றான் கந்தன்.

"என்ன ?"

"நைட்லே அக்கா வூட்டுக்குக் கண்டவனெல்லாம் வர்றானே அப்பவும் ரொங்கிக் கெடந்திருக்கயா?"

"அக்கா வூட்டுக்குக் கண்டவங்க எல்லாம் ஒண்ணும் வரதுல்லே, ஏகதேசமா டீஷண்ட்டானவங்கதான் வருவாங்க. அதுவும் காலேஜு ஸ்டூடன்ட்ஸ் வந்தா குஷியா இருக்கும்."

"எப்படி குஷியா இருக்கும்?"

"அய்யோ கடிக்காதீங்க, வலிக்குது" என்று இலேசாக அலறினாள் மீனா.

"சரி, சரி கடிக்கலே, எப்படி குஷியா இருக்கும்?" என்று திரும்பக் கேட்டான் கந்தன்.

"பஸ்ட் டிரிப்பா இருந்தா தொடறதுக்கு முன்னாடி டயர் பஞ்சர் ஆயிடும்" என்று சொல்லிவிட்டு மீனா சிரித்தாள்.

"உம்" என்றான் கந்தன்.

"பழக்கப்பட்ட பசங்க அந்த சினிமாக்காரி மாதிரி இருக்கே, இந்த சினிமாக்காரி மாதிரி இருக்கே எம்பாங்க."

"உம்."

"நாம ரெண்டு பேரும் எங்காச்சும் ஓடிலாம்பாங்க செலர். போன வாரம்னு நெனெக்கிறேன். ஒரு தம்பி என்ன சொல்லிச்சு தெரியுமா?"

"உம் . . . என்ன சொல்லிச்சு?"

"என்னெப் பொம்பளேன்னுட்டு நெனைச்சிக்கிட்டு நீ ஆம்பிளே மாதிரி நடத்துக்கோனிச்சு" என்று சொல்லிவிட்டு மீனா சிரித்தாள்.

"உஹூம்."

"ஒரு வாட்டி ஒரு பெரிய மனுசன் வந்தான். பாத்தாலே பயமா இருந்துச்சு. முரடன் மாதிரி இருந்தான். என் காலே நல்லா சோப்புப் போட்டுக்களுவிட்டு வரச் சொன்னான். அஞ்சு, பத்து நிமிஷம் என் காலே முத்தமிட்டு அளுதுக்கிட்டே ரூமை விட்டு வெளியே போனான். இருந்திட்டுப் போங்கன்னேன். 'பைத்தியக்காரத்தனம்'னு சொல்லிட்டுப் போயிட்டான்."

"அப்படியா? . . . சரி, நல்லாப் படுத்துக்க" என்றான் கந்தன், மீனாவின் முகத்தை உற்று நோக்கிக்கொண்டே.

"சமயத்திலே அந்தப் போக்கிரியெ கொன்னுப் போடுவோமானு தோணுது; ஆனா ஒன்னெத் தந்தானேனிட்டுத்தான் சும்மா இருக்கேன்" என்றான்.

"அவர் சொந்தத்திலே கார் வச்சிருக்காராமே?"

"அவனுக்கென்ன? காரும் வாங்குவான்; ஏரோப்பிளேனும் வாங்குவான். எங்கிட்டே மட்டும் பத்தாயிரம் தாப்பாப் போட்டிருப்பானே?"

"பத்தாயிரம் இருக்குமா?"

"பின்னே? பதினெட்டு, பத்தொன்பது பெர்ற வீட்டே பத்துக்கு விக்க வச்சான். வீடு வாங்கின பார்ட்டிகிட்டேந்து மூவாயிரமோ, நாலாயிரமோ வாங்கியிருக்கான். எங்கிட்டேந்து வேறே கமிஷன்ட்டு ஐந்நூறு வாங்கிக்கிட்டான்."

"நீங்க அப்போ வெவரம் தெரியாதவரு."

"அம்மாவும் போயிட்டாங்க . . ."

"சரியா இருக்கா?"

அவள் தலையை அசைத்தாள்.

"தலையணை வச்சிட்டிருக்கயா?"

"இல்லே, வேணுமா?"

"வேண்டாம், சரியாத்தான் இருக்கு."

சில நிமிடங்களுக்கு இருவரும் அவர்கள் பார்த்து ரசித்திருந்த அணில்கள் போலவே இருக்கின்றனர். இருவரிடத்தும் கட்டுப்பாடான தாள லயத்தோடு கூடிய இயக்கம். அசிங்க உணர்வே இல்லாத பரஸ்பர ஸ்பரிசங்கள். குடிசை பூராவுமே ஒரு வகையான விறைப்பு நிலவுகிறது. இருவர் உள்ளத்துள்ளும் சிறிதளவு சிந்தனையும் இல்லை. சில நிமிடங்கள் செல்கின்றன. படிப்படியாகப் பொழுது விடிவது போல் இருவருள்ளும் தன்னுணர்வு தலையை உயர்த்துகிறது. கொஞ்சமும் ஓசை ஏற்படுத்தாது கந்தன் எழுகிறான். மீனா கண்களை மூடிப் படுத்துக் கிடக்கிறாள். அவள் அருகே உட்கார்ந்துகொண்ட அவன் ஒரு சிகரெட்டைப் புகைக்கிறான். பிறகு மெதுவாக எழுந்திருந்து ஒரு அரை டிராயரை மட்டும் அணிந்துகொண்டு, ஒரு சோப்புக் கட்டியையும், ஒரு துண்டையும் எடுத்துக் கொண்டு குளிக்க வெளியே வரத் தயாராகிறான். அவளிடமிருந்து ஒரு விசும்பல் கிளம்புகிறது. நின்று பார்க்கிறான். மீனாவின் மூடிய கண்களைப் பொத்துக் கொண்டு, கண்ணீர் அவள் கன்னங்களை நனைக்கிறது. விம்மல் அழுகையாக மாறுகிறது.

"என்னங்க, சந்திரனைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டாங்களா?" என்று உளறுவதுபோல் அவள் கேட்கிறாள்.

"நாம் தேடாத இடமா?" என்கிறான் அவன். "நாலு வருஷமாயிரிச்சே!"

"உம்."

"ஒங்களுக்கு சந்திரன் நெனெப்பே வரதில்லையா?"

கந்தன் பதிலளிக்காது கதவைத் திறந்துகொண்டு, வெளியே போய்ப் பல் விளக்கிக் குளிக்க ஆரம்பிக்கிறான். அவன் குளித்து முடியும்வரை ஒப்பாரி போன்ற அழுகை அவன் காதுகளில் விழுந்துகொண்டிருக்கிறது.

துவைத்து வெளுக்கப்பட்டிருந்த உள்ளாடைகளையும், சலவை செய்யப்பட்ட எட்டு முழ வேட்டியையும், சில்க் சட்டையையும் அணிந்துகொண்டு, தலையைச் சீவிவிட்டு, கந்தன் குடிசையை விட்டுக் கிளம்பத் தயாரான போது மணி

ஒன்பதரை இருக்கும். மீனா ஆடைகளைச் சரி செய்து கொண்டு ஒரு ஓரமாகப் படுத்திருந்தாள். கந்தன் உறையோடு கூடிய தனது ஸ்பிரிங் கத்தியைக் கூரையில் ஒரு இடத்திலிருந்து எடுத்து இடுப்பில் சொருகவும், "அது எதுக்குங்க?" என்றாள் மீனா. "சும்மாத்தான்" என்று கூறிவிட்டுக் கந்தன் காலணியை அணிந்துகொண்டே, "வர்றேன்" என்றான்.

"மீன் வந்திச்சு, வாங்கினேன். மீன் கொளம்பு வைக்கிறேன்; மதியம் சாப்பாட்டுக்கு வந்திருங்க" என்றாள் மீனா.

"பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டே, கந்தன் வீட்டை விட்டு வெளியே வந்தான்.

கந்தன் வீட்டிலிருந்து அரை பர்லாங்கு நடந்த பிறகே, காலுக்கு உருப்படியான ஒரு ரோடு படுகிறது. ஆங்காங்கு டீக்கடைகள், வெற்றிலை பாக்குக் கடைகளைக் காணலாம். ஆனால் இதுவெல்லாம் நகரத்தின் ஒதுக்குப்புறந்தான். இவற்றைக் கடந்து நடக்க நடக்க மக்கள் நடமாட்டம் கூடுகிறது. அடுத்தடுத்த கடைகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. ஜன இரைச்சல் மிகுகிறது. இன்று ஜன இரைச்சல் என்றையும் விட அதிகமாக உள்ளது.

கந்தன் பெரிய மசூதிக்கு அருகே இருந்த வெற்றிலை பாக்குக் கடையருகே வந்து நின்றான். அதற்கு அருகே ஒரு டீக்கடையும் இருந்தது. சமயங்களில் கந்தன் அங்கு பத்துப் பதினைந்து நிமிடங்கள் நிற்பதுண்டு. அந்நேரத்தில் அவனுக்கு வேண்டியவர்கள் சிலர் அங்கு வருவார்கள். கடைக்கு அருகே தரையில் ஆண்களும் பெண்களுமாகப் பத்துப் பனிரெண்டு பேர் உட்கார்ந்திருந்தனர். அநேகமாக ஒவ்வொருவர் பக்கத்திலும் ஒரு அலுமினிய அல்லது பித்தளைத் தூக்கு இருந்தது. அவர்கள் பேசிக்கொண்டிருக்கவில்லை. அரைப்பாக்கு, ஒரு வெத்திலை, ஒரு கிள்ளுப் புகையிலை இவை சிலர் வாய்களில் வதைபட்டு ஒரு ஓரமாக ஒதுங்கிக் கிடந்தது. ஒருத்தியைத் தவிர எல்லோரும் சற்று வயதுவந்தவர்கள். ஒரு மணி அல்லது ஒன்றரை மணி முன்னதாக வந்திருந்தால், முப்பது நாற்பது பேர் உட்கார்ந்துகொண்டும், நின்றுகொண்டும், உரக்கப் பேசிக்கொண்டும் இருப்பதைக் கண்டிருக்கலாம். அவர்கள் எல்லாம் கட்டிட வேலை செய்யும் கூலிக்காரர்கள். கட்டிடங்கள் கட்டுவோரும், காண்ட்ராக்டர்களும் அங்கு வந்து கூலிகளை வேலைக்கு அமர்த்திச் செல்வது வழக்கம்.

"குருசாமிக் கொத்தனார் வந்தாரா?" என்றான் கந்தன், கடைக்காரரிடத்து.

"குருசாமி அண்ணனா? அவர் ஏது இப்ப இங்கே வர்றார்? அவர் மச்சினன்தான் இப்ப வந்து போச்சு. பெரிய வேலை போல; இருபது, முப்பது ஆளுங்களெக் கூட்டிக் கிட்டுப் போச்சு" என்றார் கடைக்காரர். இதற்குள்ளாக எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல், "தேதி பத்தாகலே; வியாபாரம் மசிரு கணக்கா இருக்கு. இன்னும் கொஞ்ச நாளுலே சனங்க செத்தொளியப் போறாங்க" என்று உரக்க ஆரூடம் கூறினான் டீக்கடை சேட்டன். "அப்படித்தான் தெரியுது" என்று சேட்டனை ஆமோதித்தார் வெற்றிலைபாக்குக் கடைக் காரர்.

"இப்பெல்லாம் கசாயம் விக்கிறது இல்லையா?" என்றான் கந்தன் வெற்றிலைபாக்குக் கடைக்காரரிடத்து.

"இல்லை" என்பது போலத் தலையை அசைத்துவிட்டு "இன்னைக்கு ஏதோ மாநாடு போல" என்று அவராகவே சொல்லிக்கொண்டார் கடைக்காரர்.

"மூளைகெட்ட சனங்க! பொளப்பப் பாத்துக்கிடு வாங்களா; அதை விட்டிட்டு, 'அவன் வாள்க' 'இவன் வாள்க'ன்ட்டுத் தொண்டத் தண்ணி வத்தக் கூச்சல் போட றாங்க" என்று எரிந்து விழுந்தான் டீக்கடை சேட்டன். தரையில் உட்கார்ந்திருந்த கூலிக்காரர்கள் 'புளிச் புளிச்' சென்று எச்சிலைத் துப்புவதும் கனைப்பதுமாக இருந்தனர்.

கோட்டும் வேஷ்டியும் அணிந்துகொண்டு, கையில் ஒரு குடையுடன் நடுத்தர வயது மனிதர் ஒருவர் வந்தார். அவரைக் கண்டதும் கூலிக்காரர்கள் எழுந்து நின்றனர். ஒரு கிழவனும் எழுந்து நின்றான். ஒரு பதினைந்து வயதுச் சிறுமியும் எழுந்து நின்றாள். கிழவனின் கால்கள் படபடத்தன. குடைக்காரர் எல்லார்மீதும் நோட்டமிட்டவாறே சிறுமியையும் கிழவனை யும் தள்ளி நிற்கச் சொல்லிவிட்டு, மற்றவர்களிடத்து, "சரி, வாங்க" என்றார். அவர்கள் குனிந்து அவரவர்களது தூக்கு களை எடுத்துக்கொண்டனர். ஆண்கள் தங்கள் முண்டாசு களை அணிந்துகொண்டனர். பெண்கள் சேலையின் ஒரு பகுதியைக் கொண்டு தலையை மூடிக்கொண்டனர். இலேசாகச் சிரிப்பொலி கேட்டது. அவர்கள் பேசிக் கொண்டே குடைக்காரர் பின்னால் நடந்தனர். "ஆட்டுச் சந்தே, மாட்டுச் சந்தே மாதிரி மனுசச் சந்தேதான்!" என்றுவிட்டுச் சிரித்தான் சேட்டன். சிகரெட்டு ஒன்றைப் புகைத்துக்கொண்டே, எல்லாவற்றையும் பார்த்துக் கொண் டிருந்த கந்தன் பதினைந்து வயதுச் சிறுமியைப் பார்த்து,

ஏதோ கேட்க வாயெடுத்தான். ஆனால் அவளது வயிற்றைப் பார்க்கவும் வாயை அடக்கிக்கொண்டான். நாலு அடி எடுத்து, அவள் அருகே சென்று, மெதுவான குரலில், "ஏம்பிள்ளே, இந்த அளவுக்கா விட்டிடுறது?" என்றான்.

சிறுமி திடுக்கிட்டு அவன் பக்கம் திரும்பினாள். "எனக்கு ஒண்ணும் தெரியலீங்க" என்றாள் சிறுமி.

"நான் ஒரு டாக்டரம்மா சொல்றேன், அவங்ககிட்டே போறயா?" என்றான் கந்தன்.

"எந்த அம்மா? தந்தி ஆபீசுக்குப் பக்கல்லே இருக்கே, அந்த டாக்குட்டரா?" என்றாள் சிறுமி.

"ஆமா, ஆமா, அவங்களேதான்; மேரியம்மானு பெயரு."

"நேத்துதான் போயிருந்தேன். புருஷனைக் கூட்டியானாங்க. யாரும் வரமாட்டாங்கன்னேன். கல்யாணம் கட்டினவங்கண்ணா நூறு ரூபாய், இல்லாட்டி எரநூறு ரூபாய்னாங்க. சித்தாள்னேன். சித்தாள்னா முன்னூறு ரூபாய்னுக்கிட்டே உள்ளே போயிட்டாங்க."

ஒரு நெல்லிக்காயைச் சுவைத்துக்கொண்டே ஏழு வயதுச் சிறுமி ஒருத்தி ஓடி வந்தாள். தரையில் மீண்டும் உட்கார்ந்து விட்ட கிழவனின் கையைப் பிடித்துக்கொண்டு, "வாங்க தாத்தா, வூட்டுக்குப் போகலாம்" என்றாள். அவன் ஒரு கையைச் சிறுமி பிடித்திருக்க, மறு கையைத் தரையில் ஊன்றி எழுந்திருந்தான். அவன் கால்கள் நடுங்கின. அவனது அலுமினியத் தூக்கைச் சிறுமி ஒரு கையில் எடுத்துக்கொண்டாள். தூக்கு காற்றில் ஊசலாடியது. "தாத்தா, இன்னொரு கைலே ஒரு தடி வச்சிக் கோங்க" என்றார் வெற்றிலைபாக்குக் கடைக்காரர். "உம், தடியில்லாதபோதே இந்த லச்சணமா இருக்கு. இன்னும் தடியும் ஒண்ணு இங்கே கொண்டு வந்திட்டா வேறெ வெனெயே வேண்டாம்" என்றுவிட்டு "வயசானவங்களுக்கு ஓரே நிம்மதி தான் இருக்கு" என்று திட்டவட்டமாக அறிவித்தான் டீக்கடை சேட்டன். இதற்குள்ளாக எதிர்ப்புறத்தில் ரோட்டோரமாகச் சென்று கொண்டிருந்த முத்துச்சாமியைப் பார்த்துவிட்டான் கந்தன்.

"ஏய் முத்துச்சாமி" என்று உரக்கக் கூப்பிட்டான் கந்தன். சட்டென்று நின்ற முத்துச்சாமி, ரோட்டைக் கடந்துகொண்டே, "அண்ணே ஓங்களைத்தான் தேடிப்போறேன்" என்றான். கந்தனும் நான்கு அடி எடுத்து வைக்க அவனும் முத்துச்சாமி யும் ரோட்டின் ஒரு 'நியாயமான' ஓரத்தில் ஒன்றுசேர்ந்தனர்.

"என்ன தம்பி சொகமா?" என்றான் கந்தன்.

"சொகந்தான் அண்ணே, விஷயத்தெக் கேளுங்க."

கந்தன் முத்துச்சாமியைத் தட்டிக் கொடுத்தான்.

"என்ன விஷயம்?" என்று கேட்டான் கந்தன்.

"எல்லாம் நல்ல விஷயந்தாண்ணே. அன்னைக்குச் சொல்லிக்கிட்டிருந்தேனே, அந்தக் கைம்பெண்டாட்டி, அது காலையாட்டத்துக்கு சினிமாவுக்கு வந்திருக்கு. நீங்க நெனெச்சிங்கன்னா இன்னெக்கு 'புக்' பண்ணிரலாம். இப்ப சந்தேகமில்லே அண்ணே, அதுவும் நோங்கித்தான் கிடக்கு."

"அது மட்டும் தனியாவா வந்திருக்கு?"

"ஆமா அண்ணே, அந்தக் கொளெந்தையைத் தூக்கிட்டு."

"சரி வா, இன்னைக்கு எப்படியும் முடிச்சிடலாம். ஆனா என்னை மறந்திரமாட்டியே?" என்றான் கந்தன்.

தன் தோள்பட்டையின் மீது விழுந்திருந்த கந்தனின் கையிலிருந்து விடுபடும் அளவுக்கு, கந்தனைவிட வேகமாக நடக்க விரும்புபவன் போல் நடந்தான் முத்துச்சாமி. இருவரும் சிறிது நேரம் நடக்கவும் முத்துச்சாமி பேசாதிருக்கவே, "தம்பீ, ஒனக்கு மயங்காத பொம்பளையும் இருக்குமா?" என்றான் கந்தன்.

தனது கழுத்தின் மீது விழுந்திருந்த கந்தனின் கையை விலக்கியவாறே லேசாகச் சிரித்தான் முத்துச்சாமி.

கந்தனும் முத்துச்சாமியும் கிருஷ்ணாபுரம் சாராயக்கடைக்கு வந்தனர். கடையை ஒட்டியிருந்த வெற்றிலைபாக்குக் கடையில் முத்துச்சாமி கந்தனுக்காக ஒரு பாக்கெட் சிகரெட்டும் தீப்பெட்டியும் வாங்கினான். கடைக்காரச் சிறுவன் முத்துச்சாமி கொடுத்த ஒரு ரூபாய்த் தாளைப் பெற்றுக்கொண்டு, ஒரு காலித் தகரப் பெட்டியைச் சத்தம் ஏற்படும் வகையில் அப்படியும் இப்படியும் திருப்பிவிட்டு "சில்லரை இல்லை; வெளியே வரும்போது பாக்கி வாங்கிக்கோங்க" என்றான்.

"டேய் தம்பி, நீ பொழச்சிக்கிடுவேடா. வெளியே வரும்போது எத்தனை பேர் நெனெப்போடு ஒங்கிட்டே சில்லரை கேட்டு வாங்கப் போறாங்க" என்று சிறுவனைப் பாராட்டினான் கந்தன்.

"அப்படி ஒண்ணும் இல்லீங்க, அண்ணே. வேணா தாளைக் கொண்டு போய்ட்டு வரும்போது சில்லரையைத் தாங்க அண்ணே" என்று சொல்லிச் சமாளித்துக்கொண்டான் சிறுவன். ஆனால் முத்துச்சாமியின் ரூபாய்த் தாள் வேறு சில தாள்களோடு ஏற்கெனவே ஒரு 'கிளிப்'பில் சேர்க்கப்பட்டு விட்டது.

"அது மார்க்கம் இல்லாதது, அபாதா; அது வரம்பில் அடங்காதது, அனந்தோகாரா; அது தங்குமிடமில்லாதது, அநிகேதா; அது எதுவுமில்லாதது, சூன்யா..." போன்ற சொற்கள் காதில் விழவும் கந்தன் திரும்பிப் பார்த்தான். வேறு யாருமில்லை, சாராயச் சாமியார்தான் (அவருக்கு 'டிரம்' சாமியார் என்றும் பெயர்). அவர்தான் சாராயக் கடைமுன் நின்றுகொண்டு ஒரு இளைஞனுக்கு – இளைஞனின் முகத்தில் ஏகப்பட்ட பக்தி, கலக்கம், சோகம் எல்லாம் – தத்துவம் போதித்துக்கொண்டிருந்தார். முத்துச்சாமி தன்னைக் கவனிப்பதில் சாமியாருக்கு மகிழ்ச்சி மாதிரி தெரிந்தது. ஆனால் "அது விப்பமுக்தா, அது அசுந்தசின், அது வைதாத்தான் ஹா..." என்று சாமியார் தொடரவும், கந்தன் பின்னால் முத்துச்சாமி சாராயக்கடைக்குள் நுழைந்தான்.

கடையில் கூட்டம் அதிகம் இருந்தது; என்றுமில்லாத கூட்டம். ஞாயிற்றுக்கிழமை என்பதாலோ என்னவோ என்று நினைத்துக் கொண்டான் கந்தன். ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில்கூடக் காலை நேரங்களில் இவ்வளவு கூட்டம் இருக்காது. இப்போதோ, ஒரே இரைச்சல், கூச்சல்.

"நான் சொல்கிறேன் பிரதர், என்னே எவனும் அசெச்சுக்க முடியாது."

"ஆமாம், எந்த எம்.எல்.ஏ., எம்.பி. அவனவன் தேர்தல் செலவுக் கணக்கே ஒளுங்காக் காட்டியிருக்கான்?"

"நா சந்தோசமாத்தான் இருக்கேன் தம்பி; இது மாதிரியே வண்டி கடேசி மட்டும் ஓடிட்டாப் போதும்."

"காரியம்ன்னா என் மசுத்தே வேணும்னாலும் புடுங்குவாரில்லே."

"மரகதம்னு சொல்லிச்சு. உருப்படி கலரா ஸ்டார் மாதிரி இருக்கும்."

"அண்ணே, துட்டிருந்தாத்தான் அரசியல், கிரசியல் எல்லாம்."

"அதுவும் ஒரு சொகம்டா; அனுபவிச்சாத்தான் ஒனக்குப் புரியும்."

"ஈரலா இது ஈரல்? பொடலங்கா மாதிரி இருக்கு."

"வாங்க தம்பி, வாங்க. என்னே நெனெவிருக்கா?" என்றார் சாக்கனாக்கடை முதலாளி, திருமூர்த்தி. சாக்கனாக்கடை அயிட்டங்களின் மீது நோட்டம் விட்டுக்கொண்டிருந்த கந்தன் திருமூர்த்தியைக் கண்ணெடுத்துப் பார்த்தான்.

"சோலை அண்ணாச்சி சொகமா இருக்காரா?" என்றான் கந்தன்.

"இருக்கான், இருக்கான். அவனுக்கென்ன கேடு?"

"நீங்க என்ன இப்ப அண்ணாச்சியோட கூட்டு இல்லையா?"

"கூட்டிருந்தா இங்கெயா கடையெப் போட்டுக்கிட்டு உக்காந்திருப்பேன்? ஆனா அவங்கூடக் கூட்டுச் சேர்ந்தவன் எவன்தான் உருப்பட்டான்?. . . அது கிடக்கட்டும் தம்பி, நீ போயி உக்காரு. ஒனக்கு வேண்டியதெ அனுப்பறேன்" என்றார் திருமூர்த்தி.

மூன்று பேர்கள் உட்காரக்கூடிய கட்டில் ஒன்றில் ஒருவர் மட்டும் உட்கார்ந்திருந்ததைக் கண்டதும் "வாங்கண்ணே, வாங்கண்ணே அங்கே போகலாம்" என்று துரிதப்படுத்தினான் முத்துச்சாமி. இடத்தை வேறு யாரும் கைப்பற்றிக் கொண்டு விடுவாரோ என்ற ஆத்திரத்தில் கந்தனை விட்டுவிட்டு வேகமாகக் கட்டிலருகே ஓடினான் முத்துச்சாமி. கந்தன் நிதானமாக அவனைப் பின்தொடர்ந்தான். முத்துச்சாமி கட்டிலில் போய் உட்கார்ந்துகொண்டான். கந்தன் அவன் அருகில் நின்று கொண்டு சுற்றுப்புறமிருந்த குழப்பத்தைத் துளாவி நோக்கிக்கொண்டே, "என்ன இன்னைக்கு இப்படிக் கூட்டம்?" என்றான்.

"இன்னைக்கு தெ.சோ.க. மாவட்ட மாநாடில்லே?" என்றான் முத்துச்சாமி.

"அப்படீன்னா?" என்றான் கந்தன் உட்கார்ந்தவாறே.

"தென்னக சோஷலிஸ்டுக் கட்சி" என்று மூன்று எழுத்துகளை விரித்தான் முத்துச்சாமி. "ஆமா, இன்னும் ஊரே எப்படிக் கொள்ளையடிக்கறதுண்ணு திட்டம் போட மாநாடு நடத்தறாங்க" என்றார் அதே கட்டிலில் உட்கார்ந்திருந்த மூன்றாமவர்.

"உனக்கு இந்தக் கட்சி கபடா எதுவும் உண்டா?" என்றான் கந்தன் முத்துச்சாமியிடத்து.

"நான்லாம் தீவிரவாதக் கட்சி" என்றான் முத்துச்சாமி பெருமையோடு.

மூன்றாமவர் முத்துச்சாமி பக்கம் திரும்பி, "ம. மு. க. வா?" என்றார்.

"இல்லை" என்றான் முத்துச்சாமி.

"அவர் என்ன கட்சி சொன்னாரு, மாமூல் கட்சியா?" என்றான் கந்தன். முத்துச்சாமி பதிலளிக்கும் முன்னர் மூன்றாமவர், "இல்லல்லே, மக்கள் முற்போக்குக் கட்சி" என்று விளக்கினார்.

கடையைச் சேர்ந்த ஒரு சிறுவன் கந்தனின் முன் வந்து நின்றான். "ரெண்டு எரநூறு" என்றான் கந்தன். முத்துச்சாமி அவனிடத்து ஒரு ஐந்து ரூபாய்த் தாளை நீட்டினான். சாராயக் கடைச் சிறுவன் செல்லவும், சாக்கானாக்கடைச் சிறுவன் – ரொம்பச் சிறுவன் – சிரித்துக்கொண்டே வந்து கந்தனிடம், "என்ன சாப்பிடுறீங்க?" என்றான்.

"ரெண்டு ஈரல் கொண்டு வா" என்றான் கந்தன்.

"ஒரு ரூபா தாங்க" என்றான் சிறுவன்.

முத்துச்சாமி பையிலிருந்து ஒரு ரூபாயை எடுத்துச் சிறுவனிடம் தந்தான்.

"கந்தன் கிட்டேந்து ஒண்ணும் சில்லரை வாங்கிக்காதே, டேய் பாலு" என்று உரக்கக் கத்தினார் திருமூர்த்தி.

சிறுவன் காதுகளில் அது விழவில்லை. முத்துச்சாமி கொடுத்த ஒரு ரூபாயோடு சாக்கனாக்கடைப் பக்கம் திரும்பினான் சிறுவன்.

"ரத்தப் பொரியல் சாப்பிடுங்க; உடம்புக்கு நல்லது" என்றார் மூன்றாமவர், தன் முன்னால் இருந்த ரத்த வருவலைச் சுவைத்துக் கொண்டே.

"அவ்வளவா டேஷ்ட்டா இல்லையே?" என்றான் முத்துச்சாமி.

"இப்படிக் கொஞ்சம் ரத்தப் பொரியலே எடுத்துக்கிட்டு, இப்படி ஒரு பச்செ மொளகாத் துண்டோடு சேத்து வாய்ல போட்டு நல்லாக் கடிச்சுத் தின்னா ரொம்ப டேஷ்ட்டா இருக்கும்" என்று விளக்கினார் மூன்றாமவர், "உஸ், புஸ்" என்றுகொண்டே. அவர் முகமும் உடம்பும் ஒரே தொப்பலாக இருந்தது.

"நீங்க கண்ட்டிராக்ட்காரரில்லே?" என்றான் முத்துச்சாமி அவரிடத்து.

"ஆமாம், ஆமாம். கண்ட்டிராக்ட்காரன்தான்" என்றார் மூன்றாமவர்.

"என்ன ரொம்ப சலிச்சுப் பேசறீங்க?" என்றான் முத்துச்சாமி.

"இந்தப் பசங்க கைலே நகரசபை போனப்பறம் சிரிச்சா பேச முடியும்?" என்றார் மூன்றாமவர், குரலைத் தாழ்த்தியவாறே. பிறகு அவர் விளக்கிய முறையிலேயே, ஒரு பெரிய மிளகாய்த் துண்டையும், கொஞ்சம் ரத்தப் பொரியலையும் சேர்த்து வாயிலிட்டு மென்றுவிட்டு "உஸ், புஸ்" என்று சத்தம் போட்டார்.

"ரொம்ப ஒறப்போ?" என்றான் முத்துச்சாமி அனுதாபத்தோடு.

"இல்லேல்லே நுனி நாக்லே பட்டிரிச்சு" என்று விளக்கினார் கண்டிராக்டர். சாராயக்கடைப் பையனும், சாக்கனாக் கடைச் சிறுவனும் ஒரே நேரத்தில் தத்தம் சரக்குகளைக் கொண்டு வந்தனர். சாக்கனாக்கடைச் சிறுவன் முத்துச்சாமியிடத்து ஒரு ரூபாய் தாளை நீட்டி, "மொதலாளி வாங்க மாட்டேங்கறாரு" என்றான்.

"கந்தா வேணுங்கறதெச் சாப்பிடு. காசு, கீசு ஒண்ணும் தரக் கூடாது தெரியுமா?" என்றிரைந்தார் திருமூர்த்தி. கண்டிராக்டர் சாக்கனாக்கடைப் பையனைச் சமிக்கை செய்து தன்னருகே கூப்பிட்டு, "டேய் தம்பி, அந்த ரத்தப் பொரியல் லேந்து ரெண்டு பச்செ மொளகா எடுத்துட்டு வா" என்று விட்டு, சாராயக்கடைப் பையனிடத்து "ஒரு நூறு" என்று சொல்லிவிட்டு, இடது கையால் அவனிடத்து ஒரு ரூபாய்த் தாளைக் கொடுத்தார்.

"ஏற்கனவே ரொம்ப சாப்பிட்டிருப்பீங்க போலிருக்கே?" என்றான் முத்துச்சாமி அவரிடத்து.

"அரை விட்டர் குடிச்சாச்சு; ஒரு மசுத்தும் ஏறலே" என்று கொண்டே அவர் ஒரு ஏப்பம் விட்டார்.

கந்தன் இருநூறைக் காலி செய்துவிட்டு, ஒரு சிகரெட்டைப் புகைத்துக்கொண்டே, ஈரலைத் தின்றுகொண்டிருந்தான். முத்துச்சாமி சாராயத்தை இன்னும் தொடவில்லை. அவனது இருநூறும் இறுதியில் கந்தனுக்குத்தான் போய்ச் சேரும் என்று அவனுக்குத் தெரியும். கண்டிராக்டருக்கு நூறு வருகிறது. அதை எடுத்து 'மடக்'கென்று குடித்துவிட்டுக் கண்களை மூடிக் கொண்டே "ஒரு மசுத்தையும் காணோம்" என்றுகொண்டே எழுகிறார். தள்ளாடி மேசையின்மீது லேசாகச் சரிந்து ஒரு காலி கிளாசை உருட்டிவிட்டு, தூக்கக் கலக்கத்தில் இருப்பது போல் நகர்ந்து, 'குபுக்'கென்று கொஞ்சம் வாந்தியெடுத்து விட்டு, அதைப் பொருட்படுத்தாமல் மேலே செல்கிறார்.

சாராயக்கடையில் ஒரு இளம் பயில்வான் பரோட்டோ மாவைப் பிசைவதும், குத்துவதும், அணைப்பதும், அந்த மாவு உருண்டையை உடைக்க விரும்புபவன்போல் அதை ஒரு இரும்புத் தகட்டில் 'படீர்' என்று வீசுவதுமாக இருக்கிறான். அருகே ஒரு இரும்புத் தகட்டில் வெங்காயத்தைச் சுட்டு வறுத்துக் கொண்டிருக்கிறார் திருமூர்த்தி. கடை மானேஜர் – கண்ணாடி

அணிந்த இளைஞன் – யாரும் அணுக முடியாதபடி, சட்டம் போட்டு அடைக்கப்பட்டிருந்த சிறு அறையில் ஒரு உயரமான இருக்கையில் கண்ணும் கருத்துமாகச் சாராய பரிபாலனம் செய்துகொண்டிருக்கிறான். வழக்கமாகப் பெண்களுக்கென்று ஒதுக்கப்படும், ஆனால் இன்று அவசர நிலையை முன்னிட்டு இருபாலார்க்கும் பொதுவாக்கப்பட்டுவிட்ட அறையில் தோட்டிகளும் தோட்டிச்சிகளும் சில்லரைத் தகராறும் இதர தகராறும் செய்துகொண்டிருக்கின்றனர்.

மூன்றாமவர் காலி செய்துவிட்ட இடத்தில் ஒரு கருப்புக் கண்ணாடிக்காரர் வந்து உட்கார்ந்து கந்தனோடு பேச்சு கொடுக்கிறார்.

"தம்பியெ எங்கேயோ பாத்த மாதிரி இருக்கே?" என்கிறார் அவர்.

"நான் தம்பியுமில்லே அண்ணனுமில்லே, தியாகராசன்" என்கிறான் கந்தன்.

"இல்லே, மொகம் பாத்த மாதிரி இருக்கு. உங்களுக்குத் தெருவு எது?"

"பட்டமார் தெருவு."

"பட்டமார் தெருவா?"

"ஆமா, பட்டமார் தெருத்தான். இப்ப எங்கிட்டே எதுக்குப் பேச்சுக் கொடுக்கறீங்க?"

முத்துச்சாமி போதும் என்றுவிட்டான். கந்தனுக்கு மட்டும் மேலும் சாராயம் வருகிறது.

"அண்ணே, இங்கே பாருங்கண்ணே" என்கிறான் முத்துச்சாமி கந்தனிடத்து.

"எவன்டா இங்கே மானேசர்? நாங்க ரெண்டு ரூபாய்க்கு நாதியத்தாடா போயிட்டோம்? பத்து ஏக்கர் நிலம் சொந்தத்துலே இருக்குடோய். மூணு சோடி எருது இருக்கு. ஆமா, நாங்க ஒங்க கடேலே ரெண்டு ரூவாக் காசுக்குக் கடன் சொல்லிட்டுப் போக வரலே, மாநாட்டுக்கு வந்திருக்கோம் தெரியுமிலே" என்று ஒருவன் கத்துகிறான்.

"பாத்திங்களா? இத்தனை பேர் மத்தியிலும் ஒரு கச்சாராப் பண்ணாமே உக்காந்து இருக்கேங்களேன்ட்டுத்தான் ஒங்ககிட்டே வந்து உக்காந்தேன். ஒங்களுக்கு என்ன தொழிலோ?" என்கிறார் கருப்புக் கண்ணாடிக்காரர் கந்தனிடத்து.

"பல்லு உடைக்கிறது."

முத்துச்சாமி சிரிக்கிறான்.

மாநாட்டுக்கு வந்தவன் தொடர்ந்து இரைகிறான்.

"எரநூறு தா, மதியம் வந்து காசெத் தரேனா, அந்த ஆண்டி மானேசர் சத்தம் போடுவாங்கறானே? ஏண்டா மானேசா, ஓங்க மொல்லாளி ஒனக்கு என்னடா தர்றான்? மாசம் நூத்தம்பது தர்றானாடா? எங்க வீட்டு மாடு கன்னு மேச்சலுக்குப் போய்ட்டு வந்தப்பக் கட்டிப் போடு; நாஅந்த நூத்தம்பதத் தரேன். இல்லாட்டி எங்க வீட்டுப் பொம்பளெக சேலையைத் தொவைச்சுப் போடு; எரநூறு தர்றேன்." வீராப்போடு அவன் எழுகிறான். கடைக்காரச் சிப்பந்தி ஒருவன் அவன் அருகில் சென்று, "சும்மா உக்காருங்கண்ணே" என்றுகொண்டே, அவனது தோள்பட்டையை அழுத்துகிறான்.

"உச், என்னெத் தொட்டாக் கையெ வெட்டிடுவேன்" என்றுவிட்டு உட்காருகிறான் கலாட்டாக்காரன்.

"என்ன, கல்லுடைக்கிறீங்களா?" என்கிறார் கருப்புக் கண்ணாடிக்காரர் கந்தனிடத்து.

"ஓங்களெப் பாத்தா யாரும் அப்படிச் சொல்ல மாட்டாங்களே!" என்று தொடர்கிறார்.

"ஏன்யா, கல்லுடைக்கறவன்னா சில்க்குச் சட்டை போடக் கூடாதா?" என்கிறான் கந்தன்.

"போடலாம் போடலாம், தாராளமாப் போடலாம். ஒரு கல்யாணத்தைப் பண்ணிட்டு கொழந்தைக பெறந்த பிறகுதான் இருக்கவே இருக்கே பாடு."

"நாங் கல்யாணம் கட்டிப் பத்து வருசமாகுது."

"அப்பக் கொழெந்தெக?"

"ஏளுதான்."

"ஏழு குழந்தேங்களா?"

"ஆமாம், அதுனாலேதான் என்னே ஒன் டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போ. அவர் எனக்கு ஆபரேசன் செஞ்சாருன்னா அவருக்கு இருபத்தியஞ்சு ரூவா கெடைக்கும். உனக்கு அஞ்சோ பத்தோ கிடைக்கும். எனக்கு ஒரு முப்பது கெடைக்கும்; அதுலே நீயும் ஒரு பங்கு வாங்கிக்கெடலாம்" என்று கூறிக்கொண்டே கந்தன் எழுந்திருக்கிறான். கூட்ட நெருக்கடியில் சௌகரியத்துக்காக உடம்பைத் திருப்பிக் கொடுப்பதுபோல் கந்தன் உடலை

அசைத்துக் கையை உயர்த்தவும், அவனது வலது முழங்கை கண்ணாடிக்காரரது முகவாய்க் கட்டையில் ‘டண்’ என்று விழுகிறது. “ஏன்யா நீதானே அந்தப் பள்ளிக்கூடப் பையனுக்குப் போயி ஆபரேசன் செஞ்சு வச்சது” என்று கந்தன் கேட்கவும், தொடர்ந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்த கலாட்டாக்காரன் ஒரு காலி கிளாசைத் தரையில் ஓங்கி வீசியெறிகிறான்.

“டே நான் யார் தெரியுமா? மலப்பட்டி ஆண்டித் தேவன் மகன் சுருளித் தேவனாக்கும்” என்றுகொண்டே, மூன்று நான்கு பேர்கள் தன்னைத் தடுத்து நிறுத்துவதை மீறிக் கொண்டு தள்ளாடியபடி வந்து கடை நடுவே நின்றுகொள் கிறான் கலாட்டாக்காரன். “நான் அந்த மானேசத்... யெக் கேக்கறேன், அவன் மாட்டேன்னு சொல்லுவானா பாப்பம்” என்று இரைகிறான் அவன்.

“கலாட்டாப் பண்ணாதே அண்ணே; பெறகு வருவோம், வா போகலாம்” என்கிறான் சமாதானப்படுத்துபவர்களில் ஒருவன்.

“அண்ணன் அருமே பெருமே அந்தப் பேப்பசங்களுக்குத் தெரியுமா?” என்கிறான் மற்றொருவன்.

“யாரய்யா அது?” என்று திருமூர்த்தி சாக்கனாக்கடை யில் இருந்த இடத்தில் எழுந்து நிற்கிறார்.

“கையை விடுங்கடா” என்று இரைகிறான் சுருளித் தேவன். நாலைந்து பேர் கடையை விட்டுத் தப்பியோடக் கடையின் வாசற்புறம் விரைகின்றனர்.

சுருளித் தேவன் இடுப்பிலிருந்த உறையோடு கூடிய கத்தியொன்றை எடுத்து, இடது கையால் உறையை உருவி வீசி எறிகிறான். உறை கந்தனின் முகத்துக்கு நேரே வரவும் கந்தன் சடாரென்று தலையைக் குனிந்துகொள்கிறான். குடிகாரன் கையில் கத்தியைக் கண்டதும் இன்னும் சிலர் அலறி அடித்துக்கொண்டு ஓடுகின்றனர். முத்துச்சாமியும் பதறி எழுகிறான். வலுவாக அவன் தோள்பட்டையைப் பற்றி அவனை உட்காரவைக்கிறான் கந்தன்.

கையில் கத்தியோடு மானேஜர் அறைப் பக்கம் நடக் கிறான் சுருளித் தேவன். ஒருவன் அவன் தோள்பட்டையைப் பற்றிக்கொண்டு, “இது ஆபத்தண்ணே” என்று எச்சரிக்கிறான். “ச்சூ, மாதர்சோத்” என்று அவன் கையை உதறிவிட்டு, சுருளித் தேவன் மானேஜர் அறை முன் சென்று நிற்கிறான். மானேஜரும் இரண்டு பையன்களும் சாராய டிரம்களுக்குப் பின்னால் ஒளிந்துகொள்கின்றனர்.

"ஏண்டா மானேசா, ஓம் மொதலாளியெ எனக்குத் தெரியா தூன்ட்டா நெனெச்சே? எந்தக் காட்டுக்கள்ளன் வந்து எந்தக் காட்டுலே ஏலம் கேக்கறதுடா? அந்தச் செட்டியப் பய பணம் தரவுந்தானேடா இந்தத் திமிரு? அடுத்த வாட்டி இங்கே எந்தப்... மவன் ஏலங் கேக்றான்ட்டுப் பாத்திடறேன்" என்று கத்திக்கொண்டு சுருளித் தேவன் மானேஜர் அறையின் மரச்சட்டக் கதவை இழுத்து அசைக்கிறான். கதவு முறிபட ஆரம்பிக்கிறது. சுருளித் தேவனுக்குப் பின்னால் பூனை போல் வந்து அவனது வலது தோள்பட்டையில், கழுத்தையொட்டித் தன் கையைக் கத்திபோல் வைத்துக்கொண்டு, ஓங்கி ஒரு வெட்டு வெட்டிவிட்டு அருகே இருந்த கல் தூணுக்குப் பின் ஒளிந்து கொள்கிறான் கந்தன். சுருளித் தேவன் கீழே விழுகிறான். கத்தியைப் பிடித்துக்கொண்டிருந்த அவன் கையைக் காலால் மிதித்துக் கொண்டு கந்தன் அவன் முகத்திலும் முதுகிலும் நான்கு குத்து விட்டுவிட்டு அவனைத் தரையில் கிடக்க விடுகிறான். சுருளித் தேவனின் ஆதரவாளர்களில் ஒருவன் ஓடிவிட்டான்; மற்றொருவன் தப்பியோடத் தயாராக உள்ளவன் போல், வாசற்புறம் நின்றுகொண்டு உள்ளே என்ன நடக்கிறது என்று பார்த்துக்கொண்டிருந்தான். தரையில் கிடந்த கத்தியை எடுத்து மானேஜர் முன் வைத்தவாறே கந்தன், "துடியங்க யாரும் இல்லையா?" என்றான். "ஒருத்தன் ஏதோ மாநாட்டுக்குப் போயிட்டான்; இன்னொருத்தர் இனிமேத்தான் வருவாரு" என்றான் மானேஜர்.

ஒரு பத்து ரூபாய்த் தாளை எடுத்து மானேஜர் கந்தனிடத்து நீட்டினான். "பெறகு வாங்கிக்கிறேன்" என்றுவிட்டுக் கந்தன் நகர்ந்தான். அவன் கூடவே முத்துச்சாமியும் வெளியே வந்தான்.

"ஏன் அண்ணே, எதிராளி ஆயுதம் வச்சிருந்தா, பின்புறமாய்ப் போய்த்தான் தாக்கணும் இல்லையா?" என்றான் முத்துச்சாமி.

"எதிராளி ஆயுதம் வச்சில்லாட்டியும், முடிஞ்சா அவன் அசந்திருக்கப்பப் பின்னுக்கிருந்துதான் தாக்கணும்" என்றான் கந்தன்.

"அது கோழத்தனமில்லே?"

"உம்."

"ஏண்ணே ஒண்ணும் சொல்லாம இருக்கீங்க?"

"இல்லே, அந்தத் திருமூர்த்தியெப் பத்தி நெனெச்சுக்கிட்டிருந்தேன்."

"இப்ப எங்கே போறோம் அண்ணே?"

"இங்கே பக்கத்துலே வள்ளி லாட்ஜுக்கு."

"அங்கே என்ன?"

"ஒரு சோலி இருக்கு."

"ரொம்ப நேரம் ஆகுமா?"

கந்தன் சிரித்தான்.

"ஏண்ணே சிரிக்கறீங்க?"

"ஒன்னாளு எந்தக் கொட்டகைக்கு வந்திருக்கு?"

"பங்கஜாத் தியேட்டருக்கு."

"ஒரு மணிக்குப் பங்கஜா தியேட்டர்லே இருக்கணும் ஒனக்கு, அவ்வளவுதானே?"

"ஆமாம் அண்ணே" என்றான் முத்துச்சாமி. இருவரும் நடந்தனர்.

வள்ளி லாட்ஜை அடைந்ததும், முத்துச்சாமியைப் பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு பனிரெண்டாம் எண் அறைக்கு வரச் சொல்லிவிட்டு, கந்தன் மட்டும் லாட்ஜினுள் நுழைந்தான். மானேஜர் ஸ்தானத்தில் உட்கார்ந்திருந்த ஒரு இளைஞனிடத்து, "பனிரெண்டு கீழேதானே?" என்றான் கந்தன். "யெஸ்" என்று தலையை அசைத்துவிட்டு, கந்தன் செல்ல வேண்டிய திசையை இளைஞன் காட்டினான். அறைகள் ஒரே வரிசையில் நின்றன. பதினொன்றாம் அறை வெளியே பூட்டப்பட்டிருந்தது. பனிரெண்டில் மின்விசிறி சுழன்றுகொண்டிருந்ததைக் கந்தனால் கேட்க முடிந்தது. அந்த வரிசையில் அதுதான் கடைசி அறை. கதவைத் தட்டிக் கொண்டே, "சார்" என்றான் கந்தன். "யாரது?" என்று உள்ளேயிருந்து ஒரு குரல் கேட்டது. பிறகு கதவு திறந்தது. கதவைத் திறந்தது கைலியும் பனியனும் அணிந்திருந்த ஒரு நடுத்தர வயதுக்காரர்.

"யாரய்யா?" என்றார் அவர்.

"தெரிலே? நேத்து நைட்டு..." என்றான் கந்தன்.

"ஓ, நீயா? என்ன விஷயம்?"

"முன்னாலே உள்ளே போங்க சொல்றேன்" என்றுவிட்டு, வழியில் நின்றுகொண்டிருந்த அவரையும் தள்ளிக்கொண்டு

உள்ளே போகக் கூடியவனைப்போல் ஒரு அடி எடுத்து வைத்தான் கந்தன்.

"வா, வா" என்று கொண்டே அவனுக்கு வழிவிடும் வகையில் உள்ளே சென்று கட்டிலில் கிடந்த மெத்தை மீது உட்கார்ந்து கொண்டார் அவர். கந்தன் அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான். அறையின் இரு கதவுகளும் நன்கு திறந்து கிடந்தன.

"என்னப்பா விஷயம் இந்நேரத்திலே" என்று கேட்டுக் கொண்டே அவர் சிரிக்க முயன்றார்.

"நம்ம பொளப்பிலே கைவச்சிட்டிங்களே" என்றான் கந்தன் வருத்தத்தோடு.

"யாரு?"

"நீங்கதான் சார்."

"நானா, அதெப்படிப்பா? நான் ஓங்கூடப் பத்து நிமிஷம் கூடப் பேசியிருக்க மாட்டேனே?"

"எங்கூடப் பத்து நிமிசம்தான் பேசினீங்க. ஆனா சரோஜாவோட நைட் பூரா பேசினீங்களே, அது போதாதா?"

"இல்லேப்பா, செகண்டு ஷோ முடியறப்ப வந்துட்டேன்."

"சொல்லிச்சு, சொல்லிச்சு. ஆனா வெவரந் தெரியாத ஒரு சின்னப் பொண்ணு மனசை இப்படிக் கெடுத்திருக்கக் கூடாதுங்க."

"நான் என்னப்பா கெடுத்தேன்?"

"சரி, சரிங்க; இப்ப ஓங்ககிட்டேப் பேசி என்ன ஆகப் போவுது? டிரஸ்ஸே மாத்திக்கிட்டுக் கிளம்புங்க" என்று சொல்லிக் கொண்டு கந்தன் எழுந்திருந்தான்.

"இப்ப எங்கப்பா போறது?"

"அந்த வீட்டுக்குத்தானுங்க. நீங்களே வந்து சரோசாகிட்டே நேர்ல சொல்லிடுங்க."

"நான் வந்து என்னத்தைச் சொல்றது?"

"உங்களுக்குப் பெண்டு பிள்ளைக இருக்கு; உங்களாலே அதெக் கல்யாணம் கட்டிக்க முடியாதுனு நீங்களே அதுகிட்டேச் சொல்லிடுங்க."

"நான் ஒண்ணும் அதுகிட்டே அதெக் கல்யாணம் கட்டிக்கிடுவேன்ட்டு ஒண்ணும் சொல்லலேயே!"

"இந்தா சார், எனக்குக் கெட்ட கோபம் வரும். அந்தப் பிள்ளையை சாதாரணமா நெனெச்சிறாதீங்க. பொன் கொடுத் தாலும் பொய் சொல்லாது. அதெல்லாம் ரொம்பப் பெரிய குடும்பத்துப் பொண்ணு. ஏதோ காலக்கோளாறு. சரி, இப்ப அதெல்லாம் எதுக்கு? குடிச்சுப்போட்டுச் சின்னப் பொண்ணுக கூட இருக்கேலே வாய்க்கு வர்றதே உளர்றவன்தான் ஆம்பிளே; அதுலே ஒன்னும் தப்பில்லே. ஆனா அதுக்காக சரோ பொய் சொல்லுதுானு மட்டும் சொல்லாதீங்க."

"அப்ப நான் வெறிச்சிலேதான் சொல்லியிருப்பேன்னு நீயே ஒத்துக்கிறே, இல்லே?"

"அது எனக்குத் தெரியாதா, சாமி? இன்னைக்குக் காலேலே அது தகராறு பண்ண ஆரம்பிக்கவே எனக்கு விஷயம் என்னன்ட்டு வெளெங்கிரிச்சு. நானும் அதுகிட்டே எடுத்துச் சொன்னேன். வரவங்க போறவங்க வாய்க்கு வந்ததெல்லாம் ஆயிரத்தெட்டு சொல்வாங்க. அதெல்லாம் நம்பிறக் கூடாதுனு. அது கேட்டாத்தானே. 'இல்லே, இல்லே இவர் மத்தவங்க மாதிரி இல்லே; உண்மைலே அவருக்கு எம் மேலே பிரியம் ஏற்பட்டிரிச்சு. நாளெக்கே ஸ்த்தர் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யறேனிருக்காரு'னு சொல்லிப் பிடிவாதம் செய்யுது."

கந்தன் சொல்வதை லேசான புன்முறுவலோடு கேட்டுக் கொண்டிருந்த மற்றவர் வாய்விட்டுச் சிரித்தார்.

"இந்தாங்க, இது சிரிக்கற விஷயம் இல்லை" என்று கந்தன் மிரட்டினான்.

"அதுக்கு நான் என்னய்யா செய்யணும்?" என்று மற்றவர் உரக்கக் கத்தினார்.

"யேய், என்ன சத்தம் போடறே? ஒரு சின்னப் பொண்ணு மனசக் கெடுத்திருக்கே; எம் பொளப்புலே மண்ணெப் போட்டி ருக்கே? இதுலே மிரட்ட வேறயா பாக்கறே?"

"சரிய்யா, எதுக்கு இந்த வெட்டிப் பேச்செல்லாம்? இப்ப என்ன செய்யணுங்கறீங்க?"

"இங்கே பாருங்க சார், இன்னைக்கு ஞாயித்துக்கிளமை. மணி பனிரெண்டாகப் போவுது. ஊருலே வேறே மாநாடு அது இதுானு நடக்குது. இந்நேரத்துக்குள்ளே சரோ என்ன சம்பாதிச்சிருக்கும்னு நெனெக்கிறீங்க? அம்பதுக்குக் கொறை யாம இன்னைக்குக் கெடெச்சிருக்கும். ஆனா என்ன செய்திட்

டிருக்கு தெரியுமா? 'நான் அவருக்கு சத்தியம் செய்து கொடுத்திட்டேன்; யாரையும் வீட்டுக்குக் கூட்டியாரக் கூடாது'னு லந்து பண்ணிட்டிருக்கு. நீங்க வேறே ஒண்ணும் செய்ய வேண்டாம்; வீட்டுக்கு வந்து அதுகிட்டே விஷயத்தைச் சொல்லிடுங்க, அது போதும்."

"நான் சொன்னாக் கேட்டுக்குமா?"

"கேட்டுக்கிறேங்குது. அவரே வந்து எம் மொவத்துலே முளிச்சு, குடிவெறிலேதான் அப்படிச் சொன்னேனேன்ட்டுச் சொல்லட்டும், அது போதூங்குது."

"சரி, சாயங்காலம் ஏழு எட்டு மணிக்கு வா; ரெண்டு பேருமாப் போகலாம்."

"ஏய்ன்யா, அதுக்குள்ளாற ஊருக்கு வண்டியெப் பாத்துக் கம்பி நீட்டிடலாம்னுதானே பாக்கறே? நீல்லாம் நாயமாச் சொன்னாக் கேட்டுக்கிடமாட்டே."

"டேய், சத்தம் போடாதே. எங்கிட்டே என்ன சீட்டுப் போடவா பாக்கறே?"

"ச்சூ, மாதர் சோத்! ஏதோ பெரிய மனுஷன் மாதிரி தெரியறே, மரியாதயாப் பேசு; சீட்டு கீட்டுனே பல்லே உதித்திடுவேன்."

கந்தன் மற்றவரை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தான்.

அப்போதுதான் முத்துச்சாமி அறைக்குள் நுழைந்தான்.

"என்னண்ணே தகராறு? இப்படிக் கலவரப்பட்டிருக்கே?" என்றான் கந்தனிடத்து.

"இந்த ஆளு இருக்கானே இவன், நேத்து சரோஜாவோடெ தங்கினான். பாத்தா கண்ணியமான மனுஷனாத் தெரியாறானேன்ட்டுப் பணத்தே அது கைலேயே கொடுத்திருங்கோன்னேன். இவன் அம்பது பேசிட்டு, குடி வெறிலே இருபதுதான் பேசினேன்ட்டுத் தகராறு பண்ணிருக்கான். அவளே ஏதோ அசிங்கமாச் செய்யச் சொல்லிருக்கான்; அது மாட்டேங்கவும் அதை அடிச்சிருக்கான். அதெல்லாம் போகட்டும். சரோவோடே செயினே வேறே காணோம். இப்பக் குடிவெறிலே எனக்கு ஒண்ணும் நெனப்பில்லேங்கிறான். வாய்யா போலீஷ் ஸ்டேஷனுக்குனா, எனக்கு டிபுட்டியெத் தெரியும், மந்திரியெத் தெரியும்னு கதைவுடறான்."

"ஆமாம் ஆமாம், இது டெர்லின் ரௌடி காலமாத்தான் போச்சு" என்று கந்தனிடம் கூறிவிட்டு முத்துச்சாமி, "சார்,

நீங்க போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயி ஓங்களுக்கு நெனெவிருக்கிறதே சொல்லுங்க; அதுதான் ஒழுங்கு" என்று மற்றவரிடத்துச் சொன்னான். அறைக்காரர் கந்தனையும் முத்துச்சாமியையும் மாறி மாறிப் பார்த்தார்.

திடீரென்று மின்விசிறி சுழல்வது நின்றது. கந்தன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்; முத்துச்சாமி ஒரு வட்ட ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டான். யாரோ அறையை நோக்கி வரும் சப்தம் கேட்டது. காலடி ஓசை பதினொன்றாம் எண் அறைக்கு வந்ததும், அந்த அறை திறக்கப்படும் சப்தம் கேட்டது. பிறகு மீண்டும் ஒரு காலடிச் சத்தம். அறையைக் கடந்து, அறையினுள் சாதாரணமாக நோக்கியவாறே மானேஜர் – இளைஞன் சென்றான்.

"இந்தாப்பா" என்றார் அறைக்காரர்.

"வாட் சார்?" என்று கேட்டுக்கொண்டே மானேஜர் – இளைஞன் தலையை அறைக்குள் நீட்டினான்.

"நூறு ரூபாய்க்கு சேஞ்சு இருக்கா?" என்றார் அறைக்காரர்.

"ஓ, யெஸ்" என்றான் மானேஜர்.

உடைதாங்கிச் சட்டத்தில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு பேன்ட்ஸ் பாக்கெட்டிலிருந்து நூறு ரூபாய்த் தாளொன்றை எடுத்து மானேஜரிடத்து நீட்டினார் அறைக்காரர். அவன் விசில் அடித்துக்கொண்டே, ஒரு கையில் ரூபாய்த் தாளோடும், மறு கையில் ஒரு சாவிக்கொத்தைச் சுழற்றிக்கொண்டும், ஓட்டமும் நடையுமாகக் கல்லாப் பெட்டியை நோக்கி நடந்தான். சிறிது நேரத்தில் அறைக்குத் திரும்பி வந்தான். "ஃபைவ் டென்ஸ் அண்டு டென் ஃபைவ்ஸ்" என்றுகொண்டே அறைக்காரரிடத்து, ஐந்து பத்து ரூபாய்த் தாள்களையும் பத்து ஐந்து ரூபாய்த் தாள்களையும் நீட்டினான்.

அதைப் பெற்றுக்கொண்டே அவர், 'சரி' என்று தலையை ஆட்டினார். அவர் 'தாங்ஸ்' சொல்வார் என்று எதிர்பார்த்த இளைஞன் அவருக்குப் பதில் தானே "தாங்ஸ்" என்றுவிட்டு, "கம்மிங் சார்" என்று சொல்லி விடையும் பெற்றுக்கொண்டு அறையை விட்டுக் குதித்துக்கொண்டு சென்றான். அறைக்காரர் கந்தனிடத்து ஐம்பது ரூபாயைக் கொடுத்தார். அதை எண்ணிப் பார்த்துப் பையில் போட்டுக்கொண்டு "வரேன் சார். இன்னைக்கி நைட்டு இங்கேதானே இருப்பீங்க?" என்றான் கந்தன். அறைக்காரர் எப்படியும் புரிந்துகொள்ளலாம் என்ற வகையில் தலையை அசைத்தார். கந்தனும் முத்துச்சாமியும்

லாட்ஜை விட்டு வெளியே வந்து பங்கஜாத் தியேட்டரை நோக்கி நடந்தனர்.

"இது தப்புல்லே அண்ணே?" என்றான் முத்துச்சாமி.

"இதுவும் தப்புத்தான்; எவளும் கைம்பெண்டாட்டிக்காரி சிக்கினா அவளே வளைச்சுப்போடப் பாக்கறதும் தப்புத்தான்."

"இல்லண்ணே, நான் அதெக் கல்யாணம் கட்டிக்கிட்டா லும் கட்டிக்கிடுவேன்."

"வண்டி வாங்கும்போது 'ட்ரயல்' பாப்பாங்க. அது மாதிரியா இப்போ?"

முத்துச்சாமி முதலில் சிரித்தான். பிறகு கொஞ்சம் யோசித்து விட்டு, "இந்தச் சமுதாயத்துலே எத்தனையோ கொடுமைகள் நடக்குது" என்றான்.

"நாமும் கொஞ்சம் கொஞ்சம் கொடுமைகள் செய்ய லாங்கறே, இல்லே?" என்றான் கந்தன்.

"நாமா ஒண்ணும் கொடுமைகள் செய்யலே; சமுதாய அமைப்பு நம்மை அப்படிச் செய்ய வைக்கறது."

"உம்."

"உதாரணமா – அண்ணே, கோவிச்சுக்காதீங்க – நீங்க செல தப்புப் பண்றீங்க இல்லே; அதுக்கெல்லாம் என்ன காரணம்?"

"கொளுப்புதான்."

"இல்லண்ணே, ஒங்க வறுமைதான் காரணம்."

"பணம் சம்பாதிக்க வேறே வளியில்லையா? கட்டின பெண்டாட்டியெக் கூட்டிக் கொடுக்கணுமா? இல்லாட்டி ரௌடித்தனம் பண்ணணுமா?"

"நீங்க நெனச்சா ஒங்களுக்கு வேலே கெடெச்சுடுமா? இல்லாட்டிச் சொந்தத் தொழில் பண்ண ஓங்ககிட்டப் பண மிருக்கா?"

"கொஞ்சம் இருந்தது. அதிலே கொஞ்சத்தெ ஒருத்தன் தாப்பாப் போட்டான். மற்றதெ நானே அளிச்சிட்டேன்."

"சோலைப் பிள்ளையத்தானே சொல்றீங்க, ஒருத்தன்ட்டு."

"ஆமாம்."

"ஏன் அவன் ஒங்ககிட்டே தாப்பாப் போட்டான்?"

"தம்பி, என்ன லூஸ்தனமாக் கேக்கறே? அவனுக்குப் பணம் வேண்டிருந்திச்சு; எங்கிட்டேந்து பிடுங்கினான். மீனாவெக் கட்டிக்கணும்னு எனக்கும் ஆத்திரம் இருந்திச்சு."

"அப்ப மனுசனே மனுசன் ஏமாத்தற சமுதாயம்தானே இது?"

"ஆமாம், ஆமாம்."

"இந்த சமுதாய அமைப்பை மாத்தணும் அண்ணே."

"எப்படி? நாம இந்த சமுதாய – என்ன சொன்னே – அமைப்பா, அதை நாம் உண்டுபண்ணலையே! அதெ எப்படி நாம மாத்த முடியும்?"

"அது மாதிரி மாத்தம் எல்லாம் மத்த நாடுங்கள்லே நடந்திருக்கண்ணே."

"எப்படி?"

"நம்ம மாதிரி கஷ்டப்படறவங்கள்லாம் புரட்சி செஞ்சு சமுதாய அமைப்பை மாத்திச் சொரண்டலே போக்கிருக்காங்க."

"அப்படீன்னா?"

"எது அப்படீன்னா?"

"சுரண்டல்னு சொன்னயே அதான்."

"அதுவா? இன்னைக்கு உணவு, துணி, இன்னும் நம்ம தேவையெல்லாம் உண்டுபண்றது யாரு? தொழிலாளிங்கதானே?"

"ஆமாம். ஆனா தொழிலாளிக்குத்தான் மொதலாளிங்க கூலி கொடுக்கறாங்களே?"

"கூலி கொடுக்கறாங்கதான். ஆனா ஒரு நூறு ரூபாய்க்குத் தொழிலாளி உற்பத்தி செய்தான்னா, அவனுக்குக் கெடெக்கிறது நாப்பது ரூவாவோ, முப்பது ரூவாவோதான். மிச்சத்தெ மொதலாளிதானே கொள்ளையடிச்சிக்கிறான்?"

"ஆனா மொதலாளிதானே பணத்தைப் போட்டான்; அவன்தானே தொழிலாளிங்ககிட்டேந்து வேலை வாங்கறான்."

"மொதலாளிதானே மேற்பார்வை பண்றான்; தொழிலே நடத்தத் திட்டம் போடறாங்கறேன்னே, இல்லையா?"

"ஆமாம்."

"அதுக்கு ஒரு ஆளோ, ரெண்டு ஆளோ வேணும்தான். ஆனா, ஒரு பாக்டரி எதுக்கு அவனுக்கும், அவன் பெண்டாட்டி

பிள்ளை குட்டிகளுக்கும் சொந்தமா இருக்கணும்? அவனும் ஒரு சம்பளத்தெ எடுத்துக்கிட்டுப் போகட்டுமே? அப்ப மொத லாளீன்னு ஒருத்தன் இருந்திக்கிட்டுத் தொழிலாளி உழைப்பை எல்லாம் பிடுங்கித் தின்னுட்டு இருக்கமாட்டனில்லையா?"

"அப்ப பாக்டரி யாருக்குச் சொந்தம்?"

"எல்லாருக்கும்தான், எந்தத் தனிப்பட்டவருக்கும் சொந்தமா இருக்கணுமா?"

"தம்பீ, நீ ரொம்பப் படிச்சவன் மாதிரி பேசறே. எனக்கு என்னையே மாத்திக்க முடிலே; நான் எப்படி சமுதாயத்தை மாத்த முடியும்? குடிகாரப் பய ஏதோ ஒளர்றான்னுடுவாங்க... இந்தா, இந்த ஓட்டல்லே மணியெப் பாரு."

"மணி ஒண்ணரை ஆகப் போகுது அண்ணே."

"சரி, வந்த காரியத்தெப் பார்ப்போம். கொஞ்சம் வேகமா நட."

"சொரண்டலே ஒளிச்சுத்தான் ஆகணும் அண்ணே."

"சரி சரி, போ, ஒளி. இன்னைக்குச் சொரண்டறவனெ ஒளிச்சா, நாளைக்குச் சொரண்ட இன்னொருத்தன் வருவான். அவ்வளவுதான். ஆனா கூலிக்காரங்க சம்பளம் கூடக் கேட்டுக் கூட்டம் போடறாங்களே, இல்லாட்டி வேலை நிறுத்தம் செய்ய றாங்களே, அது எனக்குச் சரீன்னு படுது."

"அப்ப..." என்று ஆரம்பித்தான் முத்துச்சாமி.

"இந்தா தம்பி, எனக்குப் படிப்பு கிடிப்பு ஒண்ணும் கெடெ யாது. பள்ளிக்கூடத்துக்குப் போனா கார்லே வண்டிலே அடிபட்டிருவேன்ட்டு எங்கம்மா என்னைப் பத்து வயசுவரை வீட்டெவிட்டே வெளியே விட்டதில்லே."

"உங்களுக்கு வாழ்க்கைலே லட்சியம் என்னண்ணே?" என்றான் முத்துச்சாமி.

"அப்படீன்னா?" என்றான் கந்தன்.

"நீங்க வாழ்க்கைலே எதைச் சாதிக்கணும்னு திட்டம் போட்டிருக்கீங்க?"

கந்தன் சிரித்தான். "எந்தத் திட்டம் போட்டு சொர்ணத் தம்மா வயத்துலே வந்து பொறெந்தேன்?" என்றுவிட்டு மீண்டும் சிரித்தான்.

கந்தனும் முத்துச்சாமியும் தியேட்டர் முன் வந்து நின்றனர். படம் முடிய இன்னும் சில நிமிடங்கள் இருந்தன. இருவரும் தியேட்டருக்கு எதிரே இருந்த டீக்கடைக்குச் சென்று சம்சாவும் டீயும் சாப்பிட்டு விட்டு வரவும், 'ஜன கண மன' கேட்க ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது. ஏற்கெனவே சினிமா ரசிகர்கள் தியேட்டருக்குள் இருந்து முண்டியடித்துக் கொண்டு வெளியே வந்துகொண்டிருந்தனர். தியேட்டருக்கு இரண்டு கேட்டுகள் இருந்தன. இரண்டுமே தெருவைப் பார்த்து இருந்ததால் இரண்டு வாசற்கதவுகளையும், எதிர்ப்புறத்தில் நின்றுகொண்டு முத்துச்சாமியால் பார்த்துக்கொள்ள முடிந்தது. கார்களும் நடைவாசிகளும் ஜனநாயக முறையில் போட்டி போட்டுக்கொண்டு, இரைச்சல் இட்டுக்கொண்டு, முட்டி மோதிக்கொண்டு, ஒருவர் வழியை மற்றவர் மறித்துக்கொண்டு, பால் பேதங்களை மறந்து உரசிக்கொண்டு, ஏதோ தர்ம சங்கடத் திலிருந்து விடுபட்டுவிட்ட ஆறுதலோடு எல்லாரும் வெளியே பிதுங்கிக்கொண்டிருந்தார்கள். முத்துச்சாமி கண்களைத் தீட்டிக்கொண்டு பெண்கள் கேட்டையும், ஆண்கள் – பெண் கள் கேட்டையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான். ஏதோ சலித்துப் போனவன் போல நின்றுகொண்டு கந்தன் ஒரு சிகரெட்டைப் புகைத்துக்கொண்டிருந்தான். முத்துச்சாமி யின் கண்களில் எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் மாறிமாறித் தோன்றி மறைந்தன. திடீரென்று "அதுதான் அண்ணே, அதுதான், அந்தக் கடைக்குப் பக்கம், அதோ அந்தப் பச்செச் சேலை கட்டிக்கிட்டுக் கைலே ஒரு கொளந்தெயோட, அதுதான் அண்ணே, அதேதான்" என்று கத்தினான்.

"கொளெந்தே தூங்கிட்டிருக்கில்லே?" என்றான் கந்தன்.

"அப்படித்தான் தெரியுது."

"கொளெந்தேங்களுக்குத்தான் சினிமா அருமை தெரியுது" என்றான் கந்தன், சிகரெட்டை வீசியெறிந்துவிட்டு அதைக் காலால் மிதித்தவாறே.

கந்தன் விருட்டென்று கடைக்கு நடந்தான். குழந்தை யைத் தோளில் சாத்திக்கொண்டிருந்த அவள் எந்தப் பக்கம் திரும்பிச் செல்வது என்று இன்னும் தீர்மானிக்காதவள்போல் நின்றுகொண்டிருந்தாள்; அல்லது கூட்டம் கலையட்டும் என்று காத்துக்கொண்டிருந்திருக்கலாம். கந்தன் கடையில் பத்து பைசாவுக்கு வெற்றிலை பாக்கு வாங்கினான். கடைக்கு அருகே தரையில் பூ விற்றுக்கொண்டிருந்த ஒருத்தியிடமிருந்து இருபத்தைந்து காசுக்குப் பூ வாங்கினான். பூ விலையைப் பற்றி எல்லாம் கேட்கவில்லை. "கொடுக்கறதெக்கொடு" என்று

விட்டு பூவைப் பூக்காரியின் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டான். குழந்தையைத் தூக்கிக்கொண்டிருந்த முத்துச்சாமியின் 'ஆள்' மெள்ள நகர ஆரம்பித்தாள். கந்தன் அவளிடத்து வேகமாகச் சென்று, "இந்தா, இதெப் பிடி" என்று வெற்றிலையையும் பூவையும் அவளது கையில் திணித்துவிட்டு, அவள் வாயைத் திறக்கும் முன், "கொளந்தெயெ இப்படித் தா" என்றுகொண்டே குழந்தையை அவள் பிடியிலிருந்து பிடுங்கித் தனது தோளில் சாத்திக்கொண்டு "சீக்கிரம் வா பிள்ளே, நேரமாகுது. இன்னும் சோறு தின்னலே" என்று கூறிக்கொண்டே வேகமாக நடந்தான். அவள் ஒரு கணம் தயங்கிவிட்டு, அக்கம் பக்கம் பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டே, அவன் பின்னால் நடந்தாள். கூட்டம் குறைந்துவிட்ட ஒரு இடத்துக்கு வந்ததும், அவள் மெதுவாக, "எங்கே போறீங்க?" என்றாள்.

அவன் திரும்பிப் பார்க்காது, "ஏன் சிநேகிதன் ஒருத்தன் ஒம்மேலே உசிரையே வச்சிருக்கான், அவன்கிட்டே" என்றான்.

"யாரது?" என்றாள் அவள்.

"பின்னாலே வரான்" என்றான் கந்தன், மீண்டும் திரும்பிப் பாராது நடந்தவாறே.

ஓட்டமும் நடையுமாகக் கந்தனின் பின்னால் வந்துகொண்டிருந்த அவள் கள்ளத்தனமாகத் திரும்பிப் பார்த்தாள். வேகவேகமாக அவர்கள் பின்னால் வந்துகொண்டிருந்த முத்துச்சாமியைப் பார்த்துவிட்டு, "அந்த நீலச்சட்டை போட்டிட்டு வராரே அவரா?" என்று கந்தனிடத்து மெதுவாகக் கேட்டாள்.

"ஆமாம்" என்றான் கந்தன்.

"அவரைப் பாத்துருக்கேன், பக்கத்துத் தெருதான்" என்றாள் அவள்.

முத்துச்சாமியையும் அவனது 'காதலி'யையும் முத்துச்சாமியின் நண்பன் ஒருவனது அறையில் விட்டுவிட்டுக் கந்தன் ஷேக் ராவுத்தர் கடையைப்பற்றி நினைத்தான். ஒரு முறை போலீஸ் லாக்கப்பில் இருந்தபோது அவனுக்கு அங்கிருந்துதான் பரோட்டாவும் கறிக் குழம்பும் வாங்கிக் கொடுத்தார்கள். அதிலிருந்து அவனுக்கு அந்தக் கடை மீது மோகம். ஊரிலேயே அந்தக் கடையில் கிடைப்பதுபோல் வேறெங்கும் பரோட்டாவும், கறியும், ராட்டையும் கிடையாது என்பது அவன் உறுதி. அந்தக் கடையை நினைத்தாலே கந்தனுக்கு நாக்கில் நீர் ஊறும். அடிக்கடி சென்றால் சலித்துவிடும் என்று எப்போதாவதுதான் செல்வான். இப்போது அவனுக்கு ஷேக் ராவுத்தர் கடைப்

பண்டத்தைத் தவிர வேறெதுவும் வாய்க்குள் நுழையாது என்று பட்டது. இன்னும் கொஞ்சம் ஊத்திக்கொண்டுவிட்டு, ராவுத்தர் கடையில் ஆறு பரோட்டாவும், நாலு வருவலும், இருந்தால் ஒரு கோழியும், மூன்று நான்கு மீன் துண்டுகளும் சுவைத்து உண்பதாகக் கற்பனை செய்துகொண்டே வேகமாக நடந்தான். கூரை வேயப்பட்ட ராவுத்தர் கடைக்கு வந்து சாப்பிட உட்கார்ந்ததும் தான் இரண்டு பரோட்டாவும் ஒரு வருவலும் கூட உருப்படியாகத் தின்ன முடியவில்லை என்பதைக் கண்டுகொண்டான். எவ்வளவுதான் தின்றாலும், வயிறு என்று ஒன்று இருக்கிறதா இல்லையா என்று வியக்கும் அளவுக்கு வழக்கமாகச் சிறுத்திருக்கும் அவனுடைய வயிறு சற்று முட்டி இருந்ததாக அவனுக்குப் பட்டது. வயிற்றின் வலதுபுறத்தை அழுத்திப் பார்த்தான். ஏதாவது கோளாறு இருந்தால், கட்டியாக ஒன்று வலதுகைப்புறம் படும் என்று ஹோமியோபதி டாக்டர் அவனிடத்துச் சொல்லி இருந்தார். ஒன்றும் தெரியவில்லை. சந்தேகம் வரவே, வயிற்றின் இடது புறத்தையும் அழுத்திப் பார்த்தான். ஒன்றும் உறுதியாகத் தெரியவில்லை. "உம்" என்று விட்டு மெல்ல நடை போட்டான். அவன் நினைவு சுப்பையா செட்டியாரைச் சுற்றி வந்தது.

செட்டியார் சாவதற்கு ஒரு மாதம் முன்னால் அவரை அநேகமாக தினமும் பார்க்கும் சந்தர்ப்பம் கந்தனுக்கு ஏற்பட்டது. மீனாவுக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்தது. வறட்டு இருமல் அவள் உயிரை வாங்கியது. அவளை தினமும் கந்தன் முனிசிபல் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வான். காலை நேரத்தில் அவளோடு ஒருமுறை வெளியே செல்வதில் அவனுக்கு அப்போதெல்லாம் குஷி. அவன் கூடச் சென்றால் முனிசிபல் ஆஸ்பத்திரி டாக்டர் மீனாவை அதிக நேரம் காக்க வைக்கமாட்டார். அதன் பின்னே ஒரு இரகசியம் உண்டு, அதிருக்கட்டும். கந்தன் மீனாவோடு ஆஸ்பத்திரிக்குச் செல்லும்போதெல்லாம் மத்திய காய்கறிச் சந்தை வழியே போவான். ஒருநாள் காய்கறிச் சந்தையைக் கடந்து செல்லும் போது பல கடைகள் அடைத்துக் கிடந்ததைக் கந்தன் பார்த்தான். அங்கங்கே கடைக்காரர், சிறுவர்கள் நின்றுகொண்டு குசுகுசுவென்று பேசிக்கொண்டிருந்தனர். என்னவென்று கந்தன் விசாரித்தான். முந்திய நாள் இரவு மருந்துக் கடையில் விஸ்கி குடித்துக்கொண்டிருக்கும்போது சுப்பையா செட்டியார் திடீரென்று, "எல்லாருக்கும் பை பை" என்றுவிட்டு இறந்து போனார் என்றார்கள். செட்டியாருடைய வயிறு நாளுக்கு நாள் வீங்கி வந்ததைக் கவனித்திருந்த மீனா, செட்டியா

ருடைய வயிறு பலூன் மாதிரி பட்டென்று வெடித்துச் செட்டியார் இறந்துவிட்டதாக நினைத்துக்கொண்டாள். அங்கு நின்று கொண்டிருந்த ஓரிருவரிடத்துப் பேச்சுக்கொடுத்ததில் கந்தனுக்கு ஒரு அனுதாபமான விவரம் கிடைத்தது. செட்டியார் சாவதற்கு மூன்று நான்கு நாட்கள் முன்பிருந்தே அவர் பேசினாலோ, தும்மினாலோ, வாய்வழியே மூச்சுவிட்டாலோ அல்லது வெறுமனே வாயைத் திறந்தாலோ அவருக்கு ஐந்தாறடி பக்கத்தில் யாரும் நிற்க முடியாதாம். அப்படி ஒரு பொறுக்க முடியாத துர்நாற்றம் அவர் வாயிலிருந்து அடித்தது. செட்டியாருடைய வயிறு அழுகிப்போய்விட்டது என்றார்கள். செட்டியாருக்குப் பண வசதி நிறைய உண்டு. ஆனாலும் எந்த வைத்தியரிடத்தும் செல்லவில்லை. "பார்க்க வேண்டியதெல்லாம் பார்த்தாய் விட்டது; இனிமேல் என்ன?" என்றுவிட்டார். கந்தன், செட்டியாருடைய சாவைப்பற்றி விசாரித்துக்கொண்டிருப்பது மீனாவுக்குப் பிடிக்கவில்லை. அவள் கண்களில் நீர் துளிர்த்தது. "சரி வாங்க" என்று கந்தனை அவசரப்படுத்தினாள்.

சுப்பையா செட்டியார் பிரபல மொத்த காய்கறி வியாபாரியாக இருந்தவர். மஞ்சுமலை வட்டாரத்தில் காய்கறி பயிர் செய்த எல்லாக் குடியானவர்களுக்கும் அட்வான்ஸ் கொடுத்து, நகரில் இங்கிலீஷ் காய்கறிகளின் விற்பனையைத் தனது ஏகபோக உரிமையாக்கிக்கொண்டிருந்தார். இங்கிலீஷ் காய்கறிகளில் உள்ள சத்தை மக்களுக்கு விளக்க, சந்தையில் நான்கு பிரசங்கிகளை நியமித்தார். அவர்களது பிரசங்கங்களைக் கேட்டுவிட்டுக் கடைக்காரர்கள்கூட சிறு சிறு போஷாக்குப் பிரசங்கங்கள் நிகழ்த்துவது உண்டு. "இந்த முள்ளங்கியை எடுத்துக்கிட்டுப் போங்க சார்; அதுலே நிறைய பாதரசம் இருக்கு" என்பான் ஒருவன். "அந்தப் பச்சைக் கோசுலே நிறைய சுண்ணாம்பு இருக்கு; எலும்புக்கு நல்லது" என்பான் மற்றொருவன். கடைக்காரர்களுக்குக் கற்பனை வளர வளர, பீட்ரூட்டில் அலுமினியமும், காலிஃபிளவரில் கொஞ்சம் தங்கமும் தட்டுப்பட ஆரம்பித்தன. பொதுவாக நாட்டுக் காய்கறிகள் மாற்றாந்தாய்ப் பராமரிப்புப் பெற்றாலும், அவற்றுள் வாழைக்காய் மட்டும் விதிவிலக்காய் இருந்தது. (வாழைக்காயில் வெள்ளி இருப்பதாகச் சொல்லலாமா என்று செட்டியார், மருந்துக்கடை முதலாளியைக் கேட்டபோது, முதலாளி கந்தகம் இருப்பதாகச் சொன்னால் நன்றாக இருக்கும் என்றார்.) இதற்கு மக்கள் வாழைக்காய் வாங்குவதைத் தடுக்க முடியாது என்பது மட்டும் காரணமாக இருந்திருக்க முடியாது. நகரைச் சுற்றி வாழைத் தோட்டம் போட்டிருந்தவர்களுக்குச் செட்டியாரின் அட்வான்சு சென்றிருந்ததும் காரணமாக இருந்திருக்கலாம்.

ஒரு காலத்தில் வெளியூர் ராவுத்தர் ஒருவர் ஊருக்குச் சற்றுத் தொலைவிலிருந்து பெரிய பெரிய வாழைக்காய்களைத் தருவிக்க ஆரம்பித்தார். செட்டியாரின் வாழைக்காய் வியாபாரம் படுத்து விடும் போல் இருந்தது. செட்டியார் தன்னிடம் அட்வான்சு வாங்கியிருந்த வாழைச் சாகுபடியாளர்களிடத்துப் போய் விரசினார். கிணறுகளை ஆழப்படுத்தி, பம்பு செட்டு வைத்து தண்ணீர் இறைத்தால் பெரிய வாழைக்காய்கள் கிடைக்கும் என்றார்கள், அவர்களில் சிலர். அதுபோதும் செட்டியாருக்கு. சந்தையில் தனது பிரச்சார இயந்திரத்தை முடுக்கிவிட்டார். பெரிய வாழைக்காய்கள், பம்பு செட்டு வாழைக்காய் என்றும், சிறிய வாழைக்காய்கள் கமலை வாழைக்காய் என்றும், பம்பு செட்டு வாழைக்காயில் மின்சாரம் பாய்ந்து அதில் உள்ள சத்து எல்லாம் அழிந்துவிடுவதாகவும், கமலை வாழைக்காயில் தான் சத்தும் ருசியும் அதிகம் என்பது போன்றதொரு பேச்சும் சந்தையில் அடிபடத் தொடங்கியது. இதற்குள் ராவுத்தர் ஒரு விபத்தில் இறந்துபோனார். அவருக்குப் பின் தலையெடுத்த அவர் மகன் சையதுக்கு வாழைக்காய் வியாபாரம் ரசமான தாகப் படவில்லை. தகப்பனாருக்கு வரவேண்டிய பணத்தை ரூபாய்க்கு பாதி, முக்கால் என்று வசூலித்து, சினிமாப் படம் எடுக்கச் சென்னைக்குச் சென்றுவிட்டான்.

செட்டியாருக்கு இங்கிலீஷ் காய்கறிகளில் மட்டும் மோகம் இல்லை, பொதுவாக இங்கிலீஷ் பழக்கவழக்கங்கள் என்றாலே பிடிக்கும். அவற்றில் முக்கியமானவை இரண்டு: (1) சிகரெட் பிடித்தல் (2) விஸ்கி அல்லது பிராந்தி குடித்தல். பொதுவாக இங்கிலீஷ்காரர்களுக்கு பிராந்தியைவிட விஸ்கிதான் பிடிக்கும் என்று ஒருநாள் மருந்துக்கடைக்காரர் சொல்லவும் (அன்று கடையில் பிராந்தி ஸ்டாக் இல்லை) பிராந்தியைக் கூடிய மட்டிலும் தவிர்த்தார். அவருக்கு ஒரு இங்கிலீஷ்காரியை 'லவ்' பண்ண வேண்டும் என்ற ஆசையும் கூட. அவர் விருப்பத் துக்கு இடந்தரக்கூடிய இங்கிலீஷ்காரி யாரும் நகரில் இல்லாத தால், ரயில்வே காலனிக்கு அருகே குடியிருந்த ஐரீன் என்னும் ஆங்கிலோ இந்தியப் 'பொம்பளை' ஒருத்தியைத் தரகர் அந்தோணியின் உதவியோடு சேர்த்துக்கொண்டார். காலனி யில் இருந்த ஆங்கிலோ இந்திய இளைஞர்கள், கல்யாணத் துக்கு முன்னால் தங்களது ஆண்மையைச் சோதித்துக்கொள்ள அவள் பெரிதும் உதவி வந்தாள். உலகம் காலனியில் அடங்கி விடவில்லை என்பதை உணர்ந்த ஐரீன் தலைமுடியைப் 'பாப்' என்றும் சொல்ல முடியாதபடி, இல்லை நீண்ட முடி என்றும் சொல்ல முடியாதபடி, ஒருவகையாக வளர்த்துக்கொண்டிருந் தாள். வீட்டில் இருக்கும்போதுதான் ஆங்கிலோ – இந்தியக் கோலத்தில் இருப்பாள்; வெளியே செல்லும் போது, முடியைக்

கொண்டை போட்டுக்கொண்டு, சேலையும் சோளியும் அணிந்து கொண்டு இந்தியக் கோலத்துக்கு மாறிவிடுவாள். மிகவும் பிரயாசைப்பட்டு நன்றாகத் தமிழ் பேசக் கற்றுக்கொண்டிருந் தாள்.

செட்டியார் ஐரீனுக்கு மாதம் வீட்டு வாடகைக்கு அறுபது ரூபாயும், சாப்பாடு உடை இவற்றுக்கு நூற்றிருபதும், 'இன்டியன்' ஜின் (சாராயம்) அலவன்சு நூறும், இது தவிர வருடம் ஒரு முறை, கிறிஸ்துமஸ், புத்தாண்டு, ஈஸ்டர் பரிசுகள் ரூபாய் நூற்றுக்குக் குறையாமல் தரவேண்டும் என்றும், இவற்றுக்குப் பிரதியாக, ஞாயிற்றுக்கிழமைகள் தவிர மற்ற நாட்களில், செட்டியார் இரவு எட்டு மணியிலிருந்து காலை எட்டு மணி வரை ஐரீன் வீட்டில் தங்கலாம் என்றும் ஏற்பாடாகியது. வேறு சில சில்லறை நிபந்தனைகளும் இருந்தன. செட்டியார் பகல் நேரங்களில் ஐரீனைத் தொந்தரவு செய்யக்கூடாது, ஐரீனுக்கு உடல் நலம் சரியில்லை என்றால் செட்டியார் வைத்தியச் செலவை ஏற்றுக்கொள்வதோடு அக்காலங்களில் தன் வீட்டிலேயே படுத்துறங்குவது, குறைந்தபட்சம் ஐந்து வருடங்களுக்காவது இரண்டு தரப்பாரும் உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்பன போன்றவை அவை. வாய் மூலமான உடன்படிக்கைதான் என்றாலும் உடன்படிக்கை யின் ஷரத்துகளுக்கு மூன்று காபிகள் தயாரிக்கப்பட்டு ஒன்று செட்டியார் கையிலும், இரண்டாவது ஐரீன் கையிலும், மூன்றா வது அந்தோணி கையிலுமாக இருந்தன. வேறொரு சிறு நிபந்தனையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று செட்டி யார் அந்தோணியிடத்துச் சொல்லவும், "என்ன மேன், என்னை உங்க நாட்டுப் பொம்பளேங்க மாதிரி நெனச்சிட்டியா?" என்று எரிந்து விழுந்தாள் ஐரீன். ஐரீனோடு பழகுவதன் மூலம் இங்கிலீஷ் கற்றுக்கொண்டு தானும் 'தஸ் புஸ்'னு பேசலாம் என்று எதிர்பார்த்த செட்டியார், உண்மையில் சில நண்பர் களிடத்துத் தான் ஒரு இங்கிலீஷ்காரியிடத்து 'ஆங்கில டிவிஷன்' வைத்திருப்பதாகக் கூறி வந்தார். ஆனால் ஐரீனோ, செட்டி யாரிடத்து இங்கிலீஷ் பேசினாலே இங்கிலீஷின் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்று நினைத்தவளாய், அவரைத் திட்டுவதற்கு மட்டும்தான் இங்கிலீஷைப் பயன்படுத்தினாள். அவள் ஆரம்பத்தில் செட்டியாரை அழைக்கப் பயன்படுத்திய சொல் '*Bugger*' என்பது. கோபத்திலும் சந்தோஷத்திலும் அவரை அந்தச் சொல்லாலே அழைத்ததால், அது கெட்ட வார்த்தையா இல்லையா என்று செட்டியாருக்கு விளங்கவில்லை. ஒருநாள் இரவு செட்டியார் அவளை லேசாகக் கொஞ்சிவிட்டு, சீக்கிரமே வாயைப் பிளந்துகொண்டு தூங்க ஆரம்பிக்கவும், அவள் கோபத் தோடு அவரைக் கன்னத்தில் குத்தி எழுப்பி, அவரிடத்து,

"என்ன மேன், எங்கே போய் 'பக்கர்' வேலைசெய்திட்டு வந்தே?" என்று கேட்கவும் செட்டியாருக்குச் சந்தேகம் வந்தது. அடுத்த நாள் கொஞ்சம் இங்கிலீஷ் தெரிந்த ஒருவனிடத்து அந்தச் சொல்லுக்குப் பொருள் கேட்டார். 'பெக்கர் என்றால் பிச்சைக்காரன்' என்று அவன் சொன்னான். செட்டியாருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. ஐரீனோடு சண்டைக்குக் கிளம்பினார். "நான் உனக்கு என்ன பிச்சைக்காரனா?" என்று வெகுண்டு எழுந்தார். ஐரீன் சிரித்துவிட்டு 'பெக்கர்' வேறு 'பக்கர்' வேறு என்று விளக்கினாள். 'பக்கர்' என்றால் என்னவென்று செட்டியார் கேட்கவும், "சரியான ஆம்பிளேன்டு அர்த்தம்" என்றாள் ஐரீன். இருந்தாலும் செட்டியாருக்குச் சந்தேகம் தீரவில்லை. அடுத்தமுறை அவர் அவருடைய வக்கீல் வீட்டுக்குச் சென்றிருந்த போது, அந்தச் சொல்லுக்குப் பொருள் கேட்டதோடு, அது ஒரு வசைச் சொல்லாக இருந்தால் அந்தச் சொல்லை வைத்தே நோட்டீசில் எதிர்க்கட்சிக்காரரைத் திட்டலாம் என யோசனையும் கொடுத்தார். வக்கீல் சிரித்து விட்டு, அச்சொல்லின் பொருளைச் செட்டியாருக்குக் காதோடு காதாகக் கூறினார். வக்கீலின் விளக்கத்தைக் கேட்ட செட்டி யாருக்கு 'பக்கர்' என்பது ஒரு வசைச் சொல்லாகவே படவில்லை. உண்மையில் ஐரீன் அந்தச் சொல்லை விட்டுவிட்டு, அவரை 'பாஸ்டர்டு' என்று அழைக்க ஆரம்பித்தபோது, அவருக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகவே இருந்தது.

ஐரீன் தன் வசைச் சொல்லை மாற்றிக்கொள்ளப் பொருத்த மான தூண்டுதல் இல்லாமலில்லை. செட்டியாரோடு ஒரு மாதம் பழகவும் அவருடைய சொத்து, சுகம், வருமானம் இவை பற்றிச் சரியான கணக்கு அவளுக்குத் தெரியவந்தது. தன்னை ஏமாற்றிவிட்ட அந்தோணியை 'பக்கர்' என்றும், செட்டியாரை 'பாஸ்டர்டு' என்றும் மாறி மாறித் திட்டினாள். ஒருநாள் அவள் செட்டியாரிடத்து,'மிஸ் ஐரீனுக்கு நரம்புக் கோளாறு ஏற்பட்டதால், அவளது உடல் நிலை மிகவும் மோசமாக உள்ளது; அவளுக்கு ஒரு மாத காலம் பூரண ஓய்வு தேவை' என்று ஒரு ஓய்வு பெற்ற ரயில்வே டாக்டரிடமிருந்து பெற்ற சர்டிஃபிகேட்டைக் காட்டிவிட்டு, டாக்டர், அவள் 'இன்டியன் ஜின்' சாப்பிடக்கூடாது; விஸ்கி அல்லது பிராந்தி தான் சாப்பிட வேண்டும் என்றும், பன்றிக் கறியோ மாட்டுக் கறியோ சாப்பிடக் கூடாது என்றும், சுத்தமான ஆட்டுக்கறி யும் தினமும் இரண்டு வேளை கோழி சூப்பும் தவறாது சாப்பிட்டு வர வேண்டும் என்றும், நிறையக் கனிவகைகளும் பாலும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறியிருப்பதாகச் செட்டியாரிடத்துத் தெரிவித்தாள். செட்டியார் அவள் சொல் வதை நம்ப மறுக்கவும், அவள் டாக்டரை வீட்டுக்குத் தருவித்

தாள். மிகவும் பழசாகிவிட்ட டாக்டர் உடையில் வந்த அந்தக் கிழம், ஐரீன் கூறியதை எல்லாம் ஊர்ஜிதப்படுத்தியதோடு, அவளது நரம்புக் கோளாறுக்கு அவளது 'பாரமூர்' காரண மாக இருக்கலாம் என்றும், பேஷன்ட்டு பிழைக்க வேண்டு மென்றால் அவளை ஒரு ஆரோக்கிய வாசஸ்தலத்தில் கொண்டு போய் வைக்க வேண்டும் என்றும், அவளுக்கு அந்த அழுக் கடைந்த ஆடைகளும் மெத்தையும் ஆகாதென்றும், எல்லா வற்றுக்கும் மேலாக அவளுக்கு மன நிம்மதி மிக மிக அவசியம் என்றும் சிபாரிசு செய்தார்.

செட்டியாருக்கு ஐரீனின் சூழ்ச்சி புரியாமலில்லை. அவளை 'கட்' பண்ணிவிடுவதென்று முடிவு செய்தார். இரண்டு நாட்கள் ஐரீன் வீட்டுப்பக்கம் தலை காட்டாது இருந்தார். ஆனால் மூன்றாம் நாள் காலையில் அவருக்கு முன்னதாகக் காய்கறிச் சந்தைக்கு வந்துவிட்டாள் ஐரீன். செட்டியார் வரவும், 'யூ பாஸ்டார்டு,' 'பக்கர்', 'யூ ரேப் ஆப் யுவர் மதர்', 'யூ ஃபக்கிங் ரோக்', 'மங்க்கி பேஸ்டு ஸ்கவுன்ரல்' போன்ற, அவர் இரண்டு நாட்களாகக் கேளாத சொற்களை, ஐரீன் அத்தனை பேர் முன்னிலையிலும் செட்டியார் மீது பொழிந்துவிட்டு, இடை யிடையே அவரைத் திட்டிக்கொண்டே, கூடியிருந்தவர் களிடத்து நியாயம் கேட்டாள். நாலு பேர் முன்னிலையில் ஒரு பெண்ணிடமிருந்து வசவு வாங்குவதே மானக்கேடு, – அதுவும் இங்கிலீஷ் வசவு வேறே! செட்டியார் அவளை அவசர அவசரமாக அருகே இருந்த மருந்துக் கடைக்குக் கூட்டிச் சென்று, கடை முதலாளியின் முன்னிலையில் சமரசம் பேச முயன்றார். ஐந்து வருஷக் கான்ட்டிராக்ட்டுப்படி ரூபாய் பதினைந்தாயிரம் செட்டியார் கொடுத்தால் 'கட்' பண்ணிவிட முடியும் என்றாள் ஐரீன். செட்டியார் மூவா யிரம் தரத்தயாராக இருந்தார். அடுத்த நாள் ஒரு பொது நபரை வைத்து விவகாரத்தை முடித்துக்கொள்வதென்று இருவரும் முடிவு செய்தனர். (அந்தோணி ஜெயிலில் இருந்த தால், அநேகமாக சமரசப் பேச்சு வார்த்தைகளில் தன்னால் கலந்துகொள்ள முடியாதென்று தனக்குச் செய்தி அனுப்பி இருப்பதாக ஐரீன் தெரிவித்தாள்.) கடையைவிட்டு வெளியே செல்லுமுன்னர், கடை முதலாளியைக் கேட்டு செட்டியார் கணக்கில் ஒரு பாட்டில் விஸ்கி வாங்கிக்கொண்டாள் ஐரீன். செட்டியார் எதிர்ப்புத் தெரிவித்தார். "அதெல்லாம் மெடிக்கல் எக்ஸ்பென்ஸ், யூ ப்ளடி ஃபூல்" என்று கூறிவிட்டாள் ஐரீன்.

சமரசம் செய்து வைக்கச் செட்டியார் பொறுக்கி எடுத்தவன் தான் கந்தன். காலையிலேயே ஆள்விட்டு அவனைச் சந்தைக்

கடைக்குக் கூட்டி வரச் செய்தார். அவனை மருந்துக் கடைக்கு அழைத்துச் சென்று தகராறை விளக்கினார். அவனை உற்சாகப் படுத்த விஸ்கி வாங்கிக் கொடுத்தார். எப்படியும் மூவாயிரத் துக்குள் முடித்துக் கொடுப்பதாகக் கந்தன் சொன்னான். இருவரும் ஒரு டாக்சியில் ஐரீன் வீட்டுக்குச் சென்றனர்.

ஐரீன் தன்னை மட்டுமல்லாமல் அவர்கள் உட்கார்ந்து பேச வேண்டிய அறையையும் அமர்க்களப்படுத்தி வைத்திருந் தாள். கையில்லாத பளபளப்பான ஒரு கவுன் அணிந்து, முடியைப் 'பாப்' செய்த மாதிரி வைத்துக்கொண்டு, ரௌஜ்ஜும் லிப்ஸ்டிக்கும் தீட்டி, ஆங்கிலப் படங்களில் வரும் 'ஃபேஷன் கேர்ல்' மாதிரி காட்சியளித்தாள். டாக்சி வீட்டுக்கு வெளியே நிற்கவும், வீட்டுத் திண்ணைக்கு வந்து இருவரையும் நாணத் தோடு சிரித்தபடியே, கைகூப்பி வணக்கம் சொல்லி வரவேற்றாள். செட்டியாருக்கு ஒரு கணம் சபலம்தான். உம், இதெல்லாம் நடிப்பு என்று அடுத்த கணம் புத்தி வந்தது. மூவரும் உள்ளே சென்றனர். வந்தவர்களை உள்ளே உட்காரச் சொல்லிவிட்டு, "மிஸ்டர் செட்டியார், இவரை எனக்கு அறிமுகப்படுத்தவில் லையே?" என்றாள். "இவர் என் ஃபெரண்டு, கந்தன். பெரிய பிசினெஸ் மேன். கொஞ்சம் முரடர்" என்றார் செட்டியார்.

"அப்படியா? குட் டு சீ யூ. நான் ஐரீன்" என்றுகொண்டே ஐரீன் கந்தன் முன்னால் வலக்கையை நீட்டினாள். கந்தன் அவளது 'லோ – கட்' கவுனின் நடுப்பாகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அதைப் புரிந்து கொண்ட ஐரீன் சற்றுக் குனிந்து, தன் கையால் கந்தனின் கையைப் பிடித்துக் கை குலுக்குவதுபோல் வருடினாள்.

"உண்மையில் ஆம்பிளேன்னா கொஞ்சம் முரடாகத் தான் இருக்கணும். புவர் செட்டியாருக்கு முரடாகவே இருக்கத் தெரியாது" என்று சிரித்துக்கொண்டே கூறியபடி, ஐரீன் தன் நாற்காலிக்குச் சென்று அமர்ந்தாள். செட்டியார் முழித்தார்.

"ஸ்டெல்லா, ஸ்டெல்லா" என்று ஐரீன் அழைக்கவும், ஒரு பத்து வயதுச் சிறுமி வந்து நின்றாள்.

"டீ ஃபார் தி ஜெண்டில்மென் அண்டு விஸ்கி ஃபார் மீ" என்றாள் ஐரீன் சிறுமியிடத்து.

பிறகு செட்டியாரிடத்துத் திரும்பி, "மிஸ்டர் செட்டியார், உங்க ஃப்ரென்டே எனக்கு ரொம்பவும் பிடிச்சிடும் போல இருக்கு; ஜென்டில்மேனுக்கு ஜென்டில்மேன், முரடருக்கு முரடர்னு இருப்பார் மாதிரி இருக்கு" என்றாள்.

வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் கந்தன்.

ஐரீன், கந்தன் பக்கம் திரும்பி, "மிஸ்டர் கந்தன், உங்களுக்குத் தான் தொந்தரவு. அன்னெசசரி ட்ரபுல். எனக்கு மிஸ்டர் செட்டியாரோடே ஃபிரெண்ட்லியா இருக்கனும்னுதான் ஆசை. ஆனால் மிஸ்டர் செட்டியாருக்கு என் உசிரே விட அவர் காசுதான் பெரிசு" என்று வருத்தம் அடைந்தவள் போல் சொன்னாள். உள்ளே போயிருந்த சிறுமி ஒரு தட்டில் இரண்டு கோப்பை டீ, ஒரு பாட்டில் விஸ்கி, ஒரு கிளாஸ், ஒரு சோடா கொண்டு வந்து, 'டீப்பாயில்' வைத்துவிட்டு, டீ கோப்பைகளை எடுத்துக் கந்தனுக்கும் செட்டியாருக்கும் கொடுத்தாள்.

"நான் டீ, காஃபி எதுவும் சாப்பிடக் கூடாது; விஸ்கிதான் சாப்பிடனும்னு டாக்டர் சொல்லியிருக்கிறார். எங்க 'பிளட்டு'க்கு அதுதான் ஒத்துக்குது" என்று கந்தனைப் பார்த்துச் சொல்லிக் கொண்டே விஸ்கி பாட்டிலைத் திறந்தாள் ஐரீன். கந்தனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. "எனக்கும் விஸ்கியே கொடுத்திடுங்க" என்று கூறிவிடலாமா என்று தோன்றியது.

பிறகு விவகாரம் பேச ஆரம்பித்தனர். ஐரீன் ஒரு ஃபைலை எடுத்துப் புரட்டி, அதில் ஒரு குறிப்பிட்ட தாளிலிருந்து அவளும் செட்டியாரும் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி ஷரத்துகளை ஒவ்வொன்றாகப் படித்துக் காட்டினாள். ஒவ்வொரு ஷரத்தை வாசித்த பிறகும் செட்டியாரைப் பார்த்து, "சரிதானே, மிஸ்டர் செட்டியார்" என்று கேட்டுக்கொண்டாள். செட்டியாருக்குத் தலையை ஆட்டுவதைத் தவிர வேறு வழியில்லை. ஷரத்துகளை வாசித்துக் காட்டிய பிறகு, ஐரீன் அதே ஃபைலிலிருந்த ஒரு மெடிக்கல் சர்டிஃபிகேட்டை எடுத்துக் காட்டினாள். அதன் கீழேயிருந்த கையெழுத்தை நன்கு கவனித்துக் கொள்ளும்படி கந்தனிடத்துக் கூறிவிட்டு, மற்றொரு கடிதத்தை எடுத்து வாசித்தாள். அது ஆங்கிலத்தில் இருந்தது. மொழி பெயர்ப்பையும் தந்துகொண்டே அதை வாசித்தாள். அதில் டாக்டர் அவருடைய பேஷன்ட்டான மிஸ் ஐரீன் உயிர் பிழைக்க வேண்டுமானால் என்னென்ன சிகிச்சைகள் செய்யப் பட வேண்டும், என்ன முன்னெச்சரிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டிருந்தார். அந்தக் கடிதத்தின் அடியிலிருந்த கையெழுத்தும் மெடிக்கல் சர்ட்டிஃபிகேட்டின் அடியிலிருந்த கையெழுத்தும் ஒன்றுதானா என்று சரிபார்த்துக் கொள்ளுமாறு கந்தனை வேண்டிக்கொண்டு, அவன் அருகே சென்று, அவன் முன் குனிந்து ஃபைலை நீட்டினாள். கட்டுப் பாடற்ற நிலையில் இருந்த கந்தன் எங்கேயோ பார்த்தான். செட்டியார் வாயைத் திறக்கவில்லை. ரௌடி போல் ஐரீன் நடந்துகொள்வாள் என்று அவர் எதிர்பார்த்திருந்தார். அவளோ

சாந்த ஸ்வரூபியாக விளங்கினாள். ஐரீனைக் கோபப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு, "ஒரு முக்கியமான நிபந்தனையை நீங்க மறந்திட்டீங்க" என்று ஆரம்பித்தார் செட்டியார்.

"ஆமாம் ஆமாம், மறந்துட்டேன் மிஸ்டர் செட்டியார். ஒப்பந்தத்தைத் தயாரிக்கும்போதே இன்னுமொரு நிபந்தனை யைச் சேர்த்துக்கனும்னீங்க. எனக்கு அப்போ அது அவசிய மென்ட்டு தெரியலே. பிறகு ஒங்க நாட்டுப் பெண்களைப் பத்தி – கொஞ்சம் மன்னிக்கனும் – தெரிஞ்ச பெறகுதான், மிஸ்டர் செட்டியார் அப்படி ஒரு நிபந்தனையைப் போடுவது நியாயம்தான்னு புரிஞ்சிக்கிட்டேன்" என்றாள் ஐரீன்.

"அது என்ன நிபந்தனை" என்றான் கந்தன்.

"கொஞ்சம் சொல்ல வெட்கமா இருக்கு" என்றாள் ஐரீன், நாணிச் சிரித்தவாறு.

"பரவாயில்லை சொல்லுங்க" என்றான் கந்தன்.

"அதாவது இந்த காண்ட்ராக்ட் காலத்திலே எனக்கு மிஸ்டர் செட்டியாரைத் தவிர வேறொரு 'லவ்வர்' இருக்கக் கூடாது. சரிதானே, மிஸ்டர் செட்டியார்."

"ஆனா, நீங்க..."

"உம், முடியுங்க மிஸ்டர் செட்டியார்."

"நீங்க பகல் நேரத்துலே நான் உங்க வீட்டுக்கு வரக் கூடாதுனீங்களே."

"ஆமாம், அது ஒரு கன்டிஷன்தானே?"

"ஆனா?"

"ஆனா? உம், சொல்லுங்க மிஸ்டர் செட்டியார், உங்க மனசில் இருக்கிறதெ சொல்லுங்க."

சிறிது நேரம் முழித்துவிட்டுச் செட்டியார், "பகல் நேரங் களில் நீங்க எனக்கு விசுவாசமா இருந்தீங்கன்னு என்னால் நம்ப முடியவில்லை" என்றார். ஐரீனின் கண்களில் நீர் துளிர்த்தது. "எங்க நாட்டுக்காரர் ஒருத்தர் ஒரு பெண்கிட்டே இப்படிப் பேசியிருந்தா, அது ஷூவைக் கழத்தி அவர்மேலே வீசியிருக்கும். ஆனா உங்க நாட்டு வழக்கம் வேறெ; எங்க நாட்டு வழக்கம் வேறெ. என்ன செய்யறது? ஆனா நான் தப்புப் பண்ணியிருந்ததா நீங்க ப்ரூஃப் காட்டினீங்கனா, எனக்கு நீங்க ஒண்ணும் தர வேண்டாம்; நான் உங்களுக்கு ஐயாயிரம் ருபிஸ் டாமேஜா தர்றேன். என்ன சரிதானா, மிஸ்டர் கந்தன்?"

மூவரும் சிறிது நேரம் பேசவில்லை. பிறகு ஜரீன் பேசினாள்.

"எனக்கு மிஸ்டர் கந்தனை இப்பத்தான் தெரியும். நீங்க ரெண்டு பேரும் ரொம்ப நாளாப் பழகினவங்க. அவர் ஒரு பெரிய பிசினெஸ்மேன். அவர் ஒரு ஜென்ட்டில்மேனாகவும் எனக்குத் தெரியுது. நான் கான்ட்ராக்ட்டுப்படி பதினைந்தாயிரம் கேட்கிறேன். மிஸ்டர் செட்டியார் மூவாயிரம் தரத்தயாரா இருக்கார். மிஸ்டர் கந்தன், உங்களுக்கு நியாயமாப்படற அமௌன்ட்டே சொல்லுங்க. மிஸ்டர் கந்தன் சொல்றபடி நான் நடந்துக்கிறேன்."

"எனக்கும் சம்மதம்" என்றார் செட்டியார். இருவரும் கந்தனைப் பார்த்தனர்.

செட்டியார் ஜரீனுக்கு ஐயாயிரம் ரூபாய் தந்துவிட்டு, உடன்படிக்கையை ரத்து செய்துகொள்ள வேண்டியது என்று கந்தன் தீர்ப்பளித்தான். செட்டியார் மூவாயிரம் ரூபாய் கொண்டு வந்திருந்தார். அதை அவர் ஜரீன் கையில் கொடுத்துவிட்டு, மீதி இரண்டாயிரம் ரூபாய்க்கு பிராமிசரி நோட்டு ஒன்று எழுதிக் கொடுத்தார். தொடர்ந்து மூவரும் நண்பர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக ஜரீன், செட்டியாருக்கும் கந்தனுக்கும் விஸ்கி ஊற்றிக் கொடுத்தாள்.

கந்தனுக்கு அசதியாக இருந்தது. எங்காவது சென்று படுத்துறங்கலாம் போல் இருந்தது. ராவுத்தர் கடையிலிருந்து சற்றுத் தொலைவிலேயே ஒரு குதிரை வண்டி நின்றுகொண்டிருந்தது. அதன் அருகே வந்து நின்றான் கந்தன். வண்டியின் வெளிப்புறத்தில் ஒரு போஸ்டர் ஒட்டியிருந்தது.

> *பொறுத்தது போதும்! பொங்கி எழுவோம்!*
> **கண்ணகியின் ஆவேசம், நக்கீரனின் உறுதி,**
> **புறநானூற்றுத் தாயின் மான உணர்வு**
> **அத்தனையும் பெற்றுக் களம் புகுவோம்!!**
> **விற்பனை வரியிலிருந்து விதி விலக்குக் காண**
> **போர்க்கொடி உயர்த்துவோம்!!!**
>
> **இவண்**
> **கார்கோட்டை வெற்றிலை பாக்கு அங்காடியினர்.**

போஸ்டரைக் கந்தன் படித்துக்கொண்டிருக்கையில், ஒரு கையில் ஒரு பீடிக்கட்டை இடுப்பில் சொருகிக்கொண்டு, மறு கையில் பற்ற வைத்த ஒரு பீடியோடு வண்டிக்காரக் குப்பு, கந்தன் பின் நின்றுகொண்டு, "அது எதுக்கூன்னு பாத்திட்டிருக்கையா? அந்த நோட்டீசை வண்டிலே ஒட்டினா, இந்தக் கடைக்காரப் பசங்ககிட்டே ஒரு பீடி, ரெண்டு பீடி ஓசி வாங்க முடியுது" என்றான்.

"ஓன் வண்டீன்னு தெரிஞ்சுதான் நின்னேன். கருப்புக்குக் கால் எப்படி இருக்கு?" என்று கேட்டான் கந்தன், குதிரையின் முன் வலது காலைப் பார்த்தவாறே.

"பரவாயில்லே, இப்ப சுமாரா ஓடறான். அந்த மாட்டு டாக்டர்கிட்டே கொண்டு போயிருக்கக் கூடாது. குதிரைப் பக்கம் போகவே பயப்பட்டாரு; என்ன வைத்தியத்தைச் செஞ்சிருப்பாரு?"

"சரி, என்னே தேவி லாட்ஜ் வரை கொண்டுபோய் விடு" என்றான் கந்தன்.

"ஏறிக்க, வண்டிக்குள்ளாற டிரைவர் கருப்பையா உக்காந்து இருக்கான். கதெ பேசிட்டே போவலாம்."

"மொதலியார் வீட்டுக் கருப்பையாவா?"

"அவன்தான். நேத்து அவன் கோர்ட்டிலே சாட்சி சொன்னதெல்லாம் பேப்பர்லே வந்திருக்காம். அதெப் படிச்சிகிட்டிருக்கான்."

கந்தன் பின்புறமாகவும், குப்பு முன்புறமாகவும் வண்டிக்குள் ஏறிக்கொண்டனர். கையில் ஒரு பத்திரிகையுடன் உட்கார்ந்திருந்த கருப்பையா சற்று நகர்ந்து உட்கார்ந்து கொண்டு, "வாங்கண்ணே, வாங்க" என்று கந்தனை வரவேற்றான். குப்பு வண்டியை முடுக்கி விட்டான். நொண்டிக் குதிரை சற்று மெதுவாக ஓடியது.

"பத்திரிகைலே என்ன போட்டிருக்கு தம்பி?" என்று கேட்டான் கந்தன்.

"நம்ப மொதலாளி வீட்டு வளக்கு விவரம் வந்திருக்கு."

"ஒரக்கப் படி தம்பி, நானும் கேட்டுக்கறேன்."

"தொவக்கத்துலேந்து படிக்கட்டுமா?"

"உம்."

கருப்பையா பத்திரிகையை நன்றாக மடித்துக்கொண்டு உற்சாகத்தோடு படிக்க ஆரம்பித்தான்.

"கார்கோட்டை நகரத்துப் பிரபல சுகஜீவியான சிவானந்தம் (61) தனது ஒரே மகனான சிவராஜனை(9) விஷமிட்டுக் கொன்ற தாக, சிவானந்த முதலியார்மீது வழக்குத் தொடரப்பட்டு, அவ்வழக்கு கார்கோட்டை செஷன்ஸ் கோர்ட்டு நீதிபதி கனம் எஸ்.ராமசாமி அய்யங்கார் முன்னிலையில் நடைபெற்று வருவது 'செய்திப்புயல்' வாசகர்கள் அறிந்ததே. நேற்று (சனிக்கிழமை) முதல் சாட்சியாக அரசாங்கத் தரப்பு சாட்சி எண் 3 விசாரிக்கப் பட இருந்தார். ஆனால் சீக்கிரமே கோர்ட்டுக்கு வந்திருந்த அரசாங்கத் தரப்பு சாட்சி 5 ஆன சிவில் அசிஸ்டென்ட் சர்ஜன் டாக்டர் வேதமுத்து, எம்.ஆர்.சி.பி. தன்னை முதலில் விசாரிக்கும் படி கோரவும், நீதிபதி அதற்கு அனுமதி அளித்தார். (அரசாங்கத் தரப்பு சாட்சி 3 ஆன டிரைவர் கருப்பையா சில காலம் 'செய்திப் புயல்' அலுவலகத்தில் வேலை பார்த்தவர் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது. பக்கத்தில் இருப்பது டிரைவர் கருப்பையாவும் அவரது மனைவியும் அவர்களது திருமணத்தின்போது 'செய்திப் புயல்' மானேஜர் திரு. தாமசுடன் எடுத்துக்கொண்ட படம்)"

கருப்பையா படிப்பதை நிறுத்திவிட்டுப் படத்தைக் கந்தனிடம் காட்டினான். படத்தைப் பார்த்துவிட்டு, "ஆமா, அந்த மானேஜர் எதுக்கு அப்படித் திருட்டு முழி முழிக்கிறார்? உம், படி" என்றான் கந்தன். குப்பு, தெருவில் அவனை முந்திக் கொண்டிருந்த சைக்கிள் ரிக்ஷாக்காரனைத் திட்டிவிட்டு, தன் கையிலிருந்த கயிற்றைச் சுழற்றிக் கொண்டே "அய், அய்" என்று 'கருப்பு'வுக்கு உற்சாகம் அளித்துக்கொண்டிருந்தான். கருப்பையா தொடர்ந்து படிக்கலானான்.

"சிவானந்த முதலியார் தலையைக் கீழே கவிழ்த்துக்கொண்டு குற்றவாளிக் கூண்டில் நின்றுகொண்டிருந்தார். டாக்டர் வேதமுத்து கூண்டுக்கு அருகே இருந்த நாற்காலி முன்பு நின்று கொண்டு, சத்தியப் பிரமாணம் செய்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். விசாரணை ஆரம்பிக்க இருக்கவும், அரசாங்கத் தரப்பு சாட்சி 1 ஆன வேதவல்லியும், அ.சா.2 ஆன சந்திரசேகர முதலியாரும் கோர்ட்டு அறையைவிட்டு வெளியேறினர். (வேதவல்லி – வயது 28 – சிவானந்த முதலியாரின் மூன்றாவது தாரம் என்பதும், சந்திரசேகர முதலியார்(35) வேதவல்லியின் மூத்த சகோதரர் என்பதும் வாசகர்கள் அறிந்ததே. வேதவல்லி நீலநிறப் பட்டுப் புடவையும், மஞ்சள் நிறச் சோளியும் அணிந்து, முடியைப் பிரிமணைக் கொண்டை யாகப் போட்டிருந்தார்.)"

"சந்திரசேகர முதலியார் வேட்டி கட்டியிருந்தார்னு போடலையா?" என்று கேட்டான் கந்தன்.

"உஹூம்" என்றுவிட்டுக் கருப்பையா தொடர்ந்து படித்தான்.

"முதலில் டாக்டர் வேதமுத்துவை அரசாங்கத் தரப்பு வக்கீல் திரு.கே. சீனிவாசன் விசாரணை செய்தார்.

அ. வ : டாக்டர், உங்களுக்கு எத்தனை வருஷ சர்வீஸ்?

டா : பதினெட்டு வருடங்கள்.

அ. வ : உங்களை நீங்கள் எதிலாவது 'ஸ்பெஷலிஸ்டு' எனக் கருதிக் கொள்ள முடியுமா?

டா : ஆமாம், டாக்சிகாலஜியில். அதாவது விஷம் சம்பந்தப் பட்ட மருத்துவப் பிரிவில்.

அ. வ : அதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா?

டா : உண்டு. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குறிப் பிட்ட கம்பெனி தயாரித்த செயற்கை நூலிழையில் சரும நோய் ஏற்படுத்தக்கூடிய ஒரு வகை விஷச்சத்து கலந்துவிடுகிறதா என்று ஆராய அரசாங்கம் நியமித்த ஒருநபர் குழுவாக நான் பணியாற்றினேன். தேவைப்பட்டால் நியமன உத்தரவைச் சமர்ப்பிக்க முடியும்.

நீதிபதி : அவசியமில்லை.

அ. வ : (நீதிபதியிடத்து) கனம் கோர்ட்டார் அவர்களே, டாக்டர் அவர்களது மருத்துவ அறிக்கையும், பிரேதப் பரிசோதனை அறிக்கையும் எக்ஸிபிட்டுகள் எண் 3, எண் 4 ஆகக் கோர்ட்டிலே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், அவற்றில் உள்ளதை விட்டுவிட்டு, வேறு சில அம்சங்களில் மட்டும் டாக்டரை விசாரிக்க அனுமதி கோருகிறேன்.

நீதி : (டாக்டரிடத்து) நீங்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கை களில் ஏதாவது திருத்தங்கள் செய்ய விரும்புகிறீர்களா?

டா : (நீதிபதியிடத்து) இல்லை, யுவர் ஆனர்.

நீதி : (அ. வ. யிடத்து) நீங்கள் மேலே செல்லலாம்.

அ. வ : (டாக்டரிடத்து) கடந்த மார்ச்சு மாதம் பத்தொன்ப தாம் தேதி சுமார் ஒரு மணிக்கு உங்களிடம் கொண்டு வரப் பட்ட சிவராஜின் மரணத்துக்கு என்ன காரணம் என்று நினைத்தீர்?

டா : சிறுவனின் முகமும், கழுத்தும், கைகளும் நீலம் பாரித்து இருந்தன. கண்கள் விரிந்து இருந்தன. உதடுகளில் நுரை கக்கியிருந்தது. வலிப்பு ஏற்பட்ட நிலையில் என் முன் கிடத்தப்பட்டான். இவை சாதாரணமாக பொட்டாசியம் சையனைடு வயிற்றுக்குள் செல்வதால் ஏற்படும் அறிகுறிகள். எனவே சையனைடு பாய்சனிங்காக இருக்கலாம் என்று நினைத்தேன்.

அ.வ : உங்கள் யூகம் சரியா என்று பார்க்க என்ன செய்தீர்கள்?

டா : உடனே ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கும் போலீஸ் சூப்பரன்டன்ட்டுக்கும் தகவல் கொடுத்துவிட்டு...

நீதி : அதெல்லாம் தேவையில்லை டாக்டர்.

டா : எஸ், யுவர் ஆனர். ஐந்து சாட்சிகளின் முன்பாக சிறுவனின் வயிற்றிலிருந்து 'வாஷ்' எடுத்து, அதில் ஒரு பகுதியை அரசாங்க பிரதான கெமிஸ்டுக்கு அனுப்பவும், மற்ற பகுதியை நான் ஆராயவும் வைத்துக் கொண்டேன். எனது ஆராய்வின் படி சிறுவனின் வயிற்றில் அதிகமான அளவுக்கு ஹைட்ரோசயனிக் அமிலமும், சிறிதளவு பொட்டாசியம் சையனைடும் இருந்தது தெரிந்தது.

அ.வ: இவற்றுள் எது விஷத்தன்மை கொண்டது?

டா : இரண்டுமேதான்.

அ.வ: அப்படியானால் இறந்தவர் இரண்டையுமே உட்கொண்டிருக்க வேண்டுமா டாக்டர்?

டா : அவசியமில்லை. பொட்டாசியம் சையனைடை உட்கொண்டாலே போதும். அது வயிற்றிலுள்ள ஒரு வகை அமிலத்தோடு செயல்பட்டு ஹைட்ரோசயனிக் அமிலம் ஏற்பட்டுவிடும்.

அ.வ : பொட்டாசியம் சையனைடு எந்த நிறத்தில் இருக்கும்?

டா : 'ஷுகர்' மாதிரி வெண்மையாக இருக்கும்.

அ.வ : அதைச் சாதாரண உணவுப் பொருள்களோடு கலந்தால் உணவுப் பொருளில் எதாவது நிற மாற்றம் ஏற்படுமா?

நீதி: (அ.வ.யிடத்துச் சிரித்துக்கொண்டே) இதெல்லாம் தேவையில்லை.

அ. வ : யெஸ், யுவர் ஆனர். (டாக்டரிடத்து) குறைந்தது எவ்வளவு வயிற்றுக்குள் சென்றால் பொட்டாசியம் சையனைடு சாவை ஏற்படுத்தும்?

டா : வயது வந்த திடகாத்திரமானவர்களாக இருந்தால் 160 மில்லி கிராம் சையனைடிலேயே சாவு ஏற்பட்டுவிடும். சிறுவர்களுக்கு இதைவிடக் குறைந்த 'டோசே' போதும்.

அ. வ: நீங்கள் குறிப்பிடும் இந்த அளவை ஒருவர் தனது இரண்டு விரல்களுக்குள் ஒளித்து வைத்துக்கொள்ள முடியுமா?

டா : முடியும்.

அ. வ : இந்த விஷம் வயிற்றுக்குள் சென்றால் எவ்வளவு நேரத்தில் சாவு ஏற்படலாம்.

டா : சில செகண்டுகளில், சில நிமிடங்களில், சில மணி நேரத்தில் சாவு ஏற்படலாம். விஷத்தின் அளவையும் 'பேஷன்டி'ன் உடல் நிலையையும் பொருத்தது.

அ. வ : டாக்டர், குற்றவாளிக் கூண்டில் இருக்கும் எதிரியை உங்களுக்கு எத்தனை வருடங்களாகத் தெரியும்?

டா : மூன்று வருடங்களாகத் தெரியும்.

அ. வ : இந்த மூன்றாண்டு காலத்தில் அவர் வைத்திய சம்பந்தமான யோசனை ஏதாவது உங்களிடம் கேட்டதுண்டா?

டா : (நீதிபதியிடத்து) கனம் கோர்ட்டார் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் பதில் தருவது அவசியந்தானா?

நீதி : (அ. வ.யிடத்து) நீங்கள் டாக்டரைக் கேட்கும் கேள்வி இவ்வழக்கு சம்பந்தப்பட்டதுதானா?

அ. வ : ஆம், யுவர் ஆனர்.

நீதி : (டாக்டரிடத்து) டாக்டர், வழக்கு என்ன என்பது உங்களுக்குத் தெரியும்; வழக்கு சம்பந்தப்பட்ட எந்தக் கேள்விக்கும் இந்தக் கோர்ட்டில் நீங்கள் பதிலளிக்கக் கடமைப் பட்டிருக்கிறீர்கள்.

டா : எஸ், யுவர் ஆனர். ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த வழக்கில் எதிரியாக உள்ளவர், என்னிடத்து வந்து ஒருவனுடைய ரத்தத்தையும், அவனுடைய தகப்பன் என்று சொல்லப் படும் வேறொருவருடைய ரத்தத்தையும் பரிசோதித்து, உண்மையிலேயே அவர்கள் தகப்பன், மகன் என்று உறுதிப் படுத்த முடியுமா என்று கேட்டார்.

அ. வ : நீங்கள் என்ன சொன்னீர்கள்?

டா : இந்த இருவருடைய ரத்தத்தை மட்டும் வைத்துக் கொண்டு, ஒரு முடிவுக்கு வர முடியாதென்றும், தாயினுடைய ரத்தத்தையும் சேர்த்துப் பரிசோதித்தால், சில சமயங்களில் – சில சமயங்களில் மட்டும் – ஒரு குறிப்பிட்ட நபர் ஒரு குறிப் பிட்டவனுக்குத் தகப்பனாராக இருக்க முடியாதென்ற முடிவுக்கு மட்டும் வர முடியும் என்றேன்.

அ. வ : பிறகு என்ன நடந்தது?

டா : ஒரு வாரத்துக்குப் பிறகு முதலியார் அவர்கள் அதாவது எதிரி, ஒரு பெண்ணோடு – அவள் ஒரு நர்ஸாக இருக்கலாம் என்று எனக்குப் பட்டது – என்னிடத்து வந்து மூன்று சாம்பிள் ரத்தம் கொடுத்தார். எதிரி என்னிடத்துத் தந்த மூன்று சாம்பிளில் ஒன்று ஒரு சிறுவனுடையதென்றும், இரண்டாவது அவனுடைய தாயினுடையதென்றும், மூன்றாவது சிறுவனுடைய தகப்பனாராகக் கருதப்படக் கூடியவருடைய தென்றும் கூறி, உண்மையிலேயே மூன்றாவது நபர் சிறுவனு டைய தகப்பனாராக இருக்க முடியுமா என்று பார்த்துத் தரச் சொன்னார்.

அ. வ: நீங்கள் என்ன செய்தீர்கள்?

டா : நான் எதிரியிடத்து சில சமயங்களில்தான் உறுதி யான முடிவுக்கு வர இயலுமென்றும், குறிப்பிட்ட ரத்தத்தைக் கொண்டவர் சிறுவனுக்குத் தகப்பனாராக இருக்க முடியும் என்று ஆராய்ச்சி தெரிவித்தாலும், அவர்தான் தகப்பனார், வேறொருவர் தகப்பனாக இருக்க முடியாது என்ற முடிவுக்கு வர முடியாதென்றும் எச்சரித்துவிட்டு, மூன்று சாம்பிளையும் பரிசோதனை செய்தேன்.''

அடைத்துக் கிடந்த ஒரு ரயில்கேட்டின் முன் குதிரை வண்டி வந்து நின்றது. கருப்பையாவும் கொஞ்சம் 'ரெஸ்ட்' எடுத்துக்கொள்ள விரும்பினான்.

"நீ அந்த வீட்டிலே வேலே பாக்கறயே ஒனக்கு என்ன தெரியும்?" என்று கேட்டான் கந்தன், கருப்பையாவிடத்து.

"ஆமாம் கருப்பையா, பெரிய மொதலாளிங்க வீட்டுலே வேலை பாக்கற டிரைவர்ங்கல்லாம் மொதலாளி அம்மாவெ ... பாத்துடுவாங்க எங்கறாங்களே, அதெல்லாம் நெசமா?" என்று ஊடே கேட்டான் குப்பு.

"அண்ணே அண்ணே, இந்த வில்லங்கத்துலே எல்லாம் என்னை மாட்டிவிட்டிராதே குப்பண்ணே; வேதவல்லி அம்மா

எங்கிட்டே கொஞ்சம் ஸ்பெசலா பிரியமாத்தான் நடந்துக்கும். ஆனா, இதெல்லாம் வெளியே சொல்லிக்கிட்டிருந்தா ஆபத்தாத் தான் முடியும்."

"ஆமாம், மொதலியார் செய்திருப்பாரா?" என்று கேட்டான் கந்தன்.

"ஒண்ணும் சொல்லிக்கிட முடியாது. இந்த மூணாங் கண்ணாலம் செய்துக்கிட்டதிலிருந்தே, அவர் ஒரு மாதிரியா மாறிட்டதாகத்தான் பேசிக்கிட்டாங்க. கண்ணாலத்துக்கு முன்னாடி ஏதோ டாக்டர் கிட்டே போயி அவருக்குக் கொளந்தே பொறக்க முடியுமானுட்டு சோதிச்சுக்கிட்டாரு எம்பாங்க. சிவராசுகிட்டே ஆரம்பத்துலே ரொம்பப் பிரியமாத்தான் இருந்தாரு. எவனோ படுகாலிப்பய அவரு காதுலே ஏதோ தொடர்ந்து ஓதிட்டிருந்திருக்கான். கொஞ்சமா மாறினாரு. சிவராசை செல சமயம் கொஞ்சுகொஞ்சுன்னு கொஞ்சு வாரு; சமயத்துலே பளீர்பளீர்னு அடிச்சிடுவாரு. நானே கண்ணாலே கண்டிருக்கேன்."

ரயில் கேட் திறந்தது. சுற்றிலும் இருந்த இரைச்சல் அதிகப் பட்டது. அத்தனை இரைச்சலுக்கும் மேலே குப்புவின் 'ஹே'யும் கெட்ட வார்த்தைகளும் கம்பீரமாகவே ஒலித்தன. கருப்பையா பேசுவதை நிறுத்திக்கொண்டான். கந்தன் வெளியே இருந்த நெரிசலைக் கவனித்துக்கொண்டிருந்ததுபோல் தெரிந்தது.

ஒங்களுக்குச் சந்திரன் நெனெப்பே வரதில்லையா? வராமல் இருக்குமா, வரத்தான் செய்யுது. ரெண்டு முறுக்கு வாங்கி வந்தால்கூட, பெரியது எது என்று பார்த்துவிட்டு அதை எடுத்துக்கொள்கிறான் சந்திரன்; சிறியதைத்தான் கீதாவுக்குத் தருகிறான். அவன் சுயநலத்தில்தான் எத்தனை அழகு? சுய நலத்தை மறைக்க முயன்றால்தான் அது அசட்டுத்தனமாகவோ, விகாரமாகவோ தோன்றுகிறது. இல்லாவிட்டால், அதில் உதயசந்திரனின் தற்புகழ்ச்சியைக் காண முடிகிறது. சந்திரன் எல்லாப் பிள்ளைகளோடும் சண்டை போடுகிறான். அவர் களை அடிக்கிறான்; அவர்களால் அடிக்கப்படுகிறான். ஒரு நாள் மூக்கில் ஒரு காயம்; மறுநாள் முழங்காலில் ஒரு காயம். ஒரு சமயம் கீழ் உதட்டில் காயத்தோடு சட்டை பூரா ரத்தம் தோய்ந்திருக்க வீடு வந்து சேர்ந்தான்.

"அய்யோ" என்று மீனா அலறினாள். "நான் ஒரு கல்லே வீசிப் போட்டேன். அது முருகேசனோட பல்லை ஒடச்சது.

அவன் அக்கா மரகதம் பிளேடை வச்சு என் ஒதட்டை அறுத் திடிச்சு" என்று சுருக்கமாக விளக்கினான் சந்திரன். மீனா, மரகதத்தின் அம்மாவோடு சண்டைக்குச் சென்று, 'தேவிடியாச் சிறுக்கி' என்ற பட்டத்தை வாங்கிக் கட்டிக்கொண்டாள். மீனாவும் சும்மா விடவில்லை.

"பொம்பளேன்னு பொறந்துட்டாலே தேவடியாச் சிறுக்கிதான்; ஒருத்தனோட படுத்தா என்ன, பத்துப் பேர்க கிட்டே படுத்தா என்ன, எல்லாம் ஒண்ணுதான்" என்று பொழிந்துவிட்டு வந்தாள். சாப்பிடும் போதுதான் "அய்யோ உதடு எரியுதே" என்று அலறினான் சந்திரன். "உப்புக் காரம் பட்டா உதட்டுப் புண்ணுக்கு நல்லது" என்றான் கந்தன். கந்தன் சொன்னது சரிதான். சீக்கிரமே சந்திரனின் உதட்டுப் புண் ஆறியது.

சந்திரனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைத்தாள் மீனா. நிறையக் கெட்ட வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு வந்தான். இனி மேலும் கற்றுக்கொள்ளக் கெட்ட வார்த்தைகள் பள்ளிக்கூடத்தில் கிடைக்கவில்லை என்பதை அறிந்ததும், பள்ளிக்கூடத்துக்குப் போவதை நிறுத்திக்கொண்டான். தெருவோரம் மீன் விற்றுக்கொண்டிருந்த ஆயிசா பீபிக்கு உதவியாகச் சில காலம் அவளோடு இருந்தான். அவள்தான் அவனைக் கெடுத்துவிட்டதாக மீனாவுக்கு எண்ணம். ஆயிசா பீபி சந்திரனுக்குச் சிறு வயதிலேயே பெரிய விஷயங் களைச் சொல்லித் தந்துவிட்டாளோ என்று கந்தனுக்குச் சந்தேகம். சந்திரன், வீட்டுக்கு வராமலேயே பல நாட்கள் ஆயிசா பீபியின் வீட்டிலேயே தங்கிவிடுவான். சந்திரனுக்கு ஆயிசா பீபியே சாப்பாடும் துணியும் கொடுக்க ஆரம்பித்தாள். மீனா வழக்கம் போலச் சண்டைக்குப் போனாள். 'தேவடியாச் சிறுக்கி' என்ற பட்டத்தையே மீண்டும் வாங்கிக் கட்டிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். கந்தன் எதைப் பற்றியும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அவ்வப்போது கீதா வோடு கொஞ்சுவான்; மீனாவோடு விளையாடுவான். மீனா எதுவும் சொன்னால், "நாலு காசு சம்பாரிச்சாப் போதும், எல்லாம் சரியாகி விடும்" என்று சொல்லிவிட்டு, "குடிக்கக் காசு இருக்கா?" என்று மீனாவிடம் கேட்பான்.

ஆயிசா பீபி கருப்பாக அழகாக இருப்பாள். அவள் முலைகளைப் பார்த்ததும் கந்தனே அசந்துவிட்டான் ஒரு சமயம். ஆனால் கந்தனின் சாமர்த்தியம் அவளிடம் பலிக்க வில்லை. 'குவாரி' கான்ட்டிராக்ட்டு எடுத்திருந்த முத்துக் கோனார் அவளிடம் ஒவ்வொரு நாளும் எக்கச்சக்கமாக

மீன் வாங்கிப் பார்த்தார். ஊருக்கு வெளியே ஒரு தென்னந் தோப்பும், தென்னந் தோப்பில் தனக்கென்று ஒரு சிறு வீடும் இருப்பதாகவும் ஆயிசா பீபியிடத்துத் தெரிவித்துப் பார்த்தார். தென்னந் தோப்பிலோ, அங்கு இருந்த முத்துக்கோனாரின் வீட்டிலோ ஆயிசா அக்கறை காட்டவில்லை. முத்துக்கோனார் அவர் தம்பியை வைத்துப் போட்டி மீன் கடை போட்டார். ஆயிசா மீன் வியாபாரத்தை நிறுத்திவிட்டு முத்துக்கோனாரின் தென்னந் தோப்புக்குச் சென்று வர ஆரம்பித்தாள். சில வாரங்களில் ஆயிசா பீபி வீட்டைக் காலி செய்துவிட்டு எங்கேயோ சென்றாள். சந்திரன் சில நாட்கள் வீட்டிலேயே தங்கியிருந்துவிட்டு, ஒரு நாள் ஒன்றுமில்லாததற்குக் கந்தனிடம் செம்மையாக உதை வாங்கிவிட்டு வீட்டைவிட்டு ஓடினான். குடித்துவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்த கந்தனின் மீது ஒரு பானையை வீசியெறிந்து, பானையை உடைத்து நொறுக்கிவிட்டு ஓடியவன் தான், பிறகு வீட்டுப்புறமே தலை காட்டவில்லை.

ஒருவாறாக இரைச்சல் தணிந்ததும், வண்டி சற்று அமைதியான தெருப் பக்கம் திரும்பவும் கருப்பையா பத்திரிகையை உயர்த்திப் படித்தான்.

"போதும் தம்பி, இந்தக் கோர்ட்டு விவகாரமெல்லாம் யாருக்கு வேண்டிருக்கு?" என்றான் கந்தன். கடுமையான வெய்யில். கந்தனுக்கு வியர்த்துக் கொட்டியது.

"ஆமா, இப்ப என்னமோ சொல்லிட்டிருந்தியே?" என்றான் கந்தன், கருப்பையாவிடத்து.

"அந்த வேதவல்லி அம்மாவெப் பத்தி என்னவோ உளறிட்டிருந்தான்" என்றான் குப்பு. மூவரில் அவன் ஒருவன் தான் வெயிலால் பாதிக்கப்படாதவன் போல் தெரிந்தான்.

"அண்ணே, யாருக்கும் சொல்லாதீங்க; இந்தக் கேசு பத்தி ஒரு முக்கியமான வெஷயம் எனக்குத் தெரியும்" என்றான் கருப்பையா.

"என்ன வேதவல்லியும் சந்திரசேகர மொதலியும் 'டபார் டபார்'ன்ட்டா?" என்றான் குப்பு.

"அண்ணனும் தங்கச்சியுமா?" என்று கேட்டான் கந்தன்.

"அப்படியும் ஒரு பேச்சு உண்டு அண்ணே; ஆனா நா அதெப்பத்தி இப்ப சொல்ல வரலே."

"பின்னே எதைப் பத்தி?" என்றான் கந்தன்.

"சிவராசுவுக்கு மூச்சுத் திணறவும், குத்திப்புடுங்கவும், அவனெ அணைச்சி எடுத்துக்கிட்டு டாக்டர்கிட்டே கொண்டு போக முதலியார் ஓடினாரு. ஆனா உள்ளுக்கிருந்த வேதவல்லி அம்மா மட்டும், என்ன ஆயிரிச்சு, அய்யோ என்ன ஆயிரிச்சுன்னு கதறிக்கிட்டே கொளந்தெக்குக் கடுக அரைச்சுக் கொடுங்க, கடுக அரைச்சுக் கொடுங்கோன்ட்டு அலறிக்கிட்டே மூர்ச்சையா விளுந்திரிச்சு."

"நீ போயி அம்மாவே உசுப்பினே இல்லே?" என்றான் குப்பு.

"போ அண்ணே, உனக்குப் பாயின்ட்டே புரியலே" என்று விட்டு, கருப்பையா தாழ்ந்த குரலில் ரகசியம் போலப் பேச ஆரம்பித்தான்.

"ஏன் அண்ணே, எதுக்கு கடுகே அரைச்சுக் கொடுப்பாங்க? வாந்தி வரத்தானே? வெசம் கிசம் தின்னுட்டா, வாந்தி வரச் செய்யத்தானே கடுகே அரைச்சுக் கொடுப்பாங்க?" என்றான் கருப்பையா.

"அப்ப அந்தப் பயல் வெசெத்தத்தான் தின்னுட்டான்னு வேதவல்லிக்குத் தெரிஞ்சிருக்கணூம்ங்கறே, இல்லே" என்றான் கந்தன்.

"அதான் அண்ணே. ஆனா மொதலாளிகூட அதெக் கவனிக்கலெ, நானும் அதெல்லாம் போலீசுக்குச் சொல்லிக்கலே."

"ஆமாம், வெட்டி வேலெ" என்றான் கந்தன்.

"மொதலாளி வாக்குமூலம் என்ன தெரியுமாண்ணே? சமயக்காரப் பொண்ணு அவர் தட்டுலே கறியை வைக்கவும், சிவராசு எனக்குத் தான் மொதெல்லேன்னு கத்திச்சாம். மொதலாளி அவர் தட்டுலேந்து எடுத்துக் கறியை சிவராசு தட்டுலே வச்சாராம். அந்தக் கறிலேதான் வெசம் இருந்திருக்கு."

"போட்ட கறியெப் பூராவும் சிவராசு தின்னிரிச்சா?"

"இல்லண்ணே. மீதிக் கறியையும் பரிசோதனைக்கு அனுப்பினாங்களாம். அதுலே துளிகூட இந்த சையனைடு வெசம் இல்லையாம்."

"டாக்டர்கிட்டே அந்தப் பையனே யாரெல்லாம் கூட்டிக்கிட்டுப் போனது?"

"நானும் மொதலாளியும் மட்டுந்தான்."

"அப்ப வீட்லே யாரெல்லாம் இருந்தாங்க?" என்று தொடர்ந்தான் கந்தன்.

"வேதவல்லி அம்மா, சந்திரசேகர மொதலி, சமயக்காரப் பொண்ணு இவுங்கதான் இருந்தாங்க. அந்தச் சமயக்காரப் பொண்ணே ஒரு நா விட்டு ஒரு நா ஸ்டேசனுக்குக் கொண்டு போயி போலீசுக்காரங்க விசாரிக்கிறாங்க. அதுதான் போலீசுக்கு ஒரு முக்கிய சாட்சியாத் தெரியுது. அது வாயெத் தெறந்தா எல்லாம் வெளெங்கிப் போயிடும்."

"ஆமாம், ஆமாம் எல்லாம் வெளங்கிப் போயிடும்; இப்ப இறங்கிக்கோங்க" என்று சொல்லிக்கொண்டே குப்பு வண்டியைத் தெருவோரமாக நிறுத்தினான்.

"அண்ணே இங்கே பக்கந்தானே; என்னே வீட்லே கொண்டு விட்டிருங்கண்ணே" என்றான் கருப்பையா.

"சரி, வந்து தொலே" என்றான் குப்பு. கந்தன் ஒரு இரண்டு ரூபாயைக் குப்பு கையில் திணித்துவிட்டு, "வரேன் குப்பு; வரேன் தம்பி" என்று சொல்லிக்கொண்டே வண்டியை விட்டிறங்கி தேவி லாட்ஜுக்குள் நுழைந்தான்.

தேவி லாட்ஜ் இப்போது இருக்கும் இடம் ஒரு கோவி லுக்குச் சொந்தமானது. முன்பு அங்கே இரண்டு வீடுகள் இருந்தன. வீடுகளிலிருந்து வந்த வாடகைப் பணம் கோவில் பணிக்குச் செலவிடப்பட்டது. சுப்பு நாயுடுதான் அந்த வீடு களை இருபது வருட 'லீசு'க்கு எடுத்து, வீடுகளை இடித்துவிட்டு தேவி லாட்ஜைக் கட்டினார். 'லீஸ்' காலம் முடிந்ததும் லாட்ஜுக் கட்டிடம் கோவிலுக்கே சொந்தமாகிவிடும். சுப்பு நாயுடு மிகவும் கறாரான பேர்வழி. முதல் பத்து வருடங்கள் வரை லாட்ஜை மிகவும் 'டீசன்ட்'டாகவே வைத்திருந்தார். நாளா வட்டத்தில் சுற்று வட்டாரத்தில் புதுப்புது லாட்ஜுகள் 'பாத்ரூம்' இணைந்த அறைகளோடும், 'லிப்ட்டு'களோடும் முளைக்க ஆரம்பிக்கவும், நாயுடு தனது கொள்கைகளைத் தளர்த்திக் கொண்டார். "பிசினெஸ்ல எல்லாம் கொஞ்சம் நெளிவு சுளிவு வேண்டும்" என்று அடிக்கடி தன் மானேஜரிடத்துச் சொல்வ தோடு, தான் அதிகம் லாட்ஜுப் பக்கம் வருவதையும் நிறுத்திக் கொண்டார். அதன் விளைவாக இப்போது தேவி லாட்ஜ், பள்ளி நிர்வாகி – ஆசிரியை, கிராமப்புற டாக்டர் – நர்ஸ், சமுதாய அபிவிருத்தி அதிகாரி – சமூக சேவகி ஆகிய ஜோடிகளில் சிலவற்றுக்கு நம்பகமான புகலிடமாக இருப்பதோடு, எந்தக் குறிப்பிட்ட ஆடவரோடும் தங்களை வாழ்க்கை பூராவும் பிணைத்துக்கொள்ள விரும்பாத சில பெண்களுக்குத் தங்கு மிடமாகவும் உள்ளது. தேவி லாட்ஜின் புதுக் கீர்த்தியைப் பற்றிக் கேள்விப்பட்ட கோவில் டிரஸ்டி ஆத்திரத்தோடும் ஆவேசத்தோடும் வந்து சுப்பு நாயுடுவோடு தகராறு பண்ணினார்.

இருவரையும் சமாதானப்படுத்தி வைப்பதில் கந்தனுக்குப் பெரும் பங்கு கிடைத்தது. கோவில் டிரஸ்டிக்கு, அவர் காரிகோட்டைக்கு வரும்போதெல்லாம் தேவி லாட்ஜில் 'சகல வசதிகளோடு' எத்தனை நாட்கள் வேண்டுமானாலும், எந்த அறையில் வேண்டு மானாலும், யாரோடும் இலவசமாகத் தங்கும் சலுகை அளிக்கப் பட்டது. "பிசினெஸ்ல கொஞ்சம் நெளிவு சுளிவு வேண்டி யிருக்கு" என்று இளித்தார் நாயுடு. "பிசினெஸ்ல என்ன கோவில் காரியங்களில்கூட கொஞ்சம் நீக்குபோக்கு வேண்டி யிருக்கு. நாமென்ன அரசியல்வாதிகளா, கொள்கேன்னு வம்பா இருக்க?" என்றார் டிரஸ்டி, ஒன்றும் தெரியாமலோ எல்லாமே தெரிந்தோ.

கந்தன் லாட்ஜுக்குள் நுழையவும், மானேஜர் "வாங்க" எனக் கூறிக் கந்தனை வரவேற்றார். "எந்த ரூம் காலியா இருக்கு?" என்று கேட்டான் கந்தன். மானேஜர் அறை நிலவரப் பலகையைப் பார்த்து விட்டு, "கீழே நாலு காலி இருக்கு" என்றார். கந்தன் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் ஏதாவது ஒரு அறையில் படுத்துவிட்டுச் செல்வது வழக்கமாதலால், மானேஜர் அவனிடத்து நான்காம் எண் அறைச் சாவியைக் கொடுத்தார். சற்றுத் தூரம் நடந்து பிறகு ஒரே வரிசையில் இருந்த பத்து அறைகளுக்கு இட்டுச் செல்லும் பாதையின் பக்கம் வளைந்தான் கந்தன். அறைகள் வெளியே பூட்டப்பட்டோ, உட்புறமாக அடைக்கப்பட்டோ இருந்தன. கந்தன் நான்காம் எண் அறையைத் திறந்துகொண்டிருக்கும் போது, அடுத்த அறை வாயிலில் நின்றுகொண்டிருந்த ஒரு நடுத்தர வயதுக்காரர் அந்த வரிசையில் இருந்த கடைசி அறையின் வெளிப்படியில் உட்கார்ந்துகொண்டிருந்த ஒரு பெண்ணைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவளும் அவரையே பார்த்துக் கொண்டிருப்பதுபோல் இருந்தது. கந்தன் தன்னறைக் கதவைத் திறக்கும் சத்தம் காதில் படவும், நடுத்தர வயதுக்காரர் கந்தன் பக்கம் திரும்பினார். பிறகு தன்னறைக்குள் சென்று கதவுகளைத் 'தடால்' என்று அடைத்துக்கொண்டார். கந்தன் தன்னறையை உட்புறமாகத் தாளிட்டுக்கொண்டு, வேட்டியையும் சட்டை யையும் களைந்துவிட்டு, கத்தியை உறையோடு தலையணைக்கு அடியில் ஒளித்து வைத்தான். பிறகு மின்விசிறியைத் தட்டி விட்டுவிட்டு, மெத்தைக் கட்டிலில் விழுந்தான். தூக்கம் வரும் போல் இருந்தது. ஆனால் அடுத்த அறைக் கதவு 'படால்' என்று திறக்கப்படும் சத்தம் கேட்டது. இரண்டு, மூன்று நிமிடங்கள் கழித்து, மீண்டும் கதவு 'தடால்' என்று அடைக்கப்படும் சத்தம். இவ்வாறே தொடர்ந்து இரண்டு, மூன்று நிமிடங் களுக்கு மாறி மாறி 'தடாலோ படாலோ' கேட்டுக்கொண் டிருந்தது. இந்த ஒலி நாடகம் சுமார் பதினைந்து நிமிடங்

களுக்கு நடந்துவிட்டு ஒருவாறாக ஓய்ந்தது. கந்தன் அரைத் தூக்கத்தில் இருந்தான். வானத்தில் பறப்பது போன்றதொரு கனவு. இல்லை, வானளவுக்கு உயர்ந்துள்ள மலைச் சிகரங்களின் மேல் தாவித் தாவிச் செல்கிறான். ஒரு மிக உயர்ந்த சிகரத்துக்கு வந்துவிட்டான். கண்ணுக்கெதிரே மலை மலையாக மணற்குவியல்கள். கந்தன் அடுத்த மணல் மலைக்குத் தாவுகிறான். மணல் மலையைக் காணோம். ஒரு பாதாளத்தில் விழுந்துகொண்டிருப்பது போன்ற ஒரு உணர்வு. விழித்துக் கொள்கிறான். அடுத்த அறைக் கதவை யாரோ வெளியிலிருந்து மெதுவாகத் தட்டிக்கொண்டிருப்பது கேட்கிறது. அடுத்த அறையிலிருந்தோ ஒரு சத்தமும் இல்லை. வெளியே தட்டுவது சற்றுப் பலப்படுகிறது. தொடர்ந்து ஒரு பெண் குரல், "இந்தாங்க கதவெத்தெறங்க, யாருமில்லை" என்கிறது. அடுத்த அறைக் கதவை மெதுவாகத் தட்டும் ஓசையும், 'இந்தாங்க, இந்தாங்க' என்ற சொற்களும் கந்தனின் காதுகளில் சிறிது நேரம் விழுகின்றன; பிறகு ஓய்ந்து போகின்றன. ஒரு பெண் நடந்து செல்வது போல் காலடிச் சத்தம். சிறிது நேரம் கழித்து அடுத்த அறைக்கதவு 'படால்' என்று திறக்கிறது.

கந்தன் மீண்டும் அரைத் தூக்கத்தில் விழுகிறான். சில சில்லறைக் கனவுகள் தோன்றி மறைகின்றன. அவன் ஒரு கடையில் சிகரெட்டு வாங்கிவிட்டுக் கடன் சொல்கிறான். சந்திரனைத் தற்செயலாகத் தெருவில் பார்ப்பதுபோல் தெரிகிறது. கந்தன் அவனிடத்துப் பேசவோ, அவனை வீட்டுக்கு அழைத்துவர எண்ணுவதாகவோ தெரியவில்லை. சிகரெட்டை வாங்கிவிட்டுக் கடையிலிருந்து திரும்புகிறான். எதிரே மோகனா என்ற ராக்காயி நின்றுகொண்டு அழுவது போல் இருக்கிறது. காட்சிகள் படிப்படியாக மறைகின்றன. அரைகுறைத் தூக்கம். ஏதோ கொஞ்சம் நினைவு. முத்துச்சாமியும் அவன் 'காதலி'யும் ஒருவரையொருவர் இறுகக் கட்டி அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கின்றனர். சோலைப் பிள்ளையும், மீனாவும்... கந்தன் திடுக்கிட்டு எழுகிறான். அடுத்த அறைக் கதவு திறக்கும் ஓசை கேட்கிறது. அங்கிருந்து சுண்ணாம்பு வாடை வெளிப்படுவதாகக் கந்தன் நினைத்துக்கொள்கிறான். அடுத்த அறை நடுத்தர வயதுக்காரர் 'பாத்ரூம்' பக்கம் நடந்து செல்வதாகக் கந்தனுக்குப்படுகிறது. அரைகுறைத் தூக்கத்தில் கந்தன் தலையணைக்குக் கீழே கத்தி இருக்கிறதா என்று பார்த்துக் கொள்கிறான். மீண்டும் தூக்கம். மீண்டும் சில்லரைக் கனவுகள்.

சுமார் நாலரை மணிக்குக் கந்தன் விழித்து எழுந்து உட்கார்ந்தான். வெளியே இருந்து இரைச்சல் வந்துகொண்டிருந்தது. தொண்டையைக் கிழித்துக்கொண்டு, மூன்று நான்கு பேர்கள்

காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர். கந்தன் அறைக் கதவுகளைத் திறக்கவும், லாட்ஜு சிறுவன் ஒருவன் வந்து, "காப்பி வேணுமா சார்?" என்றான். "ஒரு பாட்டில் எடுத்துக் கிட்டுப் போய் எரநூறு மில்லி சாராயம் வாங்கிட்டு வா" என்று சொல்லிக்கொண்டே கந்தன் சிறுவனிடத்து ஒரு ஐந்து ரூபாய்த் தாளை நீட்டினான். சிறுவனுக்குக் கந்தனைத் தெரியும்; ஒன்றும் கூறாமல் பணத்தை வாங்கிக்கொண்டு அகன்றான். கந்தன் சிறுவனை மீண்டும் கூப்பிட்டு, "மொதல்லே மானேஜர் கிட்டே நாங்கேட்டேன்னு சொல்லி ஒரு சோப்புக்கட்டி, ஒரு சீப்பு, மொகம் தொடைக்க ஒரு துண்டு வாங்கியாந்து கொடுத்துரு" என்றான். சிறுவன் அவற்றைக் கொண்டுவரவும், தனது அறையை அடைத்துப் பூட்டிக்கொண்டு, முகம், கை, கால்களைக் கழுவ லாட்ஜின் பின்புறம் சென்றான். பத்தாம் எண் அறை வாயிலில் இன்னும் அந்தச் சிறுமி உட்கார்ந்திருந் தாள். அவனைப் பார்த்ததும் இலேசாகச் சிரித்தாள். கந்தன் குளியலறையிலிருந்து தன் அறைக்குத் திரும்பியதும் வேட்டி சட்டையை அணிந்துகொண்டு, கத்தியையும் இடுப்பில் சொருகிக் கொண்டு, தலையைச் சீவிவிட்டுக் கொண்டு வெளியே வந்தான். மானேஜர் இருந்த பகுதியிலிருந்து வந்த இரைச்சலின் ஆக்ரோஷம் படிப்படியாக உயர்ந்துகொண்டே சென்றது. கந்தனும் வேடிக்கை பார்க்கச் சென்றான்.

மானேஜர் ஸ்தானத்துக்கு எதிரே இரண்டு சோபாக்கள் போடப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றில் அரைகுறையாய் உட்கார்ந்திருந்த, டெர்லின் பான்ட்டும், ஸ்லாக்கும், கண்ணாடி யும் அணிந்திருந்த ஒரு இளைஞன் அவன் முன்னால் உட்கார்ந் திருந்த சற்று வயது வந்த ஒரு ஜிப்பாக்காரரிடத்துக் கையை நீட்டி நீட்டிப் பேசிக்கொண்டிருந்தான். அவன் முகத்தில் தோன்றிய படபடப்பையும் ஆவேசத்தையும் காணும்போது, அவன் எங்கேயோ அனுபவித்த அவமானங்களுக்கு வேறெங் கேயோ அர்த்தமற்ற நிவாரணம் தேடிக்கொண்டிருப்பதுபோல் இருந்தது. மற்றொரு இளைஞன் பரட்டைத் தலையோடு அவர்களிடமிருந்து சற்று விலகி உட்கார்ந்திருந்தான். மூவரை யும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு தன் இருக்கையில் உட்கார்ந்திருந்தார் மானேஜர். கந்தனும் வந்து ஒரு ஓரமாக உட்கார்ந்து கொண்டான்.

"தொழிலாளி வர்க்கத்தை யாராலும் அடக்கி ஒடுக்க முடியாது. ஹிட்லர் அடக்கிப் பார்த்தான், முடியலே. முசோலினி பார்த்தான், முடியலே. சர்ச்சில் பார்த்தான், முடியலே" என்று அடுக்கிக்கொண்டு போனான் கண்ணாடிக்கார இளைஞன்.

"ஆனா, ஸ்டாலின் பார்த்தான், முடிஞ்சது" என்றான் பரட்டைத் தலையன் சிரித்துக்கொண்டே. மற்ற இருவரும் அவன் சொன்னதைக் கேட்கவில்லை.

"நாங்களும் சமதர்ம சமுதாயத்தை அமைக்கத்தான் பாடுபட றோம்" என்றார் ஜிப்பாக்காரர். ஏதோ சமதர்ம சமுதாயத்துக்குப் பாடுபடாதவர் வாழத் தகுதியற்றவர் என்ற குற்ற உணர்வு மிகுந்தவர்போல.

"ஆமாம் ஆமாம், தொழிலாளி போனஸ் கேட்டா குண்டாந் தடியை காட்டறது, தேர்தல் வந்தா மொதலாளிகிட்டே போயி பல்லெக்காட்டறது, இதுதானே ஒங்க சமதர்மம்?" என்று எரிந்து விழுந்தான் கண்ணாடிக்காரன்.

"ஆமா கேக்கிறேன், மொதலாளி இல்லாம தொழிலாளி எப்படி வந்தானாம்?" என்று ஒரு பாயின்ட்டை உதிர்த்தார் மானேஜர். ஜிப்பாக்காரரோ, டெர்லின் இளைஞனோ அவர் பாயின்ட்டைக் கேட்டதாகத் தெரியவில்லை.

"நாங்க படிப்படியாக ஜனநாயக மொறைலே சமதர்மம் கொண்டு வரணுங்கறோம்; நீங்க கத்தி, கபடா வச்சிக்கிட்டு ரத்தம் சிந்தி சமதர்மம் கொண்டுவரப் பாக்கறீங்க" என்றார் ஜிப்பாக்காரர். இதைக் கேட்டதும் கண்ணாடிக்கார இளை ஞனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. உண்மை யிலேயே கத்தி, கபடா இல்லாமல் ஒரு சமதர்மப் புரட்சி வெற்றி பெற்றுவிட்டதாக நினைத்துக்கொண்டு ஏமாற்ற வெறியில் துள்ளி எழுந்தான். ஆவேசத்தோடு எழுந்து நின்று விரலைத் துப்பாக்கி போல ஜிப்பாக்காரர் முகத்துக்கு நேரே நீட்டி, "நீங்க எங்க தலைவர் போன மாசம் கொடுத்த அறிக்கை யைப் படிச்சீங்களா?" என்று அதிர்ந்தான் – சண்டித்தனம் செய்யும் வழிப்போக்கனிடத்து ஒரு கொள்ளைக்காரன் அதிர்வதுபோல்.

ஜிப்பாக்காரர் மிரண்டு போனார். இளைஞன் குறிப் பிட்ட அறிக்கையைப் படித்திராதது ஒரு தேசத்துரோகக் குற்றம் என்று உணர்ந்தவர் போல், "ஆமாமாம், வாசிச்சேன்" என்று புளுகினார். "அந்த அறிக்கைலே எங்க தலைவர் என்ன சொல்லி இருக்கார்?" என்று மிடுக்காக உறுதியாகக் கேட்டான் இளைஞன். ஜிப்பாக்காரர் முழித்தார்.

"தலைவரது அறிக்கையைப் படிக்காதது முதற் குற்றம்; அதைப் படித்ததாகப் புளுகியது இரண்டாவது குற்றம். இந்த இரண்டு குற்றங்களுக்கும் உமக்கு என்ன தண்டனை தகும்?"

என்று கேட்கும் தோரணையில் இளைஞன் ஜிப்பாக்காரரைப் பார்த்து அவர்மீது வெறுப்பை உமிழ்ந்தான்.

"உங்க தலைவர் அறிக்கைலே என்ன சொல்லி இருக்காரு?" என்றார் ஜிப்பாக்காரர் பணிவோடு.

"அப்பப் படிக்கலேன்ட்டு ஒத்துக்கோங்க" என்றான் இளைஞன் வெற்றித் திமிரோடு. 'எங்கெ தலைவர் விட்ட அறிக்கையைப் படிக்காத நீயும் ஒரு மனிதனா' என்று கேட்கும் முறையில் இளைஞன் ஜிப்பாக்காரரை ஏளனத்தோடு நோக்கினான். ஜிப்பாக்காரரும் அவன் உள்ளத்தை உணர்ந்தவர் போல வெட்கித் தலை குனிந்தார்.

"எந்த எளவெல்லாமோ படிக்கிறோம்; எதை ஞாபகத்துலே வச்சுக்கிறது?" என்று ஜிப்பாக்காரருக்காகச் சமாளித்தார் மானேஜர்.

"என்ன சொன்னீங்க?" என்று கண்ணாடிக்கார இளைஞன் மானேஜர் பக்கம் திரும்பினான். "இல்லே, படிக்கறதெல்லாம் நினைவுலே இருக்குதான்னேன்" என்றார் மானேஜர் சற்று பயந்தவாறே. "கண்டதெப் படிக்கிறோம்; அதெப்பத்தி இப்பப் பேச்சில்லே. எங்க தலைவர் அறிக்கையைப் பத்தி இப்ப நான் கேட்டேன்" என்றான் இளைஞன் ஆணித்தரமாக.

"அது சரி, ஒங்க தலைவர் என்ன சொல்லியிருக்காரு?" என்றான் பரட்டைத் தலையன்.

இளைஞன் பல்லைக் கடித்துக்கொண்டு, "பலாத்காரம் இல்லாமே அமைதியான முறைலே மக்களைத் திரட்டி இந்த நாட்டிலே சோஷலிசத்தைக் கொண்டுவர முடியூம்ன்ட்டு எங்க தலைவர் கடந்த மாத பதினெட்டாம் தேதி அறிக்கையிலே மட்டுமில்லே, அதுக்கு முன்னும் பின்னும் பல தடவை சொல்லியிருக்காரு" என்று சொல்லி முடித்தான். அவனுக்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது.

"இதையும் அமைதியாகவே சொல்றது; எதுக்கு இத்தனை பதட்டம்?" என்றான் பரட்டைத் தலையன்.

ஜிப்பாக்காரர் வாய்மூடியாக இருந்தார். அவருக்குப் பதிலாக மானேஜர், "நாங்கதான் இந்த நாட்டுலே சோஷலிசத்தைக் கொண்டு வந்திட்டிருக்கோமே; நீங்க வேறே எதுக்கு?" என்றார்.

ஜிப்பாக்காரரது அமைதி இளைஞனைச் சங்கடப்படுத்தியது. தான் வரம்பு மீறிக் கத்திவிட்டோமோ என்ற பயம் வந்தது.

அமைதியாக சோஷலிசத்தைக் கொண்டுவர முடியும் என்பதை ஆத்திரத்தில் கத்துவது பொருத்தமாக இருக்காது என்பதை உணர்ந்தவன்போல இளைஞன் தனது போர் தந்திரத்தை மாற்றிக்கொண்டு பேச ஆரம்பித்தான்.

"உங்க கட்சிலே உங்க மாதிரி சோஷலிசத்துலே உண்மையான நம்பிக்கை வச்சிருக்கிற சாதாரண ஊழியர் இல்லேன்னு நாங்க சொல்லலே" என்று இளைஞன் கூறவும், ஜிப்பாக்காரர் ஒரு கணம் தனக்குச் சேராத சட்டையை யாரோ மாட்டி விட்டதுபோல் விழித்தார். அடுத்த வினாடி 'ஜனநாயகத்துலே இதெல்லாம் சகஜம்' என்றுணர்ந்தவர் போல் சமாளித்துக் கொண்டார்.

"ஆனா உங்க கட்சித் தலைமையின் சிண்டைத்தான் முதலாளிக வசம்மா பிடிச்சிட்டிருக்காங்களே?" என்று இளைஞன் மாற்றுக் கட்சித் தலைமைக்கு அனுதாபப்பட்டான்.

"சிண்டுக்கும் சோஷலிசத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார் மானேஜர்.

"எப்படீன்னு கேளுங்க" என்று கூறிக்கொண்டே ஜிப்பாக் காரரின் அருகிலேயே உட்கார்ந்துகொண்டான் இளைஞன்.

"ஆமா, எப்படி?" என்றார் மானேஜர்.

"சாதாரண மக்கள் அன்றாடம் பயன்படுத்தற பண்டம், சீனியெ எடுத்துக்கோங்க" என்று ஆரம்பித்த இளைஞன் ஒரு கணம் திகைத்தான்.

பிறகு தொடர்ந்தான். "இன்னிக்கு சீனி என்ன வெலேலே விக்குது? மூணு ரூபாய்." 'மூணு ரூபாய்' என்பதைக் கேட்டதும் அனைவரும் அசந்துவிடுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தான் போலும் இளைஞன். யாரும் மயங்கி விழாதிருக்கவே, "இன்னிக்கு ஒரு கிலோ சீனி விற்பது மூணு ரூபாய்" என்று ஒவ்வொரு வார்த்தையையும் தனித்தனியே அழுத்தி அழுத்திக் கூறினான். "ஆனா போன வருஷம் இதே சீனியை என்ன வெலெக்கு வாங்கிட்டிருந்தோம்" என்று அடுத்துக் கேட்டான். இளைஞன் பேசுவதெல்லாம் அரசியல் மாதிரியே படவில்லை போலவும், ஆனால் வேறு வழி இல்லையே என்று இளைஞனது கத்தல்களை எல்லாம் சகித்துக்கொண்டிருந்தது போலவும் ஜிப்பாக்காரர் உட்கார்ந்திருந்தார். அவர் உள்ளத்தை அறிந்தவராய் மானேஜர், "ஆமா, சமதர்மத்துக்கும் சீனிக்கும் என்ன சம்பந்தம்?" என்றார்.

மானேஜர் கேள்வியைப் பொருட்படுத்தாது இளைஞன் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தான்.

"போன வருஷம் கிலோ இரண்டரை ரூபாய்க்கு வித்த சீனி இன்னிக்கு கிலோ மூணு ரூபாய். இந்த வெலெ ஏத்தத் துக்குக் காரணம் என்ன? உற்பத்தி கொறெஞ்சுடுத்தா? இல்லையே. அரசாங்கப் புள்ளி விவரக் கணக்குப்படியே உற்பத்தி எட்டு சதவீதம் உயர்ந்திருக்கு. கரும்புவெலெ கூடிறிச்சா? இல்லையே. தொழிலாளிக்கு அதிகக் கூலி கொடுத்து உற்பத்திச் செலவு கூடிறிச்சா? இல்லையே. சீனியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஆரம்பிச்சுட்டோமோ? இல்லையே" என்று இளைஞன் கேள்விகளையும் 'இல்லை' பதில்களையும் அடுக்கிக் கொண்டே போனான்.

"சனங்க கைலே பணம் பெருத்துப் போச்சு; என்ன வெலெ சொன்னாலும் சீனி வாங்கறேன்கறாங்க. தோட்டிலேந்து தொண்டைமான் வரை நாளைக்கு எட்டுத்தரம் டீயும் காபியும் குடிக்கணுங்கறாங்க. ஏன் சீனி வெலெ உயராது?" என்றார் மானேஜர்.

"அதெல்லாம் காரணமில்லே; அடுத்த வருஷம் தேர்தல் வருது" என்றான் இளைஞன். "அப்ப தேர்தல் வர வேண்டாங் கறியா?" என்றான் பரட்டைத் தலையன். கண்ணாடிக்காரன் பரட்டைத் தலையனைப் புறக்கணித்துவிட்டுப் பேச்சைத் தொடர்ந்தான்.

"ஒரு கிலோ சீனி தயாரிக்க ஒரு ரூபா நாப்பது காசு ஆகுது. விக்கறது கிலோ மூணு ரூபாய்னு. ஒரு கிலோ சீனிலே மொதலாளிக்கு மிச்சம் ஒரு ரூபா அறுபது காசு. நம்மூர் ரெட்டியார் ஷுகர் மில்லுலே நாளைக்கு முன்னூறு டன் கரும்பு பிழியறாங்க. ஒரு டன் கரும்பிலே தாராளமா எழுபது கிலோ சீனி தேறும். கணக்குப் பார்த்துக்கோங்க. கிலோவுக்கு அரை ரூபாய் கூடினாலும், ரெட்டியாருக்கு ஆறு மாசத்துலே கெடெக்கிற உபரி லாபமட்டும் இருபது லட்சத்துக்கும் அதிகமா இருக்கும். இதுலே ஒரு பங்கை வாங்கிட்டுத் தான் ஒங்க கட்சி தேர்தல்லே ஜெயிக்க முடியிது" என்று விளக்கி முடித்தான் இளைஞன்.

"என்னங்க தம்பி உளர்றீங்க? நம்ம அரசாங்கம் ஒண்ணும் அப்படி ஏமாளி அரசாங்கம் இல்லை. ஒரு லிமிட்டுக்கு மேலே போனா, நூறு ரூபாய் வருமானத்துக்கு அரசாங்கம் தொண்ணூற்றொன்பது ரூபாய் வருமான வரியா வாங்கிடறது, தெரியுமா? வருஷா வருஷம் இன்கம்டாக்ஸ் ஆபீசுக்குப் போற எனக்குத் தெரியுமா; இல்லாட்டி கட்சித் தலைவர் அறிக்கயப் படிச்சிட்டுப் பேத்தற உனக்குத் தெரியுமா?" என்றார் மானேஜர்.

இதற்குள்ளாக வெளியே சென்றிருந்த லாட்ஜ் சிறுவன் திரும்பி வரவும், அவனோடு தன்னறைக்கு வந்தான் கந்தன்.

அறையிலிருந்த ஒரு கிளாசை எடுத்து அதில் இரண்டு தடவை ஊற்றி பாட்டிலைக் காலி செய்துவிட்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். வெளியே சென்றிருந்த ஐந்தாம் எண் அறைக் காரர் திரும்பி வந்துகொண்டிருந்தார். கடைசி அறையை நோக்கியவாறே தன்னறைக்குச் சென்றார்.

கந்தனுக்கு மீனா ஒருமுறை அவனிடத்துக் கூறியது நினைவு வந்தது. சிலருக்கு ஆசை ஏற்படுமாம்; ஆனால் தீர்த்துக்கொள்ள முடியாதாம். சோலைப்பிள்ளைக்குக்கூட அதே வியாதி என்று மீனா கூறியதும் நினைவுக்கு வந்தது. ஆரம்பத்திலே ஒரு பொலிகாளையெ வச்சிகிட்டுக் காலே நேரத்துலே மைதானத் துலே நின்னுக்கிட்டு நாளைக்கு நாலும் அஞ்சும் சம்பாதிச்சவன்; இன்னைக்கு என்னடான்னா, வீடு என்ன, நெலம் என்ன, கார் என்னன்ட்டு இருக்கான்! கந்தன் சிகரெட்டைத் தூக்கி எறிந்துவிட்டு, அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தான். வெளியே ஜிப்பாக்காரரும் மானேஜரும் மட்டும்தான் இருந்தனர்; மற்ற இருவரும் சென்றுவிட்டனர். சாவியை மானேஜரிடம் கொடுத்துவிட்டுத் தெருவில் இறங்கினான் கந்தன். எதிராக ஒரு சைக்கிள் ரிக்ஷா வந்தது. ரிக்ஷாவை நிறுத்தி அதில் ஏறிக்கொண்டு, “ஷெனாய் நகர்” என்றான் கந்தன். ரிக்ஷாக்காரன் வண்டியைத் திருப்பினான்.

தரகர் அந்தோணி ஷெனாய் நகரில்தான் குடியிருந்தார். வீடு, குடிமனை, நிலம், கார், ஆண்கள், பெண்கள், இன்னும் எதை எல்லாம் வாங்கி விற்கலாமோ அல்லது வாடகைக்கோ குத்தகைக்கோ அமர்த்திக் கொள்ளலாமோ, எல்லாமே அவரது தரகுத் தொழிலுக்கு உட்பட்டவைதான். ஒரு முறை வீணை கற்றுக்கொள்வது வசதியான குடும்பங்களில் தொற்று நோய் போலப் பரவியபோது, இது பொப்பிலி வீணை, அது திருவனந்தபுர வீணை; இந்த வீணையில் பஞ்சமம் ‘ஏ ஒன்’. அது ஏகாண்ட வீணை; ஆனால், மரம் பலா இல்லை என்றெல்லாம் கூடப் பேசக் கற்றுக்கொண்டார். இருந்தாலும், கல்யாணமே செய்துகொள்வதில்லை என்று நாற்பத்தைந்து வயது வரை வீராப்பாக இருந்துவிட்டுப் பிறகு சபலத்துக்கு ஆளாகும் ஆண்மகன்கள், இரண்டாங் கல்யாணத்துக்கு இடந்தராத வயதில் மனைவிகளை இழந்துவிட்ட அரைக் கிழங்கள், முழுக்கிழங்கள், இன்னும் ‘ஒன்று’ போதாதென்று நப்பாசைப்படும் அதீத ஆண்கள் ஆகியோர்க்கு விவாக பந்தமில்லாத வாழ்க்கைத் துணைகள் அமர்த்தித் தருவதுதான் அவரது பிரதான தொழிலாக இருந்தது. சில பணக்கார,

நடுத்தர விதவைகளுக்கும் அவர் தொழில் முறையில் உதவிய தாகப் பேச்சு உண்டு. ஒரு கல்லூரி மாணவி கருச்சிதைவு செய்துகொள்ள அவர் உதவினார். மாணவி இறந்துபோனாள். அதன் விளைவாக அந்தோணி மீது வழக்குத் தொடரப்பட்டு, இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனையை அனுபவித்து வெளியே வந்தார். அதன் பிறகுதான் தரகர் அந்தோணி தனது அமெரிக்க சித்தாந்தத்தை மாற்றிக்கொண்டார்: சமுதாயத் திலுள்ள ஒரு தேவையைப் புரிந்து கொண்டு, அதனைப் பூர்த்தி செய்வதன் மூலமே பொருளீட்ட முடியும் என்பது உண்மையே ஆயினும், கண்ணுக்குப் படுகிற எந்தத் தேவையையும் பூர்த்தி செய்ய முற்படுவது ஆபத்தில் கொண்டுவிடலாம் என்று அவர் புரிந்துகொண்டதே அம்மாற்றம்.

பல தொழில்களில் கவனத்தைச் சிதறடிக்காது, ஒரு குறிப் பிட்ட தரகுத் தொழிலிலேயே அந்தோணி முழுக் கவனத்தை யும் செலுத்த வேண்டும் என்று அந்தோணியின் நண்பர்கள் சிலர் அந்தோணிக்கு அறிவுரை செய்தனர். அந்தோணி இவ் வறிவுரையை ஏற்றுக்கொள்ள மறுத்தார். பலதரப்பட்ட தொழில் களில் ஈடுபடுவதன் மூலந்தான் பலதரப்பட்ட மனிதர்களோடும் தொடர்பு கிடைக்கும் என்பது அந்தோணியின் வாதம். எடுத்துக் காட்டாக, ஒருமுறை அந்தோணி ஒரு பேராசிரியருக்கு வீடு கட்ட ஒரு இடம் முடித்து வைத்தார். பேராசிரியரின் நட்பு கிடைத்தது. அதைப் பயன்படுத்தி ஒரு எஞ்ஜினியரின் மகளுக்குப் பல்கலைக்கழகத் தேர்வில் அதிக மார்க்குகள் வாங்கிக் கொடுத்தார். எஞ்ஜினியரின் சிநேகம் ஏற்பட்டது. எஞ்ஜினிய ரின் உதவியால் நகரின் பிரபல சிமென்ட் வியாபாரியின் தொடர்பு கிடைத்தது. சிமென்ட் வியாபாரியின் பழைய காரை சோலைப்பிள்ளைக்கு முடித்து வைத்தார். பிறகு சோலைப்பிள்ளையின் 'குழந்தைகளில்' ஒன்றை ஒரு அரசாங்க அதிகாரிக்கு ஏற்பாடு செய்தார். அவ்வதிகாரியின் உதவியினால் ஒரு மருந்துக் கடைக்காரருக்கு 'ஸ்பிரிட் லைசென்ஸ்' வாங்கிக் கொடுக்க முடிந்தது. மருந்துக் கடைக்காரரை வைத்துக்கொண்டு நகர 'டிரக் இன்ஸ்பெக்ட'ருடைய நட்பினைப் பெற்றார். 'டிரக் இன்ஸ்பெக்ட'ருக்கும் நகர மருந்துக் கடைக்காரர் களுக்கும் இடையே தொடர்ந்து தரகு வேலை பார்த்ததனால், எல்லா மருந்துக் கடைக்காரர்களையும் வளைத்துக்கொள்ள முடிந்தது. அவர்களை வைத்துக்கொண்டு டாக்டர்கள், டாக்டர் கள் மூலம் வைத்தியக் கல்லூரித் தேர்வுகளில் வெற்றிகள், சில சமயங்களில் வைத்தியக் கல்லூரியில் இடங்கள் என்று தரகர் அந்தோணியின் தொழில் வளர்ச்சியும் வியாபகமும் அடைந்தது. பிறகு இந்தத் தொழில்களிலெல்லாம் மக்களால்

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், கட்சி பேதமின்றி, தரகு வேலை புரிய ஆரம்பிக்கவும்தான், அந்தோணி அநேகமாக ஓய்வுபெற வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். இப்போது அவருக்கு ஷெனாய் நகரில் ஒரு வீடு இருக்கிறது. ஒரு மகன் இஞ்ஜினியர்; வடக்கே ரயில்வேயில் வேலை பார்க்கிறான். மற்றொருவன் டாக்டருக்குப் படிப்பதாகச் சொல்லுகிறான். அவரது மகளை ஒரு ரைஸ்மில் முதலாளி அவருக்கு ரூபாய் இருபதாயிரம் கொடுத்து முறையாகக் கல்யாணம் செய்து கொண்டுள்ளார். (அவளும் பி.எஸ்.சி. வரை படித்தவள்.) ரைஸ்மில் முதலாளியின் ஒரு கார் அநேகமாக எப்போதும் தரகர் அந்தோணியின் வீட்டு வாசலில்தான் நிற்கிறது.

ஐம்பத்தைந்து வயதாகிவிட்ட அந்தோணியிடத்துக் கந்தனுக்கு மதிப்பு உண்டு. அந்தோணியும் அவரது பழைய நண்பர்களில் உருப்படியானவர்களை இன்னும் மறந்து விடாது, அவ்வப்போது அவர்களுக்குச் சிறு சிறு உதவிகள், பெரும் பெரும் ஆலோசனைகள் இவற்றைத் தருவதுண்டு. பொதுவாக ஆறுதலும் உலக ஞானமும் வேண்டுமளவுக்குத் தருவார். வீட்டை விற்பதில் சோலைப்பிள்ளையால் ஏமாற்றப் பட்டுவிட்ட கந்தன் அந்தக் காலத்திலேயே தரகர் அந்தோணி யிடம்தான் சென்றான். சோலைப்பிள்ளையினுடைய காலையோ கையையோ வாங்கிவிடப் போவதாக அவரிடத்து ஆத்திரத்தில் பேசினான். அந்தோணி அவனுக்குச் சமாதானம் சொன்னார்.

“தம்பி, ஏமாத்தறவங்களும் ஏமார்றவங்களும் இருக்கிறது தான் உலகத்தின் தன்மை; அதன் அழகுன்ட்டுக்கூட எனக்குப் படுது. எல்லோரும் நேர்மையா நடந்துகிட்டா, வாழ்க்கைலே போட்டியோ முன்னேற்றமோ இருக்காது; வாழ்க்கையே ‘சப்’னு இருக்கும். என்னைப் பொருத்தவரை, யாரையாவது கவுக்க, எதைப் பத்தியாவது சூழ்ச்சி செய்யும்போதுதான் எனக்கு உசிரோட இருப்பதாகவே தெரியிது. இல்லாட்டி ஏதோ தலையாட்டி பொம்மை மாதிரி இருப்பதுபோல் தான் இருக்கு. சூழ்ச்சி செய்யற தெறமெதான் மனுஷனே மனுஷனாக்குது; அதுதான் மனிதருக்கும் மிருகங்களுக்கும் உள்ள பெரிய வித்தியாசம். சூழ்ச்சி செய்யத் தெரியாதவன் வாத்தியாராவோ குமாஸ்தாவாவோ வாழ்நாள் பூரா இருக்க வேண்டியது தான். அவன் பெரிய வக்கீலாவோ, டாக்டராவோ, வியாபாரி யாவோ, அரசியல்வாதியாவோ, போர் வீரனாவோ வர முடியாது. மந்தரம் கிந்தரம்னு பேசறாங்க. மந்தரமும் கெடையாது; மாயமும் கெடையாது. தந்தரந்தான் மந்தரம். யுத்த தந்தரம்னு தானே சொல்றோம்? யுத்த மந்தரம்னா சொல்றோம். இது நா ஒண்ணும் புதுசாக் கண்டுபிடிச்ச உண்மை இல்லை. இந்த

உண்மை, மெய்யாச் சொல்லப்போனா, பைபிள் காலத்துக்கும் முன்னதான உண்மை. பைபிள்லேந்து ஒரு உதாரணம் மட்டும் சொல்றேன். கடவுள் சாத்தானெ பரலோகத்திலேந்து விரட்டி யடிச்சிடுறாரு. சாத்தானுக்குப் படுகோபம். எப்படியும் கடவுள் மீது வஞ்சம் தீத்துக்கணும்னு துடிக்கிறான். ஆனா கடவு ளோட மோத இவனுக்கு சக்தி இல்லை. சாத்தான் இங்கே என்ன செய்யறான் தெரியுமா? ஒரு சூழ்ச்சி பண்ணறான். ஒரு சூழ்ச்சி பண்ணி ஏவாளை ஏமாத்தி, ஏவாளையும் ஆதாமை யும் கடவுளே சொர்க்கத்துலேந்து விரட்டியடிக்குமாறு செய்யறான். தோல்வி யாருக்கு, கடவுளுக்கா சாத்தானுக்கா? கடவுளுக்குத்தான். இது எங்க மதத்தில் ஒரு முக்கியமான பாடம்னு நெனெக்கிறேன். ஏன், ராமன் பெரிய வீரன்தான். ஆனா சூழ்ச்சி செஞ்சிதானே வாலியைக் கொல்ல முடியுது? ஆசை காட்டிக் கூடப் பொறந்தவங்களெப் பிரிச்சு, வீபிஷண னைத் தம்பக்கம் இழுத்துக்கிட்டுத்தானே இராவணனைக் கொன்னு சீதையை மீட்டாரு? கண்ணன் கதையைத்தான் எடுத்துக்கோயேன். தர்மனை ஜெயிக்க வைக்கத்தான் கண்ணன் எத்தனை சூழ்ச்சிக செய்யறாரு! பைபிளைப் படிக்கிறோம், ராமாயணத்தைப் படிக்கிறோம், பாரதத்தைப் படிக்கிறோம்; ஆனா இந்த விஷயங்களை எல்லாம் நாம புரிஞ்சுக்கறதே இல்லை" என்று சொல்லித் தரகர் அந்தோணி வருத்தப்பட்டுக் கொண்டார்.

"அதெல்லாம் சரி, ஆனா நம்மெ ஒருத்தன் ஏமாத்தும் போது..." என்று ஆத்திரத்தோடு ஏதோ சொல்ல வாயெடுத் தான் கந்தன்.

"பொறு தம்பி. என்னெப் பொருத்தமட்டிலே, என்னை ஒருவன் ஒரு வளிலே ஏமாத்தினா, அதே வளிலே வேறு யாரெ நான் ஏமாத்த முடியும்னுதான் யோசிப்பேன். என்னை ஏமாத்தினவன் கையெக் காலே வாங்கிடலாமான்னு யோசிக் கவே மாட்டேன். இந்தக் கத்தியையும் கபடாவையும் தூக்கறது எந்தப் பிரச்சினையையும் தீக்காதூனு யேசுநாதர்லேந்து காந்தி வரை சொல்லியிருக்காங்க. நீ அவன் கையெக் காலே வாங்கறே; அவன் ஆள் வச்சு ஒன் தலையை வாங்கிப்புடறான். அப்புறம் என்ன பிரயோசனம்? ஒன்னே ஒருத்தன் ஏமாத் தினா அவன் ஒனக்கு ஒரு தந்திரம் கத்துக்கொடுத்தான்னு வச்சிக்க. அவன் ஒரு வகைலே ஒனக்குக் குரு. அதை மட்டும் மறந்திராதே" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து கந்தனை சமாதானப்படுத்த முயன்றார் அந்தோணி. அவர் எப்போதும் அப்படித்தான். குட்டி பிரசங்கங்கள் செய்வதில் சமர்த்தர். இன்டர்மீடியட் வரை வேறு படித்தவர். சமயங்களில் ஆளுக்

கேற்றாற்போல ஆங்கில மேற்கோள்கள் காட்டுவார் – அதாவது ஆங்கிலமே தெரியாதவர்களிடத்து. அவரது பிரசங்கத்தி னால் சமாதானம் அடையாத கந்தன், "இருந்தாலும் நம்ம பணத்தெ ஒருத்தன் தாப்பாப் போட்டான்கும்போது சும்மா இருந்தா மானங்கெட்ட பொளெப்பில்லையா?" என்று தொடர்ந்தான்.

"எதெத் தாப்பாப் போட்டான்? பணத்தத்தானே? பணமே ஒரு மானங்கெட்ட விஷயந்தானே?" என்றார் அந்தோணி.

"எப்படி?" என்றான் கந்தன்.

"சொல்றதெக் கேளு. நான் பள்ளிலே படிக்கும்போது – அப்ப எஸ்.எஸ்.எல்.சி. படிச்சிட்டிருந்தேன் – ஒரு நா கிரவுண்டிலே விளையாடிட்டிருந்தோம். சாயங்காலம் அஞ்சு, அஞ்சரை மணிதான் இருக்கும்; இன்னும் பொளுது சாயலை. ஒரு பணக்கார வீட்டுப் பையன் – சோமு நாடார் மகன்ட்டு நெனெக்கிறேன் – எவன் இந்த மோனேலேந்து அந்த மோனே வரைக்கும் பிறந்த மேனியா ஓடறானோ, அவனுக்குப் பத்து ரூபாய் தருவேன்னான். நாங்க எல்லோருமே தடிப்பசங்க. சோமு நாடார் மகன் சொன்னதைக் கேட்டு எல்லாரும் சிரிச்சாங்க. ஒரு சிலர் யோசிச்சாங்க. ஆனா நா சிரிக்கவும் இல்லை; யோசிக்கவும் இல்லை. 'ரெண்டு தரம் ஓடினா, இருபது ரூபாய் தருவயா'ன்ட்டு மட்டும் சோமு நாடார் மகனேக் கேட்டேன். முடியாதுன்னான். சரி, கெடெச்சது லாபம்ன்ட்டு, அவன் எப்படிச் சொன்னானோ அப்படியே ஓடிட்டு, நிறுத்தி நிதானமா வேட்டியையும் சட்டையையும் போட்டுக்கிட்டு, சோமு நாடார் மகன்கிட்டேந்து பத்து ரூபாயை ஜெயிச்சேன். மத்தப் பசங்க எல்லாம் யாரெக் கேலி பண்ணினாங்கன்னு நெனெச்சே? என்னை இல்லை; சோமு நாடார் மகனெத்தான். தோத்தவன் அவன்தானே? புத்தருக்கு ஞானோதயம் வந்த மாதிரி எனக்கும் அப்பதான் ஞானம் ஏற்பட்டது" என்றார் அந்தோணி.

"என்ன ஞானம்?" என்றான் கந்தன்.

"இந்தப் பணமே ஒரு மானங்கெட்ட விஷயம்ங்கற ஞானம் தான்."

கந்தனுக்கு ஏதோ சமாதானம் ஏற்பட்டதாகப் பட்டது.

கந்தன் சைக்கிள் ரிக்ஷாவில் தரகர் அந்தோணியின் வீட்டு முன் வந்திறங்கினான். வாயிற்படியை மறைத்துக்கொண் டிருந்த காரைக் கடந்து வீட்டினுள் நுழைந்தான். "சார்" என்று

குரல் கொடுத்தான். ஒரு வேலைக்காரச் சிறுமி வெளியே வந்து, "யாரது?" என்றாள்.

"அய்யா இருக்காரா?" என்றான் கந்தன்.

"உங்க பேரென்ன?" என்றாள் சிறுமி.

"கந்தன்ட்டு சொல்லு."

"அய்யா டிப்பன் சாப்பிடறாரு; இப்படி வந்து உக்காருங்க" என்றாள் சிறுமி. கந்தன் நடுவறையில் இருந்த இரண்டு சோபாக்களில் ஒன்றில் உட்கார்ந்துகொண்டான். சிறுமி மின்விசிறியைத் தட்டிவிட்டு உள்ளே சென்றாள். கந்தன் சுற்றுமுற்றும் பார்த்தான். சுவரில், பெரிய சைஸ்ஸில் ரைஸ்மில் முதலாளியும் அந்தோணியின் மகளும் மணக்கோலத்தில் இருந்த படம் ஒன்றும், யேசுநாதர், புத்தர், காந்தி மூவர் உருவங்களையும் கொண்ட ஒரு காலண்டரும் காணப்பட்டன.

சிறிது நேரத்தில் அந்தோணி அறையினுள் நுழைந்தார். நல்ல கருப்பு. நல்ல உயரம். வழுக்கைத் தலை. தங்க பிரேம் மூக்குக் கண்ணாடியும், வெள்ளை பனியனும், வெள்ளை வேட்டியும் அணிந்திருந்தார். உடையில் ஒரு பொட்டு அழுக்கு இல்லை. அவரைக் கண்டதும், கந்தன் எழுந்து நின்று வணக்கம் சொன்னான்.

"கந்தனா? உட்கார் தம்பி" என்றுகொண்டே, அந்தோணி எதிர் சோபாவில் அமர்ந்துகொண்டார்.

"காபி சாப்பிடறயா?"

"இல்லீங்க, இப்பத்தான் சாப்பிட்டு வந்தேன்."

"மீனா எப்படி இருக்கு?"

"இருக்கு. அது விஷயமாத்தான் ஒங்களெப் பாத்திட்டுப் போகலாம்னு வந்தேன்."

"ஏதாவது விவகாரம்னா மட்டுந்தான் அந்தோணி சார்கிட்டே வருவே; நல்ல நெலெலெ இருக்கும்போது ஒரு வாட்டி இந்தப்புறம் தலை காட்ட மாட்டே" என்றுவிட்டு இலேசாகச் சிரித்தார் அந்தோணி.

"அப்படி ஒண்ணுமில்லே சார். இருந்தாலும் நீங்க சொல்றதிலும் உண்மை இருக்கத்தான் செய்யுது; ஒரு ஒதவி வேணும்ன்ட்டுதான் ஒருத்தர்கிட்டே போறோம்."

"அப்படி இருக்கக்கூடாது தம்பி. யார் ஒதவி எப்போ தேவைப்படும்னு சொல்ல முடியாது. அவனா அவன்

ஒரு அற்பப்பயல், அவன் ஒதவி நமக்கு எப்பத் தேவைப்படப் போகுதுனு ஒருத்தனெப்பத்தி நெனெச்சிருப்போம்; ஆனா ஒரு நேரத்துலே அதே ஆளோடெ ஒதவி தேவைப்படும். அப்பத் தான் நமக்குப் புத்தி வரும். அதுனாலேதான் யாரையும் ஒரு போதும் அசட்டை செய்திடக் கூடாது" என்று உபதேசம் செய்யத் தொடங்கினார் அந்தோணி.

"நான் ஒங்களே அசட்டை செய்யலேயே?" என்றான் கந்தன்.

"நீ என்னெ அசட்டை செய்திட்டேன்னா நா இப்ப சொன்னேன்? பொதுவா உலகப் போக்கப் பத்திதான் சொல்லிட்டுருந்தேன்... சரி, இப்ப என்ன விஷயம்?" என்றார் அந்தோணி.

"அதான் சொன்னேனே, மீனா விஷயமா."

"மீனாவுக்கு இப்ப என்ன?"

"நல்லாத்தான் இருக்கு. எனக்குத்தான் ஒடம்புக்கு முன்னே மாதிரி இல்லே. மீனாவே ஒரு நல்ல இடமாப் பாத்து ஒரு ஏற்பாடெப் பண்ணிட்டா எனக்கு கொஞ்சம் நிம்மதியா இருக்கும்" என்றான் கந்தன்.

"போடா, பைத்தியக்காரா. மீனா தங்கமான பொண்ணு; அது இல்லாட்டி நீ இன்னும் குட்டிச்சுவராப் போவே."

"நான் எப்படியும் போறேன். அது எங்காச்சிம் நல்லா இருந்தாப் போதும்."

"என்ன கந்தா, நீ என்ன எல்லாம் மின்னக் காலம் மாதிரி இருக்கூன்னா நெனெச்சிட்டிருக்கே? அயோக்கியத்தனம் பெருத்துப் போச்சு; வாய்ச் சுத்தங்கறது மருந்துக்குக் கூடக் காண முடியறதில்லே. உதாரணமாப் பார், போன வருஷம் அந்தச் சம்பகத்தெ இரும்புக்கடை சுந்தர பாண்டியனுக்கு நான்தான் முடிச்சு வச்சேன். இத்தனைக்கும் முடிக்கறதுக்கு முன்னாலே, சுந்தரபாண்டியோடெ சம்சாரத்தெக் கலந்து பேசினேன். அவுங்களே, 'எனக்கு ஆஸ்த்துமா; என்னாலே எம் வீட்டுக்காரருக்குச் சந்தோஷமில்லே; அவர் பிரியப்படி நீங்களே அவருக்கு ஒரு நல்ல ஏற்பாடா செய்துவைங்க'ன்னிச்சு. நானும் செய்து வைத்தேன். ஆனா ஒரு வருஷமாகலே, அந்த அம்மாவும் அதோட கூடப் பொறந்தவங்களுமாச் சேந்து சம்பகத்தெக் குளோஸ் பண்ணிட்டாங்களே! இன்னிவரைக்கும் போலீசுக்கு ஒரு துப்புக்கெடெக்கலயாம்."

"ஆமாம், அந்தோணி சார். வில்லங்கம், சங்காத்தம் எதுவும் இல்லாத எடமாத்தான் பாக்கணும்" என்றான் கந்தன்.

"நீ என்ன புரிஞ்சிக்காம பேசறே? வில்லங்கம், சங்காத்தம் இல்லாத இடம் கெடெக்கறதுதானே அபூர்வமா இருக்கு இந்தக் காலத்திலே?"

"நீங்க பாத்தா முடியாதா, சார்?"

"சம்பகத்துக்கு நான்தான் பாத்தேன்; விளங்கலேயே!"

"அதுக்கென்ன சார். நூத்துலே ஒண்ணு அப்படியும் போயிடும்."

"நூத்துலே ஒண்ணா? நூத்துலே தொண்ணூறுன்னு சொல்லு... சமயத்துலே நம்ம ஆளே சேம் சைடுலேயே ஃபவுல் பண்ணிடுது."

"எப்படி?" என்றான் கந்தன்.

"ஒனுக்கு தெரியுமோ தெரியாதோ, வில்லியம்ஸ் ரோட்டுலே கோகிலான்ட்டு ஒரு பொண்ணு இருந்திச்சு. பாத்தா ரொம்ப ஒளுங்காத்தான் தெரிஞ்சது. தலையெடுத்து ஒரு ஆம்பிளேயெப் பாக்காது. அதெ பூதமய்யர் ஓட்டல் மானேஜருக்கு முடிச்சு வச்சேன். மானேஜர் நல்ல கலர்; மன்மதன் மாதிரி இருப்பான். இந்தக் களுதே என்னடான்னா அவன் கூட ராணி மாதிரி இருக்கிறதெ விட்டிட்டு, ஓட்டல்ல தண்ணி எடுத்த ஒரு நாயர் பையனோடெ ஓடிரிச்சு. அய்யன் எனக்கு ஆயிரம் ரூவா தந்திருந்தான்; வீட்டுக்கு வந்து என் சம்சாரம் முன்னாடி கூச்சப் போட்டு எம்மானத்தெ வாங்கினான்."

"மீனா அப்படில்லாம் இல்லே. நாம ஒண்ணெச் சொன்னோம்னா அது நாம போட்ட கோட்டே உசிரு போனாலும் தாண்டாதில்லே" என்றான் கந்தன்.

"நம்ம கன்ட்ரோல்லே இருக்கற வரைக்கும்தானே நாம போட்ட கோட்டெத் தாண்டாது? நம்ம கன்ட்ரோலெ விட்டுப் போயிட்டா?" என்றுவிட்டு அந்தோணி சிரித்தார்.

"இல்லீங்க அந்தோணி சார், மீனாவெ ஒங்களுக்குத் தெரியாது. நான் எல்லாத்தையும் அதுகிட்டே வெளக்கமாச் சொல்லி, அதோட முழு சம்மதத்தையும் வாங்கிட்டா, அது கொடுத்த வாக்கெ மீறாது."

"நீ வெளக்கமாவே சொல்லிடுவே; அதுவும் வாக்குக் கொடுத்துடும். ஆனா..." என்றிழுத்தார் அந்தோணி.

"ஆமாம் ஓங்களுக்கு என்ன ஆயிரிச்சு?" என்றான் கந்தன்.

"வயசா?"

கந்தன் சிரித்தான்.

"வயசைக் கேக்கலே. எப்போதும் 'அது அப்படி ஆயிடும்; இது இப்படி ஆயிடும்னு யோசனெ பண்ணிட்டிருக்கக் கூடாது. துணிஞ்சு ஒரு கார்யத்துலே இறங்கணூம்'பீங்களே. இப்ப மட்டும் தொளவக்கணை யோசனை ஆரம்பிச்சிட்டீங்களே!" என்றான் கந்தன்.

"ஆமாம், ஆமாம். அதுவும் வயசு சம்பந்தப்பட்ட விஷயந் தான். எம்மக கல்யாணத்துக்குப் பிறகு நான் கொஞ்சம் ஜாக்கிரதையாத்தான் இருக்க வேண்டிருக்கு. உனக்கு அந்த அம்பிகா கேசு தெரியுமில்லே?"

"இப்ப ஏதோ சினிமாவிலே நடிக்குதாமே, அந்தப் பிள்ளே தானே. ஆமாம் ஆமாம், இப்பத்தான் நெனெப்புக்கு வருது. உங்கபாடு ரொம்ப மோசமாய் போயிருக்கும்னு சொல்லிட் டாங்க."

"மோசமாவா, தற்கொலை பண்ணிட்டிருப்பேன். மகராசன் நல்ல நேரத்துலே வந்து ஒதவினான்" என்றுவிட்டு, "அதுனாலேதான் இந்த மாதிரி சங்காத்தங்களே இனிமே வச்சுக்கிறதில்லைனு முடிவுக்கு வந்திருக்கேன்" என்றார் அந்தோணி.

இந்த நேரத்தில் வீட்டுக்காரச் சிறுமி ஒரு தைல பாட்டி லோடு வந்து அந்தோணியிடத்து, "அம்மா காத்திட்டிருக்காங்க" என்று அறிவித்தாள். அந்தோணி எழுந்திருந்து தைல பாட்டிலைச் சிறுமியிடத்திருந்து வாங்கிக்கொண்டு, "சரி கந்தா, சேஃபா ஏதாவது இடம் கெடச்சா மீனாவுக்குப் பாக்கறேன். நீ மீனாவெ ஒரு டாக்டர் கிட்டே காட்டி, கம்ப்ளீட்டா டெஸ்ட் பண்ணி, அதுக்கு டானிக் கீனிக் வாங்கிக் குடு. புஷ்டியாச் சாப்பிடச் சொல்லு. காய், கறி, பால், தயிர், முட்டை, மீன் நிறையச் சேக்கச் சொல்லு. வெளியே அதிகம் போகச் சொல்லாதே. இன்னும் ரெண்டு மூணு மாசத்துலே ஒனக்குச் சொல்லி அனுப்பறேன். நீ அப்ப வந்தாப் போதும்" என்று கூறிவிட்டு, "பிறகு சந்திக்கலாம்" என்றார் அந்தோணி. கந்தன் எழுந்து அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டான்.

கந்தனுக்கு ஏமாற்றமாக இருந்தது. தரகர் அந்தோணி இவ்வளவு நைசாகத் தப்பித்துக்கொள்வார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. 'அந்தோணி சாரும் மாறிட்டார்' என்று

தனக்குள் சொல்லிக்கொண்டான். அவன் ஷெனாய் நகருக்கு இதற்கு முன்னால் வந்தது இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு. இப்போது நகரம் மிகவும் விஸ்தாரம் அடைந்திருந்தது. எங்கு பார்த்தாலும் புதுப்புது வீடுகள்; எல்லாமே மாடி வீடுகள். ஷெனாய் நகரில் முதல் முதலாகக் கட்டப்பட்ட ஓரிரு வீடுகள் மட்டும் ஒளியிழந்து, பள்ளிச் சிறுமிகள் மத்தியில் நிற்கும் பிச்சைக்காரக் குழந்தைகள் போலத்தென்பட்டன. எங்கு பார்த்தாலும் வளர்ச்சி; எங்கு பார்த்தாலும் மாறுதல். ஆனால் தன் வாழ்க்கையில் மட்டும் மாறுதலே இல்லை போல் அவனுக்குப் பட்டது.

எல்லாரும் அவனை விட்டுவிட்டு எங்கேயோ சென்று கொண்டிருந்தனர். அவர்களுக்கு எல்லாம் எங்கு செல்ல வேண்டும், எப்படிச் செல்ல வேண்டும் என்று தெரிந்திருந்தது. அவனுக்கு மட்டும் தெரியவில்லை. மீனாவுக்கும் தெரிய வில்லை. திருவிழாக் கோலாகலத்தில் எல்லாரும் உற்சாகத் தோடு அங்குமிங்கும் சென்றுகொண்டிருந்தனர். கந்தனும் மீனாவும் மட்டும் எங்கு போவது, எதைபபார்ப்பது, எதை வாங்குவது, எப்படி வாங்குவது ஒன்றும் அறியாமல் தெரு வோரம் தனித்து உட்கார்ந்திருந்தனர். அவனுக்கும் அவளுக் கும் இருந்ததெல்லாம் 'இன்று' மட்டுந்தான்; 'நாளை' கூடப் பிடிபடவில்லை. 'நாளை திங்கக்கெழமை' என்று அர்த்த மில்லாமல் நினைத்துக்கொண்டான் கந்தன். தேதி? தேதியை யார் கண்டது? நாயுடு வாடகைக்கு வந்தால் தேதி ஆறு; அவ்வளவுதான்.

ஷெனாய் நகர் வீடுகளின் காம்பவுண்டுகளுக்குள் சிறுவரும் சிறுமியரும், பந்தோ, பாண்டியோ, ஓடிப்பிடித்தோ விளை யாடிக் கொண்டிருக்கின்றனர். இருட்டாகிற நேரம்; ஆனால் இன்னும் முற்றிலும் இருட்டாகவில்லை. வீடுகளிலெல்லாம் விளக்கு சற்றே அசட்டுப் பிரகாசத்தோடு எரிகின்றன. மேடு பள்ளங்களோ, கோணல் மாணல்களோ இல்லாது நேராகச் செல்லும் சாலைகள் வழியேயும், குறுக்குச் சாலைகள் வழியே யும் கந்தன் நடக்கிறான். அவ்வப்போது ஓரோர் பர்லாங்கு தூரத்தில் வந்து நிற்கும் சிட்டி பஸ்ஸிலிருந்து வேலைக்கோ, வேறெங்கோ சென்றுவிட்டுத் திரும்புபவர்கள் இறங்கு கின்றனர் – ஆடவரும் பெண்டிரும், யுவர்களும் யுவதிகளும், சிறுவரும் சிறுமியரும். முகங்களில் சற்றே உடற்களைப்பு; ஆனால் அதை விஞ்சி நிற்கும் மனக் களிப்பு. சிரித்துப் பேசி விடைபெற்றுக் கொள்கின்றனர். அவ்வப்போது ஒரு கார் விரைந்து கந்தனைக் கடந்து செல்கிறது. சாலையோரம் இருக்கும் மின்விளக்குகள் சொல்லி வைத்தாற்போல ஓரே நேரத்தில்

கண்களைத் திறந்து நீல ஒளியைப் பொழியத் தொடங்கு கின்றன. வரிசையாக நிற்கும் வேப்பமரங்கள் அவ்வப்போது முன்னறிவிப்பு இல்லாமல் சலசலத்து ஓய்கின்றன. சந்தோஷமும், எந்தவிதத் தீங்கும் சம்பவிக்காது என்ற உறுதியும் பழக்கப்பட்டு விட்டதால், அவற்றைப் பெரிதுபடுத்தாது இனி வருவது இப்போதுள்ளதைக் காட்டிலும் சிறப்பாகவே இருக்கும் என்ற நம்பிக்கையில் ஊறிப் போயிருக்கும் ஷெனாய் நகர வாசிகள் தத்தம் வீடுகளுக்குள்ளேயே உலகம் முழுமையும் கண்டு கொண்டிருக்கும் நேரத்தில் அவர்கள் நடுவே, ஒரு வேற்று நாட்டவன் போல் கந்தன் நடந்து செல்கிறான். நடையில் வேகமோ நோக்கமோ இருப்பதாகத் தெரியவில்லை. அவனைப் பொருத்தமட்டில் இன்னும் கொஞ்ச நாட்கள் தாம். ஆனால் அவனுக்குப் பிறகும் அவர்கள் எல்லாம் இன்னும் பெரிய வீடுகளைக் கட்டிக்கொண்டு அவற்றில் வசிப்பார்கள்; அவற்றில் இன்னும் பிரகாசமான விளக்குகள் எரியும். அவ் விளக்குகளின் ஒளியில் இன்னும் இன்னும் மகிழ்ச்சி நிறைந்த குழந்தைகள் விளையாடுவார்கள். கந்தன் சுற்றுமுற்றும் பார்த் தான். வெளியுலகம் இருட்டி விட்டதால், வீடுகளுக்குள் எரிந்த விளக்குகள் மிகவும் பிரகாசம் நிறைந்து தோன்றின. வீடுகளை ஒட்டியிருந்த சிறு சிறு தோட்டங்களில் மட்டும் ஆங்காங்கே பசுங் கருந்திட்டுகள் தென்பட்டன. வீடுகளுக்கு உள்ளே ஆர்ப் பாட்டமோ, பரபரப்போ இல்லாமல் திட்டமிட்ட முறையில் மன நிறைவோடு அன்றாட வாழ்க்கையைச் சுவைத்துக் கொண் டிருந்த மனிதர்கள். அவ்வீடுகளைப் பார்த்துக்கொண்டே நடந்தான் கந்தன். ஒரு நாய் அவனைப் பார்த்துக் குரல் கொடுத்தது; ஒரு காகம் அவன் தலையையொட்டித் தாழ் வாகப் பறந்து சென்றது. டவுனுக்கு இட்டுச் செல்லும் ஒரு குறுக்குப் பாதையை நோக்கிக் கந்தன் சென்றுகொண்டி ருந்தான். ஷெனாய் நகரம் முடிவடைகிறது. ஷெனாய் நகரோடு 'ஒன்று விட்ட' உறவு கொண்டாடும் சில எளிய வீடுகளைக் கடந்தபின் சிவலிங்கபுரம் தொடங்குகிறது. மனித வாடை மூக்கைத் தட்ட ஆரம்பிக்கிறது. கூடவே கொஞ்சம் இரைச்சல்; கொஞ்சம் இருள். அந்த இருளில் ஒரு சிவப்பு விளக்கு 'இது தான் சாராயக்கடை, எண்-13, சிவலிங்கபுரம்' என்று அறிவிக் கும் பலகை ஒன்றை எடுத்துக்காட்டுகிறது.

கடையில் கூட்டம் அதிகம் இல்லை. கந்தன் உட்கார்ந்த தும் அவனுக்கு எதிரே சுவரில் பெரிய எழுத்துகளில் எழுதி யிருந்த வாசகத்தைப் படித்தான்: 'அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தும் நஞ்சு-தெ.சோ.க., சிவலிங்கபுரம் கிளை'. அந்தக் கடைக்குக் கந்தன் வருவது அது முதல் தடவை அல்ல.

அவனுக்குக் கடை மானேஜரைக்கூட ஓரளவு தெரியும். அவர் ஒரு இளைஞர்; சற்றுப் படித்தவர். கடையைத் திறந்தபோது மிகுந்த உற்சாகத்தோடு சுவரில் பெரியதாக 'மரூதியில் வீணடித்த நேரத்தைச் சாராயக் கடையில் சரிக்கட்டுவோமாக' என்று எழுதிப்போடச் செய்தது கந்தனுக்குத் தெரியும். அந்த வாசகம் அவனுக்கும் பிடித்திருந்தது. பல தடவை சாராயக்கடைக்குள் நுழையும்போது அவன் அந்த வாசகத்தைத் தனக்குள் சொல்லிக் கொண்டதுண்டு. ஆனால் அந்த வாசகம் எழுதப்பட்ட பத்து நாட்களுக்குள் ஒருநாள், சிவலிங்கபுரத்திலிருந்து ஆறு மைல் தொலைவிலிருந்த ஆதம்சாபுரத்திலிருந்து சில இளைஞர்கள் சாணிச் சட்டிகளோடு வந்து சாணித் தண்ணீரை வாசகத்தின் மீது வீசினார்கள். மானேஜர் அந்த இளைஞர்களிடம் சென்று, அந்த வாசகத்தைச் சொன்னதே ஒரு முகமதியக் கவிஞன்தான் என்று விளக்கவும், மீதியிருந்த சாணித் தண்ணீரை அவர்கள் மானேஜர் மீது காலி செய்து விட்டு, கல்லாப் பெட்டியையும் கொள்ளையடித்துச் சென்றனர். அதற்குப் பின்தான் தெ.சோ. க.வின் சிவலிங்கபுரத்துக்கிளை தனக்கு மக்களின் வளமான வாழ்க்கையில் இருந்த அக்கறையை வெளிப்படுத்திக்கொள்ள, 'அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தும் நஞ்சு' என்ற வாசகத்தைச் சாராயக் கடையின் சுவரில் எழுதி வைத்தது. கந்தனுக்கு என்னவோ இப்புதிய வாசகம் கொஞ்சமும் பிடிக்கவில்லை; அளவோடு குடிப்பவர்களைக் கண்டால் கந்தனுக்குச் சற்று எரிச்சல்தான் ஏற்படும். மளமளவென்று குடித்துவிட்டுக் கடையை விட்டு வெளியே வந்தான் கந்தன். தரகர் அந்தோணியின் நினைவு வந்தது. 'பெண்டாட்டிக்குத் தைலம் தடவிக் குளுப் பாட்டி விடாற அவசரம்!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவன் அந்தோணியின் 'மனைவி'யைப் பார்த்து இருக்கிறான். மலையாளத்துப் பெண். நல்ல கலர், நல்ல ஃபிகர். அந்தோணியின் மகள் அவருக்குப் பிறக்கவில்லை என்பது தான் பொதுவான நம்பிக்கை. மில் முதலாளிக்கு அவளைப் பேசும்போது, அந்தோணியே அந்த அளவுக்கு ஒத்துக்கொண்டதோடு, அவள் ஒரு நம்பூதிரிக்குப் பிறந்ததாகச் சொன்னதாகவும் சிலர் சொன்னார்கள். 'இந்தப் பணமே ஒரு மானங்கெட்ட விஷயந்தானே?' என்ற எப்போதோ கேட்ட வார்த்தைகள் கந்தன் நினைவுக்கு வந்தன.

சிவலிங்கபுரத்தைக் கடந்து டவுனுக்கு இட்டுச் செல்லும் குறுக்குப் பாதைக்குக் கந்தன் வந்தான். ரோட்டின் ஒருபுறம் ஊருணி இருந்தது. இப்போது அதில் அதிகம் நீர் இல்லை; இருந்த நீர்ப்பரப்பையும் அல்லியும் ஆம்பலும் மறைத்து இருந்தன. தெரு விளக்குகளில் சிலவற்றில் பல்புகள் இல்லை; இருந்தவை

யும் அதிகப் பிரகாசத்தோடு எரியவில்லை. ஊரின் ஒதுக்குப்புற மாதலால், பல ஆண்டுகள் ஆகியும் மின்சாரக் கம்பிகள் மாற்றப் படாததால், விளக்குகள் வெண்மையான ஒளிக்குப் பதிலாகச் செம்மையான ஒளியையே தந்தன. அந்தப் பகுதியிலிருந்த நூற்பு ஆலை ஒன்று பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அடைக்கப் பட்டதிலிருந்து அந்தப் பகுதியே கேள்வி கேட்பாரற்றுப் போய் விட்டது. ஆளரவமற்றுப் போன நூற்புமில் கட்டிடம்தான் அந்தப் பகுதியையே கட்டியாளும் துர்தேவதைபோல, சாலையிலிருந்து சற்றுத் தொலைவில் கருவேல மரங்கள் சூழ, மழையையும், காற்றையும், வெயிலையும், இருளையும் சுமந்து நின்றது. ஒரு காலத்தில் அக்கட்டிடம் கள்ளச்சாராயக் கிடங்காக இருந்ததாகவும், ஊரில் நடந்த ஓரிரு கொலைகள் அங்குதான் திட்டமிடப்பட்டதாகவும் சொல்வார்கள். கந்தன் கடந்து வந்த 'ரயில்வே கிராசிங்'கிலிருந்து சுமார் ஒன்றரை பர்லாங்கு தூரத்திற்கு வீடுகளோ கட்டிடங்களோ கிடையாது. சாலை யின் ஒருபுறத்தில் மட்டும் வரிசையாகப் புளிய மரங்களும் பூவரசு மரங்களும் நின்றன. டவுன் எல்லையை அணுகுவதற்கு முன்னால் தென்படுவது வலது கைப்புறத்தில் ஒரு சிறு வீடும், வீட்டுத் திண்ணையின் ஒரு பகுதியில் இருந்த சிறு வெற்றிலை பாக்குக் கடையும். கடைக்கு எதிரே ஒரு 'ஓர்க்ஷாப்.' ஞாயிற்றுக் கிழமையாதலால் 'ஓர்க்ஷாப்' அடைத்துக் கிடந்தது. 'ஓர்க்ஷாப்' பிலிருந்து இன்னும் இரண்டு பர்லாங்குகள் சென்ற பின்தான் டவுன் ஆரம்பமாகிறது. இவ்விடைவெளியில் இன்னும் கட்டிடங் கள் தலை தூக்கவில்லை. மேற்சொன்ன வெற்றிலைபாக்குக் கடையில் ஒரு மண்ணெண்ணெய் விளக்கு எரிந்துகொண் டிருந்தது. கந்தன் கடைக்குப் பதினைந்து இருபதடி தூரத்தில் வந்துகொண்டிருந்தபோது, வழக்கமாகக் கடையில் உட்கார்ந்திருக்கும் அன்னக்கிளி கடையைவிட்டு வெளியே வந்து கடையருகே நின்றுகொண்டு டவுனுக்குச் செல்லும் திசையில் எதையோ பார்த்துக்கொண்டிருப்பதைக் கந்தன் கண்டான். ஒருமுறை அவளிடம் தீப்பெட்டி வாங்கிய போது அவள் தீப்பெட்டியைக் கந்தன் கையில் கொடுத்தபடியே, அவன் உள்ளங்கையைச் சுரண்டியதை நினைத்துக்கொண்டு, கந்தன் பின்புறமிருந்து அன்னக்கிளியை அணுகிக்கொண் டிருந்தான். கைகளை உதறிக்கொண்டே சற்றுத் தொலைவில் எதையோ நோக்கிக் கொண்டிருந்த அன்னக்கிளியைக் கந்தன் அணுகவும் அவள் பதறிப் போய், "அடியாத்தே!" என்று கத்திக் கொண்டு ஒருபுறம் ஓட முயன்றாள். கந்தன் அவளது கையை இறுகப் பற்றி "என்ன ஓட்டம்?" என்று கடிந்தான். கந்தனைப் பார்த்த அன்னக்கிளி சற்று நிதானம் அடைந்த வளாய், "அங்கே பாருங்கையா, அங்கே பாருங்க, அந்த ரெண்டு

பேரும் அந்த ஆளே கும்கும்னு குத்திக்கிட்டு இளுத்திட்டிருக்காங்க" என்று குழறினாள்.

அன்னக்கிளி குறிப்பிட்ட திசையில் கந்தன் நோக்கினான். சற்றுத் தொலைவில், சாலையின் ஒரு ஓரமாக மூன்று உருவங்கள் தள்ளாடிக் கொண்டு நின்றதை அவனால் பார்க்க முடிந்தது. ஒரு கணம் யோசித்துவிட்டுப் பிறகு நிதானமாக உருவங்களை நோக்கி நடந்தான் கந்தன். உருவங்களுக்குப் பத்துப் பதினைந்து அடி தூரத்திற்கு வந்தவுடன், அரை குறை இருட்டில் இரண்டு பேர் ஒரு மூன்றாவது நபரை அடித்துக் கொண்டும், குத்திக் கொண்டும், இழுத்துக்கொண்டும் இருந்ததைக் கண்டான். மூன்றாவது நபர் நன்றாகக் குடித்த நிலையில், தனது முழுப் பளுவையும் கொண்டு மற்ற இருவரின் இழுப்பைச் சமாளித்துக் கொண்டிருந்ததாகப்பட்டது. இருவரில் ஒருவன் ஒரு கையில் கத்தி போன்று ஒன்று வைத்திருந்தான். கந்தனுக்குத் திடீரென்று உடல் சிலிர்த்தது; வாய் இறுக மூடியது; கண்கள் விரிந்தன. இழுபட்டுக் கொண்டிருந்த மூன்றாம் நபர் சோலைப் பிள்ளை! ஒரு தாவு தாவி மூவர் மத்தியிலும் குதித்தான் கந்தன். சோலைப்பிள்ளையைத் தாக்கிக்கொண்டிருந்தவர்களில் ஒருவனைக் கையாலும், மற்றவனைக் காலாலும் எட்டி அடித்தான். அவர்களில் ஒருவன் கத்தியை ஓங்கவே, கந்தன் சோலைப்பிளையையே தனக்குப் பாதுகாப்பாக அமைத்துக் கொண்டு, அவரைப் பின்புறமாக அணைத்துக் கொண்டான். திடீரென்று "அய்யோ" என்ற அலறல் கேட்டதும், கந்தன் சரக்கென்று சோலைப்பிள்ளையைத் தன்னணைப்பிலிருந்து விடுவித்தான். "அய்யோ, அம்மா" என்று கத்தினான் இருவரில் ஒருவன். அவன் முன்னங்கையிலும் சட்டையிலும் ரத்தம் பாய்ந்திருந்தது. அது வழிந்து அவன் கையிலிருந்த கத்தி நுனியிலும் தென்பட்டது. "கொலை! கொலை! சோலைப்பிள்ளையை அந்த ஆளுங்க கொன்னுப் போட்டாங்க" என்று உரக்கக் கூவினான் கந்தன். தொலைவில் இருந்து கொண்டே இந்தக் காட்சியை எல்லாம் பார்த்துக்கொண்டு நின்ற அன்னக்கிளி, "கொலெ! கொலெ!" என்று கத்திக்கொண்டே ஓட்டமெடுத்தாள். சோலைப்பிள்ளையைத் தாக்கிய இருவரும் ஊருணிக்குள் குதித்துத் தலைதெறிக்க ஓடினர். கந்தன் அருகே இருந்த பூவரசு மரத்துக்குப் பக்கம் சென்று, கையிலிருந்த ஸ்பிரிங் கத்தியையும் இடுப்பிலிருந்த உறையையும் பூவரசு மரப் பொந்தினுள் போட்டு விட்டு, வேக வேகமாகக் கடை வெளிச்சத்துக்கு வந்தான். அவனது வேட்டி சட்டைகளின் முன்புறத்தை நன்றாக வெளிச்சத்தில் துருவித் துருவிப் பார்த்துக்கொண்டான். பிறகு அன்னக்கிளி ஓடிய திசையில் திரும்பிப் பார்த்தான்.

அவள் சிறிது தூரம் ஓடிவிட்டு, கடைப் பக்கம் பார்த்தவளாய் நின்றுகொண்டிருப்பது போல் கந்தனுக்குத் தெரிந்தது. "கொலெகாரப் பசங்க ஓடிட்டாங்க. நீ இந்தப் பொறம் வந்திடு, ஆத்தா" என்று உரக்கக் கத்தினான் கந்தன்.

தொலைவில் தரையில் கிடந்த உருவத்தைப் பார்த்தவாறே தயங்கித் தயங்கிக் கடையருகே வந்து, கந்தனுக்குப் பின்னால் நின்றுகொண்டு "உசிரு போயிரிச்சா?" என்று நடுங்கியவண்ணம் கேட்டாள் அன்னக்கிளி.

"அப்படித்தான் தெரியுது" என்றான் கந்தன், ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தவாறே.

"இப்ப என்ன செய்யறது?" என்றாள் அன்னக்கிளி.

"போலீசுக்குத் தகவல் சொல்லியனுப்பணும்" என்று கந்தன் சொல்லிக்கொண்டிருக்கும்போது ரோட்டில் சைக்கிள் வெளிச்சம் ஒன்று பெரியதாகிக்கொண்டே அவர்களை நோக்கி வந்தது. கந்தன் நடுரோட்டில் நின்றுகொண்டு சைக்கிளை நிறுத்தினான். சைக்கிளில் வந்த இளைஞன் பதறிப்போய், "என்ன? என்னைய்யா?" என்று இளைத்தான்.

"அங்கே பாரு, அந்த ஆளே ரெண்டு பேருக இப்பத்தான் குத்திக் கொன்னுட்டுப் போறாங்க. பிள்ளையார் கோவில் ஸ்டேஷனுக்குப் போயி ஒடனே தகவல் சொல்லிவிட்டு வா" என்றான் கந்தன்.

"கொலையா? எங்கே?" என்று கேட்டான் இளைஞன்.

"அதோ அங்கேதான். நீ வேகமாப்போயி, பக்கல்லே தானே இருக்கு, பிள்ளையார் கோயில் ஸ்டேஷனிலே சொல்லிட்டு வா."

"அய்யோ, எனக்கு எந்தப் போலீஸ் ஸ்டேஷனும் தெரியாது; நா போகமாட்டேன்."

"ஏன்?"

"நா ஊருக்குப் புதுசு."

"ஏந் தம்பி டூப்பு விடறே? ஊருக்குப் புதுசா இருக்கவுந் தானே இந்நேரத்துலே இந்த ரோட்டுப் பக்கம் சைக்கிள்லே வர்றே? உம், பாவம் ஒரு பக்கம் பளியொரு பக்கம்னு போயிறக் கூடாது. கொலெ சின்ன விஷயம் இல்லே. ஒடனே போயிப் போலீசிலே தகவல் கொடுத்திரு." கந்தன் இளைஞனை முறைத்துப் பார்த்தான்.

"என்ன கண்றாவி இதுங்க. நான் அவசரமா ஒரு எடத்துக்குப் போக வேண்டிருக்கு" என்று முணுமுணுத்துக் கொண்டே, இளைஞன் வந்த பக்கமே சைக்கிளைத் திருப்பினான். இளைஞன் சைக்கிளில் ஏறுவதற்கு முன் கந்தன் அவன் பெயர், விலாசம் இவற்றை விசாரித்துக் கொண்டான்.

"எனக்குக் கையும் காலும் பதறுதுங்க; ரெண்டு கை நெறெய, ஆதரவா, எதாச்சிம் கட்டிப் பிடிச்சுக்கிட்டா தேவலே போல இருக்கு" என்றாள் அன்னக்கிளி.

அடுத்தடுத்த மரங்களை இருளிலிருந்து கிழித்துக் கண்ணுக்குக் காட்டிக் கொண்டே விரைவில் விலகிப் போய்க் கொண்டிருந்த சைக்கிள் வெளிச்சத்தைக் கவனித்துக்கொண்டும் புகைத்துக்கொண்டும் இருந்த கந்தன், "புருஷன் எங்கே போயிருக்காரு?" என்றான்.

"பக்கத்து ஊரு போயிருக்காரு; வர்ற நேரம்தான்" என்றாள் அன்னக்கிளி.

"பின்னே என்ன, கொஞ்ச நேரம் பொறுத்துக்க" என்றான் கந்தன். அன்னக்கிளி சிரித்தாள். பிறகு, "நாம கோட்டுக்குப் போக வேண்டியிருக்குமா?" என்று கேட்டாள்.

"என்ன வேடிக்கையா? நாமதான் போலீசுக்கு முக்கிய சாட்சியா இருப்போம்."

"இங்கேயே ரோட்டுல நின்னுக்கிட்டிருந்தா? வாங்க வீட்டுக்குள்ளாற போயிக் குந்திக்கலாம்."

"பொணத்தெப் பாத்துக்கிட வேணாமா?"

"நீங்க அதெ நல்லாப் பாத்திங்களா? எப்படி இருக்கு?"

"நீயே பக்கல்ல போயிப் பாத்திட்டு வா."

"அடியாத்தே நா மாட்டேன். அப்பொறம் தூக்கம் வராது. இன்னும் சொல்றாங்க, இந்த மாதிரி செத்தவங்க பொணத்தெக் கண்டுக்கிட்டா, அதோட ஆவி வந்து நம்மச் சுத்திக்கிட்டு சுத்திக்கிட்டு வருமாம்."

"எதுக்கு?"

"என்னெக் குத்தும்போது நீ பாத்திக்கிட்டுத்தானே இருந்தேன்னு கேட்டுக்கிட்டு இம்சை பண்ணுமாம்... ஆமாண்ணே, சுடுகாட்டுலே வச்செரிக்கிறப்ப இந்த மாதிரி பொணங்களோட நெஞ்சு வேகாதாமே, அப்படியா அண்ணே?"

"ஆமாம், வேகாதும்பாங்க. சரி, இப்ப போலீசு வந்து என்ன நடந்திச்சூன்னு கேட்டா என்ன சொல்லுவே?"

"கண்டுக்கிட்டதெ சொல்லுவேன்."

"கடசிலே நாம போயி அவுங்களெப் பிரிச்சுவிட அவங்க மத்திலே விளுந்ததே எல்லாம் சொல்லிட்டிருக்காதே. நம்மத் தேவையில்லாம விசாரிச்சுத் தொந்தரை பண்ணுவாங்க. நாம அவுங்க கிட்டே போவறதுக்கு முன்னமே அவுங்க ரெண்டு பேரும், அந்த ஆளெக் குத்திச் சாகடிச்சிட்டு ஓடிட்டாங்கன்னே ரெண்டு பேரும் சொல்லுவோம்."

"ஆமா ஆமா, நீங்க எதுக்கு இந்த வில்லங்குத்துலே மாட்டிக்கணும்?... அப்ப, இந்தக் கேசு முடியற மட்டும் நாம ரெண்டு பேரும் சந்திச்சுக்கிட்டு இருப்பம் இல்லீங்களா?"

"ஆமாம்."

"உங்க பேரு என்ன? என்ன செய்யறீங்க?"

"எம் பேரு கந்தன். வீடு, நெலம் தரகு வேலை பாக்கறேன். திருவிளா டயத்துலே வெளியூர்லேந்து வார்றவங்களுக்கு ஊரே, கோவிலே சுத்திக் காட்டுவேன்."

"நல்ல சம்பாத்தியங்களா?"

"ஏதோ வண்டி ஓடுது."

"என்னெத் தெரியூங்களா ஓங்களுக்கு?"

"அன்னக்கிளிதானே ஓம் பெயரு?"

"ஆமாம், ஆமாம்! உங்களுக்கு எப்படீங்க எம் பெயரு தெரியுது?"

"இந்த ஓர்க்சாப்பு இருக்கில்லே, அதுலே என் சேத்தாளி ஒருத்தன் வேலெ பார்த்தான்; அவன் ஒன்னெப் பத்திச் சொல்லியிருக்கான்."

"யாரது?"

"பாண்டுரங்கன்னு பேரு."

"ஓ, செவத்திருக்குமே, அந்த நாயுடு வீட்டுத் தம்பியா?"

"அவனேதான்."

"அது ரொம்ப சொவாபமான தம்பீங்க. ஆனா இந்த ஓர்க்சாப்புலே வேலே பாக்கற மத்தப் பசங்க எல்லாம் படுக்காளிப் பசங்க" என்று கொண்டே, கலைந்து போயிருந்த தனது கொண்டையை முற்றாக அவிழ்த்துவிட்டு இரண்டு கைகளாலும் அதைப் பின்புறமாகச் சொடுக்கி விட்டு மீண்டும் முடியை அள்ளிச் சொருகினாள் அன்னக்கிளி.

இந்த நேரத்தில் கந்தன் வந்த அதே திசையிலிருந்து வந்த ஒரு மனிதர், "அன்னம், என்ன இது கடெயெ விட்டிட்டு நட்டுக்கு ரோட்டிலே நின்னுக்கிட்டு இருக்கே?" என்று கேட்டார். அவரைத் திரும்பிப் பார்த்த அன்னக்கிளி, "மச்சான் மச்சான், அங்கே பாரு, அங்கே பாருங்க, ஒரு ஆளே ரெண்டு பேருங்க குத்திக் கொலெ பண்ணிட்டு ஓடிட்டாங்க."

"கொலையா?" என்றார் அன்னக்கிளியின் மச்சான்.

"ஆமாம்" என்றனர் கந்தனும் அன்னக்கிளியும்.

ஏதோ அடித்துப்போட்ட பாம்பைப் பார்க்கச் செல்வது போல், அன்னக்கிளியின் மச்சான் அவள் காட்டிய இடத்தை நோக்கி நடந்தார்.

"அய்ய, நீங்க அங்கிட்டுப் போவாதீங்க" என்று அலறினாள் அன்னக்கிளி. பிணத்தருகே சென்று அதை உற்று நோக்கிவிட்டுத் திரும்பினார் அன்னக்கிளியின் மச்சான். பிறகு வீட்டுக்குள் சென்று ஒரு டார்ச்சு லைட்டை எடுத்து வந்தார். பிணத்தருகே சென்று, டார்ச் லைட்டு வெளிச்சத்தில் பிணத்தைப் பார்த்தார். பிணம் குப்புறக் கிடந்தாலும், தலை பக்கவாட்டாகத் திரும்பி இருந்தது. ஒரு கன்னம் தரையில் அழுந்தி, நாக்கின் ஒரு சிறு பகுதி பற்களுக்கிடையே துருத்திக்கொண்டு, கண்கள் வெறித்து நோக்கக் கிடந்தது அப்பிணம். இரண்டு கைகளும் வயிற்றை அழுத்திப் பிடித்துக்கொண்டு, குளிரில் சுருண்டு கிடக்கும் ஒரு குழந்தையைப் போலவும், யார் காலடியிலோ விழுந்து உயிருக்கு மன்றாடிக்கொண்டிருப்பது போன்றும் அது கிடந்தது. கண்கள் வெறித்திருந்தாலும், நாக்கின் ஒரு சிறு பகுதி பற்களுக்கிடையே துருத்திக்கொண்டிருந்தாலும், அந்தப் பிணத்தைப் பார்த்தால் பயமோ பீதியோ ஏற்படாது, இரக்கமே ஏற்படும் வகையில் கிடந்தது அது. அன்னக்கிளியின் மச்சானின் பின்னால் வந்து பிணத்தை நோக்கிய கந்தனுக்கு 'திக்'கென்றது.

"வெத்திலப்பேட்டை பிச்சையா மாதிரினா தெரியுது!" என்றார் அன்னக்கிளியின் மச்சான் தேவைப்படாத சலிப்புடன்.

கந்தன் மனதில் வெட்கம் வெடித்தது.

"நீங்க ரெண்டு பேரும் நேர்லே பாத்தீங்களா?" என்றார் அன்னக்கிளியின் மச்சான்.

"ஆமாம்" என்றாள் அன்னக்கிளி.

"அப்ப நீ எங்கிருந்தே?"

"இங்கிட்டுத்தான்."

"அவரு?"

"அவரும் இங்கிட்டுத்தான்."

"இங்கிட்டுத்தான்னா, நடு ரோட்டுலேயா?"

"ஆமாம், ரோட்டுலெதான். அவரு அப்பத்தான் இப்படி வந்துக்கிட்டிருந்தாரு."

இருவர் பேசிக்கொள்ளும்போதும் அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்தான் கந்தன். அன்னக்கிளியின் மச்சான் கந்தன் பக்கம் திரும்பி, "நீங்க யாரு?" என்றார்.

"அவர் பேரு கந்தன்" என்றாள் அன்னக்கிளி.

"டவுன்லே 'திருவாளத்தான் கந்தன்'ம்பாங்களே, அது நீங்கதானா?" என்று தொடர்ந்தான் அன்னக்கிளியின் மச்சான்.

"அது நானில்லீங்க; வேறொரு ஆளு" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் கந்தன்.

அதுதான் கந்தன் தானாகவே வாதிட்ட முதல் போலீசுக் கேசு. பொன்னுச்சாமி ஏட்டையா ஒன்றாவது சாட்சியாக, கந்தன் செய்த குற்றத்தைத் தான் நேரிலேயே கண்டதாகவும், அவனை உடனேயே ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றதாகவும் வாக்குமூலம் கொடுத்தார். கந்தன் அவரைக் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்தான்.

"வக்கீல் யாரும் வச்சிக்கலயா?" என்று மீண்டும் கந்தனைக் கேட்டார் மாஜிஸ்டிரேட்.

"இதென்ன கேசுங்க எசமான், வக்கீல் வைக்க? அன்னைக்குக் கூட ஏட்டையா என்ன சொன்னார் தெரியுங்களா? 'தம்பி, நீ ஒண்ணும் பயப்படாதே. வருசம் முடியுதேன்ட்டு ரெக்

கார்டுக்குத்தான் இப்படி ஒரு கேசு. குத்தத்தெ ஒத்துக் கிட்டேனா, நான் எசமான்கிட்டே சொல்லி இருபது, முப்பது ரூவா பைனோடெ விட்டுறச் சொல்லிடறேன்'ட்டுனா சொன் னாருங்க எசமான்" என்று கந்தன் கூறவும், மாஜிஸ்டிரேட் சிரித்துவிட்டார். அவர் சிரித்தது உறுதியானதும் சில வக்கீல் கள் சிரித்தனர். வக்கீல்கள் சிரித்ததைக் கேட்டதும் கோர்ட்டில் சுற்றியிருந்த இதரரும் சிரித்துக்கொண்டே, ஒருவரையொருவர் என்னவென்று கேட்டுக் கொண்டனர். ஒருமுறை கோர்ட் டில் இருந்த கூட்டத்தைத் தற்செயலாகப் பார்ப்பதுபோல் சுற்றிப் பார்த்துவிட்டு, சற்றுச் சிரித்த முகத்துடனேயே, கந்தன் பக்கம் திரும்பினார் மாஜிஸ்டிரேட். பொன்னுச்சாமி ஏட்டையா முகத்தைச் சுளித்துக்கொண்டார்.

குறுக்கு விசாரணையின்போது பொன்னுச்சாமி ஏட்டையா வைக் கந்தன் கேட்ட முதல் கேள்வி, "ஏட்டையா ஓங்களெப் பொடியன் பொன்னுச்சாமீன்ட்டு எல்லாரும் கூப்பிடறதுண்டா?" என்பதுதான். கேள்வியைக் கேட்டதும் கண்களை அகல விரித்துக் கந்தனைப் பார்த்துவிட்டு மாஜிஸ்டிரேட் பக்கம் திரும்பினார் ஏட்டையா.

"என்ன கேட்டே?" என்றபடி, கந்தனுக்கு நேரே தலையை நீட்டினார் மாஜிஸ்டிரேட்.

"ஏட்டையா பொன்னுச்சாமிக்குப் பொடியன் பொன்னுச் சாமீன்ட்டு ஊர்ல ஒரு பெயர் உண்டில்லேன்ட்டுக் கேட்டேன்" என்றான் கந்தன்.

"என்ன, பொடியன் பொன்னுச்சாமியா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் மாஜிஸ்டிரேட். அடுத்த கணம் குரலை மாற்றிக்கொண்டு, "இந்தாப்பா, ஏட்டையாவுக்கு வீட்லேயும் ஊருலேயும் ஆயிரத்தெட்டுப் பட்டப் பெயர் இருக்கும். அதுக்கும் கேசுக்கும் என்ன சம்பந்தம்?" என்றார்.

"சம்பந்தம் இருக்குங்க" என்றான் கந்தன்.

"என்ன சம்பந்தம்?" என்றார் மாஜிஸ்டிரேட்.

கந்தன் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, "எனக்கும் ஏட்டையாவுக்கும் முன்விரோதம் உண்டுங்க" என்றான்.

"அது சரி, இப்ப ஓம்மேலே உள்ள குத்தத்துக்கு என்ன சொல்லறே? பதினெட்டாம் தேதி ஞாயித்துக்கிழமை அன்னிக்கு, சாயந்திரம் அஞ்சு, ஆறு மணிக்கெல்லாம் நீ பொருட்காட்சித் திடல்லதானே இருந்தே?" என்றார் மாஜிஸ்டிரேட்.

"ஏட்டையா சொல்றது முளுப் பொய்யுங்க. அவர் ஞாயித்துக் கிளமை சாயங்காலம் பொருட்காட்சித் திடலுக்குப் போயிருந் தாரூங்கறாரு; ஆனா, அதெக்கூட என்னாலே நம்ப முடியலீங்க."

"ஏன்" என்று கேட்டார் மாஜிஸ்டிரேட்.

"ஞாயித்துக்கிளமை சாயங்காலம்னா, சிட்டி கிளப்புலே பெரிய பெரிய செட்டுக சேருங்க..." என்று கந்தன் ஆரம்பிக்க வும், "இந்தக் கதெயெல்லாம் இங்கே அளக்காதே" என்று குறுக்கிட்டார் மாஜிஸ்டிரேட்.

"கதை அளக்கலீங்க எசமான். எனக்கும் ஏட்டையாவுக் கும் முன் விரோதம் உண்டுங்க; அந்தக் கோபத்துலேதான்..." என்று இழுத்தான் கந்தன்.

"அப்ப ஏட்டையா சொன்னதெல்லாம் நீ மறுக்கறே, இல்லையா?" என்றார் மாஜிஸ்டிரேட்.

ஏட்டையா இலேசாகக் கனைத்துக்கொண்டார்.

"ஆமாங்க எசமான், அவர் சொல்றதெல்லாம் பச்சைப் புளுகூங்க" என்றான் கந்தன்.

"அப்ப என்ன நடந்திச்சி?"

"என்னிக்கு எசமான்?"

"ஞாயிற்றுக்கிழமை பதினெட்டாம் தேதி அன்னிக்கு."

"ஞாயித்துக்கிளமை ஒண்ணும் நடக்கலீங்க. வெள்ளிக் கிளமைதான் நானும் ஏட்டையாவும் சந்திச்சுக்கிட்டதே."

அதற்குள் ஏட்டையா மாஜிஸ்டிரேட்டிடம், "ஞாயித்துக் கிழமே நடந்தது பத்திதான் கேசு. அதெப்பத்தி எதுவும் எதிரி கேக்கறதுன்னா கேக்கட்டும்" என்றார்.

"உம், சரி" என்று சற்றுக் கடுமையோடு கூறிவிட்டு, கந்தன் பக்கம் திரும்பி, "வெள்ளிக்கிழமை நடந்ததுக்கும் இந்தக் கேசுக்கும் என்ன சம்பந்தம்?" என்றார் மாஜிஸ்டிரேட்.

அதற்குள்ளே ஏட்டையா, "எசமான் எதிரியெப்பத்தி ஒங்களுக்குத் தெரியாதுங்க. அவுனுக்கு டவுன்ல அவ்வளவா நல்ல பெயர் கெடெயாதுங்க. இந்தக் கேசு சம்பந்தப்பட்டதே மட்டும் ஏதாச்சியும் சொல்லணும்னா சொல்லச் சொல்லுங்க" என்றார் கொஞ்சம் கண்டிப்புடனே.

ஏற்பட்ட எரிச்சலை மறைக்காதவராய், "நீ என்னப்பா சொல்றே இப்ப?" என்றார் மாஜிஸ்டிரேட் கந்தனிடத்து.

"நான் ஏட்டையாவெ ரெண்டு மூணு கேள்வி கேக்கணுங்க, அவ்வளவுதான்" என்றான் கந்தன்.

"சரி, சுருக்கமா சட்னு கேளு" என்றார் மாஜிஸ்டிரேட்.

கந்தன் ஏட்டையா பக்கம் திரும்பி, அதே கேள்வியைத் திரும்பக் கேட்டான்: "உங்களைப் பொடியன் பொன்னுச் சாமீன்ட்டு எல்லாரும் சொல்றதுண்டா?"

"எனக்குத் தெரிஞ்சு யாரும் என்னை அப்படிச் சொன்ன தில்லே" என்றார் ஏட்டையா.

"அப்ப ஓங்களுக்குத் தெரியாமே எல்லாரும் சொல்லிட் டிருக்கலாம் இல்லையா?" என்றான் கந்தன், சிரிக்காது.

ஏட்டையா முழித்தார்.

வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு "உம், அடுத்த கேள்வி" என்று கடித்துத் துப்பினார் மாஜிஸ்டிரேட்.

இரண்டு வக்கீல்கள் 'பக்'கென்று சிரித்தனர். மற்றொரு வக்கீல் இருமிக்கொண்டார்.

"இந்தா, இங்கே திருவாளத்தான் மாதிரி நடந்துக்கக் கூடாது, தெரியுமா? நியாயமான கேள்வியை நியாயமாக் கேளு" என்றுவிட்டு, பொருத்தமான அளவுக்குச் சிரித்துக் கொண்டார் மாஜிஸ்டிரேட். வக்கீல்கள் சிறிது பேசிக்கொண் டனர். ஒரு வக்கீல் உட்கார்ந்தபடியே கந்தனைப் பார்த்து, "அனாவசியமா கோர்ட்டாரைப் பகைச்சுக்காதே" என்று கந்தனுக்கு அறிவுரை தருவதுபோல் எச்சரித்தார். வேகமாகவே அந்தத் திசையிலிருந்து முகத்தைக் கந்தன் பக்கம் திருப்பி, "உம்" என்று உத்தரவிட்டார் மாஜிஸ்டிரேட்.

கந்தன் ஏட்டையா பக்கம் திரும்பிக் கேட்டான்: "போன வெள்ளிக்கும் முந்தின வெள்ளிக்கெளமை, சொமார் ஆறு ஏளு மணிக்குச் சாயந்தரம் நீங்க இஸ்மாயில்புரத்திலிருக்கிற பாலர் விடுதிக்குப் பக்கல்லே இருக்கே சவுரிமுத்து டீக்கடை, அந்தக் கடெக்கு வந்தீங்களா?"

"எதாச்சியும் சோலியாப் போயிருக்கலாம். நெனெப்பில்லே" என்றார் ஏட்டையா.

கந்தன் தொடர்ந்தான். "ஏட்டையா டியூட்டி பாக்கறது தெப்பக்குளம் ஸ்டேஷன்ல. குடியிருப்பு வஸ்தாதுபேட்டை போலீசு லைன்ல. பாலர் விடுதி இருக்கிறதோ, டவுனுக்கும்

இன்னொரு கோடீல இஸ்மாயில்புரத்துலே. அவ்வளவு தூரம் தள்ளி பாலர் விடுதிக்குப் போனீங்கனா, என்ன காரியமா அங்கே போனீங்கனு கூடவா நெனெவில்லே" என்று கேட்டான் கந்தன்.

ஒரு கிழட்டு வக்கீல் வாய்விட்டுச் சிரித்தார். மாஜிஸ்டிரேட் கந்தன் பக்கம் முழுக்கவனத்தோடு திரும்பினார்.

"ஏதாவது கேசு விஷயமாப் போயிருப்பேன்" என்றார் ஏட்டையா.

"அது என்ன கேசூன்னு நெனெவிருக்குங்களா?" என்றான் கந்தன்.

ஏட்டையா மாஜிஸ்டிரேட்டிடம் திரும்பி, "போலீஸ் உத்தியோகஸ்தர் கிட்டே மரியாதையாக் கேள்வி கேட்கச் சொல்லுங்க, எசமான்" என்று முறையிட்டார்.

"உண்டு, இல்லை, சொல்ல முடியாது, சொல்லத் தேவையில்லைனு நீங்க ஸ்ட்ரெயிட்டா பதில் சொல்ல வேண்டியது தானே?" என்றார் மாஜிஸ்டிரேட்.

"அவன் அவனோடெ திருவாளத்தான்தனமெல்லாம் இங்கே காட்டிட்டிருக்கான்" என்று தொடர்ந்து ஏட்டையா குறை சொன்னார்.

"அதெப் பாத்துக்கத்தான் நான் இங்கே இருக்கேனே! டோன்ட் யு ஓர்ரி அபவுட் இட். உம், ப்ரொசீட்" என்றார் மாஜிஸ்டிரேட்.

"அதெல்லாம் சரிங்க எசமான். எதிரி எப்படிப்பட்டவன், உண்மைலே என்ன தொளில் பாக்கறான்ட்டு எல்லாம் உங்களுக்குத் தெரியாதுங்க" என்றார் ஏட்டையா.

"எல்லார் பொளெப்பும், அப்படியோ இப்படியோ பிடுங்கித் தின்ன..." என்று கந்தன் ஆரம்பித்தான்.

அப்போது ஒரு கான்ஸ்டபிள் மாஜிஸ்டிரேட் முன் வந்து நின்று, ஏக தடபுடலோடு சலாம் செய்துவிட்டு, நேராக மாஜிஸ்டிரேட்டின் காதருகே சென்றான். இருவரும் ஒரு நிமிடம் காதோடு வாயாக இரகசியம் பேசினர். கான்ஸ்டபிள் மீண்டும் ஆர்ப்பாட்டத்தோடு, தனது தலையீடு வெற்றி கண்டு விட்டதுபோல் 'கரமுர'வென்று இரைச்சலை எழுப்பிக் கொண்டு சலாம் செய்துவிட்டு நடந்தான்.

மாஜிஸ்டிரேட் உடனே கந்தன் பக்கம் திரும்பி, "இந்தா, இது கோர்ட்டு, தெரியுமில்லே. இங்கே கோர்ட்டுலே நடந்துக்

கிறாப்போல நடந்துக்கணும். ஒங்க தெரு, சந்துகள்ள நடந்துக் கிறாப்போலெல்லாம் நடந்துக்கக் கூடாது" என்று கந்தனை எச்சரித்தார்.

கந்தன் முகத்தில் ஒரு 'படபடப்பு'த் தோன்றியது. மறுகணமே அவன், "சரிங்க எசமான்" என்றான் சுருக்கமாக.

"உம், இன்னும் எதுவும் கேக்கணுமா?" என்றார் மாஜிஸ்டிரேட்.

கிழட்டு வக்கீல் தனக்குள் சிரித்துக்கொண்டே, தன் நாற்காலியிலிருந்து எழுந்து வெளியே சென்றார்.

"எனக்குத் தெரிஞ்சதே நான் சொல்லிடறேன், எசமான். அது உண்டா இல்லையான்ட்டு ஏட்டையா சொல்லட்டும்" என்றான் கந்தன்.

"உம், சரி சொல்லு" என்றார் மாஜிஸ்டிரேட், கூட்டத்தை விலக்கிக் கொண்டு வெளியே சென்றுகொண்டிருந்த கிழட்டு வக்கீலைப் பார்த்தபடியே.

"இந்தப் பாலர் விடுதி சொன்னேனே" என்று கந்தன் ஆரம்பித்து, "அதனோட மானேசர் எனக்கு ரொம்ப வேண்டிய வரு. அவரு ஒரு நா 'இப்படி பொடியன் பொன்னுச்சாமீன்ட்டு ஒரு ஏட்டு இருக்காரே, அவரு ஏதாவது காரணம் சொல்லிக் கிட்டு, விடுதிலேந்து பசங்களே ஸ்டேஷனுக்கூனு அடிக்கடி இளுத்துக்கிட்டுப் போறாரு. பெரிய வம்பாப் போச்சு. பாவம், இஷ்டம் இல்லாத பொடியன்களெப் போட்டுக் கஷ்டப்படுத்தி கிட்டு! நீதான் கந்தா, ஒரு நா அந்த ஏட்டையாவெ என்னன்ட்டுக் கேளு'ன்ட்டு சொன்னாரு. அதான் நான் அந்த வெள்ளிக் கௌமை பாலர் விடுதிக்குப் போனேன்" என்று சொல்லிக் கொண்டு போகவும், "எசமான், கேசே விட்டிட்டு என்னத் தெல்லாமோ உளர்றான்" என்று கூச்சலிட்டார் ஏட்டையா.

"அட, உங்கக் கேசெத்தான் முளுப்பொய்யீனுட்டேனே!" என்றான் கந்தன்.

"அப்ப, எதுக்கு இப்பப் பேசிட்டிருக்கே?" என்றார் ஏட்டையா.

கந்தன் ஏட்டையா பக்கம் திரும்பவும், "கோர்ட்டெப் பாத்துப் பேசு" என்று மாஜிஸ்டிரேட் கந்தனுக்குச் சொன்னார். கந்தன் அவர் பக்கம் திரும்பி, "எனக்கும் ஏட்டையாவுக்கும் ஒரு வாட்டி தகராறு வந்து எங்களுக்குள்ளே விரோதம் உண்டுங்க. அதெத்தான் நான் சொல்றது" என்றான்.

“உம், சுருக்கமாகச் சொல்லு. என்ன தகராறு?” என்று முனகினார் மாஜிஸ்டிரேட்.

“நான் இதெ அப்ஜெக்ட் பண்ணறேன், எசமான்” என்றார் ஏட்டையா.

“அப்ப எதிரிக்கும் உங்களுக்கும் முன்விரோதம் உண்டுனு ஒத்துக்கோங்க. எதிரியை விவரம் எல்லாம் தர வேண்டானு டறேன்” என்றார் மாஜிஸ்டிரேட் சிறிது கோபத்தோடு.

“அதெப்பிடீங்க? போலீசுக்காரன் ‘பப்ளிக்’கிலே யாருக்குத் தான் நல்லவங்க?” என்று கேட்டார் ஏட்டையா.

அதற்குள் கந்தன், “ஏட்டையா சொல்றது நியாயந் தானுங்க. பப்ளிக் யாரும் போலீஸ்காரங்களெ நல்லவங்கனு மதிக்கறது இல்லீங்கதான். ஆனா, எனக்கும் ஏட்டையாவுக்கும் ஒரு குறிப்பிட்ட காரியத்துலே தகராறு வந்ததுங்க” என்றான்.

“இதுக்கு என்ன சொல்றிங்க?” என்றார் மாஜிஸ்டிரேட் ஏட்டையாவிடத்து.

“அப்புறம் ஒங்க பிரியம், எசமான்” என்றார் ஏட்டையா.

“உம், நீ சொல்லப்பா” என்றார் மாஜிஸ்டிரேட் கந்தனிடத்து.

“அன்னைக்குங்க எசமான், ஏட்டையா இஸ்மாயில் புரத்துக்கு வந்திருந்தாரு. அவரு பாலர் விடுதிக் கேட்டுக்குப் பக்கல்லே...” என்று கந்தன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே வேடிக்கை பார்க்கும் கூட்டம் இரண்டு புறங்களில் நெறியும் சப்தமும், பூட்சுக் கால்கள் ஏற்படுத்தும் நரநரவென்ற சப்தமும் ஒருங்கே ஒலித்தன. சுருக்கமாக, ஆனால் புறக்கணிக்க முடியாத வகையில் மாஜிஸ்டிரேட்டுக்கு சலாம் செய்துவிட்டு ஒரு நாற்காலி யில் உட்கார்ந்தார் உள்ளே பிரவேசித்த போலீஸ் இன்ஸ் பெக்டர்.

“உம், அப்புறம்?” என்றார் மாஜிஸ்டிரேட் கந்தனைப் பார்த்து, சற்றுத் திடமான குரலில்.

“ஏட்டையா அவுங்க, பாலர் விடுதிக்குப் பக்கல்லே ஒரு டீக்கடை கிட்டே, பாலர் விடுதி மானேசர் ரங்கசாமியோடே ஒரக்கப் பேசிட்டிருந்தாரு. சீனிவாசங்கற அந்தத் தம்பியும் அங்கே நின்னிட்டிருந்தது. நான் அங்கே போகவும்...” என்று கந்தன் சொல்லிக்கொண்டிருந்த போதே, “ஒன் மினிட், யுவர் ஆனர்” என்று சொல்லிக்கொண்டே இன்ஸ்பெக்டர் எழுந் திருந்தார்.

"யெஸ்" என்று அவரைப் பார்த்துத் தலையசைத்தார் மாஜிஸ்டிரேட்.

"சம்பவம் நடந்தது ஞாயிற்றுக்கிழமை பதினெட்டாம் தேதி, எக்சிபிஷன் கிரௌன்டுலே. இவன் வேறெ எதையோ பத்தினா சொல்லிட்டிருக்கான்?" என்று கேட்டார் இன்ஸ் பெக்டர். உடனே, மாஜிஸ்டிரேட், "உம், அய்யா கேக்கராரு இல்லே? பதில் சொல்லு" என்று கந்தனை அதட்டினார்.

கந்தன், "ஏட்டையாவுக்கும் எனக்கும் ஒருவாட்டி முன் விரோதம் ஏற்பட்டிச்சு. அதெப்பத்திச் சொல்லிக்கிட்டு இருக்கேன்" என்றான்.

இன்ஸ்பெக்டர் மாஜிஸ்டிரேட்டைப் பார்த்து, "யுவர் ஆனர், இவன்லாம் 'பாட் கேரக்டர்.' டிப்பார்ட்டுமென்ட் டோட இவங்களுக்கு எல்லாம் எப்பவும் தகராறுதான். இதெல்லாம் நீங்க தீர டெடெய்ல்டா விசாரிச்சிட்டிருக் கணும்னு அவசியம் இல்லை" என்று கூறிவிட்டு உட்கார்ந்தார்.

"யெஸ் யு ஆர் கொய்ட் ரைட்" என்று கூறிவிட்டு மாஜிஸ் டிரேட் கந்தனைப் பார்த்து, "என்னப்பா உன்னைப்பத்தி இன்ஸ்பெக்டர் சொல்றதெக் கேட்டே இல்லே? இப்ப என்ன சொல்லறே?" என்றார்.

கந்தன் ஒரு நிமிடம் யோசித்தான்.

பிறகு, "எசமான் சொல்றதும் சரிதானுங்க. நாங்களும் தப்புப் பண்ணறோம்; அவங்களும் தப்புப் பண்றாங்க. இதுலே யாரு மொதல்லேன்ட்டு யாருங்க சொல்றது? குத்தெத்தெ ஒத்துக்கிறேங்க எசமான். ஏட்டையா சொன்னபடி ஏதாச்சிம் சின்ன ஃபைனா போட்டுவிடுங்க" என்று சிரித்துக்கொண்டே கந்தன் சொல்லவும் கோர்ட்டில் வேறு சிலரும், ஏதோ சங்கடம் தீர்ந்த நிலையில் சிரித்தனர்.

ஒரு ஜீப்பு வரும் ஒலியும், கண்ணைப் பறிக்கும் அதன் விளக் கொளியும் எல்லாப் பேச்சையும் நிறுத்தியது. மூவரும் கடை யருகே போய் நின்று கொண்டனர். ஜீப்பின் வெளிச்சத்தைக் கொண்டு, ஜீப்பில் இருந்தவர்கள் பிணத்தைப் பார்க்க முடிந்ததால், பிணத்துக்கு சுமார் இருபதடி தூரத்தில் ஜீப்பு நின்றது. ஜீப்பிலிருந்து இரண்டு போலீஸ்காரர்கள் துப்பாக்கி யோடு இறங்கினர். அவர்களைத் தொடர்ந்து ஒரு ஏட்டை யாவும், ஒரு சப் – இன்ஸ்பெக்டரும், இறுதியில் அவர்களை

அழைத்து வந்த இளைஞனும் இறங்கினர். போலீஸ்காரர் இருவரும் பிணத்துக்குக் காவல் நிற்பது போல் அதன் அருகே விறைப்பாக நின்றுகொண்டனர். ஏட்டையா தனது தொப்பியை அகற்றி, அதை இடதுகையில் தாங்கிக்கொண்டு, வலது கையால் தலையை வரட்டு வரட்டு என்று சொரிந்துகொண்டார். சற்றுப் பருமனாகக் கறுத்திருந்த சப் – இன்ஸ்பெக்டர் அந்த வட்டாரத்தை ஒரு நோட்டம் விட்டுவிட்டு, கடையோரம் இருந்த மூவருக்கும், "இப்படி வந்து நில்லுங்க" எனக் கட்டளையிட்டார். மூவரும் சப் – இன்ஸ்பெக்டர் பின்னால் வந்து நின்றுகொண்டனர்.

"வேலுச்சாமியா, என்ன அந்தத் தம்பி பேரென்ன, அவன் எங்கே?" என்று இரைச்சலிட்டார் சப் – இன்ஸ்பெக்டர். ஜீப்பு ஓரம் பதுங்கியிருந்த வேலுச்சாமி மெதுவாக வந்து சப் – இன்ஸ்பெக்டர் பின்னே நின்றுகொண்டான். சப் – இன்ஸ்பெக்டர் பிணத்தருகே சென்று பிணத்தைத் தொட்டுப் பார்த்தார். "கதெ முடிஞ்சு போச்சுங்க, எஜமான்" என்றார் ஏட்டையா, அரைகுறையாய்க் கொட்டாவி விட்டுக்கொண்டே.

"ஏட்டையா பொசிஷனக் குறிச்சிக்கோங்க" என்றார் சப் – இன்ஸ்பெக்டர்.

"கவனிச்சிக்கிட்டேங்க எஜமான். சிவலிங்கபுரம் ரோடு, கொஞ்சம் மேக்கே திரும்பி, சுமார் வடமேக்கா, கடைக்கு இருபது கஜ தூரத்திலே" என்று தொடர்ந்தார் ஏட்டையா. "யார் கடைன்னு கேட்டீங்களா?" என்றார் சப் – இன்ஸ்பெக்டர்.

"செவலிங்கபுரம் சுப்பு மூப்பனார் மகன் மருத மூப்பனார் கடைங்க" என்றார் அன்னக்கிளியின் மச்சான்.

"உம், சுப்பு மூப்பனார் மகன் மருத மூப்பனார் கடைலேந்து இருபது கஜ தூரத்திலே" என்று கூறிக்கொண்டே ஒரு குறிப்புப் புத்தகத்தையும், பென்சிலையும் எடுத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தார் ஏட்டையா. பிறகு சட்டென்று திரும்பி, மருத மூப்பனாரிடத்து, "எஜமானுக்கு ஒரு சேர், கட்டில் எதாச்சிம் கொண்டு வா" என்றார்.

மருத மூப்பனார் பாய்ந்து சென்று வீட்டுக்குள்ளிருந்து ஒரு கட்டிலை எடுத்து வந்தார்.

"இந்தா தேர்ட்டி நைன், சட்டி கொண்டு வந்திருக்கே இல்லே? ரத்த சாம்பிள் எடுத்துக்க. நைன்ட்டி சிக்ஸ், நீ பாடியெ சோதனை போடு" என்று இரு போலீஸ்காரர்

களுக்கும் உத்தரவிட்டார் சப் – இன்ஸ்பெக்டர். தேர்ட்டி நைன் ஜீப்புக்குச் சென்று ஒரு கலயத்தையும், ரத்தத்தை மண்ணோடு சுரண்டி எடுக்க ஒரு கத்தியையும் எடுத்து வந்தான். நைன்ட்டி சிக்ஸ் இலேசாகப் பிணத்தைப் புரட்டிப் போட்டான்.

பிணத்தின் வெறித்த கண்களைப் பார்த்ததும், "ஆத்தாடி" என்று கூச்சலிட்டாள் அன்னக்கிளி.

கந்தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான்.

"யாரு தெரியுமா?" என்று சப் – இன்ஸ்பெக்டர் தன் பின்னாலிருந்த நால்வரையும் கேட்டார். "வெத்திலப்பேட்டை பிச்சையா மாதிரி தெரியுது" என்றார் மருத மூப்பனார்.

கந்தனும் அன்னக்கிளியும் பேசாதிருந்தனர்.

"உங்களுக்குத் தெரியுமா?" என்று அவர்களைக் கேட்டார் ஏட்டையா.

"வெத்திலப்பேட்டை வியாபாரி பிச்சையா மாதிரிதான் தெரியுது, ஆனா..." என்றிழுத்தான் கந்தன்.

"ஆனா என்ன?" என்றார் ஏட்டையா.

"ஒண்ணுமில்லே" என்றான் கந்தன். அவனைப் பார்த்துத் திடுக்கிட்ட பொன்னுச்சாமி ஏட்டையா முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டார்.

"ஆனான்ட்டு இளுத்தியே?" என்றார் சப் – இன்ஸ்பெக்டர்.

"நான் அந்தப் பிச்சையாவெ ஒரு வாட்டியோ, ரெண்டு வாட்டியோ தான் பாத்திருப்பேன்; உறுதியாச் சொல்லிக்கிட முடியாதூன்னேன்" என்றான் கந்தன்.

"அந்தப் பிச்சையா வீடு தெரியுமா?" என்று சப் – இன்ஸ்பெக்டர் மூப்பனாரைக் கேட்டார். மூப்பனார் பதில் சொல்வதற்கு முன்னால் "பேட்டைலே போயி விசாரிச்சாத் தெரியும்" என்றார் ஏட்டையா.

"டிரைவர்" என்று கூப்பிட்டார் சப் – இன்ஸ்பெக்டர்.

"டிரைவர்தானே? அவன் வந்ததும் ஊருணிப் பக்கம் இறங்கிப் போனான்; இப்ப வந்திருவான்" என்று ஏட்டையா சொல்லிக்கொண்டிருக்கும்போதே, தனது அரை காக்கி டிராயரையும் முரட்டு பனியனையும் சரி செய்துகொண்டே

டிரைவர் வேகமாக வந்து சப் – இன்ஸ்பெக்டர் முன்பு சலாம் போட்டு நின்றான். ஏட்டையா ஜீப்புக்குச் சென்று அதில் எரிந்துகொண்டிருந்த ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கை எடுத்து வந்தார். மருத மூப்பனாரும் வீட்டுக்குள் சென்று ஒரு மண்ணெண்ணெய் விளக்கை எடுத்து வந்தார். ஏட்டையா மீண்டும் ஜீப்புக்குச் சென்று சில குறிப்புப் புத்தகங்கள் மற்றும் சில காகிதங்களை எடுத்து வந்தார்.

தேர்ட்டி நைன் ரத்தம் உறைந்த மண்ணைச் சுரண்டிக் கொண்டிருந்தான். நைன்ட்டி சிக்ஸ் பிணத்தின் தலையிலிருந்து ஆரம்பித்து அதன் பல்வேறு பாகங்களையும் இலேசாக அழுத்திச் சோதனை போட ஆரம்பித்தான். சப் – இன்ஸ்பெக்டர் டிரைவருக்கு உத்திரவு போட்டுக்கொண்டிருந்தார். "வெத்திலெப் பேட்டைக்குப் போயி பிச்சையாங்கறவர் வீட்டே விசாரிச்சு, வீட்லேந்து இங்கே ஒரு ஆளே அனுப்பச் சொல்லு. ஆம்பிள ஆளாவே பாத்துக் கூட்டியா" என்று விட்டு ஏதோ நினைவுக்கு வந்தவராய், "அப்படியே வரும்போது அந்த மணிப் பயலே இளுத்திட்டு வா" என்றார் சப் – இன்ஸ்பெக்டர்.

"சரிங்க எசமான்" என்றுவிட்டு, சலாம் செய்துகொண்டே ஏட்டையாவைப் பார்த்தான் டிரைவர்.

"மணிதானே? ஒண்ணு அந்தக் கிளப்புலே இருப்பான்; இல்லாட்டி நர்சம்மா வீட்லே இருப்பான். இளுத்திட்டு வா" என்றார் ஏட்டையா.

டிரைவர் ஜீப்புக்குச் சென்று, அதில் ஏறி உட்கார்ந்து கொண்டு ஜீப்பைத் திருப்பிப் பறந்தான். பெட்ரோமாக்ஸ் விளக்கும், மண்ணெண்ணெய் விளக்கும் எரிந்துகொண்டிருந்தாலும் ஒரு கணத்துக்கு இலேசான இருள் கவிந்துவிட்டது போல் இருந்தது.

"என்ன குறிச்சிக்கிறீங்களா, ஏட்டையா?" என்றான் நைன்ட்டி சிக்ஸ்.

"உம்" என்றுவிட்டு எழுத ஆரம்பித்தார் ஏட்டையா.

சப் – இன்ஸ்பெக்டர் கட்டிலில் உட்கார்ந்துகொண்டு, ஒரு சிகரெட்டைப் புகைத்தவண்ணம் நைன்ட்டி சிக்ஸ் எடுத்துக் காட்டிய பொருட்களைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

"வெள்ளை வேட்டி, நாலு நாலரை முழம், வெள்ளைச் சட்டை, அரைக்கை சட்டை, உள்ளே கருப்பு பனியன், உள்டிராயர் இல்லே, இடுப்புலே தோல் பெல்ட், பெல்டுலே

ஒரு பை, சட்டைலே ஒரு பை" என்று தொடர்ந்தான் நைன்ட்டி சிக்ஸ்.

"அந்தச் சட்டையையும் பெல்டையும் அவித்திரு" என்றார் சப் – இன்ஸ்பெக்டர். இரண்டு போலீஸ்காரர்களும் ஒருகணம் திகைத்தனர். இரத்தம் அநேகமாக உறைந்துவிட்ட நிலையில், சட்டையையும் பனியனையும் உடலிலிருந்து பிய்த்து எடுக்கத்தான் வேண்டிவரும். இருவரும் ஏட்டையாவை நோக்கினர்.

"எஜமான், அந்த வம்பெல்லாம் நமக்கு எதுக்கு? உள்ள படியே 'போஸ்ட்மார்ட்ட'த்துக்கு அனுப்பிடுவோம்" என்றார் ஏட்டையா.

"அதுவும் சர்தான்" என்றார் சப் – இன்ஸ்பெக்டர்.

"பாடிலே உள்ளத மட்டும் பாத்துச் சொல்லுங்க" என்றார் ஏட்டையா.

"என்ன எளுதியிருக்கீங்க?" என்றான் நைன்ட்டி சிக்ஸ்.

"இடுப்புலே தோல் பெல்ட்; பெல்டுலே ஒரு பை... மேக்கொண்டு உம்..." என்றார் ஏட்டையா.

"சட்டைப் பைலே ஒரு இரும்புச் சாவி இருக்கு" என்று தொடர்ந்தான் தேர்ட்டி நைன்.

"மேலுக்கு ஒரு காகிதப் பொட்டலம்" என்றுகொண்டே நைன்ட்டி சிக்ஸ், ஒரு பொட்டலத்தைப் பிரித்து, "பொட்ட லத்துலே துன்னூரு, குங்குமம், தொளசி இலே, ஒரு பத்து ரூவாத் தாளு, ஒரு ரெண்டு ரூவாத் தாளு, ஏளு காசு" என்று சொல்லி நிறுத்தினான்.

"பெல்ட்டுப் பைலே ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு நூறு ரூவாத்தாளு ஒரு சீட்டுக்கட்டுப் பெட்டி" என்று தேர்ட்டி நைன் தொடரவும், "பெட்டியெத் தெறந்து பாரு" என்றார் ஏட்டையா.

பெட்டியைத் திறந்த தேர்ட்டி நைன், பெட்டிக்குள் இருந்து சீட்டுக் கட்டின் அளவுக்கும் சற்றுச் சிறிதான அளவில் இருந்த சில கார்டுகளை எடுத்து ஒவ்வொன்றாகப் பார்க் கிறான். பிறகு சிரித்துக் கொண்டே, "இந்தாங்க எஜமான்" என்று அவற்றை சப் – இன்ஸ்பெக்டரிடத்து நீட்டுகிறான். சப் – இன்ஸ்பெக்டருக்குப் பின்புறம் நின்று கொண்டிருக்கும் கந்தன், வேலுச்சாமி, மருத மூப்பனார், அன்னக்கிளி ஆகிய

நால்வரும் ஆவலோடு குனிந்து சப் – இன்ஸ்பெக்டர் கையி லிருந்த படங்களைப் பார்க்கின்றனர்.

"அம்மோவ், இதென்ன படம்?" என்றுவிட்டுப் பயங்கர மாகச் சிரிக்கிறாள் அன்னக்கிளி.

"ஷட்அப்" என்று கத்திக்கொண்டு பின்புறம் திரும்பு கிறார் சப் – இன்ஸ்பெக்டர். பிறகு சாவதானமாகக் கையிலிருக் கும் படங்களை ஒவ்வொன்றாக ஆராய்கிறார். சப் – இன்ஸ் பெக்டர் போட்ட சத்தத்தில் அன்னக்கிளியும், மருத மூப்ப னாரும், வேலுச்சாமியும் சற்றுப் பின்நகர்ந்துவிட்டனர். கந்தன், ஏட்டையா, சப் – இன்ஸ்பெக்டர் மூவருந்தான் எல்லாப் படங்களையும் பார்க்கின்றனர்.

"இதெல்லாம் என்ன ஏட்டையா?" என்று அறியாத்தன்மை யோடு கேட்கிறார் சப் – இன்ஸ்பெக்டர்.

"இதெல்லாம் பெரிய பிசினெஸ்ங்க; படம் அஞ்சு, பத்தூனு போகுங்க" என்கிறார் ஏட்டையா.

"இதெல்லாம் என்ன செய்யறது?"

"கோர்ட்டுலே ஒண்ணும் புரொடியூஸ் பண்ண வேண்டாம்; ஸ்டேஷனுக்கு வேணாக் கொண்டு போகலாம்" என்கிறார் ஏட்டையா. சப் – இன்ஸ்பெக்டர் படங்களைப் பார்த்துவிட்டு, அவற்றைப் பெட்டியில் போட்டு பெட்டியை ஏட்டையா விடம் நீட்டுகிறார். பிறகு பின்புறம் திரும்பிப் பார்க்கிறார். கந்தனும் ஏட்டையாவும் அவர் பின் நின்றுகொண்டிருக் கின்றனர். ஏட்டையா கனைக்கிறார். அன்னக்கிளியும், மருத மூப்பனாரும், வேலுச்சாமியும் முன்னால் நகருகின்றனர்.

அன்னக்கிளியைப் பார்த்ததும், "விசாரணைப்ப இப்படி யாக் கூச்சல் போடறது?" என்று கண்டிக்கிறார் சப் – இன்ஸ் பெக்டர்.

அன்னக்கிளி நாணிக்கோணி சிரிக்கிறாள். ஏட்டையா மீண்டும் கனைக்கிறார்.

"உம் உம், ஆயுதம் எதுவும் இருக்கா பார்" என்றார் சப் – இன்ஸ்பெக்டர், தன்னினைவு வந்தவராய். அப்போது தான் அவரையும், அவரது கோஷ்டியையும் சுற்றிப் பத்துப் பனிரெண்டு பேர்கள் கொண்ட சிறு கூட்டம் கூடிவிட்டதைக் கவனித்தார். அவரது பார்வையைப் பார்த்துவிட்ட தேர்ட்டி நைன் பாய்ந்தெழுந்து தனது தடியை ஓங்கிக் கூட்டத்தை விரட்டினான். கூட்டம் சிதறிச் சற்று விலகித் தூரத்தில் போய்

நின்றுகொண்டது. ஒரு ஜீப்பு வரும் ஒலியும் ஒளியும் எல்லார் கவனத்தையும் ஈர்த்தது. ஜீப்பின் டிரைவர் முன்புபோலவே அதை நிறுத்திவிட்டு, சப் – இன்ஸ்பெக்டர் முன் வந்து சலாம் போட்டு நின்றான். ஜீப்பிலிருந்து மற்றும் இருவரும் ஒரு போலீஸ்காரரும் இறங்கினர். "என்னையா, இப்படி நேரம் கழிச்சா வர்றது" என்று சப் – இன்ஸ்பெக்டர், வந்த போலீஸ் காரரை விரட்டினார். சப் – இன்ஸ்பெக்டருக்கு சலாம் இட்ட வாறே அவன் ஏதோ முணுமுணுத்தான். பிறகு பையிலிருந்து ஒரு லென்சையும், டார்ச்சு லைட்டையும் எடுத்துப் பிணத் தினருகே சென்று கைரேகை, மயிர், நூல் பிசிறு இவற்றுக்குப் பிரேதத்தைப் பரிசோதனை செய்ய ஆரம்பித்தான்.

"அதுலே ஒரு எளவும் கெடைக்காது; பொணெத்தே பொரட்டிப் போட்டு என்னவெல்லாமோ செய்தாச்சு" என்றார் ஏட்டையா. ஜீப்பிலிருந்து இறங்கிய மணி சப் – இன்ஸ்பெக்டர் முன் நின்று வணங்கினான். ஜீப்பிலிருந்து இறங்கிய மற்ற நபர் பிணத்தின் அருகே சென்று பிணத்தை உற்று நோக்கினார். "எஜமான், பிச்சையா வூட்டுலே எல்லாரும் வெளியூர் போயிருக் காங்க. இந்த ஆளு பிச்சையாவுக்கு சொந்தம்னாரு; இவரெக் கூட்டியாந்தேன்" என்று கூறிக்கொண்டு பிணத்தைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த நபரைச் சுட்டினான் டிரைவர். பிணத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டு, "வெத்திலப்பேட்டை பிச்சையாவேதான்" என்று அந்த நபர் உறுதி சொன்னார்.

வேடிக்கை பார்க்கும் கூட்டம் சற்று அதிகரித்தது. ஆனால் கூட்டத்தினர் ஒரு வரம்பு கடந்து வராதபடி போலீசாரால் பார்த்துக் கொள்ள முடிந்தது. கூட்டத்தினரும் ஒரு கொலைக்குத் தரவேண்டிய மரியாதையைச் செலுத்தி அமைதியாகவே இருந்தனர். "ஒரே குத்து!", "வவுத்துலே சரியான குத்து!", "ஆத்தாடி! எவ்வோளவு ரத்தம்!" போன்ற சிறு சிறு முணு முணுப்புகளே வெளிவந்தன.

சப் – இன்ஸ்பெக்டர் பிரேத விசாரணை செய்ய ஆரம்பித் தார். ஐந்து பஞ்சாயத்தார் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் மருத மூப்பனாரும் ஒருவர். இறந்துபோனவரைக் கடைசியில் உயிரோடு கண்டவர்களாகவும், கொலையை நேரில் பார்த்தவர் களாகவும் கந்தனும் அன்னக்கிளியும் தனித்தனி வாக்குமூலங் கள் கொடுத்தனர். கொலை செய்தவர்களைத் தங்களுக்கு இதற்கு முன் தெரியாதென்றும், ஆனால் மறுமுறை பார்த்தால் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்றும் இருவரும் அபிப்பிராயப்படுவதாகவும் குறித்துக்கொள்ளப்பட்டது. இறந்து போனவர் கத்திக் குத்தின் காரணமாக மாண்டிருக்க

லாம் என்று அபிப்பிராயப்படுவதாகப் பஞ்சாயத்தார் இறுதியில் கையெழுத்திட்டனர். இரவு பதினொரு மணி அளவில் எல்லாச் சடங்குகளும் முடிவடைந்தன. பிரேதத்தை ஒரு வண்டியில் போட்டு, அதை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும் பொறுப்பு போலீசாரிடம் விடப்பட்டது.

கந்தனையும் அன்னக்கிளியையும் ஜீப்புக்குள் ஏறிக்கொள்ளு மாறு ஏட்டையா உத்தரவிட்டார். "அய்யோ, நா எதுக்கு?" என்று அலறினாள் அன்னக்கிளி. "ஒண்ணுமில்லே, காலேலே வீட்டுக்கு வந்திடலாம்" என்றார் சப் – இன்ஸ்பெக்டர். கந்தனும், மணியும், ஏட்டையாவும் ஜீப்பின் பின்புறத்தில் உட்கார்ந்து கொண்டனர். சப் – இன்ஸ்பெக்டர் டிரைவருக்கு அருகே உட்கார்ந்துகொண்டு அன்னக்கிளியைத் தன் பக்கத்தில் உட்காரச் சொன்னார். மருத மூப்பனார், தானும் ஸ்டேஷனுக்கு வரவேண்டும் என்றார். "நீங்க காலேலே வரலாம்" என்று விட்டார் ஏட்டையா. ஜீப்புக்குள் ஏற அன்னக்கிளி தயங்கினாள். சப் – இன்ஸ்பெக்டர் அவர் கையை நீட்டவும், அவளும் 'களுக்' என்று சிரித்துவிட்டு ஜீப்புக்குள் ஏறிக்கொண்டாள். ஜீப்பை 'ஸ்டார்ட்' பண்ணுவதற்கு முன்னால், ஜீப்பின் உள் விளக்கை அணைத்தான் டிரைவர். அன்னக்கிளியின் 'ச்சு' என்ற வக்கரிப்பும், வளையல் ஒலியும், அவற்றைத் தொடர்ந்து ஏட்டையாவின் கனைப்பும் கேட்க இரைச்சல் இட்டுக்கொண்டு டவுனை நோக்கித் திரும்பியது ஜீப்பு.

கந்தன் அவன் குடிசைக்குச் சற்றுத் தொலைவில் வந்து கொண்டிருப்பது போலிருக்கிறது. தெருவோரம் குறைவான கடைகளும் வீடுகளுமே தென்படுகின்றன. தெருவிலே ஜன நடமாட்டம் கிஞ்சித்தும் இல்லை. அசட்டுத்தனமாக மின்விளக்குகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக எரிந்து கொண்டிருக்கின்றன. ஒரு விளக்கு திடீரென்று அணைகிறது; மற்றொன்று திடீரென்று புதிய பிரகாசத்தோடு எரிகிறது. கந்தனின் கண்கள் உறுத்துகின்றன. பிச்சையா அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு ஒடிந்து விழுகிறான். . .

"கத்தி எதுக்குங்க?" என்கிறாள் மீனா.

"யாரும் சேட்டை பண்ணினா?"

"ஓங்ககிட்டே யாரும் எதுக்குச் சேட்டை பண்ணனும்?" என்கிறாள் மீனா.

"அது என் தலையெழுத்து."

"ஓங்க தலையெழுத்தில்லே; ஓங்க பயம்" என்கிறாள் மீனா...

பக்கத்துச் சேரி தீப்பற்றி எரிகிறது. குய்யோ முறையோ என்று மனித உயிர்கள் கூச்சலிடுகின்றன. ஆனால் அவற்றில் பனிரெண்டுக்கு மட்டும் விரைவில் கூச்சலிடும் உரிமை மறுக்கப்படுகிறது. அந்தப் பனிரெண்டும் தீயணைக்கும் படையினரால் குளிப்பாட்டப்பெற்று – பெரிசுகளும் சிறிசுகளு மாக – வரிசையாகத் தரையில் கிடத்தப்பட்டுள்ளன. வீணாக நகரசபைக்கு ஏன் கெட்ட பெயர் என்று மூன்று உயிர்களையே விபத்துக் குடித்துவிட்டதாகப் பத்திரிகைகள் அறிவிக்கின்றன.

"அந்தப் பனிரெண்டு பேருமே சாகவில்லை; அவுங்க எல்லாருமே வாக்காளர் பட்டியல்ல இருக்காங்க; எப்படியும் அடுத்த தேர்தல்லே ஓட்டுப்போட வந்திடுவாங்க. வாழ்க முதலாளித்துவ ஜனநாயகம்!" என்கிறான் கந்தனிடத்து ராமு அண்ணன்...

கந்தன் ஒரு வாத்தைப்போல நடந்துகொண்டிருக்கிறான். அவனே ஒரு பெரிய வாத்தாகிவிட்டது போன்ற உணர்வு. சுத்திச் சுத்தி வருகிறான். வீட்டை நோக்கித்தான் நடந்து கொண்டிருக்கிறான்; ஆனால் வீடுதான் அவனைவிட்டு விலகிச் சென்றவண்ணமே உள்ளது. ஒரு குழந்தையின் அழுகுரல் காதில் படுகிறது. கந்தன் எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்க் கிறான். தற்செயலாக வானில் அவன் பார்வை விழுகிறது. கொட்டிக் கிடக்கும் ஒளிக் குவியல்கள் அவனை மெய் சிலிர்க்க வைக்கின்றன. அவையெல்லாம் என்ன, ஏன் என்று ஒருபோதும் அவன் கேட்டதில்லை. அவற்றின் மத்தியில் பறந்து செல்ல வேண்டும் என்று அவன் குழந்தைத்தனமாக ஆசைப்பட்ட துண்டு. இப்போது அந்த ஆசையில்லை. அவற்றைப் பார்க்கவே சற்று பயமேற்படுகிறது. அவை அவனை நோக்கி விரட்டி வருவது போல் இருக்கிறது. கந்தன் ஓடப் பார்க்கிறான். குப்புறச் சரிந்து ஒரு இருண்ட பாதாளத்துக்குள் விழுந்துகொண்டிருக் கிறான்...

புரண்டு படுப்பது போன்றதொரு உணர்வு. மீண்டும் ஒரு குழந்தையின் அழுகுரல்.

"என்ன பாப்பா? யாரு நீ?"

"உம் உம், எங்க அம்மா, எங்க அம்மா..."

"உங்க வீடு எங்கே?"

"பள்ளிக்கூடத்துக்குப் பக்கல்லே; உம் உம், எங்க அம்மா, எங்க அம்மா..."

"எந்தப் பள்ளிக்கூடம்?"

"எங்க வீட்டுக்குப் பக்கல்லே எங்க ஊர்ப் பள்ளிக்கூடம். உம் உம், எங்க..."

"ஒங்க ஊரு எது?"

"உம், எங்க ஊரு, எங்க ஊரு..."

"ஒன் அம்மா பேரு என்ன?"

"எங்க அம்மா, உம், எங்க அம்மா..." கந்தன் குழந்தையை எடுத்துத்தோளில் சாத்திக்கொண்டு நடக்கிறான். குழந்தை திமிறுகிறது. கந்தனின் கழுத்தைக் கடித்துக்கொண்டே, இரண்டு கைகளாலும் கந்தனின் முகத்தைப் பிறாண்டுகிறது. தன் கால்களைக் கொண்டு, கந்தனின் வயிற்றில் 'மங்கு மங்கு' என்று போடுகிறது. சோலைப்பிள்ளை எதிர்ப்படுகிறார். ஒரு பொலிகாளையை இழுத்துக்கொண்டே கந்தனைப் பார்த்துச் சிரிக்கிறார். தன்னை லாக்கப்பில் அடைத்தது கந்தனுக்கு நினைவு வருகிறது. அன்னக்கிளி போலீஸ் ஸ்டேஷனில் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறாள். மணி சப் – இன்ஸ்பெக்டருக்குப் பிராந்தியும் பிரியாணியும், அன்னக்கிளிக்கு பிரியாணி மட்டும் வாங்கி வருகிறான். சோலைப்பிள்ளை பொலிகாளையோடு ஸ்டேஷனுக்குள் வந்து லாக்கப்புக்குள் எட்டிப் பார்க்கிறார்...

கந்தனின் வீடு. கந்தன் குழந்தையை மீனாவுக்கு அருகே படுக்க வைக்கிறான். அழுது தூங்கிவிட்டது; இருந்தாலும் தூக்கக் கலக்கத்தில், "உம், எங்க அம்மா" என்று முனகுகிறது.

கந்தன் குடிசையை விட்டு வெளியே வந்து, இருளோடு இருளாய்க் கலந்தான். ஜன்னி கண்டதுபோல் இருள் குளிர்ந்திருந்தது. மேலும் அது கரடுமுரடான கற்களும், முள்புதர்களும் நிறைந்திருந்தது. அது ஒரு பிண வாடையையும் கொண்டிருந்ததாகக் கந்தனுக்குப் பட்டது. 'இன்னுங் கொஞ்சம் தூரந்தான்' என்று நினைத்துக் கொண்டே, நடந்த கந்தன் திடீரென்று நின்றான். அந்தப் பூவரசு மரம், அவன் காலைத் தட்டிற்று. புயல் அதன் கழுத்தைத்திருகி அதைத் தரையில் வீசியெறிந்து விட்டது போலிருந்தது. ஒரு விகாரமான ஆனால் சாதுவான மிருகம் போல் அது தன் அத்தனை கைகளையும் கொண்டு பூமியைப் பற்றிக் கிடந்தது. அதன் வேரிலிருந்து

தொடங்கிப் படிப்படியாக அடிமரம் முழுவதையும் தடவிக் கொண்டிருந்தான் கந்தன். மரத்தின் கொப்புகள் அவனுக்குப் பெரும் இடைஞ்சலாக இருந்தன. வெகு தொலைவிலே பூமியினுள் புதைந்தது போன்று கிடந்தது அவன் கத்தி. அது வைரம் போல இருட்டில் ஜ்வலித்தது. யார் கண்ணுக்கும் எளிதில் பட்டுவிடும்! கந்தன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன் முதுகில் தன் கைகளை வைத்துக் குனிந்து தரையை உற்று நோக்கிக்கொண்டிருந்தார் மருத மூப்பனார். அவர் கைகளை உதறிவிட்டு எழுந்தான் கந்தன்...

ஒரு சிகரெட்டு புகைக்க எண்ணிக் கந்தன் சட்டைப் பையைத் துளாவினான். பை வள்ளிசாகக் காலியாக இருந்தது. படுத்தபடியே இரண்டு கைகளாலும் தரையைத் துளாவினான். கைகளுக்கு எதுவும் சிக்கவில்லை. சற்று எழுந்து நேர் எதிராகப் பார்த்தான். 'லாக்கப்' அறையின் கம்பிகள் கண்களுக்குத் தென்பட்டன. 'லாக்கப்' அறையை ஒட்டியிருந்த சுவரின் மேல்விளிம்பில் சிறிது ஒளி அரைகுறைத் தூக்கத்தில் இருந்தது. யாரோ குறட்டை விடும் சத்தம் கேட்டது. தான் போலீஸ் ஜீப்பில் ஏறிய நேரத்திலிருந்து 'லாக்கப்'புக்குள் அனுப்பப்பட்டதுவரை நடந்த நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாக நினைவுக்குக் கொண்டு வரக் கந்தன் முயன்றான்.

மின்நூலாக்கம்
முரளிதரன்

இது ஒரு மனிதனின் ஒரு நாளைய
வாழ்க்கை. நீங்கள் துணிந்திருந்தால்
செய்திருக்கக்கூடிய சின்னத்தனங்கள்,
நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தால்
காட்டியிருக்கக்கூடிய துணிச்சல்,
விரும்பியிருந்தால் பெற்றிருக்கக்கூடிய
நோய்கள், பட்டுக்கொண்டிருந்தால்
அடைந்திருக்கக்கூடிய அவமானம்,
இவையே அவன் வாழ்க்கை. அவனது
அடுத்த நாளைப்பற்றி நாம் தெரிந்துகொள்ள
வேண்டாம்; ஏனெனில் அவனுக்கும் –
நம்மில் பலருக்குப் போலவே –
நாளை மற்றுமொரு நாளே!

அட்டை வடிவமைப்பு
ரோஹிணி மணி

காலச்சுவடு
பதிப்பகம்

ரூ. 175

ISBN 978-81-87477-20-4